Reg. No. M. 2569
1248

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

மலர் 5

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 6, 7

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1353 ஸபர் & ரபீஉல் அவ்வல்மீ
1934ஆ ஜூன் & ஜூலைமீ

நாயக மலர்

உள்ளடக்கம்.

1. காருண்ய நபி ... 139
2. நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் சரித்திரச் சுருக்கம் ... 192
3. நபித்துவம் பூர்த்தியாகி விட்டது ... 235
4. ஜெர்மனியில் இஸ்லாமியப் பிரசாரம் ... 241
5. இஷா அத்துல் இஸ்லாத்தின் அவசியம் ... 245
6. மதப் பிரசாரத்தின் தன்மை ... 247
7. ஆசிரியர் குறிப்பு ... 251

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா 3	0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு ...	„ 4	0
தனிப் பிரதி ...	„ 0	4

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவ, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்ட அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில். ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்பட மாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்ெ ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

" ஹிபாஜத்துல் இஸ்லாம் " ஆபீஸ்,

43-A, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

209431
சென்னை-600 00

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்.

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 5	ஹிஜ்ரி 1353 ஸபர் & ரபீஉல் அவ்வல் மீ 1934 ஆு ஜூன் & ஜூலை மீ	இதழ் 6, 7

காருண்ய நபி

சோதரீர்!

இப் பிரபஞ்சத்தில் வாழும் மானிடர் யாவரும் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் ஆகியவைகளை நாடி அதன் பாட்டையில் சென்றுகொண்டிருக்கின்றனர். சர்வ சமயங்களும் இதனையே வற்புறுத்துவதாகச் சர்வ சமயத்தாரும் கூறுகின்றனர். சமயத் தலைவர்களும் இதனை வற்புறுத்தாமலுமில்லை. ஆனால், மக்களுக்குரிய இத் தாகவிடாயானது இன்னும் குறைந்ததாகத் தெரியவில்லை என்பதைத்தான் நாம் இது காலை காண்கின்றோம். ஒவ்வொரு சமயத்தாரும் தத்தம் சமயத்தில் இவ்விஷயங்களைத் தேடித்துருவி ஆராய்கின்றனர். ஆனால், அவர்கள்தேடும் அரும்பொருள் அகப்படாமல் தவிக்கின்றனர். எனவே எங்கு பார்த்தாலும் சமதர்மக்கக்ஷிகளும், முன்னேற்றச் சபைகளும், சீர்திருத்தச் சங்கங்களும் நிறுவப்பட்டு ஆங்காங்கு பற்பல மகாநாடுகள் கூட்டப்படுகின்றன; இவ்விஷயமாக உருக்கமான பிரசங்கங்கள் புரியப்படுகின்றன; ஆயிரம் ஆயிரமான திரவியங்கள் வருடந்தோறும் செலவாகின்றன; நூற்றுக்கணக்கான ஊழியர்கள் இத் தொண்டில் ஈடுபட்டுத் தங்கள் வாணாட்களைச் செலவு செய்கின்றனர். ஆனால், இம்முயற்சியில் முஸ்லிம்கள் ஈடுபட்டிருப்பதை அதிகமாகக் காண்பதரிது. இவர்கள் விரும்பும் சமத்துவம் சகோதரத்துவம் சுதந்திரம் முஸ்லிம்களுக்குத் தேவையில்லையா? இதைப்பற்றிய உணர்ச்சி அவர்களுக்கு இல்லையா? என்பதை கவனிப்போமாயின், ஏனைய சமூகத்தினர் விரும்பும் இவ்வுரிமைகளை அவர்களும் விரும்பாமலில்லை; அவர்களுக்குச் சுயமதிப்பும் சுய உணர்ச்சியும் இல்லாமலில்லை. பின்னை எற்றுக்குஅவர்கள் இதில்அதிகம் ஈடுபடவில்லைஎனின்? இவ்வுரிமைகளை மற்றெல்

லா சமயத்தவரினும் அதிகமாக அவர்கள் அனுபவிப்பதேயாகும். உதாரணமாக ஸ்திரி வர்க்கத்தாரை எடுத்துக்கொள்வோம்: மனித வர்க்கத்தில் சமபகுதியினராகவுள்ள இவர்களுக்கு இஸ்லாம் அளித்திருக்கிற சுதந்திரத்தையும் உரிமையையும் போல் நேரியமுறையில் வேறெந்த மதமும் அளிக்கவில்லை என்று கூறலாம்; ஒரு ஆடவன் தனது தாய், தந்தை, சகோதரன், சகோதரி, மனைவி, மக்கள் முதலியவர்களின் சொத்துக்களில் பாக உரிமை பெற்றிருப்பது போல ஸ்திரீயும் தனது தாய், தந்தை, சகோதரன், சகோதரி, கணவன், மக்கள் முதலியவர்களின் சொத்துக்களில் பாகமடைகின்றனள்; இல்லறவாழ்க்கையில் கணவனுக்கு மனைவியினிடத்தில் எத்தனை உரிமைகள் இருக்கின்றனவோ அத்தனை உரிமைகள் மனைவிக்கும் கணவனிடத்திலுண்டு; விவாகவிலக்குச் செய்வதற்குக் கணவன் உரிமை பெற்றிருப்பதுபோல் உதவாத கணவனிடம் இருந்து இல்லறவாழ்கை நடத்த முடியாதென்று ஏற்படுங்கால் நீதிப்படி விவாக பந்தத்துவத்தை முறித்துக்கொள்ள ஸ்திரீக்கும் உரிமையுண்டு.

இஃதேபோல் எஜமானனையும் அடிமையையும் எடுத்துக்கொள்வோம். உலகாதயவிஷங்களில் அடிமையின்மீது எஜமானனுக்குச் சில உரிமைகள் இருப்பதுபோல் அடிமைக்கும் சில உரிமைகள் எஜமானனிடத்தில் இருக்கின்றன. உலக விஷயங்களைத் தவிர ஆணாயினும் பெண்ணாயினும், அடிமையாயினும் எஜமானனாயினும், அரசனாயினும் ஆண்டியாயினும், இறைவனை வணங்கும் விஷயத்தில், இறைவனுக்கு ஊழியம் புரியும் விஷயத்தில் ஒன்று போலவே ஏவப்பட்டிருக்கின்றனர். இவர்கள் யாவரும் அவனிடத்தில் சமத்துவமாகவே இருக்கின்றனர். மஸ்ஜிதில் ஒருவன் தொழப்போவானாயின் அவன் அரசனுடனும் எஜமானனுடனும் சமத்துவமாகத் தோளோடு தோள்சேர்த்து நின்று தொழ உரிமை பெற்றிருக்கின்றான். அவ்விடத்தில் யாவரும் சமமே. ஆகவே, சகோதரத்தும் சமத்துவம் என்ற விஷயத்தில் இஸ்லாம் மதம் யாவருக்கும் சம உரிமை வழங்கி இருக்கிறது. எனவே, ஒருவர்க்கத்தார் படிக்கவேண்டும் என்றும், ஒரு வர்க்கத்தார் ஊழியஞ் செய்ய வேண்டுமென்றும் இஸ்லாம் பாகுபாடு செய்யவில்லை. மேலும் முஸ்லிமாகவுள்ள ஒவ்வொருவரும் கல்வி பயிலக் கடமைப்பட்டுள்ளனர். யாவரும் தொழில் செய்ய உரிமை பெற்றிருக்கின்றனர். நிற்க, சீர்திருத்த விஷயத்தில் ஏனையமதத்தவர் விரும்பும் சீர்திருத்தங்களெல்லாம் இஸ்லாத்தில் 1350 வருஷங்களுக்கு முன்னதாகவே குறைவற ஏற்படுத்தப்பட்டு விட்டனவாதலின் இதுபொழுது முஸ்லிம்களுக்குப் புதுச் சீர்திருத்த மொன்றும் தேவையில்லை. ஆனால், அத்திபூத்ததுபோல் இவ்வியங்கங்களில் முஸ்லிம்கள் ஆங்காங்கு ஈடுபட்டிருப்பதற்குக் காரண மென்ன வென்றால், இஸ்லாத்தைப்பற்றி இந்தச் சகோதரர்கள் சரியாக உணர்ந்துகொள்ளாமலிருப்பதும், சகோதர சமயத்தவர் செய்துவரும் முயற்சிகளைக் கண்டு பிரேமைகொள்வதுமேயாகும். இதற்குப் பரிகாரம் யாதெனில், "ஜனங்களுக்கு நன்மையை ஏவித் தீமையை விலக்கும் கூட்டத்தார் உங்களில் இருக்கவேண்டும்" என்னும் வேதசச்சட்டத்தையும், "என்னிலிருந்து தெரிந்துகொண்டவைகளைச் சொல்லிக் காண்பியுங்கள் அது ஒரு வார்த்தையா யிருந்தாலும் சரியே" என்று நபிகள் நாதர் (ஸல்.) அவர்கள் கூறிய பொன் மொழியையும் முஸ்லிம்கள் மறந்ததும், "அல்லாஹ்வையும் இறுதிநாளையும் விரும்புகிறவர்களுக்கு அல்லாஹ்வின் றஸூலில் அழகிய முன் மாதிரி இருக்கிறது." "அல்லாஹ்வை நீங்கள் நேசிக்கிறவர்களா யிருப்பீர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள் என்று

(நபியே)நீர் கூறும்'' என்ற வேதவாக்கை அலக்ஷியம் செய்திருந்ததுமே யாகும்.

முஸ்லிம்கள் இடைக் காலத்தில் இதை மறந் திருந்தாலும் சிறிது காலமாக இதனை நினைவிற்கொண்டு வந்து இந்தப் பிரசாரத்துக்கென ஒரு தினத்தைக் குறிப்பிட்டிருக்கின்றனர். அந்த தினத்தில் உலகத்திலுள்ள பல பாகத்திலும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் இவ்வுலகுக்குச் செய்த அருந் தொண்டுகளும் சீர்திருத்தங்களும் அவர்களின் வாழ்க்கை முறைகளும், குணதிசயங்களும் மக்களுக்கு எடுத்துப் போதிக்கப்படுவதுடன் நபிகள் பிரான் (ஸல்.) அவர்கள் சரித்திர சம்பந்தமான கட்டுரைகளைப் பலபடித்த அறிஞர்கள் மூலமாக எழுதுவித்துப் புத்தக ரூபமாக அச்சிட்டு அவனியோருக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதற்கேற்ப இவ்வருஷத்திலும் அவ்விழாவை வருகிற 25-6-34-ல் உலகமெங்கணும் கொண்டாட ஏற்பாடாகி இருக்கிறது. அதற்காக அறபி, உருது, ஆங்கிலம் முதலியபாஷைகளில் புத்தகங்கள் அச்சிடப்பட்டிருக்கிறது. நந்தாய் பாஷையாகிய தமிழிலும் "காருண்ய நபி" என்றபெயரால் நாயக சரித்திரசாரம் அச்சிடப்பட்டிருக்கிறது. ஆதலின், முஸ்லிம் கனதனவான்கள் வருகிற 25-6-34 திக்தியைப் புனித நாளாகக் கருதி, ஆங்காங்கு பொதுக் கூட்டங்களைக் கூட்டி நாயகம் (ஸல்) அவர்களின் வரலாற்றையும், அவர்கள் பொருட்டால் நமக்குக்கிடைத்த அரிய இஸ்லாத்தின் சட்டதிட்டங்களையும் கொள்கைகளையும் விளக்கிக்காட்டுவதுடன் "காருண்ய நபி" என்ற மேற்படி புத்தகத்தையும் இலவசமாகவழங்குவார்கள் என்று நம்புகிறோம். ஆனால், இதற்கென ஒருதினம் குறிப்பிட்டிருப்பதால் அந்த ஒரு தினத்தில் மாத்திரம் திருநபி அவர்கள் ஜனன விழாவைக் கொண்டாடிவிட்டு அப்பால் அயர்ந்துவிடாமல், நன்மையை ஏவித்தீயதை விலக்கவேண்டுமென்ற சத்தியப்பிரசாரத்தைக் கடைப்பிடித் தொழுகுமாறும் வேண்டிக்கொள்கிறோம். இப்பிரசார வேலையில் நம்மவர் கட்டுப்பாடாக ஈடுபட்டுழைப்பாராயின் நம்மவரில்சிலரிடை இடைக்காலத்தில் புகுந்துள்ள காதியானியத், அஹ்மதியத், தஹ்ரியத் என்ற வழிகெட்ட கொள்கைகள் நீங்குவதுடன் சமத்துவ சகோதரத்துவ சுதந்திரதாகங் கொண்டு தவித்து நிற்கும் ஏனைய சமயத்தவரும் நம்மிடம் தஞ்சம் புகுந்து அவர்களின் விருப்பத்தை இம்மையிலும் மறுமையிலும் இனியில்லா வண்ணம் அடைந்தானந்திக்க எல்லாவல்ல இறைவன் இன்னருள் சுரப்பான் என்பது திண்ணம்.

தவிர, நஞ் சகோதரறிற் பலர், இப் புனித விழாவைக் கொண்டாடுவதில் வரம்பைக் கடந்து பித்அத்துகள், வீண் செலவுகள், பிரயோஜனமற்ற ஆடம்பரங்கள் ஆகியவைகளையும் செய்துவிடுகிறார்கள். "வீண் செலவுக்காரர்களை அல்லாஹ் நேசிக்கமாட்டான்'' என்று தெய்வதிருமறை திருத்தமாகக் கூறுவதையும், "பித்அத்துகள் வழி கேட்டில் கொணர்ந்துவிடும்'' என்று நாயக வாக்கியம் நவில்வதையும் இவர்கள் கவனிக்க வேண்டுகிறோம். நபிகள்நாயகம் (ஸல்.) அவர்களின் ஜனன விழாவைக் கொண்டாடுவதுமட்டு மில்லாமல் அம்மாமகரின் அருமையான வாழ்க்கையினை நமக்கு முன்மாதிரியாகக்கொண்டு அவர்களை முற்றிலும் பின்பற்றி நடக்கவும் வேண்டும். அவ்வாறில்லாமல் கொண்டாட்டத்துடன் மாத்திரம் நின்றுவிடுவோமாயின், இவ்விழாவைக் கொண்டாடியதற்கு அர்த்தமேயில்லாமலாகிவிடும் என்பதை அறிவித்துக்கொள்ளுகிறோம். எல்லாம்வல்ல இறைவன் நம்மவருக்கு இப் புனித தினத்தின் பரக்கத்தாலும், நாயகம் (ஸல்.) அவர்களின் பொருட்டாலும் சத்திய இஸ்லாமிய சட்டங்களை முற்றிலும் பின்பற்றி நடக்க நல்லுதவி புரிவானாக ஆமீன்.

நபிகள் திலகம் (ஸல்) அவர்கள்
சரித்திரச் சுருக்கம்

பிறப்பு

எம்பெருமானர் நபிய்யகரீம் (ஸல்.) அவர்கள் நீதியுடைய அரசனுகிய நவ்ஷேர்வான் சக்ரவர்த்தியின் காலத்தில் கி. பி. கோ. 571-ம் ஆண்டு திருமக்கமா நகரின்கண் ஜனனமானுர்கள். பிறந்த அன்றுமுதல் 7-நாள் வரை, அபூலஹபால் உரிமை விடப்பட்டிருந்த 'துவைபா' என்னும் மாது பால் கொடுத்துக்கொண்டிருந்தார். பின்னர் 8-ம் நாள்முதல் நான்கு வருட காலம் வரை 'ஹலீமா ஸஅதிய்யா'விடமே வளர்ந்து வந்தார்கள். தங்களது இரண்டாவது பிராயத்தில் அருமைத் தந்தையரான 'அப்துல் லாஹிப்னு அப்துல் முத்தலிப்' அவர்கள் விண்ணுலகேகி விட்டார்கள். * ஆமுல் பீலின் எட்டாவதாண்டு தங்களது பாட்டனுரான ஹஸ்ரத் அப்துல்முத்தலிப் அவர்களும் தெய்வ கதியடைந்து விட்டார்கள். பின்னர் உலக ரட்சகர் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் தங்கள் பெரிய தந்தையரான ஹஸ்ரத் †அபூதாலிப் அவர்களது சம்ரட்சணையிலிருந்து வந்தார்களாதலின், அவர்கள் ஹஸ்ரத் அவர்களை மிக்க அன்போடு ஆதரித்து வளர்த்து வந்தார்கள்.

ஷாம்தேச யாத்திரையும் விவாகமும்

தாங்கள் வாலிபப் பருவத்தையடைந்தவுடன் தங்களது தூய்மை பொருந்திய வாழ்க்கையும், உண்மை உரைத்தலும் ஒவ்வொருவருடைய மனதையும் வசப்படுத்தி அவர்களின் மனதில் பெரியதோர் உணர்ச்சியை உண்டுபண்ணிவிட்டது. அதனுல் யாவரும் தங்களை 'அமீன்' அமானிதமுடையவரென அழைத்தார்கள். ஹஸ்ரத் கதீஜா பிராட்டியார் (ரலி.) அவர்கள், வம்சபதியாயும், செல்வச் சீமாட்டியாயுமிருந்த காரணத்தால் பெருமானுர் (ஸல்.) அவர்களை தங்கள் வியாபார ஏஜெண்டாக நியமித்து சகல காரியாதிகளையும் தங்களிடம் ஒப்புவிக்க வேண்டுமென்னும் விருப்பங்கொண்டார்களாதலின், நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் அதனை ஏற்றுக்கொண்டு வியாபார சாமான்களை ஷாம்தேயப் பக்கல் கொண்டு சென்று விற்பனை செய்து வந்ததில் அபரிமிதமான லாபம்கிடைத்தது. அப்பிரயாணத்தினின்று திரும்பிவந்த காலை ஹஸ்ரத் கதீஜா (ரலி.) அவர்கள், பெருமானுர் (ஸல்.) அவர்கள் விஷயமாய் தங்கள் மனதில் எண்ணியிருந்ததைவிட தங்களை அதிக உண்மையாளராகவும், வியாபாரத்தில் தந்திரசாலியாகவும் இருப்பதைக் கண்டு விவாகஞ் செய்து கொள்வதற்குள்ள விருப்பமிருப்பதைத் தெரிவித்துக்கொண்டார்கள். நம் பெருமானுர் நபிகள் திலகம்(ஸல்.) அவர்கள் இவ்விஷயத்தை தங்கள் பெரிய தந்தையரான ஹஸ்ரத் அபூதாலிப் அவர்களுக்குத் தெரிவித்து அவர்களின் சம்மதத்தைப்பெற்றபின் விவாகஞ் செய்துகொள்ள சம்மதித்து ஹஸ்ரத் அபூதாலிப் ஹஸ்ரத் ஹம்ஸா இவர்களுடன் சிலரை, பீபி கதீஜா (ரலி.) அவர்களின் தந்தையரான 'குவைலத்பின் அஸத்' இடம் அனுப்பிவைத்து அவருடைய சம்மதத்தையும் பெற்றபின் விவாக வைபவம் வெகு சிறப்பாக நடந்தேறியது. அதுபொழுது

---

* எமன் வாசியான அப்ரஹா என்னும் பெயருடைய சக்கரவர்த்தி, நபிகள் நாதர் (ஸல்.) அவர்களின் திருஜனனம் ஏற்பட வேண்டிய வருடத்தில், யானைப் படையைத் திரட்டிக்கொண்டு மக்கமா நகர்மீது போர் புரிந்து கஃபத்துல்லா ஷரீபை இடித்துவிட வேண்டுமென்னும் எண்ணத்தோடு முன்னேக்கி வந்தான். அது பொழுது அல்லாஹ்த ஆலா அவர்கள்மீது 'அபாபீல்'என்னும் பக்ஷியை அனுப்பி வைத்ததால் அவைகள் வாயால்பொடிக் கற்களை எறிந்து அப்படையைநாசம் செய்துவிட்டது. ஸூரத்துல் பீலில் இது விஷயம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இஃதோர் மகத்தான சம்பவமாயிருப்பதால் அரபிகள் இச்சம்பவ நிகழ்ச்சியின் ஞாபகார்த்தமாய் வருடங்களை அதுமுதல் கணக்கிட்டு வரலாயினர்.

† ஹஸ்ரத் அபூதாலிப் அவர்களும், பெருமானுர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் தந்தையான ஹஸ்ரத் அப்துல்லா அவர்களும் ஒரே தாயின் வயிற்றில் பிறந்தவர்களாகும்.

நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்கு 25 பிராயமும், ஹஸ்ரத் கதீஜா நாயகி (ரலி.) அவர்களுக்கு 40 வயதுமாயிருந்தது. விவாகத்துக்குப் பின் ஒருவருக்கொருவர் பரஸ்பர அபரிமித அன்புடையவர்களாய்க் காலங்கழித்து வந்தனராதலின் நாயகி அவர்கள் தங்கள் ஜீவிய காலமுழுதும் நம் பெருமானார் (ஸல்.) அவர்களிடம் அளவற்ற பக்தியும், நிகரற்ற அன்பும், விசுவாசமுங் கொண்டவர்களாய்த் திகழ்ந்துவந்தார்கள்.

சந்ததிகள்

உலக ரட்சகர் சத்தியத் தூதர் (ஸல்.) அவர்களுக்கு பீபி கதீஜா நாயகியிடத்தில் நான்கு பெண்மக்களும், மூன்று ஆண் பிள்ளைகளும் பிறந்தனர்: காஸிம், தாஹிர், தய்யிப் என்னும் பெயருடைய மூன்று குழந்தைகளும் சிறு பிராயத்திலேயே காலஞ்சென்று விட்டனர். பெண்கள் நால்வரில் (1) ருக்கையா என்பவர்களை ஹஸ்ரத் உதுமான் (ரலி.) அவர்களுக்கும், (2) ஜைனப் அவர்களை அபுல்ஆஸ் அவர்களுக்கும், (3) உம்முகுல்தூம் அவர்களை உதுமான் (ரலி.) அவர்களுக்கு, ருக்கையா மரித்தபின் இரண்டாவதாகவும், (4) பாத்திமா (ரலி.) அவர்களை செய்யிதுனா ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களுக்கும் விவாகஞ் செய்துகொடுக்கப்பட்டிருந்தது.

நபிப் பட்டம்

சத்திய சீலர், சன்மார்க்கத் தூதர் (ஸல்.) அவர்களின் நாற்பதாவது வயதில் அல்லாஹ்த ஆலா நபிப் பட்டத்தை அருள்செய்ததன் பயனாக, அதுமுதல் குர்ஆன் ஷரீப் இறங்க ஆரம்பமாயிற்று. அதுகாலை அரபிகளுக்கு எவ்வாறான ஒரு குறிப்பிடப்பட்டுள்ள சன்மார்க்கமுமில்லாதிருந்ததால் * அவர்களிற் சிலர் நாஸ்திகராயிருந்துகொண்டு “இது எங்களுடைய உலக வாழ்க்கையாகும்; நாங்கள் பூவுலகிலேயே வாழ்ந்துவந்து இங்கேயே மரணம்மடைந்து வருகிறோம்; காலத்தின் போக்கானது எங்களை குறிப்பிட்ட ஒரு காலம்வரை உயிருடன் வைத்திருந்து அதற்குபின் மரிக்கச்செய்கிறது” என்று கூறிக்கொண்டிருந்தனர். அன்னோருக்கு மறுமைநாள் சம்மந்தமாயுள்ள ஏதாகிலுமொரு செய்தியை எடுத்துக் கூறப்படுமாயின், “யாங்கள் மரணமடைந்து எங்களது திரேகம் ஊதி உடைந்து எலும்புகளெல்லாம் மக்கி மண்ணோடு மண்ணாய்ப் போனபின் எங்களை எவ்வாறு மறுமைநாளில் எழுப்பப்படும்” என்று ஏளனமாய்க்கூறி பரிகாசஞ் செய்வார்கள். வேறு சிலர், அல்லாஹ்வின் ஏகத்துவத்தை ஒப்புக்கொண்டிருந்ததுடன் சிற்சில காரியங்களுக்காக அல்லாவைத் தவிர சிறிய நாயன்மார்கள் உண்டென்றும், உலக சம்மந்தமான காரியாதிகள் நடைபெறுவதில் மலக்குகளுக்கும் ‘ஹூருல் ஈன்’ களுக்கும் சம்மந்தமிருப்பதாகவும் கூறிக்கொண்டு அவைகளின் பெயரால் விக்கிரகங்களை ஏற்படுத்தி வைத்து அதனை வணங்கி வந்ததுடன் அவைகள் அல்லாஹ்த ஆலாவின் சன்னிதானத்தில் தங்களைக் கொண்டு சேர்த்துவிடுமென்றும் கூறிக்கொண்டிருந்தனர். இன்னுஞ் சிலரோவெனில் மலக்குகள் அடங்கலும் அல்லாஹ்வின் பெண்மக்கள்களென்று கூறிக்கொண்டிருந்ததுடன் மக்களிடம் பகைமைத்தனம் கொண்டும் பாவக்

*இஸ்லாம் சிறந்து விளங்குவதற்குமுன் அரபிகள் பற்பலவாறான மார்க்கங்களைப் பின்பற்றி நடக்கிறவர்களாயிருந்தார்கள். அவைகளில் நாஸ்திக மதம், விக்கிரக ஆராதனை செய்பவர்களது மதம், யூத மதம், கிறிஸ்துவ மதம், சௌராஷ்ட மதம் இவைகள் பிரக்யாதிபெற்றவைகளாகும். நாஸ்திகர்கள் அல்லாவையும், மறுமை நாளையும், வேதங்களையும், நபிமார்களையும், நன்மை தீமைகளுக்குக் கூலிகொடுக்கப்படுவதையும் இயற்றுக்கொள்ளாது உலகம் இப்படியே இருக்குமென்றுகூறிக்கொண்டிருந்தனர். விக்கிரஹ ஆராதனைக்காரர்களோ கஃபத்துல்லாவினுள் அநேக விக்கிரகங்களை—ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒவ்வொரு விக்கிரகங்களை—ஏற்படுத்தி வைத்துக்கொண்டு அவைகளை ஆராதனைபுரிந்து வந்தார்கள். அவைகள் யாவற்றிலும் ‘ஹுபல்’ என்னும் பெரிய விக்கிரகம் கஃபத்துல்லாவின் தலைவாயலில் வைக்கப்பட்டு பூஜிக்கப்பட்டு வந்தது. லாத், மனாத் என்பதும் அரபிகள் அன்போடு ஆராதனை செய்யும் விக்கிரகங்களாகும். ஹஸ்ரத் இப்றாஹீம், ஹஸ்ரத் இஸ்மாயீல், ஹஸ்ரத் மர்யம், ஹஸ்ரத் ஈஸா (அலைஹிம்) இன்னோரின் உருவச்சிலைகளும் கஃபத்துல்லாவினுள் வைக்கப்பட்டிருந்தது. ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்களுக்கு, 354 ஆண்டுகளுக்கு முன் யூத மதமும், ஈ. பி. கோ. 3-ம் நூற்றாண்டில் கிறிஸ்துவ மதமும் அரப் நாட்டில் பரவ ஆரம்பித்தது. மஜூஸிகளின் ஓர் மதமும் பரவிவந்தது. அவர்கள் நெருப்பை வணங்கிக் கொண்டிருந்தார்கள்.

காரியங்களாகிய மதுவருந்தல், சூதுவிளையாடல், தூர்க்கிர்த்தியங்கள் புரிதல், வட்டி வாங்குதல், அதிகமாய் விவாகம் புரிந்துகொள்ளல், பெண்மக்களை உயிருடன் பூமிக்குள் புதைத்து விடுதல், இன்னும் இவைபோன்ற அடாச்செயல்களைப் புரிதல் முதலிய பாவக் காரியங்களில் அபரிமிதமாய் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள்.

உத்தமத் தூதர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் அவ்வறியா மாக்களை நேர்வழியின் பக்கல் கொண்டுவருவதற்காக, விக்கிரக ஆராதனையை விட்டொழித்து ஏகத்துவம் பொருந்திய வல்ல நாயனை வணங்குவதன் பக்கல் அழைத்தவுடனே அன்னோர் சினங்கொண்டு சீறி விழுந்தனர். அவர்களிற் சிலர், அவர் எங்களுடைய விக்கிரகங்களை யெல்லாம் அழித்தொழித்துவிட்டு ஒரே நாயனாகச்செய்துவிட்டாரா? எனக் கேட்டனர். வேறு சிலர், தங்களது முன்னோரின் அடிச்சுவட்டைக் கெட்டியாய்ப் பற்றிப் பிடித்துக்கொண்டு, இவ்வாறான யாதொருபேச்சையும் தங்கள் முன்னோரினின்று ஒருபொழுதும் கேட்டதில்லையாகையால் தங்கள் முன்னோர்கள்சென்ற வழியைவிட்டு வேறுவழி செல்ல மனம் இடங்கொடுக்கவில்லை எனக் கூறினர்.

இன்னோரின் ஹிருதயங்களில் இருள் சூழ்ந்துக்கொண்டிருந்ததால் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் எடுத்துக்கூறும் அரும்மொழிகளும், பகிரங்க அத்தாட்சிகளும் அவர்களுக்குப் பிரயோஜனமளிக்காது போய்விட்டபோதிலும், ஆரம்பமாய் அல்லாஹ் உண்டென்பதை அன்னோர் ஒப்புக்கொள்ளும் விதத்தில் தக்க முறையில் எடுத்துக் காட்டி, வானத்தையும் பூமியையும் படைத்த அல்லாஹ் ஒருவன் உண்டென்பதில் சந்தேகங் கொள்ளுகின்றீர்களா? அவன் உங்களுக்காக பூமியை விரிப்பாகவும், வானத்தை முகடாகவும் ஆக்கி வைத்திருக்கிறான். பிறகு (அல்லாஹ்) தான் நாடுவதுபோல் (சிலகால்) மேகத்தை வானம் முழுதும் பரவச் செய்தும், (சிலகால்) அதனைச்சிறிய சிறிய துண்டாகவுமாக்கி வைத்துவிடுகிறான். (ஏ! மானிடனே) அம்மேகத்துக்கிடையிலிருந்து மழை வருஷிப்பதை நீ பார்க்கவில்லையா? அவனே கடலை உங்களுக்கு வழிப்படச் செய்து அதிலிருந்து (மீன்களைப் பிடித்து) புத்தப் புதிதான மாமிசத்தைப் புசிக்கும்படியும், அதினின்று இரத்தனாதிகள் எடுத்து நீங்கள் அணிந்து கொள்ளும்படியும், அதன் தண்ணீரைக் கடந்து செல்வதற்காக கப்பல்களை ஏற்படுத்தியும் வைத்து உங்களுக்கு உபகாரம் புரியவில்லையா? வெனக் கூறினார்கள்.

பஹிரங்கப் பிரசாரம்.

ஆரம்பத்தில் நபிகள்பிரான் (ஸல்.) அவர்கள் மூன்று வருடகாலம்வரை மறைவாகவே இஸ்லாமியப்பிரசாரஞ் செய்துவந்தார்கள். அதுகாலை ஹஸ்ரத் கதீஜா (ரலி.), ஹஸ்ரத் அலீ (ரலி.), ஹஸ்ரத் அபூபகர் (ரலி.) ஈமான் கொண்டார்கள். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்களின் பிரயத்தனத்தின் பயனாக ஹஸ்ரத் உத்மான், ஹஸ்ரத் அப்துற்றஹ்மானிப்னுஅவ்ப், ஹஸ்ரத் ஸஅதிப்னுவக்காஸ், ஜுபைர், தல்ஹா (ரலியல்லாஹு அன்ஹும்) ஆகியோர் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டார்கள். இவ்வாறு மூன்று வருடங்கள் செல்படியாய்விட்டபின் குறிப்பாக "உம்முடைய நெருங்கிய பந்துக்களுக்கு அல்லாஹ்வின் வேதனையைக்கொண்டு அச்சமூட்டுவீராக" என்னும் திருவாக்கியம் இறங்கியவுடன், எம்பெருமானார் நபிகள்திலகம் (ஸல்.) அவர்கள் இக்கட்டளையை நிறைவேற்றுவதற்காக ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களை அழைத்து சாப்பாடு தயாரிக்கும்படி செய்து அப்துல் முத்தலிபு அவர்களுடைய சந்ததிகள் யாவரையும் ஒன்றுசேர்க்குமாறு கூறினார்கள். அவ்வாறே அச்சந்ததிகள் 40 பேருக்கு விருந்தளிக்கப்பட்டு அதற்கு பெருமானார் நபிகள்திலகம் (ஸல்.) அவர்களின் பெரிய தந்தையாகிய ஹஸ்ரத் ஹம்ஸா, ஹஸ்ரத் அபூதாலிப், ஹஸ்ரத் அப்பாஸ் ஆகியோரும் அழைக்கப்பட்டிருந்தனர். யாவரும் வந்து சேர்ந்து விருந்துண்டபின் பெருமானார் (ஸல்.) அவர்கள் பிரசங்கம்புரிய ஆரம்பிக்கவே, அபூலஹப் என்பான் பலவாறான வீண் பேச்சுகளைக் கிளப்பிவிட்டு அதிலேயே கூட்டம் கலைந்துவிடும்படி செய்துவிட்டான். மறுபடி ஒருமுறை சாப்பாடு தயார் செய்யும்படி பெருமானார் (ஸல்.) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களுக்குக் கட்டளை பிறப்பிக்கவே மறுநாளும் அவ்வாறே தயார்செய்யப்பட்டு யாவரும் விருந்துண்டு முடிந்தவுடன் பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) எழுந்து, யான் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப உங்களை அவனது சன்மார்க்கத்தின் பக்கல் அழைக்கின்றேனாதலால், இவ்வுத்தமகைங்கரியத்துக்காக உங்களில் யார் எனக்கு உதவிபுரிய முற்படுகின்றீர்களென வினவினார்

கள். இதனை செவியுற்ற யாவரும் தங்கள் முகத்தைத் திருப்பிக்கொண்டு விட்டனர். ஆனால் ஹஸ்ரத் அலீ (ரலீ.) அவர்கள் முன் வந்து, யான் உங்கள் யாவரிலும் சிறியோனாக யிருப்பதுடன் என் தேகம் மெலிந்து இரு கண்களிலும் வலி ஏற்பட்டிருக்கும் நிலைமையிலும் யான் அவ்வுத்தம சேவையில் தங்களுக்கு உதவிபுரியத் தயாராக இருக்கிறேன் எனக் கூறியதை அங்கிருந்தோர் யாவரும் கேட்டு பரிகாசமாய்ச்சிறித்து எழுந்து சென்று, இந்த முஹம்மதும் (ஸல்.), பதின்மூன்று வயதுள்ள இச்சிறு பையனுந்தானா உலகத்தின் விதியைப் பற்றி முடிவு செய்யப்போகிறார்களெனக் கூறிக்கொண்டிருக்கும்போதே தங்களை யறியாமலே சிறிப்புண்டாயிற்று. அதனால் அவர்கள் ஏளனமாய் எண்ணி பரிகசித்துச் சிறித்தார்கள். ஆனால் அவர்களிருவரும் கூறிய வார்த்தைகள் உண்மை யென்பதைச் சிறிது காலத்திற்குள் காலமே காட்டிவிட்டதாதலின் அது முதல் பெருமானார் (ஸல்.) அவர்கள், அந்த ஜனங்களிடம் ஒரே நாயனை வணங்கும் படியும்விக்கிரகாராதனையை விட்டு விடும்படியும் சன்மார்க்கத்தின் பக்கல் வரும்படியும் பஹிரங்கமாய் போதனைபுரிந்து வந்தார்கள்.

குரைஷ்யர்களின் விரோதம்

நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் வழக்கம்போல் ஏகத்துவத்தின் மேன்மையை எடுத்துக்காட்டி, விக்கிரக வணக்கத்தைப்பற்றி பஹிரங்கமாய் கண்டனஞ்செய்து வருவதைக்கண்ட அரபியர்கள் யாவரும், தங்கள்மீது கோபங்கொண்டு விரோதஞ் செய்வதற்காக முற்பட்டு விட்டனர். மக்காவிலுள்ள கஃபத்துல்லா ஷரீபை அரபியர்களனைவரும் மிகவும் பரிசுத்தம் பொருந்திய ஸ்தலமாகக் கொண்டாடிவந்தார்களாதலின் அக்கஃபாவின் மேன்பார்வை குரைஷ்யர்கள் வசமிருந்து வந்தது. அதனால் அவர்களுக்கு அரேபியாவில் மிகுந்த கௌரவமும் மதிப்பும் ஏற்பட்டிருந்ததால் விக்கிரக வணக்கம் தலைசிறந்து விளங்கினால்தான் தங்களுக்குஅக்கௌரவம் நிலைத்திருக்குமென்று குரைஷியர்கள் கருதியிருந்தனர். இதுவுமன்றி அவர்கள் அநேக காலம் விக்கிரகத்தை வணங்கி வந்த தன் பயனாக அது அவர்கள் மனதில் நன்கு பதிந்து போயிருந்தது. இக்காரணத்தால் விக்கிரக ஆராதனையைக் கண்டித்துப் பேசுவது குறிப்பாய் குரைஷியர்களுக்கு பொறுக்க முடியாத சங்கடமாக இருந்துகொண்டிருந்தது. இந்நிலைமையில் ஒருநாளன்று குரைஷியர்களில் உத்பா ஷைபா அபூஜஹ்ல் வலீதுப்னு முகைரா முதலிய யாவரும் ஒன்றுசேர்ந்து பெருமானார்(ஸல்.) அவர்களின் பெரியதந்தையரான ஹஸ்ரத் அபூதாலிப் அவர்களிடம் சென்று 'உங்களுடைய சகோதரரின் குமாரர் எங்களுடைய மார்க்கத்தையும், தேவதைகளையும் தூஷித்து வருகின்றார்; அவைகளை நாங்கள் சகித்துக்கொண்டிருக்க முடியாதாகையால் இனியும் அவ்வாறு செய்துகொண்டிராமல் தாங்கள் தடைசெய்து விடுங்கள்; அல்லது தாங்கள் குறுக்கே வராமல் ஒதுங்கிவிடுங்கள்; நாங்கள் அவருக்குப் புத்தி கற்பித்துக் கொடுக்கிறோம் எனக் கூறினர். ஹஸ்ரத் அபூதாலிப் அவர்கள் தக்கசமாதானஞ் சொல்லி அன்னோரை அனுப்பிவிட்டார்கள். பிறகும் பெருமானார் (ஸல்.) அவர்கள் தங்கள் சேவையைத் தொடர்ந்தேசெய்துவந்ததால்அக்குரைஷியர்கள்கோபாக்கினி ததும்பியவர்களாய் ஹஸ்ரத் அபூதாலிப் அவர்களிடம்வந்து, நாங்கள் இனியும் சகித்துக்கொண்டிருக்க முடியாதாகையால் இனி அவ்வாறு செய்யாது தடுத்துக் கொள்ளுங்கள்; அல்லது அவருடன் நீங்களும் சேர்ந்துகொள்ளுங்கள்; அவவிதம் சேருவதனால் ஒரு கட்சி நாசமாகும்வரை நாம் சண்டைசெய்து இதற்கு ஓர் முடிவு எடுத்து விடுவோமெனச் சொல்லிப் போய்விட்டார்கள். அதன்மீது ஹஸ்ரத் அபூதாலிப் அவர்கள் பெருமானார் (ஸல்.) அவர்களை நோக்கி, அருமை குமாரரே! "குரைஷிபர்கள் முறையிட்டுப் போன காரியத்தை விட்டுவிடுவீராக" எனக் கூறினார்கள். இவர்களும் தங்களை வெறுத்துவிட்டார்களென்று கருதிய பெருமானார் (ஸல்.) அவர்கள், பெரியபிதாவை விழித்து 'அருமைப் பிதாவே! தாங்கள் எனக்கு உதவி செய்தாலும் சரியே! செய்யாவிட்டாலும் சரியே! எனக்கேற்பட்ட முக்கியக் கடமையை யான் செய்யாமலிருக்க முடியாது. என்னை நபியாக அனுப்பிய அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்றுவதில் யான் சற்றும் பின்னடைய மாட்டேன். இவர்கள் வணங்கும் விக்கிரகங்களுக்கு அறிவுமில்லை; தத்துவமுமில்லை; எவ்வகையிலும் இவர்களுக்கு உதவிசெய்ய அவைகளால் முடியாது; ஆபத்திலிருந்து இவர்களைக் காப்பாற்ற அவைகளில் எவ்வாறான சக்தியும் ஏற்பட்டிருக்கவில்லை; இவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்கவும் அவைகளால்

முடியாது. இந்நிலைமையில் எதற்காக இவ்வா
றான சக்தியற்ற விக்கிரகங்களை வணங்குகின்
றீர்களென்று அவர்களைக் கேட்பேன்; இவ்
வுண்மைகளை அவர்களுக்கு எடுத்துச் சொல்
வேன்; என்னை அவர்கள் இஷ்டப்படி செய்து
கொள்ளட்டும். அருமைப் பிதா அவர்களே!
அன்னோர் என் வலக்கையில் சூரியனையும்,
இடக்கையில் சந்திரனையும் வைத்து இச்
சேவையை விட்டுவிடுமாறு எனக்குச் சொன்ன
போதிலும் நான் விடப்போவதில்லை. எந்த
நாயனுடைய கட்டளையை யான் நிறைவேற்ற
முற்பட்டிருக்கிறேனோ அவன் கட்டாயம்
எனக்கு உதவிபுரிவான்; அவர்களது தீங்கி
லிருந்து என்னைக் காப்பாற்றுவான்' எனக்
கூறிக்கொண்டு கண்ணீர் ததும்பியவர்களாய்ச்
சென்றார்கள். உடனே ஹஸ்ரத் அபூ தாலிப்
(ரலி.) அவர்கள் பெருமானார் (ஸல்.) அவர்களை
அழைத்து,' என தருமை குமாரரே! நீர் பயப்
படாதீர்! உம்முடைய சேவையைச் செய்து
கொண்டு போவதில் யாருக்கும் பயப்படாதீர்!
எந்தவிதத்திலும் எதிரிகளால் தீங்கு நேரிட
யான் பார்த்துக்கொண்டிருக்க மாட்டேன்"
என தைரிய வார்த்தை கூறினார்கள்.

ஆரம்பத்தில் இஸ்லாம் மதத்தில் சேர்ந்
தோர்களில் ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் உது
மான் இவர்களைப் போன்ற ஒரு சிலர் தவிர
பாக்கியுள்ள யாவரும் ஏழைகளாயிருந்ததால்
இவ்வேழை முஸ்லிம்களை மக்காகுரைஷியர்
கள் சகிக்கொண்ணா துன்பத்துக்காளாக்கினார்
கள்; அவர்களுக்குப் பற்பலவாறான துன்பங்க
ளிழைக்க முற்பட்டனர். அறப்தேசத்தில்
வெயில் கடுமையாகயிருக்குமாதலால் அக்கடும்
வெயிலில் மத்தியான வேளையில் மணல்தரை
யில் அவ்வேழை முஸ்லிம்களை ஆடையின்றிப்
படுக்கவைத்து அவர்கள்மேல் சுமக்கமுடியாத
பாரமான கற்களைத்தூக்கி வைப்பார்கள். இரும்
புக் கம்பிகளைப் பழுக்கவைத்து அவர்கள் சரீ
ரத்தில் சூடுபோடுவார்கள். இவ்வாறான கொடுந்
துன்பங்களுக்கு ஏழை முஸ்லிம்களனைவரும்
உட்படுத்தப்பட்ட போதிலும் முக்கியமாய்
ஹஸ்ரத்பிலால், உமைய்யாபின் கல்ப், புஹைனா
ஆகியோர் அதிகத் துன்பத்துக்காளாயிருக்கின்
றனர். அக் குப்பார்கள் ஏழை முஸ்லிம்களை
தொந்திரை செய்து வருங்கால், ஒன்றிருக்
கில் நீங்கள் இவ்வேதனையால் மரணமாய் விட
வேண்டும், அல்லது முஹம்மதை விட்டுவிட
வேண்டும் எனக் கூறுவார்கள். அவ்வேழை
களிலுள்ள புஹைனாவென்னும் வெள்ளாட்
டியை உமர் (ரலி) அவர்கள் பெரும் தொந்
திரவு படுத்தியிருக்கின்றார்கள். ஹஸ்ரத் அபூ
பக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் புஹைனா, பிலால்
இவ்விருவர்களையும் வாங்கி உரிமைவிட்டு விட்
டார்கள். அவ்வாறு அதிக்கிரமஞ்செய்யப்பட்
டவர்களில் ஜுபைரா என்னும் மாது மொன்றா
கும். அம்மாதின்மீது அபூஜஹ்ல் என்பான்
கடுமை செய்ததின் பயனாக அவளுடைய இரு
கண்களும் பழுதடைந்து போய்விட்டது. அபூ
ஜஹ்ல் என்பான் அம்மாதை விழித்து, லாத்
உஜ்ஜா என்னும் விக்கிரகங்கள் உமது கண்களை
எடுத்துக்கொண்டது எனக்கூறினான். உடனே
அம்மாது, அவ்விக்கிரகங்களால் என்ன செய்ய
முடியும்? அல்லாஹ்வின் கற்பனைப்படி காரியம்
முடிந்திருக்கிறது எனக்கூறினாள்.

இவ்வண்ணமே குரைஷியர்கள் முஸ்லிம்
களுக்குச் செய்த எண்ணிறந்த துன்பத்திற்கு
எல்லையே கிடையாது. அவ்வேழை முஸ்லிம்கள்
இவ்வாறு சகிக்கொணாத் துன்பத்திற்காளாகி
யும், அத்துன்பங் காரணமாக அநேகர் உயிர்
துறக்கும்படி நேர்ந்தும் குரைஷியர்களின்
கொடுஞ் செயல்கள் அவ்வேழைகளின் மனதை
ஒரு சிறிதேனும் திருப்பமுடியாது பொறுமை
யைக் கைகொண்டு உறுதியோடிருக்கும்படி
செய்து விட்டது.

ஹஸ்ரத்உமர் (ரலி.) இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டது

உமரிப்னுகத்தாப் அவர்கள், எம்பெருமானார்
நபிகள் திலகம் (ஸல்) அவர்களை வெட்டுவதற்
காக உருவிய வாளுடன், தாங்களிருக்குமிடம்
நோக்கிச் சென்றார்கள். செல்லும் வழியில்
சிநேகிதரொருவர் ஹஸ்ரத் உமரைப்பார்த்து
ஏ உமரே! இவ்வளவு வேகத்தோடு எங்கு
போகின்றீர்? எனவினவ, உமர் நடந்த விருத்
தாந் தத்தை எல்லாம் விபரமாகக்கூறினார்
கள். அது பொழுது அந்த சிநேகிதர் உமரை
விழித்து ஏ உமரே! நீர் இஸ்லாத்தின் வேரை
யறுத்து அதன் ஸ்தாபகரைக் கொலைசெய்
வதற்காகப் புறப்பட்டிருக்கிறீர் போலும்? உம்
முடைய குடும்பத்திலேயே உமது சகோதரி
யும் மைத்துனரும் இஸ்லாம்மதத்தைத் தழுவி
யிருக்கும் நிலைமையில் அவர்களைவிட்டு வேறு
எங்கு செல்லுகின்றீர்? உமக்கு நியாய உணர்ச்சி
யும் வெட்கமுமிருக்குமாயின் முதலில் உம்
வீட்டைப் பார்த்துக்கொள்ளும் என்று கூறிய

தைக்கேட்ட உமர் அவர்கள், முன்னிலும் அதிக கோபாவேசங்கொண்டவர்களாய் நேராக அவர்கள் வீட்டுக்குச் சென்றார்கள். வீட்டுக்கதவு தாளிடப்பட்டிருக்கும் நிலைமையில் சகோதரியும் மைத்துனரும் உள்ளாலிருந்து குர்ஆன் ஓதிக் கொண்டிருக்கும் சப்தம் உமர் அவர்கள் காதில் விழுந்தது. உமர் வந்திருக்கும் செய்தி அன்னோருக்குத் தெரிந்தவுடன் திருக்குர்ஆனின் சில வசனங்கள் எழுதப்பட்டிருந்த காகிதத்தை ஒளித்து விட்டு சகோதரி கதவைத் திறந்து வந்துமௌனமாய் உட்கார்ந்துகொண்டார். உமர் உள்ளே வந்ததும் தம் சகோதரியை விழித்து, இவ்விடம் யான்கேட்ட சப்தம் யாது? உடனே அம்மாது ஒன்றுமில்லை என்று உரைக்க, உமர் "இல்லை நான் தான் நன்றாய்க்கேட்டேனே? நீங்களிருவரும் புராதன மதத்தைவிட்டு விட்டீர்களெ"ன்று கூறிக்கொண்டே அம்மாதை அடித்துத் தொந்திரை கொடுக்க முற்படவே திரேகத்திலிருந்து இரத்தம் வடிய ஆரம்பித்தது. இந்நிலைமையில் அம்மாது சிரோன்மணி தம் சோதரரை நோக்கி, உமரே! நீர் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளும்; இஸ்லாம் எங்கள் மனதைவிட்டு அகன்றுவிடாது; யாங்கள் ஒருக்காலும் முஹம்மதின் (ஸல்) மார்க்கத்தைவிட்டு திரும்பப்போவதில்லை என அழுத்தமாய்க் கூறினர்.

இக்கடும்மொழிகளைச் செவியுற்ற உமர் தம் சகோதரி இரத்த காயத்துடனிருப்பதைக் கண்ணுற்று நாணத்தால் தலைகுனிந்தவராய் தம் சோதரியை அன்புடன் நோக்கி, நீங்கள் ஓதிக்கொண்டிருந்தது எங்கிருக்கிறது? அதைக் காண்பியுங்கள்; முஹம்மது (ஸல்.) என்ன கொண்டுவந்திருக்கிறார் என்பதைப் பார்ப்போம் என தயவாய்க் கேட்டுக்கொண்டார். பாத்திமா என்னும் பெயருடைய அம்மாது திருகுர்ஆன்வசனங்கள் எழுதப்பெற்ற சில கடிதங்களைக் கொணர்ந்து முன் வைக்கவே, உமர் அதை எடுத்துப் பார்த்ததும் அதிலுள்ள ஒவ்வொரு வாக்கியமும் மனதில் பதிந்து பெரும் அச்சத்தையும் பயத்தையும் உண்டு பண்ணி வைத்து விட்டதால், உடனே வீட்டில் குர்ஆன் கற்பித்துக் கொடுத்துக்கொண்டிருந்த ஹஸ்ரத் கப்பாபை நோக்கி, என்னை முஹம்மதிடம் (ஸல்.) அழைத்துச் செல்லுங்களென கேட்டுக்கொண்டார். அதுபொழுது பெருமானார் (ஸல்.) அவர்கள் தங்கள் நண்பராகிய 'அர்க்கம்' என்பவர் வீட்டிலிருந்தார்கள். அது சற்று விசாலம் பொருந்திய வீடாகையால் முஸ்லிம்களில் துன்பப்படுத்தப் படுபவர்கள் அவ்விடம் ஒன்றுகூடி தங்கள் வணக்கத்தை நிறைவேற்றி வருவது வழக்கம். இந்நிலைமையில் அன்றையதினம் முஸ்லிம்கள் அவ்வீட்டில் கூடி 'அபூஜஹ்ல்' செய்த சபதத்தையும், உமர் வாளுடன் புறப்பட்டுச் சென்ற விஷயத்தையும் ஆலோசனைக்குக் கொண்டுவந்து மிகவும் பயந்துகொண்டிருந்தார்கள். அவர்களுக்கு உமரின் சகோதரி வீட்டில் நடைபெற்ற சம்பவம் யாதொன்றுமே தெரியாதாகையால் வீட்டுக் கதவு தாளிடப்பட்டிருந்த பொழுது உமர் வந்து வீட்டுக்கதவைத்தட்டுங்கால் அவருடைய கையில் வாளிருப்பதைக் கண்டமுஸ்லிம்கள், திகிலடைந்து கதவைத்திறக்கப் பயந்தார்கள். அதுபொழுது அங்கிருந்த ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி.) அவர்கள் முஸ்லிம்களை நோக்கி, அவரை உள்ளே விடுங்கள்; அவர் நல்லெண்ணத்துடன் வந்திருந்தால் சரி, இல்லாவிடின் அவர் கையிலிருக்கும் வாளைக்கொண்டே அவருடைய சிரசைக்கொய்து விடுகிறேன் என்று கூறியதும், கதவு திறக்கப்பட்டது. உமர் உள்ளே சென்றதும் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் முன்வந்து, உமர் அவர்களின் சட்டையின் ஓரத்தைப் பிடித்துக்கொண்டு கிதாபுடைய மகனாரே! நீர் என்ன நோக்கத்துடன் இங்கு வந்திருக்கிறீர்" என வினவ, அவர் அதிக வணக்கத்துடன் "அல்லாஹ்வின் மீதும் அவனது ரசூல் மீதும் ஈமான் கொள்வதற்காக வந்திருக்கிறேன்" என்று அறிவிக்கவே, நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் சந்தோஷமேலீட்டால் 'அல்லாஹு அக்பர்' என்று உறத்துக்கூவினார்கள். உடனே அங்கிருந்த யாவரும் சேர்ந்து 'அல்லாஹு அக்பர்' என்று கூறவே, அச்சப்தத்தினால் மக்காவிலுள்ள மலைகளிலிருந்தெல்லாம் எதிரொலி கிளம்பிற்று. உடனே ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள், ஒரு விஷயத்தை செவியுற்றவுடன் மக்களிடையே உடனே அச்செய்தியைப் பரத்திவிடக் கூடியவர் குறைஷிகளில் யாராகிலுமிருக்கின்றாரா வெனவினவவே, அவ்வாறான மனிதர் 'ஜமீலுப்னு முஅம்மர்' இருப்பதாக முஸ்லிம்கள் தெரிவித்தார்கள். உடனே ஹஸ்ரத்உமர்(ரலி.)அவர்கள், அவரிடஞ்சென்று, தாங்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொண்டதாகத் தெரிவித்தார்கள். அவர் உடனே எழுந்து கஃபத்துல்லாவின் பக்கல் சென்று மானி

டார்களை நோக்கி "குரைஷிகாள்! உமர் சன்மார்க்கத்தை விட்டு நீங்கிவிட்டார்" என பெரும் சப்தத்தோடு கூறமுற்பட்டார்.

ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள், அவருக்குப் பின் சென்று, 'இவர் கூறுவது அபாண்டப் புழுகாகும்; யான் முஸ்லிமாய்விட்டேன்' என அறிவித்தார்கள். இவ்வார்த்தையைச் செவியுற்ற யாவரும், ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களைச் சூழ்ந்துகொண்டார்களாதலின் ஹஸ்ரத் அவர்கள் அன்னோரை நோக்கி, உங்களால் எண்டதைச் செய்து கொள்ளுங்கள்; யாங்கள் முன்னூறு நபர்களிருப்பதால் மக்காவில் யார் இருப்பதென்பது இதுபொழுது தெரிந்துவிடவேண்டுமெனக்கூறினார்கள். இதற்கிடையே 'ஆஸிப்னு வாயில்' என்பான் அங்குவந்து, இவரிடம் தர்க்கம் புரியாது விட்டு விடுங்கள்; இவருடைய கூட்டத்தினர்களான 'பனூ அதீ' வர்க்கத்தார் இவரைவிட்டு விட மாட்டார்களெனக் கூறவே, யாவரும் பின் சென்று விட்டனர். அபூலஹப், அபூஜஹ்ல், உமைய்யாபின் கல்ப், ஹாரிதுப்னு கைஸ், வலீதுப்னு முகைரு, ஆஸிப்னுவாயில் முதலானோர் சதாவும் பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு மிதமிஞ்சி துன்ப மிழைத்துக் கொண்டும் கெடுதி பேசிக்கொண்டும் பரிகாசஞ் செய்து கொண்டு மிருந்தார்கள். சில கால் பெருமானார் (ஸல்.) அவர்களின் வீட்டு வாசற்படியில் சாணம்போலொற்ற அருவறுப்பான வஸ்த்துக்களைப் போட்டும், அவர்கள் உபதேசம் புரிந்து கொண்டிருக்குங்காலை அவர்களைப் பொய்யாக்கி வைத்தும் அவர்கள் பால் கல்லெறிந்து சப்தம் போட்டுக்கொண்டு மிருந்தார்கள்.

சஹாபாக்கள் ஹபஷாதேசம் செல்லல்

தங்களுடன், தங்களைப் பின் தொடர்ந்தோரும், சகிக்கொணாத்துன்பங்களை அனுபவித்து வருவதைப் பெருமானார் (ஸல்.) அவர்கள் கண்டு மனம் சகியாதவர்களாய், மக்கமா நகரில் தக்க உதவியில்லாதோர்களெல்லாம் ஹபஷா (அபிஸினியா) நாட்டிற்குச் சென்று குடியேறும்படியும், அங்குள்ள அரசன் யார் மீதும் அனீதி புரியமாட்டானென்றும், பிறகு அல்லாஹ்த ஆலா தனது கிருபையால் முஸ்லிம்களுக்குச் சௌகிரியம் செய்து கொடுத்த காலை யாவரும் திரும்பி வந்துவிடலாமென்றும் கூறினார்கள். அதுபொழுது ஆரம்பமாக ஹஸ்ரத் உதுமானிப்னு அப்பான் (ரலி) அவர்கள் தங்களது மனைவியரான பீபி ருகைய்யாவுடனும், ஹஜ்ரத் 'ஜுபைரிப்னு அவ்வாம்' முதலிய 10 நபர்களும் நுபுவ்வத்தின் 5–ம் ஆண்டு ரஜப் மாதத்தில் ஹபஷாதேசம் சென்றார்கள். இதுதான் முஸ்லிம்கள் சென்ற முதல் ஹிஜ்ரத்தாகும். பின்னர் அஜபரிப்னு அபீதாலிப் அவர்கள் சென்றார்கள். அதற்குப்பின் முஸ்லிம்கள் துயர்படியாய் ஹபஷாதேசம் செல்ல ஆரம்பித்தார்களாதலின் ஹிஜ்ரத் சென்றவர்களின் எண்ணிக்கை ஆண்களில் 83-ம் பெண்களில் 18 வரை யிலுமாயிருந்தது.

முஸ்லிம்கள் மக்காவைவிட்டு அபிஸினியா செல்லும் விபரம் குரைஷியர்களுக்குத் தெரிந்தவுடன் அவர்களை அங்கும் சும்மாவிடக் கூடாதென்பதற்காக, அப்துல்லா, அம்ருப்னுல் ஆஸ் இவர்களை அத்தேச அரசனிடம் தூது அனுப்பி வைத்து, முஸ்லிம்களைத்திரும்பவும் மக்காவிற்கு அனுப்பி வைப்பதற்குஏற்பாடு செய்தார்கள். அதுபொழுது குரைஷிகளின் தூதர்கள் அவ்வரசனுக்குக் காணிக்கையாக ஏராளமானபொருள்களையும் எடுத்துச்சென்று, அரசரிடம் அவைகளைச் சமர்ப்பித்துக் கோரிச் சென்ற விஷயத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள். உடனே அவ்வரசர் முஸ்லிம்களை ராஜசபைக்குத்தருவித்து, 'நீங்கள் கிறிஸ்தவ மதத்திற்கும் விக்கிரக ஆராதனைக்கும் விரோதமாக வேறு ஏதோபுதியமதத்தைஒப்புக்கொண்டிருப்பதாய்த் தெரிகிறது' எனக்கேட்டார். அதற்கு முஸ்லிம்களின் சார்பாக ஹஸ்ரத் ஜஅபர் (ரலி.) அவர்கள் முன்வந்து, மேன்மைதங்கிய அரசரே! சற்று தயவுடன் எங்களுடைய நிலைமைக்கு செவிசாய்ப்பீராக! நாங்கள் அஞ்ஞானத்திலும் அந்தகாரத்திலும் அநாகரீகத்திலும் ஆழ்ந்திருந்ததன்பயனாக சன்மார்க்கத்தைவிட்டுத் தவறியிருந்தோம்; கல்மரம் உலோகங்களினால் செய்யப்பட்ட விக்கிரகம் முதலியவைகளை வணங்கி வந்தோம்; உயிரற்ற பிராணிகளை உணவாகக்கொண்டிருந்ததுடன் பெண் மக்களைக் கொல்வதையும் பெண்களைக் கற்பழிப்பதையும் பெருமையாகக்கொண்டாடிவந்தோம்; அன்பு, உபகாரம் மனித உணர்ச்சி இவைகளை அறவே மறந்து கேவலமான ஒழுக்கத்தையுடையோராகவும் பலாத்காரத்தைச் சட்டமாக மதிக்கிறவர்களாகவு மிருந்துவந்தோம். சுருங்கக்கூறுமிடத்து, நாங்கள் மிருகங்களைப்போன்று காலங் கழித்து வந்தோமெனக்கூறுவதுமிகையாகாது. யாங்கள் இவ்வாறான தாழ்ந்த நிலைமையிலிருப்

பதைக்கண்ட நாயகனுக்கு இரக்கமுண்டாகி, எங்களுக்கு நேர்வழி காண்பிப்பதற்காக எங்களிலிருந்து ஒருவரை வெளியாக்கினான்; அவர்கள் திருநாமம் முஹம்மது (ஸல்.); அவர்களது உயர் பிறப்பையும், மனத்தூய்மையையும், சத்தியம், நன்னடைக்கைகளையும், மனித வர்க்கத்தின்மீது அவர்களுக்குள்ள அன்பையும் நாங்கள் நன்கறிவோம். அவர்கள், நாயன் ஒருவனென்றும், அவனுக்கு மற்ற வஸ்த்துக்களை இணையாக்கக் கூடாதென்றும் வற்புறுத்திக் கூறிவருவதுடன் தாங்கள் அந்த நாயனின் தூதரென்பதை அங்கீகரிக்கும்படியும் எங்களுக்கு போதித்தார்கள். அரசே! இவைகள்தாம் நபியவர்களின்போதனையாகும். ஆகவே, நாங்கள் அவர்கள்பால் விசுவாசங்கொண்டு அவர்களின் போதனைகளுக்கு வழிப்பட்டோம்; விக்கிரக ஆராதனைசெய்யக்கூடாதென்று அவர்கள் கூறியதை நாங்கள் அங்கீகரித்து ஏகவல்ல நாயனை வணங்குவதில் ஈடுபட்டோம்; இவைகளுக்காக எங்களுடைய நாட்டார் எங்களுக்குச் செய்த துன்பத்திற்கும் கஷ்டத்திற்கும் ஓர் அளவில்லை; அது காரணமாய் நாங்கள் எங்கள் பெண்டு பிள்ளைகள், வீடு பொருள்கள் முதலியயாவற்றையுமிழந்து இங்கு செல்லும்படியாயிற்று. எங்களுடைய தேசத்தில் எங்களுக்கு ஆதரவு இல்லாத்ததால் தங்களுடைய நாட்டுக்குவந்து அடைக்கலம்புகுந்திருக்கிறோம். தாங்கள் தயாளசிந்தையுள்ள நியாயவானாகையால் ஏழைகளாகிய எங்களுக்கு கஷ்டமேற்படாமல் பார்த்துக்கொள்வீர்களென நம்புகிறோம் எனத் தெரிவித்துக்கொண்டார்கள். ஹஸ்ரத் ஜஅபர் (ரலி.) அவர்கள் எடுத்துரைத்த விஷயங்கள் அவ்வரசருடைய மனதில் நன்கு பதிந்துவிட்டதன் பயனாக அவ்வரசர், குரைஷித்தூதர்கள் கோரிச் சென்ற காரியத்துக்கு இடங்கொடுக்கவில்லை. அதனால் அத்தூதர்கள் மனோசஞ்சலமடைந்தவர்களாய்த் திரும்பிவர நேர்ந்தது. அதன் பின் அவ்வரசர் ஹஸ்ரத் ஜஅபர் அவர்களைத் தம் சன்னிதானத்திற்கு அடிக்கடி அழைத்து மதசம்பந்தமாகப் பேசிக்கொண்டிருப்பார்.

குரைஷ்கள் பனூஹாஷிம்களை பஹிஷ்கரித்தல்.

இஸ்லாம் மனமானது பலவாறான துன்பங்களுக்கும் கஷ்டங்களுக்குமிடையே வளர்பிறை சந்திரன்போல் பிரகாசித்து வருவதைக்கண்ட குரைஷிகள், தங்கள் முயற்சிகளெல்லாம் பாழாய்வருவதன் கவலை மேலிட்டவர்களாய் தங்களுக்குள் ஓர் உடன்படிக்கைசெய்துகொண்டார்கள். அதில், பனூஹாஷிம், பனூமுத்தலிப் இவர்களிடம் எவ்வித சம்பந்தமும் வைத்துக் கொள்ளக்கூடாதென்றும், விவாக சம்பந்தமோ வியாபார சம்பந்தமோ வைத்துக் கொள்ளக்கூடாதென்றும் அவ்வுடன்படிக்கையில் குறிப்பிட்டு அதனை கஃபத்துல்லாஹ்வின் சுவற்றில் தொங்கவிட்டார்கள். இதனை யறிந்த அபூதாலிப் அவர்கள், வேறு வழியின்றி தங்கள் குடும்பத்தார் யாவரையும் ஒன்று சேர்த்து மக்காவிற்குச் சமீபத்திலுள்ள—தங்கள் குடும்பத்திற்குச் சொந்தமான—ஓர் மலைப் பள்ளத்தாக்கிற்குச் சென்று அங்கு வாசஞ்செய்துவந்தார்கள். ஆனால் அபூலஹப் மட்டும் இவர்களுடன் சேராது விரோதமாய் குரைஷிகளுடன் போய்ச் சேர்ந்துகொண்டான். அந்த மலைப்பள்ளத்தாக்கில் வசித்து வந்தோர் உணவிற்கு யாதொரு வழியுமில்லாது இலை தழைகளையும், அங்குகிடைக்கும் வேறு வஸ்துக்களையும் அருந்திவரும்நிலைமையில், குழந்தைகளெல்லாம் பசியினால் வீறிட்டழுவதை வெளியிலிருந்து செவியுறும் குரைஷிகள், சந்தோஷ மேலிட்டவர்களாய்ச் சிரிப்பார்கள். மூன்று வருடகாலம் வரை நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களும், பனூஹாஷிம்களும் இக்கஷ்ட நிலைமையிலேயே இருந்துவந்தார்கள்.

முஹாஜிர்கள் மக்காவிற்கு திரும்புதல்

அதுபொழுது மக்கா வாசிகள் யாவரும் தூய்மை பொருந்திய இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிக் கொண்டார்களென்னும் வதந்தி ஹபஷாவுக்குச் சென்றிருந்த முஸ்லிம்களுக்கு தெரிய வந்தது. உடனே அன்னோரில் 33 நபர்கள் ஹபஷாவை விட்டுப் புறப்பட்டு மதீனாவை நோக்கி வருங்காலை, இடையில் தங்களுக்குக் கிடைத்த வதந்தி தவறென்று தெரிய வந்ததால் அன்னோர் பஹிரங்கமாய் மக்காவினுள் பிரவேசிக்க முடியாது போயிற்று.

உடன்படிக்கை கிழிக்கப்பட்டது

இதற்கிடையே சிலர் ஒன்றுகூடி உடன்படிக்கையைக் கிழித்தெறிந்துவிட வேண்டுமெனக் கங்கணங்கட்டிக்கொண்டு முன்வந்தனர் அதுபொழுது 'ஜுஹைரிப்னு உம்மியத்துல் மக்தூமி' முன்வந்து இக்காரியத்தைத் தாமே செய்துவிடுவதாகக் கூறினார். ஆனால் இது சம்மந்தமாய் மறுநாள் கஃபத்துல்லாவில் ஒரு கூட்டமஏற்படுத்தி அதில் முடிவு செய்து கொள்வ

தென தீர்மானிக்கப்பட்டிருந்ததற்கேற்ப மறுநாள் அதிகாலையில் யாவரும் கஃபதுல்லாவினுள் ஒன்று கூடினர். ஜுஹைரோ கஃபத்துல்லாவை வலம் சுற்றி அக்கூட்டத்துக்கு வந்தும் அங்கிருந்தோர் யாவரையும் நோக்கி, 'எ மக்கா வாசிகளே! நாமெல்லோரும் சுகமாகக் காலங்கழித்து வரும் நிலைமையில் பனூஹாஷிம்கள்மட்டும் அன்னந் தண்ணீரில்லாமல் கஷ்டப்படுவது நியாயந்தானா? அல்லாஹ்வின்மீது சத்தியமாக இந்த அநீதியான உடன்படிக்கையை கிழித்தெறியும் வரை நான் சும்மாவிருக்கப் போவதில்லை' என்று கூறினார். உடனே, அபூஜஹ்ல் என்பான் சினங்கொண்டவனாய் எழுந்து நின்று, "இவ்வுடன்படிக்கையைக் கிழித்தெறிய ஒருக்காலும் முடியாது" என்று சொன்னான். அதுபொழுது 'ஸம்ஆஇப்னு அஸ்வத்' என்பார் எழுந்து அல்லாஹ்வின் மீது பிரமாணமாய் நீர் பொய் புகல்கின்றீர்; இதை எழுதுங்கால் எங்களிலெவரும் இதற்குச் சம்மதங் கொடுக்கவில்லை என்றுகூறிக் கொண்டிருக்கும்போதே 'முத்யிம்' எழுந்து அவ்வுடன்படிக்கையைக் கிழித்தெறிந்து விட்டார். உடனேமுத்யிம், ஜுஹைர், ஸம்ஆ முதலானோர் ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு பனூஹாஷிம்களிருக்குமிடத்துக்குச் சென்று அவர்களை அழைத்துவந்து விட்டனர்.

அபூதாலிப், கதீஜா நாயகி மரணம்

நபிப்பட்டம் வந்த 10-ம் ஆண்டு ஷவ்வால் மாதத்தில் ஹஸ்ரத் *அபூதாலிப் மரணமடைந்தார்கள். அதன்பின் நபி பெருமானார் (ஸல்.) அவர்களின் அருமை மனைவியரான ஹஸ்ரத் *கதீஜா பிராட்டியார் அவர்கள் தெய்வகதி அடைந்தார்கள். இம்மாது, பெருமானார் (ஸல்.) அவர்கள் மனம்போல் நடப்பவராயும், கஷ்ட சமயத்தில் ஆறுதல் சொல்பவராயுமிருந்தார். நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்கு உதவியாயிருந்த இவ்விருவர்களின் மரணமும்ஒரே வருடத்தில் நேர்ந்ததால் இவ்வருடத்தை துக்கமுடைய ஆண்டென கூறப்பட்டிருக்கிறது.

சத்தியத் தூதர் தாயிபுக்குச் செல்லுதல்

அபூதாலிப், கதீஜா நாயகி இவர்களின் மரணத்திற்குப் பின் குரைஷிகள் பெருமானார் (ஸல்.) அவர்களை அளவுகடந்த துன்பத்துக்குள்ளாக்கினார்கள். ஒருநாள் அவர்கள் வழியிற் சென்றுகொண்டிருக்குங்கால் ஓர் அற்பன் அவர்கள் தலையில் மண்ணை வாறி எறிந்துவிட்டான். ஒருநாள் தொழுகையில் நின்றுகொண்டிருக்குங்கால் ஒருவன் ஆட்டுப் புழுக்கையைக் கொண்டுவந்து தங்கள்மீது போட்டுவிட்டான். இவ்வடாச் செயல்களைக்கண்ட பெருமானார் (ஸல்.) அவர்கள் மனோவருத்தமுற்றவர்களாய், ஜைதுப்னு ஹாரிதைத் தங்களுடன் அழைத்துக்கொண்டு மக்காவுக்குச் சமீபத்திலுள்ள †'தாயிப்' என்னும் நகருக்குச் சென்று

*அபூதாலிப் அவர்கள் உயிருடனிருக்கும் வரை பெருமானார் (ஸல்.) அவர்களுக்குப் பெரும் உபகாரமாயிருந்ததுடன் தங்களுக்குத் தொந்திரவு கொடுக்க எவருக்கும் சக்தியில்லாதிருந்தது. அவர்களின் உதவியால் தான் பெருமானார் (ஸல்.) அவர்கள் இஸ்லாமியப் பிரசாரஞ் செய்வதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டு வந்தது. அவர்கள் மரணமாகும் தருவாயில் பெருமானார் (ஸல்.) அவர்கள் அபூதாலிம் அவர்களிடஞ் சென்று, தாங்கள் ஒருமுறை கலீமா ஓதி விடுவீர்களாயின் தங்கள் முடிவு இஸ்லாத்தின் மீதேற்பட்டதென்று அல்லாஹ்த ஆலாவிடம் சாக்ஷியங் கொடுக்கிறேன் என எவ்வளவோ வேண்டிக்கொண்டும், அவர்கள் இஸ்லாத்தை யான் தழுவிக்கொண்டேன் என்னும் இழிச்சொல் என்னைச் சார்வதைவிட நரக நெருப்பைத் தெரிந்துகொள்வது மேலாகுமெனக் கூறி விட்டார்கள்.

*கதீஜா பிராட்டியார்தான் ஆரம்பமாக இஸ்லாத்தைத் தழுவியவர்களாகும். ஆரம்பத்தில் குப்பார்கள் எம்பெருமானார் (ஸல்.) அவர்களுக்குப் புரிந்துவந்த சகிக்கொணாத் துன்பங்களைக் கண்டு தாங்கள் மனக்கவலை கொள்ளுங்கால் இம்மாது தக்க தேறுதல் சொல்லிவந்தார்கள். ஹிராப் பொதும்பில் வஹீ வருங்காலை தங்களுக்கேற்பட்ட கஷ்டங்களை, வீடு திரும்பிவந்து பீபி அவர்களிடம் தெரிவிக்குங்கால் தைரிய வார்த்தைகள்கூறி, 'வரகாபின் நவ்பல்' இடம் அழைத்துச்சென்று தங்களுக்குப் பெரியதோர் வேதம் அருளப்படப் போகிறதென்னும் சுபச் செய்தியைத் தெரிவிக்கச் செய்த அருமை மாதாகும். இவர்களால் பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு அபரிமிதமான உபகாரம் கிடைத்து வந்திருக்கிறது.

†தாயிப் என்பது மக்காவிலிருந்து 3 மன்ஜில் தூரமுள்ள நீர்வளம் நிலவளம் பொருந்திய செழிப்பான ஓர் இடத்திற்குப் பெயராகும். அவ்விடத்திய காற்றானது ஆரோக்கியத்தைத் தரத்தக்கதாகும். இதுபொழுது கனிவர்க்கம், பழவகைகள் அங்கிருந்து

விட்டார்கள். அங்கு அநேக பிரபுக்களும் செல்வந்தர்களுமிருந்தனராதலின், தாங்கள் ' தகீப் ' கூட்டத்தாரிடம் சென்று அவர்களை ஏகத்துவத்தின்பக்கல் அழைத்து யாவரும் இஸ்லாத்தில் வந்து சேருமாறு கோரிக்கொண்டார்கள். அவர்களிலொருவன், பெருமானார் (ஸல்.) அவர்களை நோக்கி, அல்லாஹ்த ஆலா நபியாக அனுப்புவதற்கு உம்மைத் தவிர வேறு யாரும் அவனுக்குக் கிடைக்கவில்லையோவென்றும், மற்றொருவன், அல்லாஹ்வின்மீது பிரமாணமாக யான் உம்மோடு எக்காரணத்தைக் கொண்டும் பேசமாட்டோம்; நீர் உண்மையான நபியாகவிருந்தால் உம்மோடு பேசுவது ஒழுக்கத்துக்கு விரோதமாகும்; நீர் பொய்யராயிருந்தால் நபிப் பட்டத்தை தஅவாச் செய்வதற்கு தகுதியற்றவரா யிருக்கின்றீர் அதனால் உம்முடன் வார்த்தையாடுவதற்கு நான் இஷ்டப்படவில்லை என்றும் கூறினர். உடனே பெருமானார்(ஸல்.)அவர்கள், அவர்களிடமிருந்து எழுந்து சென்றுவிட்டார்கள். அன்னோர் கடைவீதிக்குச் சென்று அங்குள்ள சிறுவர் அற்பத்தனமுடையவர்களை யெல்லாம் தூண்டிவிட்டதால் அவர்கள் யாவரும் அணிவகுத்து நின்று நிந்தனை சொற்களால் ஏசிக் கைகொட்டி கூக்குரலிட்டு பரிகசிக்க முற்பட்டதுடன் கற்களை எடுத்து எறிந்தவர்களாய்த் துறத்திச் சென்றார்கள். கல்லெறியினால் பெருமானார் (ஸல்.) அவர்கள் காயமுற்ற வர்களாய்ச் சோர்வடைந்து கீழே உட்காரமுயலும்போதெல்லாம் அந்தப்பாவிகள் உட்காரவிடாது எழுந்து நிற்கும்படி தோளைப் பிடித்து தூக்கிவிடுவார்கள். இவ்வாறு செய்துகொண்டே பெருமானார் (ஸல்.) அவர்களை ஓர் மணல்மேடு வரை துறத்திச் சென்றார்கள். பெருமானார்(ஸல்.)அம்மேட்டின்மீது நின்றுகொண்டு ஆண்டவா! என்னுடைய பலஹீனத்தையும் அசக்தியையும், மனிதர் பார்வையில் யான் கேவலப்படுத்தப்படுவதையும் உன்னிடமே முறையிடுகின்றேன். இறக்கமுள்ளவர்களி லெல்லோரினும் நீயே மிகுந்த இறக்கமுள்ளவன்; நீயே பலஹீனர்களைக் காப்பாற்றக் கூடியவன்; உன்னையன்றி வேறு சக்தி எனக்கில்லை எனக்கூறிவிட்டு, அங்கிருந்து மக்கமா நகருக்குத் திருப்பி வந்துவிட்டார்கள். தாயிபில் பெருமானார்(ஸல்.) அவர்களுக்குப் பெரும் தொந்திரை ஏற்பட்டு ஊரைவிட்டுத் துரத்தப்பட்ட செய்தி, அவர்கள் மக்காவிற்கு வந்துசேருமுன் குரைஷியர்களுக்குத் தெரிந்துபோயிற்று. அதனால் அக் குரைஷியர்முன்னைவிட அதிகமாய், பெருமானார் (ஸல்.) அவர்களுக்குத் தொந்திரை கொடுக்க முற்பட்டார்கள்.

தான் மக்கமா நகர்வந்து விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

ஹிஜ்ஜுடைய காலத்தில் இஸ்லாமியப் பிரசாரம்

ஹஜ்ஜுடைய காலங்களில் மக்கமா நகருக்கு வரும் அரபி வர்க்கத்தாரிடம் பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் சென்று அன்னோரை சன்மார்க்கத்தின் பக்கல் அழைத்து, ' ஏ மானிடர்காள்! அல்லாஹ்தஆலா என்னை நபியாக உங்களிடம் அனுப்பி அவனை வணங்கும்படியும், அவனுக்கு யாரையும் இணையாக்கி வைக்காமலிருக்குமாறும் கூறி யிருக்கிறான்' எனத் தெரியப்படுத்துவார்கள். அதுபொழுது 'அபூலஹப்' என்பான் அங்கு குறுக்கிட்டு, இவர் நம்முடையலாத், உஜ்ஜாஎன்னும் விக்கிரகங்களையெல்லாம் தூஷித்துக் கொண்டிருப்பதுடன் அவைகளை வணங்குவதையும் விட்டொழித்து விடவேண்டுமென்று கூறுகின்றாராதலின் அவருடைய வார்த்தையைக் கேளாதீர்கள் எனக் கூறுவான். பிறகு நபிகள் திலகம்(ஸல்.)அவர்கள் குந்தா, கல்பு, பனீஹனீபா, பனீஆமிர் முதலிய குப்பார்களிடம் சென்று உபதேசம் புரிந்தும் அன்னோரும் பெருமானார் (ஸல்.) அவர்களின் திருவுபதேசத்திற்குச் செவிமடுத்தார்களில்லை. அதுபொழுது பனூஆமிர் வர்க்கத்திலுள்ள ஒருவன் முன்வந்து, பெருமானாரை விழித்து, யாங்கள், தங்களது உபதேசத்தை ஏற்று தங்களுக்கு உதவிபுரிவதுகொண்டு விரோதிகள்மீது நமக்கு ஜெயமேற்பட்டு விடுமாயின், தங்கள் காலத்துக்குப்பின் அதிகார பாரத்தை எங்களிடம் ஒப்புவித்துவிட சம்மதிக்கின்றீர்களாவென வினவினான். உடனே பெருமானார் (ஸல்.) அவர்கள், இக்காரியம் அல்லாஹ்வின் நாட்டத்திலுள்ளதாகையால் அவன் நாடியவர்களுக்குத் தலைமைத்தனத்தை அளிப்பான் எனக் கூறியதைத்கேட்ட அம்மனிதன், எங்கள் உயிர்களை வீணாக அபாயத்தில் போடுவதில் யாது பயனேற்பட்டிருக்கிறது? எங்கள் உயிர்களைக் கொடுத்து அதிகாரத்தை வேறு ஒருவர் கையில் கொடுக்க நாங்கள் ஒருக்காலும் சம்மதிக்க முடியாதெனக் கூறிவிட்டான்.

*அன்ஸார்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவிக் கொண்டது

ஒருநாளன்று நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் மக்கமா நகருக்குச் சமீபத்திலுள்ள ஓர் பள்ளத்தாக்குக்குச் சமீபத்தில் மதீனா வாசிகளான 'கஜ்ரஜ்' வர்க்கத்தாரைச்சந்தித்தார்கள். உடனே பெருமானார் (ஸல்.) அவர்கள், தங்கள் வழக்கம்போல் அன்னோர்பால் இஸ்லாத்தின் தத்துவங்களை எடுத்துக் கூறி குர்ஆன் ஷரீபின் சில வாக்கியங்களையும் ஓதிக் காண்பித்தார்கள். அவர்கள் ஆறு நபர்களிருந்தனர். பெருமானார் (ஸல்.) அவர்களின் பரிசுத்த எண்ணமும், வார்த்தையின் உண்மையும் அவர்கள் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்து விட்டதால் அவ்வறுவரும் அங்கேயே இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டார்கள். அவர்கள் அங்கிருந்து மதீனாவிற்குச் சென்றதும், மக்காவில் ஓர் பெரிய நபி அவதரித்திருக்கின்றாரென்றும், பல நூற்றாண்டுகளாயிருந்துவரும் அந்தகாரத்தை அதிசீக்கிரமாக அகற்றிவிடக் கூடியவரா யிருக்கிறாரென்றும், அவரிடம் உண்மை ஒளி வீசுகிறதென்றும், அவர் அல்லாஹ்வின் சத்திய மதத்தை உலகில் பரப்பி வருகிறாரென்றும் பிரசித்தப்படுத்தியதால் அச்செய்தி மதீனா முழுதிலும் பரவிப் போயிற்று.

மறுவருடம் ஹஜ்ஜுடைய காலத்தில், முன் வந்துபோன அறுவருடன் மதீனாவின் பெரிய குடும்பத்திலுள்ள வேறு அறுவர் சேர்ந்து ஆக பன்னிரண்டு நபர்கள், எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களிடம்வந்து ஏற்கனவே அறுவர் இஸ்லாத்தைத் தழுவிய இடத்திலேயே இன்னோரும் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்ட பொழுது அவர்களனைவரும் பெருமானார் (ஸல்.) அவர்களிடம் சில வாக்குறுதிகள்செய்து கொடுத்தனர். அவையாவன:— (1) நாங்கள் நாயனுடன் வேறு யாரையும் இணை வைப்பதில்லை. (2) களவு, விபசாரம் செய்வதில்லை. (3) மக்களைக் கொல்லுவதில்லை என்பதே. இவ்வுடன்பாடு முடிந்ததும் இஸ்லாத்தின் மதக் கொள்கைகளைத் தங்கள் நாட்டில் போதிப்பதற்காகப் பெருமானார் (ஸல்.) அவர்களின் சிஷ்யர்களில் ஒருவரைத் தங்களுடன் அனுப்ப வேண்டுமென வேண்டிக்கொண்டதால், நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் ஹஸ்ரத் முஸ்யிப்பின் உமைர் (ரலி.) அவர்களை அன்னோருடன் அனுப்பி இஸ்லாமியக் கட்டளைகளை கற்றுக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தார்கள்.

*எம்பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு உதவி புரிந்துவந்த மதீனா வாசிகளுக்கு அன்ஸார் எனச் சொல்லப்படும். அவர்களுடைய சந்ததிகளும் இதுகாலை வரை அன்ஸார்களென்றே அழைக்கப்பட்டு வருகின்றார்கள்.

மதீனாவில் இஸ்லாம்

மதீனா பட்டணத்தின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் இஸ்லாத்தின் ஒளி பிரகாசிக்க ஆரம்பித்து, ஒவ்வொரு வீட்டிலும் குறைந்த பக்ஷம் ஒருவராகிலும் இஸ்லாத்தைத் தழுவியிருந்தனர். சில காலத்துக்குப்பின் 'முஸ்யிப்பின் உமைர்' அவர்கள் ஹஜ்ஜுடைய காலத்தில் 73 முஸ்லிம்களுடன் மக்கமா நகர் வந்து சேர்ந்தார்கள். இவர்களெல்லோரும் ஏற்கனவே உடன்பாடு நடந்த 'உக்பா' என்னுமிடத்துக்கு ஹஜ்ஜுடைய தினங்களிலேயே வருவதாக பெருமானார் (ஸல்.) அவர்களிடம் கூறியிருந்த தற்கேற்ப அங்குவந்து கூடினர். நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் தங்கள் பெரிய பிதாவாகிய ஹஸ்ரத் அப்பாஸ் அவர்களுடன் அங்குவந்து சேர்ந்தார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் அவர்கள் அதுவரை இஸ்லாம் மதத்தைத் தழுவாதிருந்தும் மதீனாவிலிருந்து வந்தவர்களை நோக்கி, கஜ்ரஜ் வர்க்கத்தினர்களே! முஹம்மது (ஸல்.) எங்கள் குடும்பத்தில் கௌரவமும் நன்மதிப்பும் பெற்றவராகும். அவரின் விரோதிகளுக்கெதிரே எங்கள் மார்பை கேடயமாக வைத்து அவரைப் பாதுகாத்துவருகிறோம். இப்போது அவர் உங்களிடம்வர பிரியப்படுகிறபடியால், உயிருள்ள வரை அவரை நீங்கள் பாதுகாத்து உதவி செய்வதாயிருந்தால் அழைத்துச் செல்லுங்கள். அவ்வாறு செய்ய முடியாதென்றால் இப்பொழுதே தெரிவித்து விடுங்கள். நீங்கள் இஸ்லாத்தைத் தழுவியிருப்பதிலும் இஸ்லாத்தின் தலைவரை உங்கள் ஊருக்கு அழைத்துச் செல்வதிலும் அநேக ஆபத்துக்களிருக்கின்றன. ஆதலின், தீர்க்காலோசனை புரிந்து முடிவான பதில் சொல்லிவிடுங்கள் எனக் கூறினார்கள். உடனே அன்ஸார்களிலுள்ள ஒருவர் எழுந்து, 'கஜ்ரஜ் வர்க்கத்தினர்களே! நீங்கள் நன்காலோசித்துப் பார்த்து ஒரு முடிவுக்கு வாருங்கள். இதுபொழுது நீங்கள் துணிந்து முன்வரும் காரியத்தில் பின்னடைந்துபோவீர்களாயின் அவமானமென்னும் சூடு இம்மை மறுமை இருபதிலும் உங்கள் நெற்றியிலேற்

பட்டுப் போய்விடும்; ஆகையால் கோரி துணிந்து முன்வருங் காரியத்தில் கடைசிவரை ஈடுபட்டிருக்க மனோ உறுதி கொண்டிருப்பீர்க ளேல் கையை நீட்டி அறுதிமானஞ் செய்து கொடுங்கள், அதுபொழுது இரு பதியிலும் உங்கள் கௌரவம் மேலோங்கி இலங்கிக் கொண்டிருக்கும் எனக் கூறினார். இதனைச் செவியுற்ற மதீனா வாசிகளெல்லோரும் ஒன்று சேர்ந்து, "பலவாறான ஆபத்துக்கள் நேரிடு மென்று தெரிந்திருந்துதான் நாங்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொண்டோம்" எனக் கூறியவர்களாய் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களை நோக்கி, 'அல்லாவுடைய ரசூலே! தாங்கள் கூறும் நிபந்தனைகளுக்குக் கட்டுப் பட்டு நடக்க நாங்கள் தயாராகயிருப்பதால் அவைகளை அறிவித்துக் கொடுங்களென வேண் டிக்கொண்டார்கள். உடனே நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் திருகுர்ஆன் ஷரீபிலிருந்து சில வாக்கியங்களை அன்னோருக்கு எடுத்துக் கூறி, நீங்கள் அல்லாஹ்வுக்கு வழிப்பட்டு நட வுங்கள்; அவனுடன் மற்ற வஸ்துக்களை இணை வைக்காதீர்கள்; எனது பிரசார சேவையில் எனக்கு உதவிபுரியுங்கள்; யான் புரிந்துவரும் சன்மார்க்கப் பிரசாரத்திற்கு இடையூறாயிருப் பவர்களின் கெடுதிகள் என்னை அணுகாதபடி பாதுகாத்துக் கொள்ளுங்கள்; யான் கூறுவது போல் நடந்து கொள்ளுங்கள்; பாவத்தை விட்டு விலகி சதாவும் நல்ல காரியங்களையே செய்து வாருங்கள்; இதரர்களின் அவதூறு களைக்கண்டு மனச்சஞ்சல மடையாதீர்கள்; யான் உங்கள் நாட்டிற்கு வந்தால் எனக்கு உதவிபுரியுங்கள்" என்று கூறியவுடன் அவர் கள் யாவரும் 'அல்லாவுடைய ரசூலே! தாங்கள் கூறியுள்ள அரும்மொழிகளை நாங்கள் யாவரும் அன்புடன் ஏற்றுக்கொண்டு அதன்படி நடக் கத் தயாராயிருக்கிறோம். ஆனால் அல்லாஹ் வின் கிருபையால் தாங்கள் விரோதிகளை யெல் லாம் வென்று தங்களுக்கு யாதொரு இடை யூறுமில்லாதிருக்குங் காலத்தில் தாங்கள் எங் களைவிட்டு மக்காவிற்குப் திரும்பிப் போய் விடக்கூடாதென்பதை மட்டும் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்' எனக் கூறினர். அதற்குப் பெருமானார் (ஸல்.) அவர்கள் சிரித் துக்கொண்டே அவ்வாறு ஒருக்காலுமேற் படாது என்று கூறவே, அன்னோர் மதீனாவை நோக்கிப் புறப்பட்டு விட்டனர். உடனே பெருமானார் (ஸல்.) அவர்கள் சஹாபாக்களை நோக்கி, நீங்களெல்லோரும் ஹிஜரத் செய்து புறப்பட்டு மதீனாவுக்குச் செல்லுங்க ளென உத்திரவிடவே, அவர்கள் யாவரும் சிறிது காலத்துக்குள் மதீனமா நகர் சென்று விட்டார்கள். ஆனால் நபிகள் பெருமானார் (ஸல்.), ஹஸ்ரத் அலீ (ரலி.), ஹஸ்ரத் அபூ பக்ர் ஸித்தீக் (ரலி.) ஆகிய மூன்று பெயர்க ளும் மக்காவில் தங்கியிருந்தனர். பின்னர் பெரு மானார் (ஸல்.) அவர்கள் ரபீஉல் அவ்வல் மாதத் தில் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்வதற்கு உறுதி கொண்டார்கள்.

ஹிஜ்ரத் பிரயாணம்

அன்ஸார்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவிக் கொண்டு நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களை வரவேற்கத் தயாராகயிருக்கும் செய்தி குரை ஷியர்களுக்குத் தெரியவே, அன்னோர் கோபாக்கினி பொங்கியவர்களாய்த் தங்கள் கை களைப் பிசைய ஆரம்பித்து முஸ்லிம்களுக்கு அதிகத்தொந்திரை கொடுக்க முற்பட்டார்கள். அதிலும் பெருமானார் (ஸல்.) அவர்கள் மதீனா வுக்குச் சென்றுவிட்டால் இஸ்லாம் வலு வடைந்து விடுமென்பதை பயந்தவர்களாய் அவர்களைப் போகவிடாமல் தடைசெய்வதை யோசிப்பதற்காக *"தாருந்நத்வா" என்னும் ஆலோசனை மண்டபத்திற்கு குரைஷிகள் யாவரும்வந்து கூடினர். அக்கூட்டத்தில் பெரு மானார் (ஸல்.) அவர்களை மதீனாவுக்குச் செல்ல விடாது தடை செய்வதற்கு பலவாறான ஆலோசனைகள் கூறப்பட்டன. எனவே அவர்க ளிலொருவன், முஹம்மதுடைய (ஸல்.) பிரசா ரம் எங்கிருந்து எந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது பார்த்தீர்களா? சமீபகாலத் தில் அவர் தம்மைச் சேர்ந்தோர்களுடன் நம் மீது போர் புரிய முற்படக்கூடுமாகையால் அவர் விஷயமாய் தக்கயோசனை செய்து ஓர் முடிவெடுக்கவேண்டுமென்று கூறினான். யாவ ரும் சற்றுநேரம் ஆழ்ந்த சிந்தனைசெய்து பிறகு பெருமானார் (ஸல்.) அவர்களின் கைகால்களில் விலங்கிட்டுச் சிறை படுத்தவேண்டுமென்று சிலரும், நாட்டைவிட்டு வெளியே துரத்திவிட

---

* தாருந்நத்வா என்பது ஆலோசனை புரியும் ஓரிடமாகும் 'குஸ்ஸியிப்னு கிலாப்' என்பான் அக்கட்டடத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டினான். அரபிகள் பொது விஷயங்களை ஆலோசித்து முடிவு செய்வதற்காக அங்கு வந்து ஒன்றுகூடுவர்.

வேண்டுமென்று மற்றுஞ் சிலரும், கொலையே செய்துவிட வேண்டுமென்று வேறுபலரும் யோசனை கூறினார்கள். இறுதியாக கொலை செய்துவிடுவதென்ற முடிவுக்கு யாவரும்வந்து தனிப்பட்ட மனிதன் அக்கொலையைச் செய்வதால் அவனைமட்டும் அதன் பழிசார்ந்து நிற்குமாதலால் அதற்காக ஒருயோசனை செய்ய வேண்டுமென்று கருதினர். உடனே 'அபூ ஜஹ்ல்' முன் வந்து ஒவ்வொரு குடும்பத்திலிருந்து ஒவ்வொருமனிதனைத் தெரிந்தெடுத்து யாவரும் ஒன்று சேர்ந்து கையில் வாளோடு சென்று முஹம்மதை (ஸல்.) எல்லோரும் சேர்ந்து கொன்றுவிட்டால் கொலைப்பழி எல்லாக் குடுப்பத்தினர்பாலும் சாரும், அது பொழுதுபனூஹாஷிம்கள் நம்மெல்லோரையும் விரோதித்து பழிவாங்க முன்வரமாட்டார்கள் எனக் கூறினன். அபூஜஹ்லின் இந்த யோசனையை யாவரும் அங்கிகரித்துக்கொண்டனர்.

நபிகள்திலகம் (ஸல்.) அபூபக்ர்ஸித்தீக் (ரலி) புறப்பட்டு தௌர் போதுப்பில் தங்குதல்

குரைஷிகள் சதியாலோசனை புரிந்து இவ்வாறான முடிவுக்கு வந்திருக்கும் செய்தி எம் பெருமானார் நபிகள்திலகம் (ஸல்.) அவர்களுக்குத் தெரியவரவே, ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களை அழைத்து 'என் படுக்கையில் என் போர்வையைப் போர்த்துக்கொண்டு படுத்துக்கொள்ளுங்கள்' எனக்கூறி விட்டு, பெருமானார்(ஸல்.) அவர்கள் வெளிப்புறப்பட ஆரம்பித்தார்கள். அதுசமயம் குரைஷிகள் ஆயுதபாணிகளாய்த் தங்கள் வீட்டைசுற்றி வளைந்துக்கொண்டிருந்தார்கள். உடனே பெருமானார் (ஸல்.) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர்ஸித்தீக்(ரலி.)அவர்களின் வீட்டுக்குச்சென்று அவர்களைத் துணைவராகக் கொண்டு 'அப்துல்லாஹிப்னுஅர்கத்' என்னும் முஷ்ரிகை வழி காண்பிப்பதற்காக அழைத்துக் கொண்டு 'தவ்ர்' என்னும் மலைப் பொதுப் புக்குப்போய் சேர்ந்துவிட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர்ஸித்தீக் (ரலி.) அவர்களின் குமாரத்தியான 'அஸ்மாஉ' என்னும்மாது அவ்விருவருக்கும் மூன்று நாள்வரை இராக்காலங்களில் சாப்பாடு கொண்டுவந்து கொடுத்துக்கொண்டிருந்தார். இதற்கு மத்தியில் பெருமானார் (ஸல்.) அவர்களது வீட்டைச் சூழ்ந்து கொண்டிருந்தகுப்பார்கள் அவர்கள், வீட்டைவிட்டுப் புறப்பட்டு விட்டார்களென்னும் செய்தியைத் தெரிந்துகொண்டு நாலுபக்கங்களிலும் பெருமானார் (ஸல்.) அவர்களைத் தேடப் புறப்பட்டார்கள். பற்பல இடங்களிலும் அலைந்து திரிந்து பார்த்தும் கிடைக்காததால்பெருமானார் (ஸல்.) அவர்களையாவது, ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்களையாவது பிடித்துக் கொடுப்பவர்களுக்கு நூறு ஒட்டகங்கள் பரிசளிக்கப்படுமென்று விளம்பரஞ் செய்தார்கள். இவ்வாசையின் காரணமாக நூற்றுக்கணக்கானபேர் பற்பல திசைகளையும் நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்கள். அக்கொலைபாதகர்களிற் சிலர் தேடிக் கொண்டே அந்தக்குகையின் வாயிலுக்குச் சமீபம்வரை வந்துவிட்டதைக் கண்ட ஹஸ்ரத் அபூபக்ர்ஸித்தீக் (ரலி.) அவர்கள் அன்னாரின் சப்தத்தைக்கேட்டமாத்திரத்திலே மனம் ஒடிந்தவர்களாய், இதுபொழுது பகைவர்கள் நம்மைக்கண்டுகொண்டுவிட்டார்களெனக் கூறினார்கள். உடனே சத்தியத் தூதர் (ஸல்.) அவர்கள், பயப்படாதீர்கள்; அல்லாஹ்தஆலா நம்முடனிருக்கிறான் எனக் கூறி தேறுதல் சொன்னார்கள். கொலைஞர்களான குப்பார்களோ அங்கு தோன்றியுள்ள சின்னங்களைப் பார்த்துவிட்டு இதில் யாரும் நுழைந்திருக்கமுடியாதெனக் கூறிக்கொண்டே சென்றுவிட்டனர். மூன்றுநாள்வரை அவ்விருவரும் அக்குகையிலேயே யிருந்துவிட்டு வெளிவந்து மதீனாவின்வழியைத் தெரிந்து சென்று ரபீஉல்அவ்வல்மாதம் 11-ந்தேதி திருமதீனா நகருக்குச் சிறப்புற்றார்கள்.

மதீனாவினுள் பிரவேசித்தல்

நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் வருகையை எற்கனவே தெரிந்திருந்த மதீனா வாசிகள் யாவரும் ஆனந்த மகிட்சியோடு ஒவ்வொரு நாளும் அதிக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டே இருந்தார்கள். பெருமானார் (ஸல்.) அவர்கள் மதீனமா நகருக்குச் சமீபம் வந்ததும் அன்ஸார்களிலொவ்வொருவருவரும் தங்கள் வீட்டில் வந்து தங்கும்படி வேண்டிக்கொண்டார்கள். பெருமானார் (ஸல்.) அவர்கள் மதீனாவுக்கு வெளியிலுள்ள 'குபா' என்னும் மஹல்லாவில் குல்தூம்பின்ஹதம், என்பவரிடம் இறங்க வியாழக்கிழமை வரை அங்கேயே தங்கியிருந்து 'குபா' வென்னும் பள்ளிவாசலுக்கு அஸ்திவாரக்கல் நாட்டினார்கள். பின்னர் வியாழக்கிழமையன்று அங்கிருந்து புறப்பட்டு நகருக்குள் பிரவேசித்து வரும்பொழுது அன்ஸார்களிலுள்ள ஒவ்வொருவரும் தங்கள் வீட்

டுக்கு முன் நின்று கொண்டு ஒட்டகத்தைப் பிடித்தவர்களாய், தாங்கள் இறங்கி இங்கேயே தங்க வேண்டுமென வேண்டிக் கொள்பவர்களா யிருந்தார்கள். பெருமானார் (ஸல்.) அவர்கள் யாருக்கும் மனவருத்த மேற்படக் கூடாதென்பதைக் கருதி, இவ்வொட்டகமானது எங்குபோய் தங்கி நிற்குமோ அது தான் நான் வாசஞ்செய்யுமிடமாகுமெனத் தெரிவித்து விட்டார்கள். ஆகவே, அவ்வொட்டகம் நடந்துசென்று இதுபொழுது 'மஸ்ஜித் நபவீ' கட்டப்பட்டிருக்கு மிடத்தில் போய் உட்கார்ந்து விட்டது. அந்த இடத்தைச் சேர்ந்தாப்போல் 'அபூ அய்யூப் அன்ஸாரீ' அவர்களது வீடிருந்ததால் பெருமானார் (ஸல்) அவர்கள் ஒட்டகத்தை விட்டு கீழே இறங்கியவுடன், ஹஸ்ரத் அபூ அய்யூம் அவர்கள் சாமான்களை யெல்லாம் சந்தோஷத்தோடுஎடுத்துக்கொண்டு போய் வீட்டிற்குள் வைத்தார்கள். பெருமானார்(ஸல்) அவர்கள் மஜ்ஜிதநபவிய்யும், தங்களுக்குள்ள இருப்பிடமும் தையார் செய்யும்வரை அங்கேயே தங்கியிருந்தார்கள். இதற்கிடையே அநேகர் இஸ்லாம் மதத்தை தழுவிக் கொண்டே இருந்தனர். மேலும் யூதர்களிலும் கிறிஸ்தவர்களிலுமுள்ள எத்தயோ நபர்கள் முன்வந்து உண்மையைத் தெரிந்து சத்திய சன்மார்க்கத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இவ்வாறே இஸ்லாம் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய்சிறந்துவிளங்கிக்கொண்டு வந்தது.

முஹாஜிர் அன்ஸார்களுக்கிடையே சகோதர ஒப்பந்தம்.

குரைஷியர்களால் துரத்தப்பட்டு மக்காவிலிருந்து மதீனாவிற்கு வந்த முஸ்லிம்களாகிய முஹாஜிர்கள், மக்காவிலிருந்து வரும்போது கையில் ஒன்றும் கொண்டுவராது வெறுங்கையாகவே வந்தார்கள். அவர்களிலனேகர் செல்வந்தராயும் நல்ல ஸ்திதியிலுள்ளவராயு மிருந்தும் குரைஷிகளுக்குப் பயந்து யாருக்கும் தெரியாமலே ஓடிவந்து விட்டதால் ஒன்றும் எடுத்துவர ஹேதுவில்லாது போயிற்று. ஆகவே, மதீனாவிலுள்ள அன்சார்களின் வீடுகளே அவர்களுக்குப் பொது விருந்தளிக்கும் இடமாக இருந்தன. அன்ஸார்கள் அவர்களை அன்புடன் ஆதரித்து வந்தார்களாயினும் முஹாஜிர்கள் பிறரின் கையை எதிர்பார்ப்பவர்களாயிருக்க இஷ்டமில்லாதவர்களாய் இருந்தனர். நீண்ட நாளாய் தொழில் புரிந்து ஜீவனஞ் செய்துகொண்டுவந்த அன்னோர், மதீனாவிற்கு வந்ததும் பெரும் சங்கட நிலைமையிலிருந்தன ராதலின் அக்கஷ்டத்தை நீக்கும் பொருட்டு பெருமானார் (ஸல்.) அவர்கள், குரைஷ்களுக்கும், அன்ஸார்களுக்குமிடையே சகோதரபந்தத்தை யுண்டாக்க எண்ணங்கொண்டு, புதிய பள்ளி கட்டி முடிந்ததும் முஹாஜிரீன்களையும் அன்ஸார்களையும் அழைத்து ஒவ்வொரு அன்ஸாரியிடமும் ஒவ்வொரு முஹாஜிரை ஒப்புவித்து, இவர் உம்முடைய சகோதரராகும் எனக் கூறினார்கள். உடனே அன்ஸார்கள், முஹாஜிர்களைத் தங்கள் இல்லங்களுக்கு அழைத்துச்சென்று தங்களிடமுள்ள பொருள்களை பாகித்துப் பாதி கொடுத்து விட்டனர். அக்காலத்தில் நாணயமில்லா திருந்ததால் அன்ஸார்களுக்குள்ள சொத்துக்களெல்லாம் தோட்டங்களாகவே இருந்தன. எனவே, அன்ஸார்கள் பெருமானார் (ஸல்.) அவர்களிடம் வந்து, 'எங்கள் தோட்டங்களை, எங்களுக்கும் முஹாஜிரீன்களுக்கும் சரியாகப் பிரித்துக் கொடுத்துவிடுங்கள்' எனக் கேட்டுக்கொண்டார்களாயினும் பெருமானார் (ஸல்.) அவர்கள், முஹாஜிர்கள் விவசாயம்புரியத் தெரியாதவர்களா யிருந்ததால் பூமியை பாகித்துக்கொடுப்பதில் எவ்விதப் பிரயோசனமு மேற்படமாட்டாதெனக் கருதி அதனை அங்கீகரித்துக் கொண்டார்களில்லை. பின்னர் அன்ஸார்கள் பெருமானார் (ஸல்.) அவர்களை நோக்கி, நாங்கள் அந்த பூமியில் பயிரிடுகிறோம்; அதில் கிடைக்கும் வருமானத்தில் முஹாஜிர்கள் பாதியை எடுத்துக்கொள்ளட்டும் என்று கூறியதை பெருமானார் (ஸல்.) அவர்கள் அங்கீகரித்துக்கொண்டு அவ்வாறே செய்து வரும்படி தீர்மானித்து விட்டார்கள்.

* பெருமானார் (ஸல்.) அவர்கள் மதீனமா நகரில் மஸ்ஜித் கட்ட ஆரம்பித்து மண்ணைக் குழைத்து கல்சுவர் எழுப்பினர்கள். பேரீச்சங்கோல் தழைகளைக் கொண்டு முகடு போட்டார்கள். அந்த மஸ்ஜித் கட்டப்பட்டிருந்த இடம் ஸஹ்ல் ஸுஹைல் என்னும் பெயருடைய எதீம்களுக்குச் சொந்தமானதாகும். மஸ்ஜித்கட்டுவதற்காக அந்த எதீம்கள் சந்தோஷத்தோடு முன் வந்து அந்த பூமியை இனமளிப்பதாகப் பன்முறைகூறியும் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் வற்புறுத்தி அதன் கிரயத்தைக் கொடுத்துவிட்டார்கள்.

கிப்லா மாறுதல்.

ஹிஜ்ரீ இரண்டாவதாண்டில் கிப்லாவில்* மாறுதலேற்பட்டது. எம்பெருமானுர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் மதீனு வந்து சேர்ந்து 18 மாதகாலம் வரை பைத்துல் முகத்தஸை நோக்கித் தொழுதுகொண்டிருந்தார்கள். பின்னர் மாறுதலேற்பட்டது. அதே ஆண்டில் தான் ரமலான் மாதத்தின் நோன்பும் பரலாக்கப்பட்டது.

பத்ர்போர்.

ஹிஜ்ரீ 2-ம் ஆண்டில் பத்ர்போர் நிகழ்வுற்றது. இதற்குக்காரணம், முஸ்லிம்கள் மக்காவை விட்டு மதீனமா நகர் வந்து குடியேறிய பின்னும் குரைஷிகள் சதியாலோசனை புரிவதை விட்டுப் பின்னடைபவர்களாயில்லை. எனவே, 'அபூஜஹ்ல்' என்பான் யாருக்குந் தெரியாது மதீனமா நகர்வந்து அப்பாஸ்பின் ரபீஆ அவர்களை ஏமாற்றி மக்காவிற்கழைத்துச்சென்று அங்குசிறைபடுத்தி வைத்துவிட்டான். இதுவன்றி குரைஷிகள் சிறு சிறு கூட்டங்களை மதீனுவின்பக்கல் அனுப்பி கொள்ளை அடித்து வரும்படியும் செய்திருந்தார்கள். இவ்வாறு குரைஷியர்கள் சதாவும் முஸ்லிம்களுக்குத் தொந்திரவு கொடுக்க முற்பட்டு பலவாருன சதி புரிந்து வந்தார்கள். அதுபொழுது எம்பெருமானுர் நபிகள்திலகம் (ஸல்) அவர்கள், குரைஷிகள் எவ்வாருன சதியாலோசனை செய்துகொண்டிருக்கிருர்களென்பதைத் தெரிந்து அதற்குச் செய்யவேண்டிய பரிகாரத்தைத் தேடுவதற்காக ஒரு வேவு பார்ப்பவரை மக்காவின்பக்கல் அனுப்பிவைத்தார்கள். அதுசமயம் இருதரப்பிலும் விரோதம் முற்றிப் போய் சிறுசிறு சச்சரவுகளேற்பட்டுக்கொண்டிருந்தது. இதற்கிடையே குரைஷியர்களின் வியாபாரக் கூட்டம் ஷாம் தேசத்திலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தது. அதற்கு அபூஸுப்யான் தலைமை வகித்துச் சென்றிருந்தார். அக்கூட்டம் வந்துகொண்டிருக்குங்கால் கூட்டத்தினர் யாவரும் அபூஸுப்யானிடம் சென்று முஹம்மது (ஸல்.) தங்களையே எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறதென்று அறிவித்தார்கள். உடனே அபூஸுப்யான் இச்செய்தியைக் குரைஷியர்களுக்குத் தெரியப்படுத்தவே, மக்காவிலிருந்து உதவிக்காக அநேகர்புறப்பட்டு அபூஸுப்யானிடம் வந்து சேர்ந்துவிட்டார்கள். ஆனுல் 'அபூலஹ்ப்' மட்டும் வரவில்லை. அவ்வாறு வந்துகூடிய மக்காவாசிகளின் எண்ணிக்கை 950-வரை யிருந்தது. அவர்கள் யாவரும் பராக்கிரமசாலிகளான யுத்த வீரர்களாகும். அவர்களுடன் 100 குதிரைகளுமிருந்தன. இது செய்தி நபிகள் பெருமானுர் (ஸல்.) அவர்களுக்குத் தெரியவரவே, சஹாபாக்களை நோக்கி யுத்தத்திற்குத் தயாராகிப் புறப்படுங்களென்று உத்திரவிட்டார்கள். உடனே அனேகர் சந்தோஷத்துடன் எழுந்தனர்; சிலரோ சோம்பல் காட்டினர்; சிலரோ வியாபாரக் கூட்ட 'காபிலாவை' கொள்ளையடிக்க வேண்டுமெனக் கருதினர். ஆனுல் பெருமானுர் (ஸல்.) அவர்கள் இதனை அங்கீகரித்துக் கொண்டார்களில்லை. முடிவாக நபிகள்திலகம் (ஸல்.) மதீனுவினின்று புறப்பட்டு,குரைஷிகள் வருவதைத் தடுப்பதற்காக முன்னேக்கிச் சென்ருர்கள். இதுவிஷயத்தை அல்லாஹ்தஆலா தனது திருமறையில் தெள்ளத் தெளிய கூறியிருக்கிருன். அதாவது, உங்களுடைய நாயனுகிறவன் (யுத்தம் புரியும் இரண்டு கோஷ்டியினின்று) நேரான உண்மையிலிருக்கக்கூடிய கோஷ்டியைத் தெரிந்தெடுத்து இல்லங்களிலிருந்து புறப்படுவதற்குள்ள முஸ்தீப்பை உங்களுக்கு அளித்தான். முஸ்லிம்களில் ஒரு வகுப்பார் (நீங்கள்) யுத்த முஸ்தீப்புடன் புறப்படுவதை (அதுபொழுதும்) ஏற்றுக்கொள்பவர்களாயில்லை. அன்னேர் உண்மை வெளியான பிறகும் யுத்தம் செய்வதைப் பொருத்தக் கேடாக எண்ணினுர்கள். அன்னேர் கண்களைக்கொண்டு மரணத்தை பார்த்துக்கொண்டிருக்கும் நிலைமையில் வம்பறியாக அதன்பக்கல் இழுத்துக்கொண்டு செல்வதாகக் கருதிக் கொண்டனர் போலும்............அல்லாஹ்தஆலா தனது கட்டளையைக்கொண்டு உண்மையான மார்க்கத்தை நிலையாக்கிவைத்து காபிர்களின் பூண்டையே வேரறுத்துவிட-

---

* பெருமானுர் (ஸல்.) அவர்கள் மக்கமா நகரிலிருக்கும்போதே தொழுகை பரலாக்கப்பட்டுப்போயிருந்தது. ஹஸ்ரத்பிலால் (ரலி.) அவர்கள் இனிய குரலும் உயர்ந்த சப்தமுமுடையவர்களா யிருந்ததால் பாங்கு சொல்வதற்கு நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஆரம்பமாக பெருமானுர் (ஸல்.) அவர்கள் பைத்துல் முகத்தஸை நோக்கித் தொழுது கொண்டிருந்தார்கள். ஆனுல் மதீனு வாழ்க்கையின்போது கஃபதுல்லாவை நோக்கித் தொழவேண்டு மென்னும் கட்டளை பிறந்தது.

வேண்டுமென்னும் எண்ணம் அவனுக்கு ஏற்பட்டிருந்தது என்பதே.

ஹிஜ்ரீ 2-ம் ஆண்டு ரமலான் மாதத்தில் 313 முஸ்லிம்கள் இவ்யுத்தம சேவைக்காக முன்வந்தார்கள். அவர்களில் 70 முஹாஜிர்களும் 243 அன்சார்களுமிருந்தனர். மிக்தாத், ஜுபைர் பின் அவாம் இவ்விருவரும் வாகனத்தின்மீது வீற்றிருந்தனர். முஸ்லிம்களிடம் 70 ஒட்டகம் மட்டுமிருந்ததால் முறைப்படி சவாரி செய்வதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. அதாவது பெருமானார்(ஸல்.)அவர்கள், ஹஸ்ரத் அலீ (ரலி), ஹஸ்ரத்ஜைத் (ரலி) இம்மூவருக்கு ஒரு ஒட்டகமும், ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி), ஹஸ்ரத் உதுமான் (ரலி), ஹஸ்ரத் அப்துற் றஹ்மானிப்னுஅவ்ப் (ரலி.) இம்மூவருக்கு ஒரு ஒட்டகமும், இவ்வாறே மற்றவர்களுக்கும் ஏற்பாடு செய்து வைக்கப்பட்டிருந்தது. யுத்தக்கொடி முஸ்யிபிப்னு உமைர் (ரலி.)அவர்கள் கையிலும், படைத் தலைவருடைய கையில் கொடுக்கப்படும் அடையாளச் சின்னம் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கையிலும் கொடுக்கப்பட்டிருந்தது.

குரைஷிகளின் எண்ணிக்கை 900 முதல் 1000 வரை இருப்பதாயும், உத்பா, ஷைபா வலீத், அபூஜஹ்ல், உமப்ரினு அப்தூன முதலிய குரைஷ் தலைவர்களும் வந்திருப்பதாயும் பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு அறிவிக்கப்படவே, உடனே தாங்கள் சஹாபாக்களைக் கூப்பிட்டு இதுபொழுது மக்கமா நகரானது தனது ஈரல் துண்டை உங்கள்முன் வெளிப்படுத்தி வைத்திருப்பதால், அது விஷயமாய் உங்கள் அபிப்பிராயம் எவ்வாறிருக்கிறதென வினவினார்கள். உடனே ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்கள் எழுந்து மனக்கவர்ச்சியை அளிக்கவல்ல உறுக்கமானதோர் சொற்பெருக்காற்றினார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களின் முறை வந்ததும், அவர்களும் கடும் மொழிகளைப் பிரயோகப்படுத்தினார்கள். அதன் பின் ஹஸ்ரத் மிக்தாத் (ரலி.) எழுந்து அல்லாவுடைய ரசூலே! ஆண்டவன் தங்களுக்குக் கட்டளை பிறப்பித்திருப்பதுபோல் காரியத்தைச் செய்யுங்கள் நாங்கள் தங்களுடனேயே இருக்கிறோம். பனூஇஸ்ராயீல்கள், ஹஸ்ரத்மூஸா (அலை.) அவர்களை நோக்கி நீங்களும் உங்களுடைய ஆண்டவனும் சென்று யுத்தம் புரியுங்கள் நாங்கள் இங்கேயே உட்கார்ந்திருக்கிறோமென்று கூறியதுபோல், அல்லாஹ்வின் மீது சத்தியமாக நாங்கள் ஒருக்காலும் கூறமாட்டோம். தாங்கள் எங்களை யுத்தம் புரிவதற்காக ஹபஷா தேசத்துக்கு அழைத்துச்சென்றபோதிலும் நிச்சயமாக நாங்கள் அங்கு வரவும் தயாராக இருக்கிறோம். எனவே, எந்த சந்தர்ப்பத்திலும் தங்களுடனே இருந்து யுத்தம் புரிய சம்மதித்தவர்களாயிருக்கிறோமென்று கூறினர். பின்னர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் அன்ஸார்களை நோக்கி அன்ஸார்களே! உங்கள் அபிப்பிராயம் எவ்வாறிருக்கிறதெனக் கேட்டார்கள். உடனே ஸஅதிப்னுமுஆத் (ரலி.) அவர்கள் எழுந்து, தாங்கள் எங்களிடமா ஆலோசனை கேழ்க்கின்றீர்களென வினவியமைக்கு, பெருமானார் (ஸல்.) அவர்கள், ஆம் என்று கூறவே, உடனே ஹஸ்ரத் ஸஅத்(ரலி.)அவர்கள் எழுந்து அல்லாவுடைய ரசூலே! நாங்கள் தங்கள்மீது ஈமான் கொண்டிருக்கும் நிலைமையில் இவ்விஷயமாக எங்களிடம் கேழ்க்க வேண்டிய அவசியமென்ன ஏற்பட்டுப்போயிருக்கிறது? அல்லாஹ்வின் மீது பிரமாணமாக தாங்கள் எங்களை சமுத்திரக்கரைக்கு அழைத்துச் சென்று அதில்மூழ்கிவிடும்படி கூறியபோதிலும் அவ்வாறு செய்யத் தயாராக இருக்கிறோமென்று தெரிவித்துக் கொண்டார்கள்.

பின்னர் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் 'பத்ர்' பக்கல்சென்று அதற்குச் சமீபமாக இறங்கினார்கள். இருவகுப்பாருக்குமிடையே போர் நிகழ்பெற முற்படுங்கால் முஷ்ரிகீன்களின் சார்பாக உத்பா, ஷைபா, வலீதிப்னுஷைபா இவர்களும், முஸ்லிம்கள் சார்பாக அவ்ப், மவூது, அப்துல்லாஹிப்னு ரவாஹா முதலியவர்களும் யுத்தகளத்தில் முன்வந்தனர். இதனைக்கண்ட காபிர்கள் நீங்கள்யார்? எனக் கேட்டதற்கு அவ்மூவரும், நாங்கள் அன்ஸார்களாகுமெனத் தெரிவித்தார்கள். உடனே அக்காபிர்கள் உங்கள் மீது எங்களுக்கு எவ்வித மனவருத்தமுங்கிடையாதாகையால், எங்கள் ஊர் வாசிகளான அறபித்தலைவர்களை எங்கள் முன் வரும்படி செய்யுங்களெனக்கூறினார்கள். இவ்வார்த்தையைச் செவியுற்ற நபிகள் பெருமானார் (ஸல்.)அவர்கள் ஹஸ்ரத்ஹம்ஜா(ரலி.), ஹஜ்ரத் உபைதா பின் அல்ஹார்திப்னு அப்துல்முத்தலிப் (ரலி), ஹஸ்ரத் அலீ (ரலி.) ஆகிய இம்மூவரையும் எழுந்து முன் வரும்படி கூறவே உடனே அவ் மூவரும் யுத்தகள மைதானத்துக்கு வந்து நின்றவுடனேயே ஹஸ்ரத்ஹம்ஸா (ரலி.) அவர்கள் ஷைபாவைக் கொன்று விட்டார்கள். அவ்

வாறே ஹஸ்ரத் அலீ (ரஸ) அவர்கள் வலீதை பூமியில் விழுத்தாட்டிவிட்டார்கள். ஹஸ்ரத் உபைதா, உத்மா இவ்விருவரும் வெகுநேரம் வரை தற்கம்புரிந்து கொண்டிருந்து ஒருவர் மற்றவரைக் காயப்படுத்தி விட்டதால்ஹஸ்ரத் உபைதா (ரலி.) கீழே விழுந்து விட்டார்கள்.

இதற்கிடையே ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி.), ஹஸ்ரத் அலீ (ரலி.) இவ்விருவரும் உத்பாவின்மீது பாய்ந்து அவனைக் கொன்றுவிட்டு, ஹஸ்ரத் உபைதா(ரலி.)அவர்களைப் பெருமானூர் (ஸல்.) அவர்களிடம் அழைத்துக்கொண்டு வந்தார்கள். அதுபொழுது ஹஸ்ரத்உபைதா(ரலி.)அவர்கள் நம் பெருமானூர்(ஸல்.)அவர்களை நோக்கி, யான் ஷஹாதத்துடைய் பாக்கியத்தைப் பெறுவதற்கு தகுதியில்லாது போய்விட்டேனு? என வினவினூர்கள். அதற்குப்பெருமானூர் (ஸல்.) அவர்கள், நீர் மரணமாகாது போயினும் ஷஹாதத்தின் பதவியைப் பெற்றுக்கொண்டு விட்டீர் எனக்கூறினூர்கள். உடனே ஹஸ்ரத் உபைதா(ரலி.)அவர்கள், ஹஸ்ரத் அபூதாலிப் அவர்கள் உயிருடனிருந்து இன்றைய சம்பவ நிகச்சியைப் பார்த்திருக்கவேண்டிய திருந்தது எனக்கூறி, “ நாங்கள் முகம்மது (ஸல்) அவர்கள் சார்பிலிருந்து யுத்தம்புரிந்து எங்கள் உயிரைவிட்ட பின்புதான் அவர்களை விரோதிகள்வசம் ஒப்புவிப்போம்; முஹம்மது (ஸல்.) அவர்களுக்காக எங்கள் பிள்ளைகளையும் பெண்களையும் மறந்துவிடுவோம், என்று ஹஸ்ரத் அபூதாலிப் அவர்கள் கூறிய பாடலை எடுத்துச் சொல்லி தாங்கள் இப் பாடலின் கருத்துக் கிலக்காயிருப்பதாகத் தெரிவித்துக் கொண்டார்கள். அதன்பின்பற்பலரும் யுத்தகளத்தின்முன் வந்து கடும்போர் நிகழ்த்தியகால் இரத்தப்பிரளய மேற்பட்டு கடைசியில் முஷ்ரிகீன்கள் தோல்வியுற்றவர்களாய்த்திரும்பி ஓடஆரம்பித்தார்கள். இந்த யுத்தகளத்தில் கைதியாகி சிறைசெய்யப்பட்ட முஷிரிகீன்கள் மதீனமாநகர் கொண்டுவரப் பட்ட பொழுது, அவர்களிலுள்ள ‘ஸஹ்லிப்னு அம்ர்’என்பாரை ஹஸ்ரத் ‘ஸவ்தா’ (ரலி.) அவர்கள் கண்டு ‘நீர் ஆண் பிள்ளையைப்போல் யுத்தகளத்தில் உயிரைதியாகஞ் செய்துவிடாது பெண்பிள்ளையைபோல் பகைவர்கள் கையில்சிக்குண்டுகைதியாய் இங்கு வந்திருக்கிறீரோ, எனக் கேட்டார்கள். இவ் வார்த்தையைச் செவியுற்ற எம்பெருமானூர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் பீபிஸவ்தா(ரலி.) அவர்களை விழித்து ஸவ்தாவே! அல்லாவுக்கும் அவனது ரசூலுக்கும் பயந்து நடந்து இவ்வாறான வார்த்தையைஅறவே உபயோகிக்காதிருப்பீராகஎனக்கூறியவுடனே பீபி அவர்கள், பெருமானூர்(ஸல்.) அவர்களைநோக்கி,‘அல்லாவுடைய ரசூலே! யான் அவரை இந்நிலைமையில் பார்த்தவுடன் என்மனூேஉணர்ச்சியை அடக்கிக்கொள்ள முடியாது அவ்வாறு கூறிவிட்டேன்’ எனத் தெரிவித்துக் கொண்டார்கள். பின்னர் சிறைசெய்யப்பட்டுக்கொணர்ந்திருப்பவர்களை மிகுந்த அன்போடு நடத்துவதுடன் தங்களுக்கு முன்னூல்வைத்து சாப்பாடு கொடுக்கவேண்டுமென்றும் உத்திரவு பிறப்பித்திருந்தார்கள்.

பின்னர் கைதிகள் விஷயமாய் என்னசெய்வதென்பதைப்பெருமானூர்(ஸல்.) அவர்கள் சஹாபாக்களிடம் ஆலோசித்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்கள் (பித்யா)தொகை வாங்கிக் கொண்டு விடுதலைசெய்து விடுவது உசிதமெனக் கூறினூர்கள். ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்களோ இஸ்லாத்தைப்பற்றியமட்டில் யாதொரு தயவு தாக்ஷணியம் காட்டாது கைதிகளைபெல்லாம் கொன்றுவிட வேண்டுமென்று அபிப்பிராயம் தெரிவித்தார்கள். அதிலும் ஒவ்வொருவரும் அவரவருடைய நெருங்கிய பந்துக்களைவெட்ட வேண்டுமென்றும்தெரிவித்துக்கொண்டார்கள். கடைசியாக 70 கைதிகளிடமிருந்து தொகை வாங்கிக்கொண்டு விடப்பட்டது.

அந்த யுத்தத்தில் முஸ்லிம்களில் 14 பேர் ஷஹீதானூர்கள். அவர்களில் 6 பேர் முஹாஜிர்களும் 8 பேர் அன்ஸார்களுமாகும். குரைஷியர்களில் எழுபது நபர்கள் கொல்லப் பட்டிருந்ததால் அவர்கள் தங்கள் சார்பில் வெட்டுண்டு போனவர்களை நினைத்து அழ ஆரம்பித்தார்களாயினும் முஹம்மது (ஸல்.) அவர்களைச் சேர்ந்தோர் பரிகாசஞ் செய்வார்களென்பதை பயந்து மௌனமாக இருந்துவிட்டார்கள். தவிர ‘அஸ்வதிப்னு எகூது’ உடையகுமாரர்களாகிய ஜம்ஆ,உகைல், ஹாரிது ஆகிய மூவரும் கொல்லப்பட்டுப் போனதால், அஸ்வத் என்பான் இன்னூருக்கு அழவேண்டுமென நாடினூயினும் உரோஷமானது அவனைத் தடைசெய்து வைத்திருந்தது. இந்நிலைமையில் திடுகூருக எங்கோ அழும் ஓசை கேட்டது. அவன் குருடனூயிருந்ததால் வெளியிற் செல்ல முடியாது தன் அடிமையைக் கூப்பிட்டு அழ அனுமதி கிடைத்திருக்கிறதாவென்று பார்த்து வந்து தமக்கு அறிவித்தால்

தாமும் அழ ஆரம்பிப்பதாகவும் தம் ஹிருதயத்தில் பெரும் தீ மூட்டப்பட்டிருப்பதாயும், சற்றுநேரம் அழுது அத்தீயின் வேகத்தை அமர்த்திக்கொள்வதாயும் தெரிவித்தான். அந்த அடிமை வெளியிற் சென்றுவந்து, ஒரு மாது தன் ஒட்டகம் காணுமற் போனதற்காகஅழுது கொண்டிருப்பதாகத் தெரிவிக்கவே அவன் மனோ வருத்தமுற்றவனுய் சில கவிகளைப் பாடிக்கொண்டு மௌனமாக இருந்துவிட்டான்.

ஸவீக் போர்

பத்ர் யுத்தக் களத்திலிருந்து தோல்வியடைந்து சென்றபின், அபூஸுப்யான் என்பார், பெருமானுர் (ஸல்.) அவர்களுடன் யுத்தஞ் செய்து பத்ரில் கொல்லப்பட்டவர்களின் உயிருக்குப் பழி வாங்காமல் விடுவதில்லை என பிரதிக்கினை செய்துகொண்டு 200 ஒட்டகப் படையுடன் மதீனுவிற்குப் புறப்பட்டார். இதற்குமுன் சிலறை மதீனுவுக்கு அனுப்பி அன்ஸார்களிலுள்ள சில குறிப்பிட்ட நபர்களைக் கொன்றுவிடும்படியும் செய்திருந்தார். இது விஷயம் எம்பெருமானுர் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களுக்குத் தெரியவே, அதே நேரத்தில் யுத்தத்திற்கு வேண்டிய முஸ்திப்புகளைச் செய்ய ஆரம்பித்தார்கள். உடனே முஸ்லிம்கள் அபூஸுப்யானை நோக்கிவர ஆரம்பிக்கவே, இது செய்தியைத் தெரிந்துகொண்ட அபூஸுப்யான் ஓட ஆரம்பித்தார். அவர்கள் ஓடுகிற அவஸரத்தில், பாரம் குறைவதற்காக, ஆகாரத்திற்காக கொண்டுவந்திருந்த மாவு மூட்டைகளைப்போட்டுவிட்டு ஓடினுர்கள். இதற்காகத் தான் இந்தயுத்தத்திற்கு ஸவீக் யுத்தம், மாவுமூட்டை எறிந்துவிட்டுப் போன யுத்தம் என்று பெயர் சொல்லப்படுகிறது.

பாத்திமா (ரலி.) விவாகம்.

இவ் வருடத்தில்தான் நமது பெருமானுர் (ஸல்.) அவர்களின் அருமை குமாரத்தியாகிய பீபிபாத்திமத் துஜ்ஜஹ்ரா (ரலி.) அவர்களுடைய விவாகம் ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களுடன் நடைபெற்றது.

பின்னர் முஷ்ரிகீன்கள் அடிக்கடி ஒன்றுகூடி முஸ்லிம்களுக்கு எந்தெந்தவகையில் கஷ்டங்கொடுப்ப தென்பதை ஆலோசித்துக்கொண்டிருப்பார்கள். அவர்களுடன் தஅலப், பனீஸலீம் கூட்டத்தாரும், இதரர்களும் சேர்ந்து பல வாறுன சதியாலோசனைகள் புரிந்தும் எவ்விதத் தீர்ச்சியான முடியும் செய்யாது கலேந்துபோகிறவர்களா யிருந்தார்கள்.

உஹத் போர்.

ஹிஜ்ரீ 3-ம் ஆண்டு உஹத் யுத்தம் நடைபெற்றது. இந்த யுத்தம் ஏற்பட்டதற்குக் காரணம், குரைஷிகளிலுள்ள சில தலைவர்கள் அபூஸுப்யானிடம் வந்து, அவரிடமும் அவரைச் சேர்ந்தவர்களிடத்திலும் வியாபாரத்திற்காக முதல் கேட்டு உதவி நாடினுர்கள். அன்னோர் அதனை ஏற்றுக்கொண்டு, அம்ரிப்னுல்ஆஸ் உள்பட நான்கு பேர்களை நியமித்து அரப் வர்க்கத்தாரிடம் சென்று யுத்தத்திற்கு ஆயுத்தமாகுமாறு ஏற்பாடுபண்ணிவரும்படி செய்திருந்தார்கள். அதற்கேற்ப தகீப், கினுை முதலிய கூட்டார் ஒன்றுசேர்ந்தவுடன் குரைஷியர்களும் தங்கள் பட்டாளங்களுடன் யுத்தத்திற்குத் தயாராய்விட்டார்கள். இந்நிலைமையில், 'ஜுபைரின் முத்யிம்' என்பான் யுத்தஞ்செய்வதில் நன்குதேர்ச்சி பெற்றிருந்த ஹபஷா தேசத்து தன் அடிமையாகிய 'வஹஷீ' என்பானை அழைத்து, நீ முஹம்மதை (ஸல்.) கொன்று விடுவாயாகில் உன்னை உரிமையாக்கிவிடுவதுடன் சன்மானமுங்கொடுத்தனுப்புவேன் என்றுகூறியிருந்தான்.

அபூஸுப்யான் குரைஷிகளுக்கெல்லாம் தலைவராக இருந்ததால், அவர் தனது மனைவியாகிய 'ஹிந்தா'வையும் தன்னோடு அழைத்துவர முற்பட்டார். அதனுல் குரைஷிகளின் மற்றத்தலைவர்களும் தங்கள் பெண்சாதிகளைக்கூட அழைத்துவந்தார்கள். அவர்களை அழைத்துவந்ததற்குக் காரணம், பெண்கள் கேலி பரிகாசஞ் செய்வார்களென்பதை பயந்து யுத்தகளத்திலிருந்து யாரும் திரும்பிப் போகாதிருக்கவும், அப்பெண்கள் பத்ர் யுத்தத்தில் கொல்லப்பட்டுப் போனவர்களுக்குப் பழிவாங்க வேண்டிய விஷயமாய்ப் பாட்டுக்கள் பாடிக்கொண்டு சண்டை செய்வதில் உற்சாகமூட்டுவதால் ஆவேசத்துடன் யுத்தகளத்தில் இறங்குவதற்கு வசதியாக இருக்குமென்பதைக் கருதியுமேயாம்.

அவ்வாறு வந்தவர்களில் மதீனுவாசியும் ஜனங்களால் நன்கு மதிக்கப் பெற்றவருமான அபூ தர்ர அன்ஸாரியுமிருந்தார். இவர் பெருமானுர் (ஸல்.) அவர்கள் மதீனுவுக்கு வந்தபின் தங்களை விட்டுப் பிரிந்து மக்காவிற்குச் சென்றவராகும். முடிவாக இருவரும் புறப்பட்டு ஹிஜ்ரீ 3-ம் ஆண்டு ஷவ்வால்

மாதம் 4-ந் திகதி புதன்கிழமைய தினம் மதீனுவுக்குச் சமீபமாயுள்ள 'துல்ஹுலைபா' என்னுமிடம் வந்து சேர்ந்தார்கள். அப்படையில் மொத்தம் 3,000 பேர் இருந்ததில் 700 பேர் உருக்குச் சட்டை அணிந்தவர்களாயும் 200 பேர் வாகனக்காரர்களாயு மிருந்தார்கள்.

இதுவிஷயம் நம்பெருமானுர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்குத் தெரியவே சஹாபாக்களை ஒன்றுகூட்டி ஆலோசிக்குங்கால், மதீனுவிலிருந்துகொண்டே கோட்டையை அடைத்துக்கொண்டு யுத்தம் புரிவது உசிதமெனத் தெரிவித்தார்கள். ஆனுல் சில சஹாபாக்கள் வெளியிற் சென்றுதான் யுத்தம்புரிய வேண்டுமென ஒரே அடியாய்க் கூறியதால் தங்கள் அபிப்பிராயத்திற்கு மாறுய் 'இப்னுகுல்தூம்' (ரலி) அவர்களை மதீனுவின் தலைவராக்கி வைத்துவிட்டு ஆயிரம் வீரர்களுடன் (அதில் 100 உருக்குச் சட்டை அணிந்தோரும் 200 வாகனக்காரர்களுமிருந்தனர்) வெளிப் புறப்பட்டு விட்டார்கள். இவர்கள் யாவரும் மதீனு, உஹத் இதற்கிடையே சென்றுகொண்டிருக்கும்பொழுது 'அப்துல்லாபின் உபைய்யி' என்பான் வெளிரங்கத்தில் இஸ்லாமாய்விட்டதுபோல் பாவனை காட்டி அந்தரங்கத்தில் முனபிகாயிருந்தவன் 300 பேர் கொண்ட ஒரு கூஞ்டத்தைச் சேர்த்துக்கொண்டு திரும்பி விட்டான். பெருமானுர் (ஸல்) அவர்கள் மற்றவர்களுடன் சேர்ந்து வந்து 'அதுவ்வத்துல் வாதீ' என்னும் பள்ளத்தாக்கில் இறங்கி உஹத் குன்றை முஸ்லிம் படைகளுக்குப் பின்புறமாக வைத்து சேனைகளை அணிவகுத்தார்கள். அதுபொழுது அபூஸுப்யான் என்பார், அன்ஸார்களிடம் தூதனுப்பி, என் சிறிய தந்தையின் குமாரரை (முஹம்மது ஸல் அவர்களை) எங்களிடம் விட்டுவிடுவீர்களாகில் நமக்கிடையே எவ்வித யுத்தமும் நேரிட மாட்டாது; நாங்கள் திரும்பிப்போய் விடுகிறோம் எனத் தெரிவித்தார். இதற்கு அன்ஸார்கள் சொல்லியனுப்பிய பதிலைக்கேட்ட மாத்திரத்திலே குரைஷிகள் கோபாக்கினி பூண்டவர்களாய் யுத்தம் புரிவதற்குத்தயாராய் விட்டார்கள்.

பெருமானுர் (ஸல்)அவர்கள் காலிதிப்னுவலீத் அவர்களை இடது புறத்திலும், இக்ரிமாபின் அபீஜஹ்லை வலதுபுறத்திலும் நியமித்திருந்தார்கள். முஸ்லிம் சேனைகளுக்குப்பின் பக்கத்திலுள்ள 'உஹத்'குன்றிலுள்ள சிறு கணவாய் வழியாக விரோதிகள் வரக்கூடுமென்பதைக் கருதி பாதுகாப்பிற்காக அம்பு எய்வோர்களில் ஐம்பது பேரை அங்கு நிறுத்தி 'முஸ்யிப்னு உமைர்' அவர்களை அன்னேருக்குத் தலைவராகவும், ஹஸ்ரத் ஜுபைர் அவர்களை குதிரைப் பட்டாளத்துக்குத் தலைவராகவும், ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களை காலாட் பட்டாளத்துக்கு முதன்மையாகவும் ஏற்படுத்தியிருந்தார்கள்.

இருகூட்டமும் ஒன்று சேர்ந்ததும் யுத்தம் ஆரம்பமாயிற்று. அதுபொழுது அபூஸுப்யானின் மனைவியாகிய 'ஹின்தா'வென்பாள் தம்முடனிருந்த பெண் பிள்ளைகளுடன் எழுந்து, அப்பெண்களெல்லோரும் தப்படித்துக்கொண்டிருக்க, இவள் இனிமையான மனக்கவர்ச்சியைக்கொடுக்க வல்லபாடல்களைப் படிக்க ஆரம்பித்தாள். அது பொழுது ஆண் பிள்ளைகள் பராக்கிரம வீரத்துடன் யுத்தம் புரிந்தார்கள். ஹஸ்ரத் ஹம்ஜா, ஹஸ்ரத் அலீ இவ்விருவரும் குரைஷிகளின் சேனையினூடே பாய்ந்து அணி அணியாகக் காலிசெய்துகொண்டேபோனுர்கள். மேலும் ஹஸ்ரத்ஹம்ஸா (ரலி) அவர்கள் இரு கரங்களிலும் வாளேந்திக்கொண்டு அணி அணியாகத்தகர்த்துக்கொண்டே சென்றுர்கள். அவர்கள் அவ்வாறு செல்லுங்கால் 'வஹ்ஷீ'என்னும் பெயருடைய அடிமையொருவன் அவர்கள் மீது கண்ணுயிருந்தானுகையால் ஹஸ்ரத் அவர்கள் அவனுக்குச் சமீபமாக வந்ததும் அவன் தன்கையிலிருந்த சிறிய ஈட்டியினுல் அவர்களைக் குறித்து வேகமாக எய்தான். அது அவர்களின் வயிற்றில் பட்டு உள்ளே புகுந்து கொண்டது. அது பொழுது ஹஸ்ரத் அவர்கள் அவனைத் தாக்குவதற்கு எண்ணங்கொண்டார்களாயினும், அவர்களின் கால்தடுமாறிக்கீழே விழுந்து விட்டார்கள். உடனே அவர்கள் பிராணன் தெய்வகதி அடைந்துவிட்டது. இதில் முஸ்லிம்களுக்கு ஒருவாறு வெற்றிகிடைத்ததேயாயினும், மலையில் காவல் புரிந்து கொண்டிருந்த 50 பேர்களும் கொள்ளைப்பொருளின் ஆசை மேலீட்டால் பெருமானுர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் கட்டளைக்கு விரோதமாக மலையை விட்டுக் கீழேயிறங்கிக்கூட்டத்தில் வந்து சேர்ந்து கொண்டார்கள். உடனே காலித் தம்மைச் சேர்ந்தோர்களுடன் முஸ்லிம்களுக்குப் பின்புறம் வந்து தாக்க ஆரம்பித்து 50 அம்பு எய்யும் சிப்பாய்களையும் கொன்று விட்டதால் முஷ்ரிக்கள் இருபுறங்களிலும் முஸ்

லிம்களைச் சூழ்ந்துகொண்டார்களாதலின் அவர்கள் மிகைத்து ஜெயம் பெற்றுவிட்டார்கள். அதுசமயம் குப்பார்கள் எறிந்துகொண்டிருந்த கற்களிலொன்று பெருமானார் (ஸல்.) அவர்களின் கீழ்உதட்டில் பட்டதன்பயனாக தங்கள் பற்களில், கீழ் வரிசையிலுள்ள பல்லொன்று ஷஹீதாய்விட்டது; மேன்மைபொருந்திய கன்னம் நெற்றி இவைகளில் காயங்களேற்பட்டுப்போயிற்று. அதன் நோவினையால் பெருமானார் (ஸல்.) அவர்கள் கீழே விழுந்துவிட்டார்கள். தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக முன்னால்நின்று யுத்தம் புரிந்துகொண்டிருந்தவர்களில் அன்சார்களிலுள்ள ஐந்துபேர் ஷஹீதாய்விட்டார்கள். மேலும் எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களைத் தங்கள் மறைவில் கொண்டிருந்த ஹஸ்ரத் அபூதுஜானா (ரலி.) அவர்கள் தன்னையே பெருமானார் (ஸல்.) அவர்களுக்குக் கேடயமாக்கிக்கொண்டார்களாதலின், அம்பானது வேகமாய் வந்து அவர்களின் வயிற்றில் பாய்ந்துவிட்டது. இவ்வாறான முயற்சிலேயே ஹஸ்ரத் முஸ்யிபிப்னு உமைரும் ஷஹீதாய்விட்டார்கள். அவர்களைக் கொலைபுரிந்த படுபாவியானவன் நபிகள்பெருமானார் (ஸல்.) அவர்களைக் கொன்றுவிட்டதாகக் கருதிக்கொண்டு குரைஷியர்பக்கல் நோக்கி "யான் முஹம்மதை (ஸல்.) கொன்றுவிட்டேன்" என்று தெரிவித்ததைக்கேட்ட முஸ்லிம்களிலும் அமைதியின்மை ஏற்பட்டு விபரீத நிலைமை உண்டாய்ப் போயிற்று. ஆனால் ஹஸ்ரத் அலீ, ஹஜ்ரத் அபூபக்ர், ஹஜ்ரத் உமர் (ரலி.) போலொற்றவர்கள் அந்த இடத்திலேயே உறுதியுடன் நின்றார்கள்.

அதுபொழுது 'அனஸ்பின்நலேர்' (ரலி.) அவர்கள் முஹாஜிர்களிலுள்ள சிலரைச் சந்தித்தபோது, அவர்கள் யுத்தஞ்செய்வதைவிட்டுப் பின்னடைந்திருப்பதைக் கண்டு எதற்காக யுத்தத்தில் கலந்துகொள்ளாதிருக்கின்றீர்களென வினவினார்கள். அதற்கு அன்னோர், ரசூலுல்லாஹிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் கொல்லப்பட்டுப்போய்விட்டார்களென்று கூறவே, பெருமானார் (ஸல்.) அவர்களின் வாழ்க்கை அவ்வாறானபின் நாம் எதற்காக உயிர்வாழ வேண்டும்; ஆகவே நாமும் இதுபொழுதே அவ்வேலையிலீடுபட்டு உயிர்கொடுக்க வேண்டுமென ஹஸ்ரத் அனஸ் (ரலி.) அவர்கள் தெரிவித்துவிட்டு, தங்கள் இன்னுயிரை அல்லாஹ்விடம் ஒப்புவித்துவிட்டார்கள். பின்னர் யாவரும் ஒன்றுசேர்ந்து உறுதியுடன் போர்புரிந்துவந்தார்கள். அதுபொழுது நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் உயிருடனிருக்கின்றார்களென்னும் விஷயம் பிரஸ்தாபிக்கப்படவே, யாவரும் பத்திரமான ஓர் இடத்திற்கு வந்து ஒன்று சேர்ந்தார்கள்.

இந்த யுத்தத்தில் ஹிந்தாவும் அவளைச் சேர்ந்தபெண்களும், ஷஹீதாயிருந்த முஸ்லிம்களின் மூக்குகளை அறுத்துக்கொண்டதுடன் ஹிந்துவானவள் ஷஹீதாய்ப் போயிருந்த ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி.) அவர்களின் விலாவைக் கிழித்து ஈரலை எடுத்து அதை வாயில் வைத்து மென்றாள். அதுகாலை அபூஸுப்யான் தன்னைச் சேர்ந்தோர்களுடன் மலைமீதேறிக்கொண்டு உரத்த தொனியில், "நமக்கிடையே யுத்தமானது ஒரு மாறுதலையுண்டு பண்ணிவைத்துவிட்டது; பத்ருடைய நாளில் ஏற்பட்ட தோல்விக்குப் பகரமாய் இன்று பெரும் ஜெயம் கிடைத்துவிட்டது; எ ஹுபலே! உன் மார்க்கத்திற்கு உதவி செய்வாயாக" என்று சப்தம் கொடுத்தார். பின்னும் அபூஸுப்யான்அடுத்த ஆண்டில் பெரும் போர் தொடுக்கப்படும் என்று அறிவித்து விட்டு திரும்பி விட்டார். உடனே நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் ஒரு சஹாபியை அழைத்து ஷஹீதானவர்களைப் பார்க்கும்படி கூறினார்கள். அவர் பார்க்க முற்பட்டுச் செல்லுங்கால், அன்ஸாரிலுள்ள ஸஅத் (ரலி) அவர்கள் கிட்ட வந்தவுடன், தொண்டைக்குழியில் கொஞ்சம் உயிரிருந்து கொண்டிருந்ததால் அவர்கள் விழித்து அச்சஹாபியை நோக்கி, ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்கு என் சலாத்தை எத்திவைத்து அல்லாஹ்த ஆலா அவர்களுக்கு மேன்பதவி அளிப்பானென்று கூறுவதுடன் எங்கள் கூட்டத்தார்களைச் சந்தித்து, அவர்களின் கண்ணிமை சுமட்டல் ஏற்பட்டிருக்கும்வரை ரசூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்குஏதாகிலும் கஷ்டசங்கடம் ஏற்படுவதைப் பார்த்துக் கொண்டிருப்பார்களாகில், அல்லாஹ்தஆலாவிடம் எந்த விதமான சாக்குப் போக்குச்சொல்லிய போதிலும் அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாதென்று தெரிவித்துவிடுங்களென்று கூறிமுடிந்ததும் அவர்கள் ஆத்மா திரேகத்தை விட்டுப் பிரிந்து விட்டது. முஸ்லிம்களுக்குத் தோல்வி ஏற்பட்டு, பல முக்கியஸ்தர்கள் ஷஹீதாக்கப்பட்டுப்போன செய்தி மதீனாவிலுள்ளவர்களுக்குத் தெரியவே, ஹஸ்

ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் சகோதரியான 'ஸபிய்யா' அவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் ஜனாஸாவைப் பார்ப்பதற்காகப் போர் களத்திற்கு வந்தார். பெருமானார் (ஸல்.) அவர்கள், அம்மாதின் குமாரருக்கு அறிவித்து, ஹஸ்ரத் அவர்களின் சரீரத்தை அம்மாது பாராதிருக்கும்படி செய்ய வேண்டுமென ஏற்பாடு செய்திருந்ததால், அம்மாதின் குமாரரான ஜுபைர் என்பார், அவர்வந்து பார்க்காது தடை செய்துவிட்டார். அதுபோது, அம்மாது, என் சோதரின் காதுமூக்கு அறுக்கப்பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேனாயினும் அது அல்லாஹ்வின் பாதையில் பெரிய தியாகமென்று யான் கருதுவதால் அவருடைய சரீரத்தைப் பார்த்து அழுது கூக்குரலிட மாட்டேன் எனக் கூறியதும், பெருமானார் (ஸல்.) அவர்கள், அம் மாதுக்குத் தம் சோதரரின் சரீரத்தைக் காண்பிக்கும்படி உத்திரவு கொடுக்கவே அம்மாது ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி.) அவர்களின் சரீரத்தைப் பார்த்தவுடன், அது சின்னபின்னப்படுத்தப் பட்டிருப்பதைக்கண்டு அவரின் இரத்தம் கொதித்ததாயினும்பொருமையைக்கைக்கொண்டார். பின்னர்ஷஹீதீன்களின்ஜனாஸாக்களைதொழவைத்து நல்லடக்கம் செய்யப்பட்டவுடன் பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களும் இதர சஹாபாக்களும் திரும்பி வருங்காலை அன்ஸார்களிலுள்ள ஒரு மாதை வழியிற் சந்தித்து, உம்முடைய பர்த்தாவும், தந்தையும் ஷஹீதாய் விட்டார்களென அறிவிக்க, உடனே அம்மாது சிரோன்மணி அதிருக்கட்டும்! நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களது நிலமையாதாகுமென்பதை முதலில் தெரியப் படுத்துங்கள் எனக் கேழ்க்கவே, சஹாபாக்கள், அவர்கள் நல்ல நிலைமையிலிருக்கின்றார்களென்று கூறினார்கள். உடனேஅம்மாதுக்கேற்பட்டிருந்த கவலையெல்லாம் பறந்தோடி, பெருமானார் (ஸல்.) அவர்களைப் பார்க்கவேண்டுமென்னும் பிரீதி மேலிட்டவர்களாய் தங்களிடம் சென்று அருமை திருவதனத்தைக் கண்ணுற்று "தாங்களிருக்கும் போது வேறு எந்த துக்கத்தையும் யான் பொருட்படுத்தப் போவதில்லை" எனக் கூறினார்.

"ஹூமராஉல் அஸத்"போர்

அபூஸூப்யான் உஹதிலிருந்து புறப்பட்டு 'ரவ்ஹா' என்னுமிடம் சென்றபோது, கோரிய காரியம் முற்று பெருது திரும்பிச் செல்வதை யுன்னிவருந்தினர். அந்த இடத்தில் பெருமானார்(ஸல்.) அவர்களுக்குச் சந்தேக மேற்பட்டு, யாரும் திரும்பிப் போகக்கூடாதென்று மறுநாளே உத்திரவிட்டு விட்டார்கள். உடனே முஸ்லிம்கள் யாவரும் சந்தோஷத்தை வெளியிட்டவர்களாய், ஆயுத பாணிகளை அணிந்தவர்களாய் வெளிப்புறப்பட்டு மதீனாவுக்கு எழுமைல் தூரத்திலுள்ள 'ஹூமரா உல்அஸத்' என்னுமிடம் வரை சென்றார்கள். முஸ்லிம்களை மறுபடியும் எதிர்த்துப் போர்புரிவதகாக அபூஸூப்யானும் முஷ்ரிக்களுடன் திரும்பி வந்து கொண்டிருந்தார். வரும் வழியில் 'குஜாஆ' வர்க்கத்தாரைச் சேர்ந்த'மஃபத்'என்பவர் மதீனாவின் பக்கலிருந்து மக்கா வழி செல்லும் பாதையில் இருவர்களுக் கிடையே சந்திப்பு ஏற்பட்டது.உடனே அபூஸூப்யான், தாங்கள் வரும்வழியில் புதிய நூதன மெதுவும் ஏற்பட்டிருக்கிறதாவெனக் கேட்டார்.அதற்கு மஃபத் என்பார், முஹம்மது (ஸல்.) ஒரு பெரும்படையைத் திரட்டிக்கொண்டு வருகின்றார். எவரும் இவ்வளவு உற்சாகத்துடன் வருவதை யான் பார்த்ததில்லை எனக் கூறினர். இதனை செவியுற்ற அபூஸூப்யான் திரும்பிச் சென்றுவிட வேண்டுமென்னும் எண்ணத்துடன் புறப்பட்டு விட்டார். இதையும் சரித்திராசிரியர்கள் ஒரு யுத்தமாகக் கணக்கிடுகின்றார்கள்.

ஹிஜ்ரீ 4-ம் ஆண்டு

அரபி வர்க்கத்தாரில் இரண்டொரு கூட்டத்தார்களைத் தவிர யுள்ள ஏனையோர்களெல்லாம் இஸ்லாத்திற்குப் பெரும் விரோதிகளாகவே இருந்தார்கள்.அவ்வாறு விரோதங் கொள்வதற்குக் காரணம், அரபிவர்க்கத்தார் யாவரும் விக்கிரக ஆராதனை செய்வதைத் தங்கள் மதமாகக் கொண்டிருக்குங்கால் இஸ்லாம் மார்க்கமானது அதனைவிலக்கியிருப்பதேயாகும். இதனல்அரபி வர்க்கத்தார் ஒவ்வொருவரும் வெவ்வேறான சூழ்ச்சிசெய்து இஸ்லாத்தை நசுக்கிவிட வேண்டுமென்று இடுப்புக் கட்டிக் கொண்டிருந்தார்கள்.

எனவே ஸபர்மாத்தில் உகைல்,காரா வர்க்கத்தார்கள் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களிடம் வந்து, தங்கள் வர்க்கத்தார் இஸ்லாம் மதத்தைத் தழுவிக் கொண்டிருப்பதால் அவர்களுக்காக சன்மார்க்க போதனைகளைக் கற்றுக்கொடுப்பதற்கு தங்களுடன் சிலரை அனுப்பித்தர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டதற் கிணங்க, பெருமானார் (ஸல்.) அவர்கள் ஆஸிமிப்னுதாபித்

(ரலி.) அவர்களின் தலைமையில் பத்து நபர்களை அனுப்பி வைத்தார்கள். இவர்கள் யாவரும் அஸ்கான், மக்காவிற் கிடையிலுள்ள 'ரஜீஉ' என்னுமிடம் சென்ற போது, அன்னோர் முஸ்லிம்களுக்கு சதிபுரிய ஆரம்பித்ததால், மூன்று முஸ்லிம்கள் ஷஹீதாய் விட்டார்கள். ஏனை யோரைப் பிடித்து மக்காவிற்குக் கொண்டு போய் குறைஷிகளிடம் விற்றுவிட்டார்களாதலின் அன்னோர் இவர்களை ஷஹீதாகிவிட்டார்கள்.

ரஜீஉ போர்

பின்னர் கலாபிக் கூட்டத்தின் தலைவரான 'அபூ பராஉ' என்பான் பெருமானார் (ஸல்.) அவர்களிடம் வந்து தம் வர்க்கத்தினரை இஸ்லாத்தின்பக்கல் அழைப்பதற்காக சில முஸ்லிம் பிரசாரர்களைத் தன்னுடன் அனுப்பும்படி வேண்டிக்கொண்டான். அவன் அழைக்கும் திசையில் முஸ்லிம்களின் விரோதிகள் அதிகமாயிருந்ததால் பெருமானார் (ஸல்.) அவர்கள் முஸ்லிம்களை அங்கனுப்ப விருப்பமில்லை என்பதைத் தெரிவித்தார்களாயினும், முஸ்லிம்களுக்குப் பொறுப்பாகத்தாமிருந்து கொள்வதாய் 'அபூபராஉ' அறிவிக்கவே, பரிசுத்தவான்களாயும் ஏழைகளாகவுமுள்ள 60 அன்ஸார்களை அவர்களுடன் பெருமானார் (ஸல்.) அவர்கள் அனுப்பிவைத்தார்கள். அவ்வெழுபது பேரிலனேகர் அஸ்ஹாபஸுஃப்பாக்களிலுள்ளவர்களாயு மிருந்தார்கள். இவர்களெல்லோரும் சென்று 'பீரமஊனா' என்னுமிடத்தி லிறங்கினார்கள். அதுபொழுது கலாபிக்கூட்டத்தின் தலைவனான 'ஆமிரிப்னுதுபைல்' என்பானுக்கு பெருமானார் (ஸல்.) அவர்கள் எழுதியிருந்த கடிதம் 'ஹராமிப்னுமில்ஹான்' வசம் அனுப்பப்பட்டது. அத்தலைவன் கடிதம்கொண்டு சென்றவரைக் கொன்றுவிட்டது மல்லாமல் சுற்றுப் புறங்களிலுள்ளவர்களை யெல்லாம் முஸ்லிம்களுக்கு விரோதமாய் சண்டையிடும் படியும் தூண்டிவிட்டான். எனவே அக்கூட்டத்தார் யாவரும் ஒன்று சேர்ந்து, ஊருக்கு வெளியில் தங்கியிருந்த முஸ்லிம்களைச் சூழ்ந்து கொண்டு யாவரையும் ஷஹீதாக்கிவிட்டார்கள். ஆனால் 'கஅப் இப்னுஜைத்' என்பவர் காயத்துடன் கீழேவிழுந்து, மரணமாய் விட்டவர் போன்று பாசாங்கு காட்டிக் கொண்டிருந்தவர் மெள்ள எழுந்து யாருக்குந்தெரியாது மதீனாவுக்கு வந்து பெருமானார் (ஸல்.) அவர்களிடம் விஷயத்தைத் தெரிவித்தார். நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்கு இது விஷயம் தெரியவே பெரிதும் வருந்தினார்கள்.

2-ம் பத்ர்போர்

இதே ஆண்டின் ஷஅபான் மாதத்தில், அபூஸுஃப்யான் யுத்தம் நடைபெறப்போகிறதென அறிவித்தது பெருமானார் (ஸல்.) அவர்களுக்குத் தெரியவந்ததும், தாங்கள் மதீனாவிலிருந்து வெளிப்புறப்பட்டு 'பத்ர்' என்னுமிடம் வந்து சேர்ந்து எட்டுநாள்வரை அங்கேயே தங்கி இருந்தார்கள். ஆனால் அபூஸுஃப்யான் 'மர்ருல் லஹ்ரான்'வரை வந்து திரும்பிவிட்டார்.

இதே ஆண்டில்தான் பெருமானார் (ஸல்.) அவர்கள் 'ஜைதிப்னு தாபித்' அவர்களை எழுதக் கற்றுக்கொள்ளுமாறு கட்டளையிட்டிருந்தார்களாதலின் ஹஸ்ரத் அவர்கள் 15 தினத்தில் கற்றுக்கொண்டார்களென்று சரித்திரம் கூறுகின்றது.

இதே ஆண்டின் ஷவ்வால் மாதத்தில் தான் ஹஸ்ரத் உம்முஸல்மா (ரலி.) அவர்களின் விவாகம் நடைபெற்றிருக்கிறது. சிலரின் சொற்படி ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி.) அவர்கள் இந்த மாதத்தில் ஜனனமானதாகத் தெரிகிறது.

கந்தக் யுத்தம்

யூதர்களிலுள்ள கைன்காஉ, நுலைர், குரைலா இம்மூன்று கூட்டத்தினரும் மதீனாவுக்குச் சூழால் வாசஞ் செய்துகொண்டிருந்தார்கள். இந் நிலைமையில் கைபரில் வாசஞ் செய்துவந்த 'பனூநுலைர்' கூட்டத்தின் தலைவன் மக்காவிலுள்ள குறைஷிகளிடம் சென்று, பெருமானார் (ஸல்.) அவர்களிடம் யுத்தம் புரிவதற்கு அவர்களைக் கிளப்பிவிட்டு, தம் வர்க்கத்தாரும் குறைஷிகளுக்குப் பக்கபலமாக இருந்து முஹம்மது (ஸல்.) காரியத்தை முடித்துவிடும்வரை தாங்கள் பின்னடையப்போவதில்லை என்றும் தெரிவித்துக்கொண்டான். இவ்வாறான உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருந்த குறைஷிகள் அவனுடைய ஆலோசனையை அன்போடு ஆதரித்துக்கொண்டார்கள். பின்னர் அத்தலைவன் 'கத்பான்' வர்க்கத்தாரிடம் சென்று அவர்களிடம் இது செய்தியை அறிவிக்கவே, அவர்களும் சம்மதம் தெரிவித்தார்கள். உடனே குறைஷிகள் இவர்களெல்லோரையும் ஒன்று சேர்த்துக்கொண்டு பெருமானார் (ஸல்.) அவர்களிடம் யுத்தம்

புரிய வேண்டுமென்னும் எண்ணத்துடன் மதீனாவை நோக்கிப் புறப்பட்டார்கள். அது சமயம் அவர்கள் சேனை 24,000 வரை இருந்தது. இது செய்தி பெருமானார் (ஸல்.) அவர்களுக்குத் தெரியவரவே, சஹாபாக்களை ஒன்று கூட்டி ஆலோசனை செய்து கடைசியில் 'ஸல்மால் பார்ஸீ' (ரலி.) அவர்களின் யோசனைப் பிரகாரம் அகிழ்தோண்டுவதற்கு அனுமதிகொடுத்தார்கள். குரைஷிகள் பெரும் திரளாக முன்னேக்கி மதினாவுக்கு வெகு சமீபம்வந்து தங்கிவிட்டார்கள். 'கத்யான்' கூட்டத்தினரோ தங்களைச் சேர்ந்தோர்களுடன் உஹத் மலைப் பக்கம் வந்து தங்கிவிட்டார்கள்.

'பனூகுரைலா' கூட்டத்தார் முஸ்லிம்களுடன் சிநேகமாயிருப்பதாயும், முஸ்லிம்களைப் பகைவர்கள் தாக்கினால் உதவி செய்வதாயும் பெருமானார் (ஸல்.) அவர்களிடம் உடன்படிக்கை செய்து கொடுத்திருந்தார்கள். குரைஷிகள் பசப்பு வார்த்தைகளால் அவர்களையும் தங்களுடன் சேர்த்துக்கொண்டதால், அவர்கள் உடன்படிக்கையை முறித்துவிடும்படி நேர்ந்தது. முஷ்ரிக்கள் அகிழிக்கு வெளியே சுற்றிலும் 20 நாள் வரை முற்றுகை யிட்டுக்கொண்டிருந்தார்கள். அது பொழுது இரு பக்கலிருந்தும் அம்பு எறியப்பட்டு வந்தது. சில நாளைக்குப் பின் குரைஷிகளிலுள்ள முக்கியஸ்தர்களான அம்ரிப்னு அப்தூத், இக்ரிமா பின் அபூஜஹ்ல் இவ்விருவரும் முன்வந்து அந்த அகிழ் பக்கத்தில் நெறுக்கமான ஓர் இடத்தில் நின்று கொண்டு குதிரையை விரட்ட ஆரம்பித்தார்கள். இதற்கிடையே அமரிப்னு அப்தூத் என்பவனுடைய உபாத்தியாயர் முன்வந்து தன்னை யாவரும் தெரிந்து கொள்ளட்டு மென்பதைக் கருதியவனாய், தன்னோடு எதிர்ப்பதற்கு யார் முன் வருகிறது? என சபதம் கூறினன். உடனே ஹஸ்ரத்அலீ (ரலி.) அவர்கள் முன்வந்து ஒரே அடியில் அவனைக்கொன்றுவிட்டதால் அவன் குதிரை தானே விரண்டோட ஆரம்பித்தது.

அல்லாஹ்தஆலா குரைஷியர்களுக்கிடையே விரோதத்தை யுண்டுபண்ணி வைத்துவிட்டதுடன் அளவற்ற பனியோடு குளிர்காற்றும் வீசிக்கொண்டிருந்ததால் எதிரிகளின் கூடாரங்களையும் சாப்பாட்டுவிடுதிகளையும்அடியுடன் பிடுங்கிக் கீழே தள்ளிவிட்டது. இதனல் குரைஷிகளுக்கு இச்சண்டையில் பெரும்தோல்வி ஏற்பட்டுப்போய்விட்டதால் அங்குதங்கியிருப்பதில் யாதொரு பிரயோசனமுமில்லை எனக் கூறிக்கொண்டு எல்லோரும் புறப்பட்டுச் சென்றார்கள். 'கத்பான்' கூட்டத்தாருக்கு இது செய்தி தெரிந்ததும் மெதுவாய்த் திரும்பி ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தார்கள். இச்சண்டையில் முஸ்லிம்களுக்கு உயிர்ச்சேதம் சொற்பமாயும், குப்பார்களுக்கு அதிகச் சேதமுமேற்பட்டுப் போயிற்று.

பனூகுறைலா போர்

யூதர்கள் முஸ்லிம்கள்மீது அதிகப்பொறாமை கொண்டவர்களாயும் எவ்வாறான அறுதிமானத்தையும் நிறைவேற்றாதவர்களாயும், மிதமிஞ்சிய பகைமை கொள்பவர்களாயுமிருந்து வந்ததால், அகிழ் சண்டை முடிவடைந்ததும் பெருமானார் (ஸல்.) அவர்கள் ஆயுதங்களைக் கீழே வையாமலே சேனைகளை 'குறைலா' கூட்டத்தார் வசிக்குமிடத்துக்குச் செல்லும்படி உத்திரவிட்டார்கள். பெருமானார் (ஸல்.) அவர்கள் அங்கு சென்று, குரைஷிகளுக்கு இன்று எவ்வாறான சம்பவம் நிகழ்பெற்றிருக்கிறதென்பது உங்களுக்குத் தெரியாதா? ரொம்ப ஜாக்கிரதையாக இருந்து கொள்ளுங்களென்று கூறினார்கள். அதுபொழுது அன்னோர், பெருமானார் (ஸல்.) அவர்களை நோக்கி யுத்தஞ் செய்வதென்பதே இன்னதெனத் தெரியாதவர்களை வைத்துக்கொண்டு பெருமை பேசுகிறீர்களோவென பரிகாசமாய்க் கேட்டவர்களாய் இருவருக்கிடையேநடைபெற்றிருந்த உடன்படிக்கையை முன்கொண்டுவந்து வைத்து விட்டார்கள். உடனே பெருமானார் (ஸல்.) அவர்கள் அன்னேரை முற்றுகையிடும்படி கட்டளை பிறப்பித்தார்களாதலின் அன்னோர் 10 தினங்கள் வரை முற்றுகையிலிருந்தனர். இறுதியில் அந்த யூதர்கள் பணிந்து வந்து நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் சொல்வதுபோல் தாங்கள் நடக்கத் தயாராக இருப்பதாகக் கூறிக்கொண்டார்கள். உடனே அவர்களிலுள்ள 'அப்துல்லாபின் உபை' என்பான் பெருமானார் (ஸல்.) அவர்களைத் துதிசெய்து கையேந்தியவனாய், தாங்கள்கிருபை புரிய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டான். அதுபொழுது பெருமானார் (ஸல்.) அவர்கள், அன்னோர் ஊரைக் காலி செய்துவிட்டுப் போய் விடவேண்டுமென்று கூறினார்கள்.

'கஅபிப்னு அஷ்ரப்' என்பான் ஹிஜ்ரீ 3-ம் ஆண்டில் மக்காவிற்குச்சென்று 'பத்ர்' போரில்

கொல்லப்பட்டுப் போனவர்கள்மீது பெரிதும் அனுதாபங் காட்டுபவனேபோல் பாவனை செய்து சற்று அழ ஆரம்பித்து, குரைஷிகளைத் தம் வசமாக்கிக் கொண்டான். அபூராபிஉ என்னும் யூதனுக்கும் இவனுக்கும் சிநேகமேற்பட்டுப் போய்விட்டதால் இருவரும் ஒன்று சேர்ந்து பலவாறான வதந்திகளைக் கிளப்ப ஆரம்பித்துவிட்டார்கள்.

நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் ஹிஜ்ரீ 4-ம் ஆண்டில் பனூ நலீர்களிடம்சென்ற போது அவர்கள் யாவரும் விரோதப்பான்மையோடு ஒன்றுசேர்ந்து தங்களை ஷஹீதாக்கிவிட வேண்டுமென்று முடிவு செய்துவிட்டார்கள். இதுவிஷயம் பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு தெரியவே, அன்னோர்மீதும் முற்றுகையிட கட்டளை பிறப்பித்துவிட்டார்கள். அக்கட்டளைக் கேற்ப முற்றுகையிடப்படவே, அன்னோரும் தங்கள் ஏலாமையைத் தெரிவித்துக்கொண்டார்கள். உடனே பெருமானார் (ஸல்.) அவர்கள், அன்னோரையும் ஊரைவிட்டு வெளிப்படுத்தப்பட வேண்டுமென கட்டளை பிறப்பித்துவிட்டார்கள்.

'பனூகுறைலா'க்கள் பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுடன் சேர்ந்திருப்பதாயும், இஸ்லாத்தின்மீது பகைவர்களின் தாக்குதல் ஏற்படுங்கால் முஸ்லிம்களுடன் சேர்ந்துகொண்டு பகைவர்களிடம் போர் புரிவதாய் உடன்படிக்கை செய்து கொடுத்திருந்தும், குரைஷிகளின் ஏமாற்றுதலில் சிக்குண்டுபோய் அகிழ் யுத்தத்திற்கு முன்பே அன்னோர் அறுதிமானத்தை முறித்துவிட்டுப் பஹிரங்கமாய்ப் பகைவர்களுடன் சேர்ந்துகொண்டதால் அன்னோர் முற்றுகையிடப்பெற்றனர். அம்முற்றுகை 15 தினங்கள் வரையிலுமிருந்ததால் அன்னோர் ரொம்ப கஷ்டமனுபவிக்க நேர்ந்ததுடன் அல்லாஹ்த ஆலா அன்னோரின் மனதில் பயத்தைப் போட்டுவிட்டதால் அவர்கள் பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு வழிப்பட்டு நடப்பதை அங்கீகரித்துக் கொண்டார்கள். உடனே, 'பனூகுறைலா'க்களின் சிநேகிதர்களான 'அவ்ஸ்' வர்க்கத்தார் முன் வந்து, அல்லாஹ்வுடைய ரசூலே! 'கஜ்ரஜ் வர்க்கத்தாருடன் எவ்வாறு நடந்துகொண்டீர்களோ அவ்வாறே 'பனூகுறை'லாக்களுடனும் நடந்துகொள்ளுங்களென விண்ணப்பித்துக் கொள்கிறோம் எனத் தெரிவித்துக்கொண்டார்கள். உடனே பெருமானார்(ஸல்.) அவர்கள், 'அவ்ஸ்' வர்க்கத்தாரை நோக்கி, 'பனூகுறை'லாக்கள், தங்கள் வர்க்கத்திலுள்ள 'ஸஅதிப்னுமுஆத்' கூறும் தீர்ப்புப்படி நடந்துகொள்ளத் தயாராக இருக்கிறார்களாவென்பதைக் கேட்டுத் தெரிந்து வரும்படி கூறினார்கள். அதனை அன்னோரும் அங்கீகரித்துக் கொண்டதால் பெருமானார் (ஸல்.) அவர்கள் ஸஅதை அழைத்து வரும்படி ஆள் அனுப்பினார்கள். உடனே ஸஅத் கழுதையின்மீது வீற்றவராய் தங்களிடம் வந்தார். அவர் வரும்வழியில், "உங்கள் வர்க்கத்தாருக்கு உதவிபுரியுங்கள்" என்று நெடுகிலும் ஜனங்கள் கூறிகொண்டேயிருந்தார்கள். ஆனால், 'பனூகுறைலா'க்கள் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் பெருமானார்(ஸல்.)அவர்களுக்கு துரோகஞ்செய்தது ஸஅத் அவர்களுக்கு அளவுகடந்த வருத்தத்தைக் கொடுத்திருந்ததால், 'பனூகுறைலா'க்கள் யாவரையும் கொன்றுவிட்டு அவர்களுடைய முதல்களை முஸ்லிம்களுக்கிடையே பங்கிட்டுக்கொள்ள வேண்டுமென்று தீர்ப்புக் கூறினார்கள். பெருமானார் (ஸல்.) அவர்கள் அதனை அங்கீகரித்தவர்களாய் மதீனாவுக்குத் திரும்பிவந்து விட்டார்கள். பின்னர் அத்தீர்ப்பின்படி 'பனூகுறைலா'க்கள் யாவரும் கொல்லப்பட்டுப் போனார்கள்.

பனூமுஸ்தலக் போர்

ஹிஜ்ரீ 6-ம் ஆண்டில் 'பனூமுஸ்தலக்' வர்க்கத்தார் முஸ்லிம்களுக்கு விரோதமாய் ஓர் பெரும்படையைத் திரட்டி ஹாரிது என்பவனை அதற்குத் தலைவனாக்கினார்கள். இதனை கேள்விப்பட்ட நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களும் யுத்த முஸ்தீப்புகளைச் செய்ய முற்பட்டதால் இதனைக்கண்ட முஷ்ரிகீன்கள் பின்னேக்கி ஓட்டம்பிடித்து விட்டனர்.

உமரா

இதே ஆண்டின் 'துல்கஅதா' மாதத்தில் நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் 'உமரா'ச் செய்ய வேண்டுமெனக் கருதி எவ்வித சண்டை சச்சரவும் நிகழ்பெறுதவாறு திரும்பிச் சென்றுவிட வேண்டுமென்னும் கருத்துடன் முஹாஜிர் அன்ஸார்களிலுள்ள 1400 பேர்களுடன் நபிகள் பெருமானார் மதீனாவை நோக்கிப் புறப்பட்டார்கள். கஃபத்துல்லா ஷரீபைத் தெரிசிக்க வருகின்றார்களென்பதை குரைஷிகள் தெரிந்துகொள்வதற்காக

குர்பானிக்காகவென்று 70 ஒட்டகங்களையும் கூடக் கொண்டுவந்தார்கள். இவர்கள் யாவரும் ‘கஸ்பான்’ என்னுமிடம்போய்ச் சேர்ந்ததும் ‘பஷிரிப்னுஸுப்யானுல்கஅபி, என்பான் பெருமானார் (ஸல்.) அவர்களிடம் வந்து அல்லாவுடைய ரசூலே! தாங்கள் வரும் செய்தியை அறிந்த குரைஷிகள் ‘தீதுவா’ என்னுமிடத்துக்குப் பக்கத்தில் ஒன்றுகூடி தங்கள் வகையார்களை எவ்வகையிலும் கஃபத்துல்லாவுக்குப் பக்கத்தில் வரவிடுவதில்லை என்று தீர்மானஞ் செய்துகொண்டிருக்கிறார்கள் எனத் தெரிவித்தார். இதற்கிடையே குரைஷிகளால் அனுப்பப்பட்ட தாயிபின் தலைவரான ‘உர்வாபின் மஸ்ஊதுத்தக்பீ’ என்பார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களிடம் வந்து, குரைஷிகள் தங்கள் வகைராக்களை மக்காவிற்குள் நுழைய விடுவதில்லை என்று சத்தியஞ் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொண்டிருக்கும்போது, பெருமானார் (ஸல்.) அவர்களது அருமைபொருந்திய தாடியைத் தொடுவதற்கு நாடினார். ‘முகைராபின்ஷுஅபா’ அவர்கள் ரசூலுல்லாஹி (ஸல்.) அவர்களுக்குப் பின் நின்றவர்கள் உடனே முன்வந்து அவருடைய கையைத் தட்டி “முகத்திற்குமுன் கை நீட்டாதீர்” எனத் தடுத்துவிட்டார்கள். அதுபொழுது உர்வாவானவர் இஃதென்ன பேராச்சிரியமாக இருக்கிறது? எனக் கூறியதைப் பெருமானார் (ஸல்.) அவர்கள் கேட்டு குஞ்சிரிப்புக் கொள்ளலானார்கள். உலக இரட்சகர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் ஒலுச்செய்துகொண்டிருக்குங்கால் சஹாபாக்கள் எழுந்து கீழே சிந்தும் தண்ணீரை கையிலேந்தி தேரேகத்தின்மீது பூசிக்கொள்வதையும் கீழே விழும் உரோமங்களை அன்போடு எடுத்து பத்திரப்படுத்தும் முறையும் கண்டவுடன், பெருமானவர்கள் (ஸல்.) இடம் சஹாபாக்கள் கொண்டிருந்த அளவுகடந்த பக்தியானது அவருடைய மனத்தில் ஒரு நூதன உணர்ச்சியையும் ஆச்சரியத்தையும் உண்டுபண்ணிவிட்டதால் அவர் குரைஷிகளிடம் சென்று யான் ரோமச் சக்கரவர்த்தியாகிய ‘கைஸர்,’ பாரசீக தேயத்தரசனாகிய ‘கிஸ்ரா’ முதலியோரின் ராஜ சபைக்குச் சென்று பார்த்திருக்கிறேன் ஆனால் அல்லாஹ்வின் மீது பிரமாணமாக முஹம்மது (ஸல்.)க்கு அவரைச் சேர்ந்தோர்கள் செய்யும் மரியாதையைப்போல் எந்த அரசரும் அவரைச் சேர்ந்தோர்களால் கௌரவிக்கப்பட்டதை யான் கண்டதில்லை. எனவே முஹம்மது (ஸல்.) பேசுவதாயிருந்தால் அவருடனிருப்பவர்களனைவரும் பயபக்தியோடு ஒன்றும் பேசாது கவனித்துக்கொண்டே இருக்கிறார்கள்; அவர் ஒலுச் செய்வதாயிருந்தால் கீழே சிந்துகிற தண்ணீரில் ஒரு துளிகூட தரையில் விழ சம்மதிக்கிறார்களில்லை. சுருங்கக்கூறின், இவ்விதமான அளவுகடந்த பக்தியுடன்கூடிய நடையை நானெங்கும் கண்டதில்லை எனக் கூறி முடித்தார்.

உடன்படிக்கை

பின்னர் பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்கும் குரைஷிகளுக்கும், கடிதப் போக்குவரத்தும், தூது சென்று வருவதும் நடைபெற்றுக் கொண்டிருக்குங்கால் பெருமானார் (ஸல்.) அவர்கள், ஹஸ்ரத் உத்மானிப்னு அப்பான் (ரலி.) அவர்களை அபூஸுப்யான் முதலிய குரைஷித் தலைவர்களிடம் அனுப்பி, தாங்கள் யுத்தத்திற்காக வரவில்லை என்றும், உம்ரா நிறைவேற்றுவதற்காகவே வந்திருப்பதாயும் தெரிவித்து வரும்படி செய்திருந்தார்கள். ஹஸ்ரத் அவர்கள் குரைஷிகளிடம் சென்று, பெருமானார் (ஸல்.) அவர்களின் செய்தியை அறிவித்ததும் குரைஷிகள் அவர்களைப் பிடித்து சிறைபடுத்திவிட்டனர். அதுபொழுது ஹஸ்ரத் உத்மான் (ரலி.) அவர்கள் கொல்லப்பட்டுப் போனார்களென்னும் வதந்தி கிளம்பி விஷயம் பெருமானார் (ஸல்) அவர்களின் செவிக்கெட்டவே ‘உதுமான் (ரலி.) அவர்களுக்குப் பகரம் வாங்கும்வரை யான் இவ்விடத்தை விட்டுத் திரும்பமாட்டேன்’ என பெருமானார் (ஸல்.) அவர்கள் கூறியவர்களாய், தங்களுடனிருந்த சஹாபாக்களையெல்லாம் ஒரு வேலமரத்தடிக்குக்கு அழைத்துவந்து அவர்களெல்லோரிடமும் பிராண தியாகம் செய்ய முன்வரவேண்டுமென்று வாக்குறுதி வாங்கினார்கள். இதனை “பைஅத்துற்றில்வான்” என்று அழைக்கப்படும். பின்னர் ஹஸ்ரத் உதுமான் (ரலி). அவர்கள் கொல்லப்படவில்லை என்னும் செய்தி தெரியவந்தது.

குரைஷியர்களுக்கும் பெருமானாருக்கும் உடன்படிக்கை

பின்னர் குரைஷிகள், நன்காலோசனை செய்து பார்த்து, அவர்கள் கூட்டத்தில் வாக்கு சாதுர்யத்தில் பெயர் பெற்றவரான, ‘சுஹை

லிப்னு அம்ரு' என்பவரை தூதராகத் தெரிந்தெடுத்து, பெருமானார் (ஸல்.) அவர்களும்அவர்களுடன் வந்திருப்போரும் அவ்வருடம் மக்காவிற்குள் நுழையாது திரும்பிப்போய் விட வேண்டுமென்னும் நிபந்தனையின் மீது சமாதான விஷயத்தைப் பேசவேண்டுமென்று சொல்லி அனுப்பியிருந்தார்கள். 'சுஹைல்' பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் சமுகம் வந்து குரைஷிகளின் கக்ஷியை எடுத்துச் செல்லும்போது, வெகு நேரம் வரை பேச்சு நடந்து கடைசியில் சமாதானம் ஒருவாறு முடிவுக்கு வந்தது. உடனே பெருமானார் (ஸல்.) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களை அழைத்து அவ் வுடன்படிக்கையை எழுதிக் கொள்ளச் செய்து, ஆரம்பத்தில் "பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர்றஹீம்" என்று வரையும்படி கூறினார்கள். உடனே 'சுஹைல்' அது எங்களுக்கு இன்னதென்று தெரியாது; எங்கள் வழக்கத்திலுள்ள "பிஸ்மிக்கல்லாஹும்ம" என்றுதான் எழுத வேண்டுமெனக் கூறியதால் அவ்வாறே எழுதி விடும்படி செய்தார்கள். பின்னர் "ரசூலுல்லாஹ் (ஸல்.) சுஹைலுடன் செய்துகொண்ட உடன்படிக்கை" என்று எழுதும்படி கூறினார்கள். உடனே சுஹைல் குறிக்கிட்டு உங்களை அல்லாஹ்வின் ரசூலென்று ஒப்புக் கொள்வோமாகில் நமக்கிடையே எதற்காக மனஸ்தாபமேற்படப் போகிறது; நாங்கள் எதற்காக உங்களுடன் யுத்தம் புரியப்போகிறோம்? ஆதலால் நீங்கள் உங்கள் பெயரையும் உங்கள் பிதாவின் பெயரையும் மட்டில் எழுதச் செய்யுங்கள் எனக் கூறினார். நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களின் வற்புறுத்தலின்பேரில் "ரசூலுல்லாஹ்" என்னும் சொல் அழிக்கப்பட்டு கீழ்கண்ட நிபந்தனைப் பிரகாரம் உடன்படிக்கை எழுதி முடிந்தது. அதன் விபரம் வருமாறு:—

(1) இவ்வருடம் முஸ்லிம்கள் மக்காவிற்குள் பிரவேசியாது திரும்பிப்போய் விடவேண்டும். மறுவருடம் மூன்று நாள் குரைஷிகள் வெளியிற் சென்று விடவேண்டும். அதுபொழுது முஸ்லிம்கள் வந்து மூன்று நாள்வரை தங்கி இருந்து விட்டுப்போய் விடவேண்டும். அப்படி வரும்போது வாளைத்தவிரயுள்ள வேறு ஆயுதங்கள் எதையும் கொண்டுவரலாகாது. அதிலும் வாளை உறையிலேயே போட்டுவைத்திருக்கவேண்டும்.

(2) பத்து வருடங்கள் வரை யுத்தமே நடைபெறக்கூடாது.

(3) காபிர்களில், அல்லது முஸ்லிம்களில் யாராவது மதீனாவிற்குவந்து விட்டால் அவர்களைத் திருப்பிமக்காவிற்கு அனுப்பிவிடவேண்டும். ஆனால் முஸ்லிம்களில் யாராவது மக்காவிற்குவந்தால் அவர்களைத் திருப்பி அனுப்பப்பட மாட்டாது.

(4) பொது ஜனங்களில் யாரும் முஹம்மது (ஸல்.) உடன் உடன்படிக்கை செய்து கொண்டாலும் சரி அல்லது குரைஷ்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டாலும் சரி அதைப் பற்றி எவ்வித தகராறுங்கிடையாது.

இவ்வுடன்படிக்கை எழுதிக்கொண்டிருக்கும் போது ஒரு விசேஷ சம்பவம் நடைபெற்றது. அதாவது, குரைஷிகளின் தூதராய் சமாதானம் பேச வந்திருந்த ஸுஹைலுடைய குமாரரான 'அபூஜன்தல்' என்பவர் காலில் விலங்கு மாட்டப்பட்டவராய் பெருமானார் (ஸல்.) அவர்களிடம் வந்தார். அவர் இஸ்லாத்தைத் தழுவியதால் மக்காவிலுள்ள குரைஷிகள் அவரைத் துன்பப்படுத்திக் கொண்டிருந்தார்களாதலால் அவர் எவ்விதமாகவோ தப்பி ஓடி காலிலிடப்பட்டிருந்த விலங்குடன் சமாதானக் கூட்ட மத்தியில் வந்து விழுந்தார். சுஹைல் என்பார் தன் குமாரரைப் பார்த்தவுடன் பெருமானார் (ஸல்.) அவர்களை நோக்கி, "முஹம்மதே! இந்த என் குமாரன் வருவதற்கு முன்பே நமக்கிடையே சமாதான உடன்படிக்கை பேசிமுற்று பெற்றுவிட்டது; இஃதுஉடன்படிக்கையை நிறைவேற்றுவதற்குள்ள முதலாவது சந்தர்ப்பமாகையால் நிபந்தனைப்படி அவனை என் வசம் ஒப்புவித்து விடுங்கள்" எனக் கேட்டுக் கொண்டார். பெருமானார் (ஸல்.) அவர்கள் ஆம்! என்று கூறிஅதனை ஏற்றுக் கொண்டார்கள். உடனே அபூஜன்தல் முன் வந்து தம்முடைய திரேகத்திலேற் பட்டிருக்கும் காயங்களையெல்லாம் முஸ்லிம்களிடம் காண்பித்து சோதிரர்காள்! இதே நிலைமையில் என்னை மறுபடியும் நீங்கள் பார்க்க விரும்புகிறீர்களா? நானோ முஸ்லிமாயிருக்கும் நிலைமையில் என்னை காபிர்கள்கையில் ஒப்புவிக்க விரும்புகின்றீர்களா? என அழுத கண்ணோடு வினவினார். அதற்கு பெருமானார் (ஸல்.) அவர்கள், அபூஜந்தலே! பொருமையைக் கைக்கொள்ளும், எங்களுக்கிடையே உடன்படிக்கை ஏற்பட்டு விட்டதால் இப்பொழு தொன்றும் செய்ய முடியாதென தெரிவித்தார்கள். இதனைச் செவியுற்ற சஹாபாக்கள் துக்கம் மேலிட்டவர்களாய்

ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு யாதொன்றும் பேசாது இருந்து விட்டனர்.

உடன்படிக்கை முடிந்து மூன்று தினம் வரை பெருமானார் (ஸல்.) அவர்கள் 'ஹுதைபிய்யா' என்னுமிடத்திலேயே இருந்து விட்டு மதீனாபுறப்பட்டுச் சென்றார்கள். 'உத்பாபின் அஸத்' மக்காவில் இஸ்லாமாகி குரைஷிகளால் சிறைவைக்கப் பட்டிருந்தவர் மதீனாவிற்கு ஓடி வந்து விட்டாராகையால் அவரையும் திரும்ப மக்காவிற்கு அனுப்பிவிட்டு நாம் சமாதான உடன்படிக்கைக்கு ஒருக்காலும் மாற்றஞ் செய்யக்கூடாதெனக் கூறினார்கள்.

அரசர்களை இஸ்லாத்திற்கு அழைத்து கடிதம்விடுத்தது

'ஹுதைபிய்யா' உடன்படிக்கையினால்,மக்காவாசிகளுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே சமாதான ஏற்பாடு நடைபெற்று முடிந்ததும், இஸ்லாத்தைப்பற்றி உலகத்திற்கு அறிவிக்கக்கருதி பெருமானார்(ஸல்.)அவர்கள் அதே வருடத்தில் ரோமாபுரி சக்ரவர்த்தியாகிய கெய்சர், பார்சீக தேசத்து அரசனாகிய குஸ்ரு, மிஸர் தேசத்தரசனான முகௌகிஸ், நஜ்ஜாஸி அரசர் முதலிய தேசாதிபதிகளை இஸ்லாத்தில் சேர்ந்து கொள்ளும்படி கடிதம் வரைந்து அனுப்பியிருந்தார்கள். முகௌகிஸ் அரசரோ தங்கள் கடிதத்துக்குப் பெரும் மதிப்பு கொடுத்துப் பெற்றுக்கொண்டு காணிக்கை அனுப்பிவைத்தார். நஜ்ஜாஷி சக்ரவர்த்தியானவர்,ஜஅபரிப்னு அபீதாலிப் அவர்களிடமிருந்து கடிதத்தைப்பெற்றுக் கொண்டவுடனேஅவர்கள் கையிலே இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டார். கைஸர் இஸ்லாத்தைத் தழுவிக்கொள்ள விரும்பிய போதிலும் தன் பிரஜைகளுக்கு பயந்து மௌனமாயிருந்துவிட்டார். குஸ்ருவோ கடிதத்தைப் பார்த்தவுடன் அதனைக் கிழித்துவிட்டு, "அவர் எனது அடிமையாக இருந்துகொண்டு எனக்கே இவ்வாறு எழுதுகின்றார்" என்று கூறி ஆத்திரமடைந்தான். இவ்வாறே இன்னும் சில சிற்றரசர்களுக்கும் கடிதம் வரைந்தனுப்பியதால்அவர்களும் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டார்கள்.

கைபர் சண்டை

கைபர் என்பது மதீனாவிலிருந்து 200 மைல் தூரத்திலுள்ள ஒரு நாட்டிற்குப் பெயர். பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் 'ஹுதைபிய்யா' விலிருந்து திரும்பி வந்து, துல்ஹஜ்ஜு மாதமும் சபர் மாதத்தின் சில நாட்களும் மதீனாவில் வாசஞ்செய்தார்களாயினும் கைபரிலுள்ள எஹூதிகளின் பயம் அவர்களின் மனதினின்று அகலாமலே இருந்தது. இதற்குக் காரணம் அவர்கள் மிகுதமாயிருந்துகொண்டிருந்ததுடன் நேரம், சௌகரியம் இவைகளை எதிர்பார்த்துகொண்டிருந்ததேயாகும். இந்நிலைமையில் நபிகள்பெருமானார் (ஸல்.) அவர்கள் 1400 காலாட்படைகளுடனும், 200 படைவீரர்களுடனும் கைபருக்குச் சென்று அதனை முற்றுகையிட்டு அதன் கோட்டை முழுதையும் ஒவ்வொன்றாகப் பிடித்துக் கொண்டார்கள். அதாவது முதலாவது நாயிம், பிறகு கமூஸ், அதற்கப்புறம் ஸலாலம் இவ்வாறாக பிடிபட்டது. கடைசியாக கைபரின் கோட்டை ஹஜ்ரத் அலீ (ரலி.) அவர்களின் கையால் பிடிபட்டது.

ஆரம்பமாக ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்கள் கையில் கொடி கொடுக்கப்பட்டவுடன் எதிரிகளிடம் சென்று யுத்தம் செய்துவிட்டுத் திரும்பிவந்தார்கள். மறுமுறை ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்கள் கையில் கொடுக்கப்பட்டு அவர்களும் கடும்போர் நடத்திவிட்டுத் திரும்பினார்கள். உடனே பெருமானார் (ஸல்.) அவர்கள் அல்லாஹ்வின்மீது பிரமாணமாக நாளைய தினம் கொடியை ஒருவருடைய கையில்கொடுப்பேன்; அவர் கடும் யுத்தம் நடத்தி கோட்டையைப் பிடித்துவிட்டு வருவார் என அறிவித்தார்கள். அன்றிரவு முழுதும் சஹாபாக்கள் இப்பெருமை யாருக்குக்கிடைக்கப்போகிறதோவென சிந்தனை புரிந்தவர்களாகவே இருந்தார்கள். பொழுது புகர்ந்ததும் நபிகள் திலகம் (ஸல்.)அவர்கள், ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களை அழைத்து,அவர்கள் கையில்கொடியைக்கொடுத்ததும், அவர்கள் பெருமானார் (ஸல்.) அவர்களை நோக்கி, யான் யூதர்களுடன் யுத்தம் செய்து அவர்களை இஸ்லாத்தைத் தழுவும்படி செய்யட்டுமா?வென கேட்டதற்கு, நீர் அவர்களிடம் இஸ்லாத்தைப்பற்றி போதிப்பதில் சாந்தத்துடன் நடந்து, உம்முடைய நேர்வழியினால் ஒரு மனிதன் இஸ்லாத்தைத்தழுவது அநேக ஒட்டகங்களை அல்லாஹ்வின்பாதையில் தானஞ்செய்வதைவிட மேலானதாகுமென அறிவித்தார்கள். உடனே ஹஸ்ரத்அலீ (ரலி.) அவர்கள் மஞ்சள் உடை அணிந்தவர்களாய் கைபர் பக்கல் சென்று பார்க்கும்போது, யூதர்கள் இஸ்லாத்தைத் தழுவுவதையாவது, சமாதானத்தை

விரும்புவதையாவது அங்கீகரியாதவர்களாய் சண்டை செய்யவேண்டுமென்னும் ஒரே எண்ணத்துடனிருப்பதைக் கண்டார்கள்.

உடனே எதிரிகளிலுள்ள வீரனும், கைபர் கோட்டையின் அதிபதியுமான 'மர்ஹப்' என்பான் கோட்டைக்குள்ளிருந்தே தன்னைப்பற்றிச் சிலாகித்துப் பாடிக்கொண்டே ஆயுதபாணி அணிந்தவனுய் வெளியில்வந்து, யான் 'மர்ஹப்' என்பது கைபர் முழுதுக்கும் தெரிந்திருக்கும்; மர்ஹப் என்பது யாரென்றுதெரியுமா? அவன்தான் ஆயுதபாணி அணிந்துள்ள அனுபவசாலியான வீரனுகும் என்னும் கவியைப் பாடினன். உடனே ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்கள், யான் என் தாயால் புலியென்று பெயர் வைக்கப்பட்டவராகும் ஆகவே, காடுகளில் வசிக்கும் புலியைப் போல் யான் பயத்தைக் கொடுக்கும்படியானவராகையால் எதிரிகளை வாள்கொண்டு நிறுத்திவிடுவேன் என்று பதில் கூறியதுடன், அவனுடன் எதிர்த்துப் போர்செய்து தன்னுடைய வாளினுல் உக்கிரமாய் அவன்மீது வீசவே, அவ்வாளானது அவனுடைய சிரசைப்பிளந்துகொண்டுசென்று, அவனை நரகிற்கு இரையாக்கிற்று. அவன் கீழே விழுந்துவிடவே, யூதர்களனைவரும் வெளிக்கிளம்பிச் சண்டை செய்ய ஆரம்பித்தார்களாயினும் முடிவில் தோல்வியே கொண்டனர். அக்கோட்டையும் முஸ்லிம்கள் வசமாயிற்று. பின்னர் முஸ்லிம்கள் நாட்டைக் கைப்பற்ற ஆரம்பித்தபொழுது, அன்னோர் நாட்டில் தாங்களே இருந்துகொண்டு பிரதிவருடமும் ஏற்படும் விளைபொருள்களில் பாதியைக் கொடுத்துவிடுவதாய்ச் சொல்லிக்கொண்டதை பெருமானுர் (ஸல்.) அங்கீகரித்துக் கொண்டார்கள். பின்னர் அந்த யூதர்கள் வழக்கம்போல் அங்கேயே இருந்து வந்தார்கள். மாசூல் தயாராகுங் காலங்களில்பெருமானுர் (ஸல்.)அவர்கள், 'அப்துல்லா இப்னுரவாஹா' அவர்களை கைபருக்கு அனுப்பி மாசூலை வசூலித்துவரச் செய்வார்கள். அவர்கள் சென்று, தயாரான மாசூலை இரண்டு பாகமாகப் பிரித்து யூதர்களை முதலாவதாக அவர்களுக்கு இஷ்டமான பாகத்தை எடுத்துக்கொள்ளும்படி செய்து பாக்கியைக் கொண்டுவருவார்கள். பிறகு அந்த யூதர்கள் மெள்ளமெள்ள சதி புரிய ஆரம்பித்ததால் ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் கிலாபத் ஆக்ஷி காலத்தில் அன்னோர் நாடு கடத்தப்பட்டனர்.

காலிதிப்னு வலீத்இஸ்லாத்தைத் தழுவுதலும் மூத்தா யுத்தமும்

ஹிஜ்ரீ 8-ம் ஆண்டில் காலிதிப்னுவலீத், அம்ரிப்னுல்ஆஸ் இவ்வரும் தூய்மை பொருந்திய இஸ்லாத்தைக்கொண்டு சிறப்பிக்கப்பட்டனர். இதே ஆண்டில் தான் மூத்தாச் சண்டையும் நிகழ்வுற்றது. பெருமானுர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் புஸ்ராவின் அதிபதியான ஷர்ஜீல்இப்னு அம்ருக்கு, ஹாரிதிப்னுஅம்ரு அவர்கள் மூலம் கடிதம் அனுப்பியிருந்தார்களல்லவா அக்கடிதம் மூதா'வுக்குச்சென்றவுடன் 'அம்ரிப்னுஷர்ஹபீல்' என்பான் அவர்களைக்கொன்றுவிட்டான். இதற்காக பெருமானுர் (ஸல்.) அவர்கள் ஜமாதுல் அவ்வல் மாதத்தில் 3 ஆயிரம் பேரடங்கிய சேனையைத்திரட்டி ஷாம் தேயபக்கல் அனுப்பிவைத்தார்கள். ஆரம்பமாக 'ஜைதிப்னு ஹாரித்' என்பவரை சேனுதிபதியாக நியமித்து அவர் வசம் கொடியை ஒப்புவித்தார்கள். அவர் ஷஹிதாய் விடுவாராகில், 'ஜஅபரிப்னு அபீதாலிப்' அக்கொடி தாங்கிச்செல்ல வேண்டு மென்றும், அதற்குப்பின் அப்துல்லாபின் ரவாஹாவும் அவர் உயிர்துறக்கும்படி நேரிட்டால் சேனையே தங்களுக்கு ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும் என்றும் கட்டளை யிட்டனுப்பினுர்கள்.

இவர்களெல்லோரும் மதீனவை விட்டுப்புறப்பட்டு 'முஆன்' என்னுமிடம் வந்தபொழுது, ஹிர்கில் என்பான் ஒரு லக்ஷம் சேனையைச் சேர்த்து வைத்துக்கொண்டு முஸ்லிம்களின் வரவை எதிர் பார்த்தவனுய் பல்கானில் இறங்கியிருப்பதாகத் தெரிய வந்தது. எதிரிகளின் சேனை எண்ணிக்கையில் பல மடங்கு அதிகமாயிருக்கும் விஷயம் முஸ்லிம்களுக்குத் தெரிந்ததும், அந்த நிலைமையைப் பெருமானுர் (ஸல்.) அவர்களுக்குத் தெரிவித்து அவர்கள் கட்டளைப் பிரகாரம் நடந்து கொள்ள வேண்டுமென அநேகர் கருதினராயினும், 'அப்துல்லா ஹிப்னுரவாஹா' எழுந்து முன்னேறிச் சென்று, ''யுத்தம் புரிவதற்காகவே நாம் இவ்வளவு தூரம் வந்திருக்கிறோம்; நம்முடைய நம்பிக்கையானது சேனை பலத்தின் மீதில்லாது நம்முடைய படையும் பலமும் நம்முடைய தூய்மை பொருந்திய மார்க்கமாக இருக்கிறது; அல்லாஹ்த ஆலா நமக்கு ஈமானுடைய உறுதியின் பலத்தாலேயே ஜெயத்தை அளித்து வருகிறுன்'' என்றுகூறியவுடன் அநேகசஹாபாக்கள்

தாங்கள் கூறுவது உண்மையேயாகும் என்று கூறிக்கொண்டே புறப்பட்டு முன்னேறிச் சென்றார்கள். அங்கு முஸ்லிம்கள் பல்காவுக்குச்சமீபத்திலுள்ள 'ஷாரிப்' என்னு மிடத்தில் இறங்கியதும் ஹிர்கலுடைய படையும் அங்கு வந்து சேர்ந்தது. இருவகுப்பாருக்கிடையே கைகலந்து கடும் போர் நடை பெற்றதில், முஸ்லிம் வீரர்கள் மிகவும் தைரியமாக நின்று போர் புரிந்தார்களாயினும் சேனையின் முன்னணியில் கொடிதாங்கி நின்று போர் நடத்திவந்த ஹஸ்ரத் 'ஜைதிப்னு ஹாரிது' (ரலி.) அவர்கள் கடும்போர் நடத்திக் கொண்டிருக்கு மத்தியில் எதிரிகளின் ஈட்டியால் குத்தப்பட்டுஉயிர் துறந்தார்கள். உடனே ஹஸ்ரத் 'ஜஅபரிப்னு அபீதாலிப்' அவர்கள் அக்கொடியைத் தங்கள் கையிலெடுத்தவர்களாய் எதிரிகளின் அணியிலுள் பாய்ந்தார்கள். உடனே அவர்களது குதிரை வெட்டப் பட்டுப்போகவே தரையில் நின்று யுத்தம் புரியும்போது வலக்கை வெட்டப்பட்டுப்போய் கொடியை இடக்கையில் தாங்கி நின்றார்கள். பிறகு மற்றொரு கையும் வெட்டப்பட்டு ஷஹீதாய்க் கீழே விழுந்தார்கள். பின்னர், அப்துல்லாஹிப்னு ரவாஹா' அவர்கள் அக்கொடியைக் கையிலெடுத்துக் கொண்டு குதிரையினின்று கீழே இறங்கிக் கால் நடையாகச் சண்டை செய்து கொண்டிருக்கும்போது அவர்களும் சற்று நேரத்தில் ஷஹீதாய் விட்டார்கள். இவர்களின் மரணத்துக்குப் பின் முஸ்லிம்கள் மனங் கலங்கியவர்களாய், பெருமானார் (ஸல்.) அவர்களின் கட்டளைப் பிரகாரம் தாபிதிப்னு அர்கம் அன்ஸாரீ (ரலி) அவர்கள் கொடியை கையிலெடுத்துக் கொண்டு முஸ்லிம்காள்! உங்களில் யாரையாவது தலைவராகநியமித்துக் கொள்ளுங்களெனக் கூறினார்கள். அதுபொழுது அங்கிருந்தோர்யாவரும் தங்களைத் தலைவராக நியமிக்க பொருத்தமுடையவர்களா யிருக்கிறோமென்று கூறினர். உடனே அவர், அக் காரியத்துக்கு யான் தகுதியற்றவனாயிருப்பதால் 'காலிதிப்னுவலீத்' அவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்களென்று கூறவே, எல்லோரும் ஏகோபித்து அங்கீகரித்துக்கொண்டார்கள். உடனே ஹஸ்ரத் காலித் (ரலி.) அவர்கள் கொடியைக் கையிலெடுத்தவர்களாய் வீரத்துடனும் சாதுர்யமாகவும் யுத்தம் புரிந்ததன் பயனாக அன்று முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது. பகைவர் தோல்வியுற்று ஓட்டம் பிடிக்க ஆரம்பிக்கவே, முஸ்லிம்கள் மதீனாவிற்குத் திரும்பிவிட்டார்கள். அந்த சண்டையில் 12 முஸ்லிம்கள் தான் ஷஹீதானார்கள்.

மக்காவின் ஜயம்

இதே ஆண்டில்தான் 'ஹுதைபிய்யா'உடன்படிக்கையும் முறிந்து மக்கமா நகர் முஸ்லிம்கள் வசமாயிற்று. அதாவது குரைஷியர்களுடன் சிநேக பாவங்கொண்டிருந்த 'பனூபக்ர்' வர்க்கத்தார் முஸ்லிம்களுடன் சம்மந்தம் வைத்திருந்த பனூகுஜாஆக்கள்மீது அதிக்கிரமம் புரிந்து அவர்களிலுள்ள சிலரையுங் கொன்றுவிட்டார்கள். அவ்வாறு செய்வதில் குரைஷிகளிற் சிலரும் பனூபக்ர் கூட்டத்தாருக்கு உதவியளித்துக் கொண்டிருந்தார்கள். இதனால் 'குஜாஆ' கூட்டத்தாரில் 40 பேர் வரை பெருமானார் (ஸல்.) அவர்களிடம் மதீனாவுக்கு வந்து விஷயங்களைத் தெரியப்படுத்தித் தங்களுக்கு உதவி செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்கள். இது விஷயம் பெருமானார் (ஸல்,) அவர்களுக்கு அளவுகடந்த வருத்தத்தை அளித்ததேயாயினும் எவ்வித சண்டையுமில்லாது சமாதான வழியில் அவ்விஷயத்தை ஓர் முடிவுக்குக் கொண்டு வந்துவிட வேண்டுமென்று கருதியவர்களாய்க் குரைஷிகளிடம் ஒரு தூது அனுப்பினார்கள். அதற்கு குரைஷிகள் ஒத்துவரயில்லை.

இவ்வாறு ஒத்து வராததால், பெருமானார் (ஸல்.) அவர்கள், உடன்படிக்கையை ஒருக்கால் முறித்துவிடுவார்களோ வென்பதை பயந்து குரைஷ் தலைவர்களெல்லாம் ஒன்றுகூடியாலோசித்தபோது 'ஹுதைபிய்யா' வில் நடைபெற்ற உடன்படிக்கையை புதுப்பிப்பதே உசிதமென்று கருதியதால், அந்த நோக்கத்திற்காக அபூஸுப்யானை பெருமானார் (ஸல்.) அவர்களிடம் மதீனத்துக்குத்தூது அனுப்பி வைத்தார்கள். அவர் மதீனாவுக்கு வந்தவுடன் தமது குமாரத்தியும் பெருமானார் (ஸல்.) அவர்களின் பிராட்டிமார்களிலொருவருமான ஹஸ்ரத் உம்முஹபீபா அவர்களின் இருப்பிடத்தில் தங்கிவிட்டுப் பின்னர் பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் சமுகம் சென்று 'ஹுதைபிய்யா' உடன்படிக்கையைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டுமெனக் கோரிக்கொண்டார். தாங்கள் அதற்கு எவ்வித பதிலும் கூறாமல் மௌனமாயிருந்து

விட்டார்கள். உடனே அவர் ஹஜ்ரத் அபூபக்ர் (ரலி.), ஹஸ்ரத் உமர் (ரலி.) போலொத்த பெரிய சஹாபிகளிடம் சென்று தாம் கோரிவந்த காரிய சம்மந்தமாய், பெருமானார் (ஸல்.) அவர்களிடம் சிபாரிஷ் செய்யுமாறு வேண்டிக் கொண்டார். அவருடைய வார்த்தைக்கு இன்னோரும் செவி சாய்க்கவில்லையாகையால் அவர் வருத்தமுற்றவராய் மக்காவுக்குத் திரும்பச் சென்று, மதீனாவில் நடைபெற்ற விருத்தாந்தங்களை யெல்லாம் குரைஷிகளிடம் சொல்லி விட்டார்.

இஃதிவ்வாறிருக்க, மதீனாவில் பெருமானார் (ஸல்.) அவர்கள் யுத்த முஸ்திப்புகளைச்செய்து கொண்டு, முஸ்லிம்களுடன் சிநேக ஒப்பந்தஞ் செய்துகொண்டிருந்த மற்றக் கூட்டத்தார்களுக்கும் ஆள் அனுப்பி சண்டைக்கு ஆயுத்தமாக வந்து சேரும்படி செய்து மொத்தம் 10 ஆயிரம் பேர்கள் வரை சேர்த்துக்கொண்டு ஹிஜ்ரீ 8-ம் ஆண்டு ரமலான் மாதம் 10-ந் தேதி மக்காவை நோக்கிப் புறப்பட்டார்கள்.

முஸ்லிம்கள் மக்காவிற்குச் சமீபமாயுள்ள 'மர்ரல்லஹ்ரான்' என்னுமிடத்தில் வந்து தங்கியிருந்ததால் பெருமானார் (ஸல்.) அவர்கள் அந்த இடத்திற்குச் சமீபத்திலுள்ள பெரிய மேட்டின்மீது ஒவ்வொருவரும் தனித்தனியே அடுப்புக்கட்டிச் சமையல் செய்யவேணுமென கட்டளை பிறப்பித்தார்கள். அவ்வாறு செய்யப்பட்டபோது எங்கு பார்த்தாலும் ஒரே வெளிச்சமாய்த் தோன்றியதால் குரைஷிகள் ஆச்சரியப்பட்டு அதன் உண்மையை அறிந்துவருவதற்காக அபூஸுப்யான், ஹகீமிப்னு ஹராம் இவ் விருவரையும் அனுப்பிவைத்தார்கள். இவர்கள் சற்று சமீபம் வந்து பார்க்கும்போது, நெருப்பு எறிந்துகொண்டிருப்பதைக் கண்டு கலக்கமுற்றவர்களாய் அங்கேயே நின்றுகொண்டு "இவ்வளவு ஏராளமானசேனைகளையும் இத்துணை அடுப்புகளையும் இதுவரை யாங்கள் கண்டதில்லையே" என்று கூறிக்கொண்டிருக்கும் போது, இருட்டில் ஓர் அன்னியர் அபூஸுப்யானுடைய பெயரைச் சொல்லிக்கூப்பிட்ட சப்தம் கேட்டது. அவ்வாறு கூப்பிட்டது நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களின் பெரிய தந்தையான ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) அவர்களாகும். உடனே ஹஸ்ரத் அவர்கள் அபூஸுப்யானை நோக்கி, அபூஹன்லலா (அபூஸுப்யான்) என்று கூப்பிட்டவுடனே அவர் 'லப்பைக்கு' இதோ இருக்கிறேன் என்று தெரிவித்து விஷயமென்னவென வினவினர். உடனே ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) அவர்கள் அவரை சமீபத்திலழைத்து, இதுபொழுது நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் 10 ஆயிரம்சேனைகளுடன் வந்திருப்பதால் எதிர்த்துப் போராடுவதில் எவ்வித பிரயோசனமு மேற்படமாட்டாதெனக் கருதுவதாய்க் கூறினர்கள். உடனே அபூஸுப்யான், "அவ்வாறாயின் தாங்கள் என்ன சொல்லுகிறீர்களோ அவ்வாறே செய்துகொள்கிறேன்" எனத் தெரிவித்துக்கொண்டார். அதற்கு அப்பாஸ் (ரலி.) அவர்கள், என்னுடன் வாரும் யான் ரசூலுல்லாஹி (ஸல்.) அவர்களிடம் உமக்காக சிபாரிஷ் செய்கிறேன் என்று கூறியதை அவர் ஏற்றுக்கொள்ளவே, ஹஸ்ரத் அவர்கள் அவரைத் தங்கள் வாகனத்தின் பின்புறம் ஏற்றிக்கொண்டு பெருமானார் நபிகள் திலகம் (ஸல்) அவர்களிடம் கொண்டுவந்து அவருக்காக சிபாரிஷ் தேடினர்கள். இவ்விருவரும் பெருமானார் (ஸல்.) அவர்களிடம் வருவதைக்கண்ட ஹஸ்ரத்உமர் (ரலி.) அவர்கள் உடனே அங்குவந்து, அபூஸுப்யானுடைய தலையை வெட்டுவதற்கு அனுமதி கோரினர்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) அவர்கள் கார்மானம் தேடவே பெருமானர் (ஸல்.) அவர்கள், அபூஸுப்யானை அப்பாஸ் (ரலி.) அவர்களிடம் ஒப்புவித்து, காலையில் தங்களிடம் கொண்டுவரும்படி செய்தார்கள். காலையில் அபூஸுப்யான் நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்கள் சமுகம் கொண்டுவரப்படவே பெருமானர் (ஸல்.) அவர்கள் அவரைநோக்கி, அபூஸுப்யானே! "வணக்கத்துக்குத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை" என்பதை இன்னும் நீர் தெரிந்துகொள்ளவில்லையா? வெனக் கேட்டார்கள். அதற்கு அவர் ஆம் தெரிந்துகொண்டேன்; வேறு நாயனிருந்தால் எங்களுக்கு உதவி செய்திருக்கமாட்டானா எனவும் கூறினர். உடனே பெருமானர் (ஸல்.) அவர்கள் மேலும் அவரை விழித்து, நான் அந்த ஆண்டவனால் அனுப்பப்பெற்ற தூதரென்பதை இதுபொழுதாகிலும் தெரிந்துகொண்டீரா? வெனக் கேட்க்கவே, அதற்கு அபூஸுப்யான், மேன்மை தங்கிய தலைவர் அவர்களே! அதில் எனக்குக் கொஞ்சம் சந்தேகமிருக்கிறதெனத் தெரிவித்துக்கொண்டார். உடனே பெருமானர் (ஸல்.) அவர்கள், சந்தேகிக்கவேண்டிய காலம் சென்றுவிட்டது. இதுபொழுது இஸ்லாத்தில் சேர்ந்தால்மட்டும்

ரக்ஷிப்புக் கிடைக்கும் என்று தெரிவிக்கவே, இஸ்லாத்தை ஒப்புக்கொண்டு உரத்த சப்தத்துடன் "லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர்ரசூலுல்லாஹி" என்னும் தூய கலீமாவை ஓதியவராய் முஸ்லிமாகிவிட்டார்.

அபூஸுப்யான் கௌரவத்தில் பிரியமுள்ளவராகையால், அவருக்கு ஏதாவது ஒரு அந்தஸ்தைக் கொடுக்கவேண்டுமென ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) அவர்கள் சிபாரிஷ் செய்துகொண்டார்களாதலால், பெருமானர் (ஸல்.) அவர்கள், அபூஸுப்யானுடைய வீட்டில்சென்று இருந்துகொண்டவர்களும், கஃபத்துல்லாவினுட்புகுந்து அடைக்கலம் தேடிக்கொண்டவர்களும், தன் வீட்டிற்குள் புகுந்து கதவைத் தாளிட்டுக் கொண்டவர்களும் காப்பாற்றப் படுவார்களெனக்கூறிவிட்டார்கள். அதுபொழுது அபூஸுப்யான் தம்விடும் பாதுகாப்பில் கஅபாவுக்குச் சமானமாக்கப் பட்டதாகக் கருதி சந்தோஷ மடைந்தார். பின்னர் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) அவர்கள், அபூஸுப்யானை சேனைகள் செல்லும் பாதையில் நெருக்கமான இடத்திலுள்ள ஒரு மேட்டில் நிறுத்தி, அல்லாஹ்வின் வீரப்படைகள் செல்வதைப் பார்க்கும்படி செய்தார்கள். அவ்வழியே சேனைகள் அணிவகுத்து 'பனீகப்பார்' வர்க்கத்தினர் 400, 'மஜீனு' வர்க்கத்தார் 1400, அதேபோல் தமீம்கபீலா, கைஸ், அசத் முதலிய ஒவ்வொரு கூட்டத்தாரும் தனித்தனியே கொடியை உயர்த்தியவர்களாய் உரத்த தொனியில் தக்பீர், தஹ்லீல் சொல்லியவர்களாய்ச் செல்வதையும், சரீரமுழுதும் கருங் கவசம் (உருக்குச்சட்டை)அணிந்துள்ள ஒருசேனைக்கு மத்தியில் பெருமானர் (ஸல்.) அவர்கள் வருவதையும் அபூஸுப்யான் கண்டு திகிலடைந்தவராய், அப்பாஸ் அவர்களே! இவர்கள் யாராகுமெனக் கேட்டார். அதுபொழுது ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) அவர்கள், இன்னோர் மக்கா மதீனு இவைகளிலுள்ள வீரர்களில் தெரிந்தெடுக்கப் பட்டு நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்களின் பாதுகாவலர்களாக இருப்பவர்கள் எனத் தெரிவிக்கவே, "உண்மையாகவே தங்களுடைய சோதிரருடைய குமாரருக்கு அரசர் பதவி கிடைத்து அவருடைய அரசாங்கம் வலுவடைந்துவிட்டது" என அபூஸுப்யான் கூறினர். அதற்கு அப்பாஸ் (ரலி.) அவர்கள் என்ன கூறுகின்றீர்கள்? இது அரசர் பதவியன்று; நபித்துவத்தின் மாண்புமிக்க கௌரவமாகும் எனத் தெரிவித்தார்கள். இவ்வாறு சேனைகள் அணிவகுத்துச்சென்று மக்காவிற்குச் சமீபமாகவந்து சேரவே, அபூஸுப்யான் பெருமானர் (ஸல்.) அவர்கள் சமூகம் சென்று, எனக்கு அனுமதி கிடைத்தால், நான் முதலிலேயே மக்காவிற்குச் சென்று, முஸ்லிம்களின் வருகையை குரைஷிகள் வீணில் தடுக்காமலிருப்பதற்காக ஏற்பாடு செய்துவிடுகிறேனெனக்கூறி அனுமதி பெற்றுக்கொண்டு, ஹகீமிப்னு ஹிஜாமுடன் விரைவாக மக்காவிற்குச்சென்று கஃபத்துல்லா ஷரீபிற்குள் புகுந்தார். குரைஷிகள்யாவரும் தங்கள் தலைவர் முக்கியமான சுபச் செய்திகொண்டு வந்திருக்கிறார் எனக் கருதியவர்களாய் யாவரும் அங்கு வந்து கூடினர். அதுபொழுது அபூஸுப்யான் எழுந்து அவர்களை நோக்கி, உரத்த தொனியில் குரைஷ்வர்க்கத்தார்களே! என்பந்துக்களே!! நண்பர்களே!!! இதுபொழுது முஹம்மத் (ஸல்.) ஆவேசத்துடன் திரட்டி வரும் படையின் சக்தியைத் தடை செய்ய உங்களால் முடியாது; அதைத் தடை செய்ய முயற்சிப்பது நம்முடைய நாசத்திற்கே வழி தேடுவதாயிருக்கும்; அதனுல் மக்காவில் இரத்த வெள்ளம் ஓடுவதைக் காண்பதைத்தவிர வேறு எவ்விதப் பிரயோசனமு மேற்படப் போகிறதில்லை; அதற்காக நாம் முயற்சிப்பதும் பயனற்ற முயற்சியாகவே ஆய்விடும் என்று கூறவே, அங்கிருந்தோர் யாவரும் அதற்காக இப்பொழுது செய்யவேண்டுவதென்ன? வென வினவினர்கள். அதற்கு அபூஸுப்யான் அவர்களை நோக்கி, நம்முடைய பொய்யான மதத்தினுல் நமக்கு ஏற்பட்ட தீங்குகளெல்லாம் உங்களுக்கு நன்கு தெரியும்; யான் சத்திய சன்மார்க்கமான இஸ்லாம் மதத்தைத் தழுவிக் கொண்டு விட்டேன்; இப்பொழுது உயிர்தப்பிக் கொண்டு மறுமையில் நற்பதவியடையவேண்டுமென்னும் எண்ணம் உங்களுக்கிருக்குமாயின், நீங்கள் இதுபொழுதே விக்கிரக ஆராதனையை விட்டு ஓரே ஏக நாயனை வணங்குவதைக் கைக்கொள்ளுங்கள்; என்னுடைய வீரமும் தைரியமும் உங்களுக்கு நன்கு தெரியும்; அவ்வாறு தைரியமுள்ள என் மனதையும் ஓர் சக்தி மாற்றிவிட்டது. ஆகவே உங்களுக்கு முற்கூட்டியே விஷயத்தை அறிவித்துவிட்டேன்; இது சமயம் கஃபத்துல்லா ஷரீபிலோ அல்லது என் வீட்டிலோ புகுந்தவர்களும், அவரவருடைய வீட்டின் கதவைத்தாளிட்டுக் கொண்டவர்களும் காப்பாற்றப்படுவார்.

கள். ஆகவே "குரைஷிகாள்! இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொள்வீர்களாகில் விடுதலை பெறுவீர்கள்" என்று கூறிக்கொண்டிருக்கும்போது அவருடைய மனையாளாகிய 'ஹிந்தா' என்பாள் முன்வந்து, அவருடைய தாடியைப் பிடித்து அங்குமிங்கும்ஆட்டி இந்த மடக்கிழவனுடைய சிரசைப் பறக்க விட்டவிடுங்களென அவமரியாதையாகப் பேசினள்.

இஃதிவ்வாறிருக்க, முஸ்லிம் சேனைகள் மக்காவிற்கு நெறுங்கிவிடவே, பெருமானர் (ஸல்.) அவர்கள் அதனை நான்கு பிரிவுகளாக வகுத்து, ஒவ்வொரு பிரிவும் வெவ்வேறு திசையிலிருந்து நகருக்குள் பிரவேசிக்குமாறு ஏற்பாடு செய்திருந்தார்களாதலின், 'ஜுபைர் இப்னு அவாம்' அவர்களைத் தலைமையாகக் கொண்ட சேனை நகரின் இடபாகத்திலிருந்தும், காலித் அவர்களுடைய சேனை தென்பக்கமிருந்தும், மதீன வாசிகளடங்கிய சேனை மேற்குத் திசை வழியாகவும், முஹாஜிர்களும் அவர்களுக்குத் தலைவரான 'அபூஉபைதா'வும் 'ஜபலஹிந்து' என்னும் குன்றைச்சுற்றி குறுக்குப் பாதையாகவும் நகருக்குள் பிரவேசித்தார்கள். இப்பாதை வழியேதான் நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்களும் சென்றூர்கள். அதுபொழுது பெருமானர் (ஸல்) அவர்கள் மஞ்சள் நிறமுடைய தலைப்பாகை அணிந்து கம்பீரத் தோற்றத்துடன் விளங்கி அல்லாஹ்த ஆலாவுக்கு நன்றி செலுத்தும் முறையில் ஷுக்ருடைய சஜ்தா செய்துவிட்டு, உயர்ந்த மேடான ஓர் இடத்தில் உட்கார்ந்து கொண்டார்கள்.

சேனைகள் நகருக்குள் பிரவேசிக்கும்பொழுது ஸஅத் அவர்கள், இன்று யுத்த தினமாகையால், மக்காவை பாதுகாப்புடைய ஸ்தலமாகக் கருதமாட்டோமெனக் கூறியதாகப் பெருமானர் (ஸல்.) அவர்களுக்குத் தெரியவே, உடனே ஹஸ்ரத்அலீ (ரலி)யை அழைத்து, மெதுவாய்ச் சென்று ஸஅதை ஸந்தித்து கொடியை அவர்களிடமிருந்து வாங்கிவிடும்படி உத்திரவிட்டிருந்தார்கள். காலித் (ரலி.) அவர்கள் செல்லும் இப்பாதையில் இஸ்லாத்தின் கொடிய பகைவர்கள் வசித்துவந்ததால் 'இக்ரிமாபிப் அபீஜஹ்ல்' முதலியவர்கள் கந்தமா என்னுமிடத்தில் குரைஷ்கூட்டத்தினரில் சிலர், பனூபக்ர், பனூஹாரிது முதலிய ஸ்தலவாசிகள் சிலருள்பட ஒரு சிறிய கூட்டம் நின்றுகொண்டு முஸ்லிம்கள் மீது அம்பெய்து மக்காவினுள் பிரவேசிப்பதைத் தடை செய்துகொண்டிருந்தது. அதுபொழுது சண்டை செய்வதைத் தவிர வேறு யாதொரு வழியுமில்லாததால், காலித் (ரலி.) அவர்கள் வாளைக் கையிலெடுத்துக்கொண்டு எதிரிகளின் கூட்டத்திற்குள் நுழையவே, அக்கூட்டம் தோற்கடிக்கப்பட்டுச் சிதறி ஓடிவிட்டது. இதில் முஸ்லிம்களில் மூவர் ஹஷாத்தைப் பெற்றுக்கொண்டதுடன் காபிர்களில் 13 நபர்கள் கொல்லப்பட்டுப் போயினர்.

கடைசியாக முஸ்லிம்கள் யாவரும் மக்கமா நகருக்குள் பிரவேசித்து தெருவழியே செல்லும்போது அங்குள்ள பெண்கள் தலைவிரிகோலமாய்த் தெருக்களில் நின்று கொண்டு முஸ்லிம்கள் ஏறிவரும் குதிரைகள் விரண்டோட வேண்டுமென்னும் கருத்துடன் தங்கள் துப்பட்டியை அவைகள் மீது வீசிக்கொண்டிருந்தார்கள். பெருமானர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் பெண்களின் இச்செய்கையைக் கண்டு குஞ்சிறிப்புக் கொண்டார்கள். அது பொழுது தங்கள் சிரசில் கருப்புத்தலைபாகை அணிந்துகொண்டு கஃபத்துல்லாவின்வாயற்படியண்டை நின்று, வணக்கத்திற்குப் பாத்திரவான் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருங்கிடையாது; அவன் தனித்தவன்; அவனுக்கு யாதொரு துணையுங்கிடையாது; பெருமை பாராட்டுவதடங்கலும், பழிவாங்குவதுமுழும், இரத்தப் பழிவாங்குவதும், பழையவிரோதத்தைக்கைக் கொள்ளுவதும் என்பாதத்திற்குத் தாளாலாய் விட்டது. ஆனல் கஃபத்துல்லா ஷரீபுக்குச் சங்கை செய்வதின் அனந்த பாத்தியமும், ஹாஜிகளுக்குத் தண்ணீர் குடிப்பாட்டுவதும் முன்போலவே இருக்கும் என்று கூறினர்கள்.

பின்னர் பெருமானர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் குரைஷிகளை நோக்கி, குரைஷிகாள்! இது பொழுது உங்களுடன் எவ்வாறு நடந்து கொள்வோமென்பது உங்களுக்கு தெரியுமா? வெனவினவியபோது, அவர்கள் யாவரும், தாங்கள் கிருபையாளராகயிருப்பதால் நன்மையான காரியத்தைத் தவிர வேறு எதையும் செய்யமாட்டீர்களெனக் கருதுவதாய்த் தெரிவித்துக் கொண்டார்கள். அது பொழுது பெருமானர் (ஸல்.) அவர்கள், குரைஷிகளுக்கு பாதுகாப்பு அளித்து அனுப்பிவிட்டு, கஃபத்துல்லாவை ஏழுமுறை சுற்றி வந்து அதனுள் பிரவேசித்து தொழுகையை நிறைவேற்றி வைத்தார்கள்.

கஅபத்துல்லாவினுள் பற்பல நபிமார்கள்,

பெரியோர்கள் பெயரால் செதுக்கப்பட்ட 360 விக்கிரகங்கள் வைக்கப்பட்டிருந்ததால், தங்கள் திருக்கரத்திலிருந்த கம்பினுல் அவைகளை ஒவ்வொன்ருய் அடித்துச் சாய்த்து வெளியிலெடுத்தெறிந்து சுத்தப்படுத்தும்படி செய்தார்கள். அதுபொழுது பெருமானுர் (ஸல்.) அவர்கள் அவ்விக்கிரகங்களை நோக்கி, "உண்மை (மார்க்கம்) வந்துவிட்டது; பொய் (மார்க்கம்) அழிந்துவிட்டது; நிச்சயமாக பொய் (மார்க்கம்) அழியக் கூடியதுதான்" என்னும் கருத்துள்ள திருவாக்கியங்களைச் சொல்லிக் கொண்டே அடித்தார்கள். பின்னர் சுவர் முழுவதிலும் வரையப்பட்டிருந்த சித்திரங்களை யெல்லாம் அழித்துக் கழுவும்படி செய்து ஒரே ஆண்டவனை வணங்குவதற்காக ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்களால் கட்டப்பட்டிருந்ததற்கேற்ப கஃபாவை பரிசுத்தம் பொருந்திய இடமாகச் செய்து வைத்தார்கள்.

பின்னர் நபிகள் பெருமானுர் (ஸல்.) அவர்கள் 'சபா'க்குன்றின் மீது வீற்றிருக்க, ஹஸ்ரத் உமரிப்னு கத்தாப் (ரலி.) அவர்களும் பக்கத்திலமர்ந்திருக்கும்போது, அல்லாவுடையவும் அவனது ரசூலுடையவும் கட்டளையைத் தெரிந்து அதனை அங்கீகரித்து நடந்துகொள்வதன்மீது உறுதி மொழி வாங்கப்பட்டது. ஆண் பிள்ளைகளிடம் உறுதிமொழி வாங்கப்பட்டவுடன் பெண்கள் முறை வந்தது. அதில் அபூஸுப்யானின் பெண்சாதியாகிய 'ஹிந்தா'வு மிருந்தாளாகையால் பெருமானுர் (ஸல்.) அவர்கள், அவளிடம் உறுதிமொழி வாங்குங்கால், அல்லாஹ்வுக்கு இணையாக யாரையும் கருதமாட்டேனென உறுதி கூறும்படி சொன்னுர்கள். அதற்கு அம்மாது ஆண்களைவிட எங்கள் மீது ஒரு விஷயத்தை அதிகமாக்குகின்றீர்களே ; அப்படியிருந்தும் அதனை யான் அங்கீகரித்துக் கொள்கிறேன் என்ருள். பிறகு பெருமானுர்(ஸல்.) அவர்கள்,கெட்டகாரியங்களை விட்டுத் தவிழ்ந்து கொள்ளுங்களென தெரிவிக்கவே ஒரு குடும்பஸ்திரீ கெடுதியான காரியம் புரிவாளோ? வெனக்கூறினுள். பிறகு குழந்தைகளை கொலைபுரியாதீர்களென பெருமானுர் (ஸல்.) அவர்கள் கூறவே, நாங்கள் அவர்களைச் சிசுக்கள் முதல் வளர்த்துக் காப்பாற்றிவந்திருந்தும் தாங்கள் 'பத்ர்' யுத்தத்தில் அவர்களைக் கொன்றுவிட்டீர்களெனக் கூறினுள். அதன்பின் ரசூலுல்லாஹி (ஸல்.) அவர்கள், படுதூறு பேசாதீர்களெனக்கூறவே, அல்லாஹ்வின் மீது பிரமாணமாக இது மாபெரும் கெட்ட காரியமாகும் ; தாங்கள் நற்செய்கை நற்பழக்க வழக்கம் இவைகளைத் தான் கூறுகிறீர்களென தெரிவிக்க, பெருமானுர் (ஸல்.) அவர்கள், யான் கூறுவதுபோல் சதாவும் நற்காரியங்கள் புரிந்து கொண்டு வாருங்களென கட்டளை பிறப்பித்தார்கள். அதற்கு ஹிந்தா, தங்கள் கட்டளையை மீறி நடக்க வேண்டுமென்னும் எண்ணம் எங்களுக்கேற்பட்டிருக்குமாயின் இவ்விடம் வந்திருக்கவே மாட்டோமெனக் கூறினுள். அதன்பின்னர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள், ஹஸ்ரத்உமர் (ரலி.) அவர்களை நியமித்து, இதர பெண்களிடம் உறுதிமொழி வாங்கும்படி செய்தார்கள். அதற்கேற்ப ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் பாவ மன்னிப்புத் தேடும்படி செய்து உறுதிமொழிவாங்கினுர்கள்.

அதுபொழுது 'லுஹர்' தொழுகை நேரம் சமீபித்துவிட்டதால்,பெருமானுர்(ஸல்.) அவர்கள், ஹஸ்ரத் பிலால் (ரலி.) அவர்களை அழைத்து 'கஃபத்துல்லாஹ்' வின் மீதேறி பாங்கு (தொழுகைக்கு அழைத்தல்) சொல்லும்படி ஏவினுர்கள். குரைஷிகள் மலைக் குன்றின் மீதேறியவர்களாய் சிலர் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டும் சிலர் கார்மானங் தேடிக்கொண்டுமிருக்கும்போது, ஹஸ்ரத் பிலால் (ரலி.) அவர்கள் பாங்கு சொல்ல ஆரம்பித்து "அஷ்ஹது அன்ன முஹம்மதற்ற ஸூலுல்லாஹ்" என்ற கலிமாவைக் கூறும்பொழுது அபூஜஹ்லுடைய குமாரத்தியான 'ஜுவைரிய்யா' என்னும் மாதானவள், "இந்த கரு நிறமுடைய காட்டுமனிதன் கஃபத்துல்லாஹ்மீது ஏறி நின்றுகொண்டு சப்தம் போடுவதை என் தந்தை கேழாமல் அல்லாஹுதஆலா கிருபை செய்து விட்டான்" எனக்கூறினுள். ஹாரிதிப்னு ஹிஷாம் என்பாள், "யான் இன்று மரணமாய் விட்டிருந்தால் நலமாயிருந்திருக்கும்" என்று கூறினுள். இன்னும் பலரும் பலவாறு பிதற்றினுர்களாயினும் கடைசியில் யாவரும் தூய்மை வாய்ந்த இஸ்லாத்தை தக்க முறையில் தழுவிக் கொண்டு இஸ்லாத்தின் உண்மை பக்தர்களாய்ச் சிறந்து விளங்கினுர்கள்.

ஹுனேன்போர்

இதே ஆண்டில்தான் மக்காவுக்கும் தாயிபுக்குமிடையிலுள்ள 'ஹுனேன்' என்னும் பள்ளத்தாக்கில் 'ஹவாஜின்' வர்க்கத்தாருடன் போர் நிகழ்வுற்றது. அதற்குக் காரணம், அப்

பள்ளத்தாக்கில் வசித்துவந்த ஹவாஜின் வர்க்கத்தார் ஆரம்ப முதலே இஸ்லாத்தின்மீது கடும்பகைமை கொண்டிருந்தார்களாயினும், 'ஹுதைபிய்யா' உடன்படிக்கைக்குப் பின்பு இஸ்லாம் அதிவேகமாய்ப் பரவுவதைக் கண்டு பொறுமைகொண்ட அவர்கள், அரேபியாவின் பற்பல பாகங்களுக்கும் சென்று ஜனங்களை இஸ்லாத்திற்கு விரோதமாய்த் தூண்டிக்கொண்டிருந்ததேயாகும்.

மக்கமாநகர் ஜெயமானவுடன், இனி பெருமானார் (ஸல்.) அவர்கள் திரும்பி வருங்காலை முற்கூட்டியே ஜாக்கிரதையாகஇருந்து முஸ்லிம்களை நசுக்குவதற்கு முற்படவேண்டுமென்று அன்னோர் கருதினர். அதற்கேற்ப மாலிகிப்னு அவ்பின் தலைமையின்கீழ் ஹவாஜின் வர்க்கத்தினர் யாவரும் ஒன்று கூடினர். 'தகீப்' வர்க்கத்தாரும் காரிபிப்னுல் அஸ்வதின் தலைமையின்கீழ் அவர்களுடன் சேர்ந்துகொண்டனர். மாலிக் அனுப்பிய வேவுகாரர்மூலம் பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு இவ்விஷயம் தெரியவே, உடனே தாங்கள் மக்கா ஜெயபேரிகை கொண்டபொழுது இஸ்லாத்தைத் தழுவியவர்களில் 2,000 பேர்களையும், இன்னும்10 ஆயிரம் சஹாபாக்களையும் ஒன்றுசேர்த்துக்கொண்டு மக்கமாநகரிலிருந்து புறப்பட்டார்கள். அது காலை முஸ்லிம்கள், தாங்கள் அதிகமாயிருப்பதைக் கண்டு சந்தோஷமுற்றவர்களாய் இன்று நாம் ஜெயபேரிகை கொண்டுவிடுவோமெனக் கூறினர். அல்லாஹுதஆலா இவ் விஷயத்தை தனது திருமறையில், (குறிப்பாய்) "ஹுனைன் போர்தினத்தில் நீங்கள் அதிகமாயிருப்பதானது, உங்களை ஏமாற்றத்திலாக்கிவைத்து விட்டது; அந்த அதிகமானது உங்களுக்கு யாதொரு பிரயோசனத்தையும்கொடுக்கவில்லை; இன்னும் (இவ்வளவு பெரும் விசாலமான) பூமியானது உங்கள் மீது நெருக்கடி செய்து விட்டது" என அறிவித்துள்ளான்.

'ஹவாஜின்' கூட்டத்தார் அம்பு எய்வதில் பேர்பெற்றவர்களாதலின் முஸ்லிம் சேனை வருவதற்கு முன்னதாகவே அக் கூட்டத்தார் ஹுனைன் என்னுமிடத்தில் சண்டை செய்வதற்கு வசதியான ஓர் இடத்தில் நின்றுகொண்டு முக்கியமான கணவாய்களில் அம்பு எய்பவர்களை நிறுத்தி விட்டனர். முஸ்லிம் சேனைகள் தாமிதமாய் வந்ததால் பள்ளத்தாக்கான இடத்தில் தங்கும்படி நேரிட்டது. அந்த இடத்தில் அனேக கிணறுகளுமிருந்தன. இராக்காலத்தில் எதிரிகள் அங்கு வந்துவிட்டதால் அதிகாலையில் திடுகூறாய் முஸ்லிம்களைத் தாக்க முற்பட்டு, ஒருவருக்கு நிகழ்பெறும் சம்பவம் இதரர்களுக்குத் தெரியாத விதமாய் வெகு சாமர்த்தியத்தோடு யுத்தம் புரிந்ததால் முஸ்லிம்களுக்குத் தோல்வி ஏற்பட்டது. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் முஹாஜிர்கள், அன்ஸார்கள் அடங்கிய சேனைகள் சிதறுண்டுபோய் அப்பன்னீராயிரமும் போன இடந் தெரியாது கலைந்து விட்டது. அதுபொழுது பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் தங்கள் வலதுபுறம் திரும்பவே அங்கிருந்த ஹஸ்ரத் அலீ, ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் அப்பாஸ் (ரலிம்.) முதலியோர்கள் பெருமானார் (ஸல்.) அவர்கள் சமுகம் வந்தார்கள். தாங்கள் அன்னோரை நோக்கி "இங்கு வாருங்கள்; யான் அல்லாஹ்வின் நபியாகவும் அப்துல்லாஹ்வின் குமாரராயுமிருக்கிறேன்" என உரத்த தொனியில் கூறினார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி.) அவர்கள் முஹாஜிரீன்களையும் அன்சார்களையும் அழைக்கவே, யாவரும் இதோ வந்துவிட்டோம் என்னும் சப்தமிட்டவர்களாய் ஓடிவந்து பெருமானார் (ஸல்.) அவர்களைச்சுற்றிலும் 100 பேர்கள்வரை சேகரமாய் விட்டார்கள். உடனே யாவரும் பகைவர் பக்கல் திரும்பவே, யுத்தகளத்தில் ஓர் மாறுதல் ஏற்பட்டு யுத்தமென்னும் தீயானது சுடர்விட்டெறிவதுபோல் காணப்பட்டது. உடனே பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் உரத்த தொனியில், "யான் நபியாக இருக்கும் பொய்யல்ல; யான் அப்துல் முத்தலிபின் சந்ததியாகும். இதுபொழுது தீ சுடர்விட்டெறிவதால் ஜாக்கிரதையாகக் காரியாதிகளைக் கவனித்துக்கொண்டு செல்லுங்கள்" எனக்கூறினார்கள்.

முஸ்லிம்களின் ஆவேசத்தைக்கண்ட ஹவாஜின் கூட்டத்தார் நடுக்கமுற்றனர். அதுபொழுது பெருமானார் (ஸல்.) அவர்கள் தங்கள் திருக்கரத்தால் ஒரு பிடி மண் எடுத்து எதிரிகள் பக்கல் வீசவே, அவர்களுக்குத் தோல்வி ஏற்பட்டு விட்டது. இதுவிஷயத்தை அல்லாஹ் தஆலா குர்ஆன் ஷரீபில், "நீர் எறியவில்லை; ஆனால் அல்லாஹ் தஆலாதான் எறிந்தான்" என அறிவித்துள்ளான்.

அதுபொழுது பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள், ஒரு மாது கொல்லப்பட்டிருப்பதைக் கண்டு இது யாருடைய வேலை

யாகும் என வினவவே, அங்கு நின்றவர்களெல்லோரும் ஹஸ்ரத் 'காலிதிப்னு வலீத்' தான் கொன்ருர்களெனத் தெரிவித்தார்கள். உடனே ஹஸ்ரத் அவர்கள் ஒரு ஆள் அனுப்பி ரசூலுல்லாஹ் அவர்கள், பெண்களையும் குழந்தைகளையும், அடிமைகளையும் கொல்வதை விலக்கி யிருப்பதாகத் தெரிவித்து வரும்படி செய்தார்கள்.

அந்த யுத்தத்தில் முஸ்லிம்களுக்கு அபரிமித சொத்துக்கள் கிடைத்ததுடன் அநேகரைச் சிறை செய்துகொண்டும் வந்தார்கள். அவ்வாறு சிறை செய்து கொண்டுவரப்பட்டவர்களில் பெருமானர் (ஸல்.) அவர்களின் பால்குடி சகோதரியும் ஷமாத்ஹாரிதுடைய மகளுமாகிய ஷைமா என்னும் மாது மிருந்தார். அம்மாது நபிகள்திலகம் (ஸல்.) அவர்கள் சமூகம் வந்து தன் விருத்தாந்தத்தைத் தெரிவிக்கவே, பெருமானர் (ஸல்.) அவர்கள் தங்கள் துப்பட்டியை விரித்து அதில் அமருமாறு செய்ததுடன் அவருக்குத் தேவையானவைகளையும் கொடுத்து வீட்டுக்கனுப்பி விட்டார்கள்.

ஹுனைன் சண்டையில் சிறைபடுத்தப்பட்டவர்களெல்லாம் பந்தோபஸ்தாய் வைக்கப்பட்ட சில நாளைக்குப்பின், ஹவாஜினின் தலைவன் பெருமானர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களிடம் வந்து, "அல்லாவுடைய ரசூலே! எங்கள் மீது நிகழ்வுற்றிருக்கும் விஷயம் தங்களுக்குத் தெரியாததன்று. ஆகவே, தாங்கள் எங்கள் மீது கிருபை புரிவீர்களாக" எனக் கூறினன். பின்னர் பெருமானர் (ஸல்.) அவர்களுடன் சம்பந்தம் வைத்திருக்கும் பனூஸஅத் வர்க்கத்தாரிலுள்ள 'ஜுஹைர்' என்பார்முன்வந்து "அல்ஹலாவுடைய ரசூலே! இச்சிறையாளர்களில் தங்கள் செவிலித் தாயாரான ஹலீமா ஸஅதிய்யாவின் சகோதரிகளிருக்கின்ருர்கள்; அவர்கள் மடியில் தாங்கள் வளர்ந்திருக்கிறீர்கள்; அரபி அரசர்களான 'நுஃமானிப்னு முன்திர்' போலொற்றவர்களுக்கு யாங்கள் இவ்வாருன பணிவிடைசெய்திருப்போமாகில் அவர்களும் எங்களுக்கு உதவி செய்வார்களென்னும் ஆதரவிருக்கும்போது கிருபையாளரான தங்களிடம்அதிகமான ஆதரவு வைக்கிருேம்" எனத் தெரிவித்துக்கொண்டார்கள். இதனைச்செவியுற்ற பெருமானர்(ஸல்.)அவர்கள், என்னுடைய பங்கிலும், அப்துல் முத்தலிப் அவர்கள் வம்ஸத்தார் பங்கிலும் கிடைக்கும் கைதிகளை உங்களிடம் திருப்பிக்கொடுத்து விடுகிருேம். ஆனல், இதர பெண்கள் குழந்தைகள் முதலிய கைதிகளை விடுவிக்க வேண்டுமெனக் கருதுவீர்களாயின் லுஹர் தொழுகைக்குப்பின் ஜனக்கூட்டத்தில் வந்து அவ்விண்ணப்பத்தைத் தெரிவித்துக் கொள்ளுங்கள் எனக் கூறினர்கள். அவ்வாறே அவர் பள்ளிவாசலுக்கு வந்து தங்கள் கைதிகளை விடுவித்துக் கொடுக்க வேண்டுமென வேண்டிக் கொண்டார். நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்கள் அவ்வேண்டுதலைச் செவியுற்றதும், என் பாகத்திலும் அப்துல் முத்தலிப் அவர்கள் சந்ததிகளின் பாகத்திலும் வரக்கூடிய கைதிகளை யான் விடுதலை செய்துவிடுகிறேன் என கூறவே, முஹாஜிர் அன்ஸார் முதலிய சகல முஸ்லிம்களும் தங்கள் தங்கள் பாகத்திற்குக் கிடைக்கும் கைதிகளையும் நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்களுக்குக் கொடுத்துவிட்டோம்" எனத் தெரிவித்துக் கொண்டார்கள். இந்த முறையில் அங்கு சிறை வைக்கப்பட்டிருந்த 6000 கைதிகளும் விடுதலை செய்யப்பட்டுப் போயினர்.

பின்னர் யுத்தத்தில் கிடைத்த பொருள்களை பெருமானர் (ஸல்.) அவர்கள் பங்கிட முற்பட்டு, புதிதாய் இஸ்லாத்தில் சேர்ந்த குரைஷிகளுக்கும் இதரர்களுக்கும் சற்று அதிகமாய்க் கொடுத்துவிட்டு அன்ஸார்களுக்குச் சற்று கம்மியாய்க் கொடுத்தார்கள்.

இதனையறிந்த அன்ஸார்களிலுள்ள சில வாலிபர்கள், ரசூலுல்லாஹ் (ஸல்.) அவர்கள், யுத்தத்தில் கிடைத்த சொத்துக்களை, தங்களைச் சேர்ந்தவர்களிலேயே பாகித்துக் கொடுக்கின்ருர்களெனக் கூறினர்கள். வேறு சிலர் கஷ்டமான நிலைமையில் நம்மை அழைப்பதும், சண்டையில் கிடைத்த பொருள்களை மற்றவர்களுக்குக் கொடுப்பதுமாயிருக்கிறதென்று கூறினர். இவ்வாறு அன்ஸார்கள் அதிருப்திகொண்டிருக்கிருர்களென்பது பெருமானர் (ஸல்.) அவர்களுக்குத்தெரியவே ஹஸ்ரத் ஸஅதிப்னு உப்பாதா (ரலி.) அவர்களை அழைத்து, அவர்கள் வகுப்பார்களை யெல்லாம் ஒன்று சேர்க்கும்படி கட்டளையிட்டார்கள். அதற்கேற்ப யாவரும் வந்துஒன்றுசேர்ந்தவுடன் தாங்கள் அன்னேரை நோக்கி, நீங்கள் பேசிக்கொண்டிருந்த செய்திகளெல்லாம் என் செவிக்கெட்டியிருக்கிறது; யான் குரைஷிகளுக்கு அதிகமாய்க் கொடுத்துவிட்டதாக சந்தேகப்படுவதாய்த் தெரிகிறது.

அன்சார்களே! நீங்கள் ஆரம்பத்தில் வழி
கேட்டிலிருந்தகாலே அல்லாஹ் தஆலா என்
மூலம் உங்களுக்கு நேர்வழி காட்டவில்லையா?
நீங்கள் பல பிரிவுபட்டு விரோதப்பான்மை
கொண்டவர்களாயிருக்கையில் அல்லாஹ்தஆலா
என்மூலம் உங்களுக்கிடையே ஒற்றுமையை
உண்டுபண்ணவில்லையா? நீங்கள் தரித்திரர்க
ளாக இருந்தகாலே அல்லாஹ் தஆலா என்
மூலம் உங்களை செல்வந்தர்களாக்கவில்லையா?
என்று வினவியமைக்கு ஆம் என்றே பதில்
கூறினர். அதற்கு பெருமானார் (ஸல்.) அவர்
கள், அன்ஸார்களே! நீங்கள் இதற்கு வேறுவித
மாய் பதில் சொல்லக்கூடும் என்று கூறவே,
“அல்லாவுடைய ரசூலே! நாங்கள் வேறு என்ன
தான் சொல்லப்போகிறோம்” என்று தெரிவித்
துக்கொண்டார்கள். அப்போது பெருமானார்
(ஸல்.) அவர்கள், நீங்கள் விரும்பினால், முஹம்
மதே உங்களுடைய-ஜனங்கள் உங்கள்மீது நம்
பிக்கை கொள்ளாமல் பொய்யரென்று கூறிக்
கொண்டிருந்த சமயம் எங்களிடம் வந்தகாலே
நாங்கள் உங்களை மெய்ம்மைப்படுத்தினோம்;
உங்களுக்கு உதவியில்லாதபொழுது எங்களி
டம் வந்தீர்கள்; அதுபொழுது நாங்கள் உதவி
செய்தோம்; நீங்கள் தனியாக ஒன்றுமில்லாது
எங்களிடம் வந்தபொழுது நாங்கள் உங்களுக்கு
ஆதரவளித்தோம் என்று கூறலாம். இவ்வாறு
நீங்கள் சொல்லிக்கொண்டேபோனால், நீங்கள்
சொல்வதெல்லாம் உண்மைதான் என்று சொல்
லிக்கொண்டிருப்பேன் என்று கூறிவிட்டு, அன்
ஸார்களே! யான் கைநிரம்ப தங்கத்தை எடுத்து
ஒரு வர்க்கத்தாருக்கு, அவர்கள் சன்மார்க்கத்
தில் நல்ல பற்றுதலுடையவர்களாயிருப்பதற்
குக் கொடுத்துவிடுவதை நீங்கள் அங்கீகரித்துக்
கொள்ளமாட்டீர்களா? குரைஷிகள் புதிய
முஸ்லிம்களாயிருப்பதுடன் நெடுகிலும் துன்
பப்பட்டு வந்திருப்பதால் சண்டையில் கிடை
த்த பொருள்களை அவர்களுக்குக் கொடுத்து
உதவிசெய்யலாமென்று கருதினேன். அன்
ஸார்களே! இவர்கள் ஒட்டகங்களையும் ஆடுகளை
யும் காசு பணங்களையும் தங்கள் வீட்டுக்குக்
கொண்டுபோகவும், நீங்கள் அல்லாவுடைய ரசூ
லை உங்களுடன் கொண்டுபோகவும் பிரியப்பட
வில்லையா? அல்லாஹ்வின்மீது பிரமாணமாய்
யான் உங்களை கைவிடமாட்டேன். மற்றவர்க
ளெல்லாம் வனாந்தர ஓரமாய்ப் போய்க்கொண்
டிருக்க, அன்ஸார்கள்மட்டில் மலைக் கணவாய்
வழியாகப்போனாலும் நான் அன்சார்களுடனே
போவேன். அல்லாஹ்தஆலா அன்ஸார்களையும்
அவர்கள் சந்ததிகளையும் காப்பாற்றுவானாக
என உறுக்கமாய்க் கூறினார்கள். இதனைச்
செவியுற்ற அன்ஸார்கள் யாவரும் தாரைதாரை
யாய்க் கண்ணீர்விட்டதால் அவர்களின் தாடிக
ளெல்லாம் நனைந்தவர்களாய் அல்லாவுடைய
ரசூலே! எங்களுக்கு தாங்கள் எதைக்கொடுத்
தீர்களோ அதைப் பொருந்திக்கொண்டோம்;
எங்களுக்கு தாங்கள்மட்டும் போதுமானது
எனத் தெரிவித்துக்கொண்டார்கள்.

தபூக்போர்

இது ஹிஜ்ரீ 9-ம் ஆண்டில் நிகழ்வுற்றது.
மக்கமாநகரின் ஜெயபேரிகைக்குப்பின் அராபி
யர்கள் கூட்டங்கூட்டமாக இஸ்லாத்தில் வந்து
சேர்ந்துகொண்டிருந்ததால் இஸ்லாமானது
நாளுக்குநாள் விருத்தியாய்க்கொண்டே வருவ
தைக் கண்ட கிறிஸ்தவர்களான ரோம அரசாங்
கத்தாருக்கு அதிக மனக்கவலை ஏற்படலா
யிற்று. இவ்வாறு விட்டுக்கொண்டேபோனால்
கொஞ்சகாலத்திற்குள் அரேபியா முழுதுமே
இஸ்லாம் பரவிவிடுமென்பதை பயந்த நஸா
ராக்கள் முற்கூட்டியே இஸ்லாத்தை நசுக்கி
விட வேண்டுமென்னும் தீர்மானத்துடன் மதீ
னாவைத் தாக்குவதற்காக ரோம சக்ரவர்த்தியா
கிய ஹிர்கலும் இதர கிறிஸ்தவர்களும் ஆயுத்த
மாக இருக்கிறார்களென்னும் செய்தி பெருமா
னார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்குத்
தெரிந்துவிடவே, மதினாவை அன்னோர் வந்து
தாக்குவதற்குமுன்பே புறப்பட்டு அவர்களைத்
தடுத்துப் போர்புரிய வேண்டுமென்னும் கருத்
துடன் பெருமானார் (ஸல்.) அவர்கள் சேனை
களை ஆயுத்தஞ் செய்யும்படி உத்திரவிட்டார்
கள். அது வெயில் காலமாக யிருந்ததுடன்
அரேபியாவில் பஞ்சமும் தோன்றியிருந்ததால்
ஜனங்கள் சிலவுக்குக்கஷ்டப்பட்டுக்கொண்டிருந்
தார்கள். அதனால் ஜனங்கள் தங்கள் வீடுகளை
விட்டு வெளியில் செல்வதும் யுத்தத்திற்கு
வேண்டிய சாமான்களைத் தயார் செய்வதும்
கஷ்டமாயிருந்தது. அதுபொழுது நபிகள்
பெருமானார் (ஸல்.) அவர்கள், இச்சண்டைக்கு
முஸ்லிம்கள் தங்களாலியன்றவரை உதவிபுரிய
வேண்டுமெனக்கூறவே, யுத்தத்திற்கு வேண்
டிய பொருள்களும் தளவாடங்களும் பெரு
மானார் (ஸல்.) அவர்களிடம்வந்து குவிந்தன.
ஹஸ்ரத் உத்மான் (ரலி.) அவர்கள் 300 ஒட்
டகமும் ஆயிரம் திர்ஹமும் கொடுத்தார்கள்.

ஹஸ்ரத் அப்துற் றஹ்மானிப்னு அவ்ப் (ரலி.) அவர்கள் 4 ஆயிரம் திர்ஹம் கொடுத்தார்கள். ஹஸ்ரத் உமரிப்னுகத்தாப் (ரலி.) அவர்களிடம் அதுசமயம் ஏராளமான செல்வமிருந்ததால், அவர்கள் தங்களிடமுள்ளதில் பாதியைக் குடும்பத்தார்களுக்காக வைத்துக்கொண்டு மறுபாதியை யுத்தத்திற்காகக் கொடுத்துவிட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்களோ தங்களிடமுள்ளதையெல்லாம் கொண்டு வந்து பெருமானார் (ஸல்.) அவர்கள் சமூகம் வைத்தார்கள். அதைக்கண்ட பெருமானார் (ஸல்.) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்களை நோக்கி, உங்கள் குடும்பத்தார்களுக்காக ஏதாகிலும் வைத்திருக்கிறீர்களாவென வினவியதற்கு, உண்மை பக்தரான ஹஸ்ரத் அவர்கள், அல்லாஹ்வையும் அவனது ரசூலையும் என் குடும்பத்தாருக்காக வைத்திருக்கிறேன்; அதுவே அவர்களுக்குப் போதுமானது எனத் தெரிவித்துக்கொண்டார்கள். இவ்வாறே இதர சஹாபாக்களும் தங்கள் தங்களாலியன்ற உதவி புரிந்தார்கள்.

அதுபொழுது நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் 30 ஆயிரம் வீரர்களுடன் புறப்பட்டு மதீனாவுக்கும் 'திமஷ்க்' க்கும் மத்தியிலுள்ள 'தபூக்' என்னுமிடத்தில் வந்திறங்கி அங்கு கூடாரமடித்துத் தாமதித்தார்கள். இவ்வாறு முஸ்லிம் படைகள் ஏராளமாய் வந்து, யுத்தத்தை எதிர்பார்த்துத் தங்கியிருக்கிறார்களென்னும் செய்தி கிறிஸ்தவர்களுக்குத் தெரியவே, மனசோர்புற்றவர்களாய் பின்வாங்கிப் போய் விட்டார்கள். எதிரிகளின் வரவை பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் எதிர்பார்த்தவர்களாய் அங்கேயே 20 நாள்வரைத் தங்கியிருந்தார்கள். இதன் மத்தியில் 'ஈலா' வின் சிற்றரசனான 'யூஹன்னா' என்பான் பெருமானார் (ஸல்.) அவர்களிடம் வந்து ஜிஸிய்யா (பாதுகாப்புவரி) கொடுப்பதாக உடன்படிக்கை செய்துகொண்டு ஒரு வெள்ளைக் கோவேறு கழுதையையும் சன்மானமளித்துச் சென்றான். இவ்வாறே ஹர்பா, அவ்ஜு முதலிய கிறிஸ்தவக் கூட்டத்தாரும் வருடமொன்றுக்கு 100 தீனார் கொடுப்பதாக உடன்படிக்கை செய்துகொண்டு சென்றார்கள்.

'திமஷ்க்' பக்கத்தில் கெய்ஸரின் ஆட்சிக்குள்பட்ட 'தூமத்துல்ஜன்தல்' என்னும் நாட்டின் சிற்றரசனான 'அகீதர்' என்பவன் முஸ்லிம்களுக்கு விரோதமாய் இருப்பது, பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு தெரியவே அவனை அடக்குவதற்காக தாங்கள், ஹஸ்ரத் காலித் (ரலி.) அவர்களின் தலைமையின் கீழ் 400 வீரர்களை அனுப்பிவைத்தார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி.) அவர்கள் அங்குசென்று அந்நாட்டைத்தாக்கி அவனைச் சிறைபிடித்தும், அவன் தானே பெருமானார் (ஸல்.) அவர்களிடம் வந்து உடன்படிக்கை செய்துகொள்ளுகிறதென்னும் நிபந்தனையின்மீது விடுதலை செய்துவிட்டார்கள். சில நாளைக்குப்பின் அவனும் அவனது சகோதரனும் மதீனாவுக்குப் பெருமானார் (ஸல்.) அவர்களிடம் வந்தபொழுது அவனுக்கு அபயங் கொடுத்தார்கள்.

நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் தபூக்கிலிருந்து திரும்பிவருங்கால் மதீனாவிற்கு சமீபம் சேர்ந்ததும் பட்டணவாசிகளெல்லாம் எதிர்கொண்டழைக்க முன்வந்தார்கள். அதுபொழுது சிறிய பெண் குழந்தைகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் மீது துதி பாடிபாடியவர்களாய் முன்னோக்கி வந்தார்கள்.

தூது வருதல்

ஹிஜ்ரீ 10-ம் ஆண்டில் அரப்தேசத்தின் நானா பாகங்களிலுமுள்ள கூட்டத்தாரின் அதிகாரிகள், பெருமானார் (ஸல்.) அவர்களிடம் வந்து சந்தோஷத்தோடு இஸ்லாத்தைத் தழுவிச் சென்றவண்ணமாகவே இருந்தனர். இதனை அல்லாஹ்தஆலா தன் திருமறையில், "எதுபொழுது அல்லாஹ்வின் உதவியும் ஜெயமும் வந்துவிட்டதோ (அதுபொழுது) அல்லாஹ்வின் சன்மார்க்கத்தின் பக்கல் மனிதர்கள் கூட்டங் கூட்டமாக வந்து நுழைந்துகொண்டிருப்பதைப்பார்ப்பீர்" என்று அறிவித்துள்ளான். திருமறையின் இத்திவ்விய திருமொழிக்கேற்ப பனீஸஅத், பனீதமீம், ஜுபைத், பனீபுராஜா முதலிய வர்க்கத்தாரின் தலைவர்கள் தாமே வந்து இஸ்லாத்தைத் தழுவி சென்றார்கள். 'ஹுமைர்' தேச சக்ரவர்த்திகள் கடிதம் மூலம் தூய்மை பொருந்திய இஸ்லாம் மதத்தை ஒப்புக்கொண்டனர். இவ்வாறு இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டவர்கள் தங்கள் நாடுகளுக்குச் சென்று அங்கு இஸ்லாத்தைப்பற்றியும் பெருமானார் (ஸல்.) அவர்கள் உண்மை தூதரென்பதையும் மக்களுக்கு எடுத்துக்கூறி இஸ்லாத்தில் வந்து சேரும்படி செய்துகொண்டிருந்தார்கள். இதனால் அராபியாவின் பற்பல பாகங்

களிலும் பெருமானார் (ஸல்.) அவர்களின் நாமம் பரவ ஆரம்பித்தது.

இதுவன்றி சஹாபாக்கள் பெருமானார்(ஸல்.) அவர்களின் கட்டளையை சிரமேற்கொண்டு அரப்நாட்டின் பற்பல பாகங்களுக்கும் சென்று இஸ்லாத்தின் சத்போதனையை இனிதெடுத்துக் கூறிவந்ததன் பயனாக அநேகக் கூட்டத்தார் இஸ்லாத்தைத் தழுவிவந்தார்கள். அவ்வாறு இஸ்லாத்தில் சேர்ந்தோர்கள், தாங்கள் இஸ்லாத்தில் சேர்ந்ததை அறிவிப்பதற்காக பெருமானார் (ஸல்.) அவர்களிடம் கூட்டம் கூட்டமாக தூது வந்துகொண்டிருந்தார்கள். அவ்வாறு வந்தவர்களில், சில கூட்டத்தாருக்கு இஸ்லாத்தின் மீது ஆரம்பத்திலிருந்த வெறுப்பு நீங்கி, பெருமானார் (ஸல்.) அவர்களது திருவாயால் இஸ்லாத்தைப்பற்றி நன்கறிந்து கொள்ள வேண்டுமென்னும் அவாவுடன் மதீனா வந்து பெருமானார் (ஸல்.) அவர்களைச் சந்தித்து தங்கள் சந்தேகங்களை யெல்லாம் நிவர்த்தி செய்துகொண்டு இஸ்லாத்தைத் தழுவினார்கள்.

'எமன்' மாகாணத்தில் 'தை' என்னும் பெயர்பெற்ற ஒரு வர்க்கத்தார் வசித்து வந்தார்கள். அக்கூட்டத்தாரின் தூண்டுதலால் அங்கு இஸ்லாத்துக்கு விரோதமாய்க் கலகமும் குழப்பமுமேற்பட்டுக்கொண்டே இருந்ததால், அக்குழப்பத்தை அடக்குவதற்காக பெருமானார் (ஸல்.) அவர்கள் இதே ஆண்டில் ஹஸ்ரத்அலீ (ரலி.) அவர்களின் தலைமையின்கீழ் ஒரு சிறிய படையை அங்கு அனுப்பிவைத்தார்கள். அங்குள்ளோரில் 'ஹம்தான்' வாசிகள் உடனே இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டார்கள். முஸ்லிம் படைகள் எமனுக்குச் சமீபமாகவருவதை அறிந்த ஹாத்திமுடைய குமாரரான 'அதீ' என்பார் ஷாம் மாகாணத்திற்கு ஓடிவிட்டார். ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்கள் அக்கூட்டத்தாரை ஜெயித்து அவர்கள் பொருள்களையெல்லாம் கைப்பற்றிக் கொண்டதுடன் அனேகரை சிறையாக்கியும் மதீனாவிற்குக் கொண்டு வந்தார்கள்.

அரேபியா முழுதுமே இஸ்லாம் பரவி வருவதைக்கண்ட பெருமானார் (ஸல்.) அவர்கள், தாங்கள் இவ்வுலகத்தி லவதரித்த நோக்கமானது நிறைவேறி விட்டதாகக் கருதினார்கள். அந்தகாரத்திலாழ்ந்துகேவலமும் மூடத்தனமுமான கொள்கைகளிலீடுபட்டுக் கல் மண்ணினால் செய்த விக்கிரகங்களை வணங்கிக்கொண்டு காலங் கழித்துவந்த அவ்வராபியர்களை பெருமானார் (ஸல்.) அவர்கள், கிருபையும் இரக்கமுமுள்ள ஒரே நாயனை வணங்கும் உண்மை பக்தர்களாக மாற்றிவிட்டார்கள்; ஓயாது சண்டை சச்சரவும் கொலையும் செய்வதையே தொழிலாகக்கொண்டிருந்த அவர்களின் ஹிருதயங்களை, அன்பு சகோதரத்துவம் நீதி என்னும் கயிற்றினால் பிணைத்து, ஞானம் நீதி இவைகள் நிரம்பிய சுயநலமற்ற பரிசுத்த உண்மை உத்தமர்களாகச் செய்துவிட்டார்கள். சுருங்கக் கூறின், பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு முன் எத்துணையோ நபிமார்கள் தோன்றியிருக்கிறார்கள். ஆனால் அவரவர்களின் ஜீவிய காலத்தில் அவர்கள் கொண்டுவந்த மதம் பரவவில்லை. ஆனால் சண்டை சச்சரவு இல்லாதிருந்த இரண்டுவருட காலத்தில் அரேபியா முழுதும் ஒரே மதத்தைக்கொண்டு அத் தேசத்தாரின்முழுநிலைமையும் மாறிவிட்டது. ஆகவே, இம்மேன்மையான கௌரவத்தை அல்லாஹ்தஆலா நம் பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு மட்டும் அருளியிருக்கிறான் என்பது உலகசரித்திரத்தைப்பார்ப்பது கொண்டு நன்கு புலனாகும்.

இவ்வாறு அரபியர்கள் கூட்டங்கூட்டமாக வந்து இஸ்லாத்தைத் தழுவுவதைப் பெருமானார் (ஸல்.) அவர்கள் கண்டதும் தங்கள் வேலை முடிந்துவிட்டதாகக் கருதியவர்களாய் மக்காவிற்குக் கடைசி யாத்திரை சென்று வர வேண்டுமென்னும் நாட்டங்கொண்டார்கள். அதனால் அதே 10-ம் ஆண்டு துல்கஅதா மாதத்தில் நபிகள் பெருமானார். (ஸல்.) அவர்கள் மக்காவிற்கு ஹஜ்ஜு செய்யப்புறப்படப் போவதாய்விளம்பரப்படுத்தப்பட்டதற்கேற்ப, தாங்கள் மதீனாவிலிருந்து மக்காவை நோக்கிப் புறப்பட்டார்கள். அதுபொழுது அரப்தேசத்தின் பல பாகங்களிலுமிருந்து முஸ்லிம்கள் பிரயாணமானதுடன் நம்பிராட்டிமார்கள் யாவரும் கூடவே வந்தார்கள். மதீனாவிலிருந்து பிரயாணமான 9-வது நாள் அதாவது துல்ஹஜ்ஜு மீ 4-ந் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று யாவரும் மக்கமா நகர் வந்து சேர்ந்தார்கள். பெருமானார் (ஸல்.) அவர்களின் வருகையைத் தெரிந்து அவர்களைத் தரிசிப்பதற்காக பனூஹாஷிம் குடும்பத்திலுள்ள சிறிய குழந்தைகளெல்லாம் வெயிலில் ஓடிவந்தபொழுது பெருமானார் (ஸல்.) அவர்கள் அக்குழந்தைகளில் சிலரை தங்கள் ஒட்டகத்துக்கு முன்பும்

சிலரைப்பின்னுமாக ஏற்றிக்கொண்டார்கள். கஃபத்துல்லாஷரீபானது பெருமானார் (ஸல்.) அவர்களின் பார்வைக்குத் தென்பட்டதும் "யா அல்லாஹ் இந்த வீட்டிற்கு இன்னும் அதிக கௌரவத்தையும் சிறப்பையும் கொடுத்தருள்வாயாக" எனக்கூறிவிட்டு கஃபாவை வலம் சுற்றிவந்து மகாமெஇப்ருஹீமில் இரண்டு ரக்கஅத்து தொழுகையை நிறைவேற்றினார்கள். 8-ந் திகதி மினாவுக்குச் சென்று மறுநாள் வெள்ளிக்கிழமை அதைவிட்டுப் புறப்பட்டு 'அரபாத்' மைதானம்வந்து அங்கு ஒரு கூடாரத்தில் தங்கியிருந்தார்கள். மத்தியானத்திற்குப்பின் 'கஸ்வா' என்னும் ஒட்டகத்தின்மீதேறி ஜனத்திரள்களுக்கு மத்தியில் ஓர் பிரசங்கம் நிகழ்த்தினார்கள். அதுபொழுது எத்திசையை நோக்கிய போதிலும் மனித உருவமாகவே அதிலும் இஸ்லாமிய மயமாகவே காணப்பட்டது. சில ஆண்டுகளுக்கு முன் எந்த இடத்தில் நபி பெருமானார் (ஸல்.) அவர்கள் தன்னந்தனியே போதனை செய்யுங்கால் அவர்களின் வார்த்தைகளைச் செவிகொடுத்து கேளாதிருந்தார்களோ அந்த இடத்தில் தானே அன்றையதினம் பக்தர்களின் பெரியதோர் கூட்டம் காணப்பட்டது.

அவ்விடத்தில் பெருமானார் (ஸல்.) அவர்கள் நிகழ்த்தியுள்ள பிரசங்கத்தின் முக்கிய சாரம் வருவாறு :—

மகாஜனங்களே! என்வார்த்தையைக் கவனித்துக் கேளுங்கள்! இவ்வருடத்திற்குபின் இதே இடத்தில் உங்களுக்கு மத்தியில் நானிருக்கக் கூடுமென்பது என் மனதில் தோன்றவில்லை. இதுபரிசுத்தம் பொருந்திய மாதமாகவும் இன்றைய நாள் குர்பானியுடைய தினமுமாகும். இது மக்கமா நகராகையால் நீங்கள் இந்த இடத்தையும் இம்மாதத்தையும் இன்றைய தினத்தையும் எவ்வாறு பரிசுத்தம் பொருந்தியதாகக் கருதுகின்றீர்களோ அங்ஙனமே உங்களுடைய கீர்த்தியும் கடைசி நாள் வரை சிறந்து விளங்கிக்கொண்டிருக்கும். எனக்குப் பின் நீங்கள் வழிதவறி நடக்கலாகாது. நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் நாயன் சமுகம்சென்றுநீங்கள் செய்த காரியத்திற்காக அவனிடம் கக்ணகு ஒப்புவிக்கும்படி நேரிடும். உங்கள் மனைவிகள் மீது உங்களுக்கு உரிமையிருப்பதுபோல அவர்களுக்கும் உங்கள்மீது உரிமை இருக்கின்றது. ஆகவே, அவர்களை அன்புடனும்சாந்தத்துடனும் நடத்துங்கள். உங்கள் அடிமைகளையும் நல்லவிதமாய் நடத்துங்கள். நீங்கள் உண்ணும் உணவையேஅன்னோருக்கும் கொடுங்கள்; நீங்கள் உடுத்துவது போன்ற ஆடைகளையே அன்னோர்க்கும் உடுத்துங்கள். மகா ஜனங்களே! அரபியல்லாதவர்களை விட அராபியர் மேம்பட்டவர்களல்லர்; அவ்வாறே அரபியர்களை விட அஜமிகள் சிறந்தவர்களல்லர். முஸ்லிம்கள் யாவரும் ஒருவருக்கொருவர் சகோதரர்களாகும். கிரியைகளில் பரிசுத்தமான எண்ணமும் முஸ்லிம்களின் நன்மையைக் கோரும் விருப்பமும், ஜமா அத்தில் ஒற்றுமையும் ஹிருதயத்தை பரிசுத்தமாக்குகின்றன. இது விஷயத்தை இங்குவந்திருப்பவர்கள் வராதிருப்பவர்களுக்குச் சொல்லவேண்டும் என்பதே.

முடிவாக பெருமானார் (ஸல்.) அவர்கள் அங்கு கூடியிருந்த மகாஜனங்களை நோக்கி, ஜனங்களே! அல்லாஹ்வின் கட்டளைகளை உங்களுக்கு நான் அறிவித்தேனாவென்று கியாமத் நாளில் அல்லாஹ்தஆலா உங்களிடம் கேட்டால் நீங்கள் அதற்கு என்னபதில் சொல்வீர்களெனக் கேட்டதற்கு, அவர்களெல்லோரும் அல்லாஹ்வுடைய தூதரே! தாங்கள் ஆண்டவனுடைய கட்டளைகளை எங்களுக்கு நன்கு அறிவித்தீர்களென்றும், நபிக்குள்ள கடமைகளைச் சரிவர நிறைவேற்றினீர்களென்றும் நாங்கள் சாக்ஷி சொல்வோம் எனத்தெரிவித்துக் கொண்டார்கள். அதுபொழுது நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் தங்கள் கையை வானத்தின் பக்கல் உயர்த்தி "அல்லாஹ்வே! நீயே சாக்ஷியாய் இருப்பாயாக" வென்று மூன்று முறை கூறினார்கள். அதுபொழுது அல்லாஹ்வின் புறத்திலிருந்து, "இன்றையதினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை சம்பூர்ணமாக்கினேன். என்னுடைய பாக்கியங்களை உங்கள் மீது பூர்த்திசெய்துவிட்டேன். உங்களுக்காக இஸ்லாம் மதத்தை நான் உவந்துகோண்டேன்" என்னும் கருத்துள்ள திருக்குர்ஆன் வாக்கியமானது நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

பின்னர் பெருமானார் (ஸல்.) மகாஜனங்களை நோக்கி, நான் உங்களுக்கு மத்தியில் இரண்டு பெரிய வஸ்த்துக்களைவிட்டுப் போகிறேன். ஒன்று அல்லாஹ்வின் திருவேதம். மற்றொன்று என்னுடைய 'அஹ்லபைத்' களென்னும் குடும்பத்தார்களாகும். ஆகவே, இவ்விரண்டையும் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள். என் குடும்

பத்தார் விஷயமாய் உங்களுக்கு ஞாபகமூட்டுகின்றேன்என்று கூறிய பின்னர் மதீனா திரும்பிச் சென்றார்கள்.

இதே சமயத்தில் அரேபியாவில் மூவர், தாங்கள் நபியென்பதாக தாவாச்செய்ய முற்பட்டு ஜனங்களை வழிகெடுக்க ஆரம்பித்தனர். அவர்களில் 'அல்அஸ்வத்' என்ற பெயரால் விளங்கிய 'அய்ஹலாஇப்னுகஅப்' என்னும் பெயருள்ள எமன்வாசியுமொருவனாகும். இவன் அதிக ஐசுவரியவானாயும் கூறியபுத்தியுள்ளவனாகவு மிருந்ததால் அவனுடைய தந்திரமான சூழ்ச்சியால் அம்மாகாணத்திலும் சுற்றுப்பக்கங்களிலுமுள்ள அநேகர் அவனுக்கு வசப்பட்டுக்கொண்டனர். ஆதலால் அவன் எமனை அரசாட்சிசெய்ய வேண்டுமென்னும் எண்ணத்துடன்எமனின் தலைநகரான 'ஸனா' வில் முஸ்லிம் கவர்னராயிருந்த 'ஷஹர்' என்பவரைக் கொன்றுவிட்டான். பிறகு அவன் குடி மயக்கமாக இருக்கும்போது ஷஹரின் கூட்டத்தார்கள் அவனைக் கொன்றுவிட்டார்கள். மற்ற இருவரான துலைஹாவும், முஸைலமாவும் சில காலமிருந்து நபிகள்பெருமானார் (ஸல்.) அவர்கள் காலத்திற்குப்பின் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்கள் கிலாபத் ஆக்ஷி காலத்தில் கொல்லப்பட்டுப்போனார்கள்.

பெருமானார் (ஸல்.) இவ்வுலக வாழ்க்கையை நீக்குதல்

நபிகள் பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் கடைசி ஹஜ்ஜை முடித்துக்கொண்டு மதீனாவிற்கு வந்து தங்களின் மிகுதநேரத்தை அல்லாஹ்வை வணங்குவதிலும் அவனை ஸ்தோத்திரஞ் செய்வதிலும் கழித்தார்கள். பின்னர் உஹத் போரில் ஷஹீதானவர்கள் அடக்கமாயிருக்கும் இடத்திற்குச் சென்று அவர்களின் மறுலோக க்ஷேமத்திற்காகப் பிரார்த்தனை செய்துவிட்டு, அங்கிருந்து திரும்ப வந்து மகா ஜனங்களைநோக்கிப் பின்வருமாறு கூறினார்கள் :—

மகாஜனங்களே! யான் 'ஹௌலுல்கவ்தர்' சமீபம் உங்களுக்கு முன்னால் செல்கிறேன். அதன் விசாலமானது ஈலாவிலிருந்து ஜஹபான்வரையிலிருக்கும். உலக முழுதிலுமுள்ள பொக்கிஷங்களின் திறவுகோல் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனக்குப்பின் நீங்கள் (முஷ்ரிக்) இணைவைப்பவர்களாய்விடுவீர்களென்னும் பயம் எனக்கில்லை. ஆகையால் நீங்கள் உலககாரியங்களில் ஈடுபட்டு விடுவதைப் பயப்படுகின்றேன். இனி நீங்கள் எவ்வித சச்சரவும் செய்து கொள்ளாதீர்கள். அவ்வாறு செய்துகொள்வீர்களானால் உங்களுக்கு முன்னாலுள்ளவர்கள் நாசமடைந்துபோனதுபோல் நீங்களும் நாசமடைந்து போவீர்கள்"

பின்னர் ஸபர்மாதக் கடைசியில் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் வியாதியால் பீடிக்கப்பட்டு நாளுக்குநாள் அந்த வியாதி அதிகரித்துக் கொண்டே வந்தது. இந்நிலைமையில் நம்பிராட்டிமார்களில் ஒவ்வொருவரின் வீட்டுக்கும் சென்றுவந்தார்கள். பிறகு வியாதி கடிஸாக ஏற்பட்டுப்போகவே, அவர்கள் யாவரிடமும் அனுமதி பெற்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி.) அவர்கள் இல்லத்தில் தங்கினார்கள். அதுகாலை நடப்பதற்கு சக்தியிருக்கும்வரை வியாதியுடனேயே பள்ளிவாசலுக்குச் சென்று தொழுகை நடத்திவந்தார்கள். ஒருநாளன்று தொழுகைக்குப் பள்ளிவாசலுக்குப் புறப்படும்போது அவர்களுக்கு மயக்கமேற்படவே, அம்மயக்கம் நீங்கியபின் தங்களுக்குப் பிரதிநிதியாய் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்கள் பள்ளிவாசலில் தொழுகை நடத்த வேண்டுமென்று ஹஸ்ரத் ஆயிஷா நாயகி இடம் கூறினார்கள். இதனைச் செவியுற்ற பீபி அவர்கள், யாரசூலல்லாஹ்! ஹஸ்ரத்அபூபக்ர் இளநெஞ்சுடையவர்களாதலின் தங்கள் ஸ்தானத்தில் அவர்கள் நிற்க சக்திபெறமாட்டார்கள்; குர்ஆன் ஓதிக்கொண்டிருக்கும்போதே அவர்கள் அழுவார்கள் என்று சொல்ல,பெருமானார் (ஸல்.) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களே தொழுகையை நடத்தட்டும் என்று மறுமுறையும் கூறினார்கள். அதுமுதல் சிலநாள் வரை ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களே தொழுகையில் இமாமத் செய்து வந்தார்கள். அதுபொழுது ஒரு நாள் 'புலைல்பின் அப்பாஸ்' அலீஇப்னு அபீதாலிப், (ரலி.) இவ்விருவர்களின் உதவிகொண்டு வெளிவந்து மஸ்ஜிதுக்குச்சென்று மிம்பர்மீது ஏறி உட்கார்ந்தவர்களாய் அல்லாஹ்தஆலாவைப் புகழ்ந்த பின்னர் மகா ஜனங்களை நோக்கி,

மானிடர்காள்! யாருடைய முதுகிலாயினும் யான் கொரடா அடித்திருப்பேனாகில் இதோ என் முதுகு தயாராக இருக்கிறது. யாரையாகிலும் யான்ஏசிப் பேசியிருப்பேனாகில் இதுபொழுது அவர்கள் என்னை

யேசிப் பேசி விடட்டும்! யான் யாரிடமாகிலும் கடன்வாங்கி யிருப்பேனாகில் இது பொழுது என்னிடமிருந்து திரும்ப வாங்கிக் கொள்ளட்டும். இதனால் என் மனதிற்கு சங்கட மேற்படுமென்று யாரும் கருதிவிட வேண்டாம்" எனக் கூறினார்கள்.

உடனே அங்கிருந்த ஒருவர் எழுந்து தாங்கள் எனக்கு மூன்று 'திர்ஹம்' கொடுக்க வேண்டியதிருக்கிறது எனத் தெரிவித்துக் கொள்ளவே, உடனே அதைக் கொடுத்துவிடும்படி செய்தார்கள். பின்னர் முஹாஜிரீன்கள் அன்ஸார்களுடன் தக்க முறையில் நடந்து கொள்ள வேண்டுமென்று உபதேசம் புரிந்து விட்டு வீடுதிரும்பி வந்துவிட்டார்கள்.

பெருமானார் (ஸல்.) அவர்கள், தங்கள் மரணத்திற்கு நான்கு தினங்களுக்கு முன் ஸஹாபாக்களிடம் சொல்லி மைக்கூடு பேனா கொண்டுவரும்படியும் அதற்குப்பின் நடந்து கொள்ளவேண்டிய விஷயங்களைப்பற்றி எழுதி பின்னால் யாதொரு சச்சரவு மேற்படாது செய்து விடுவதாகவும் கூறினார்கள். இவ்வாறு கூறியதும் சில ஸஹாபாக்கள் அங்கிருந்தவர்களை நோக்கி, பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு இது பொழுது வியாதி அதிகரித்திருப்பதால் நாம் கஷ்டங் கொடுக்கலாகாது; நம்மிடம் குர்ஆன் ஷரீப் இருப்பதால் அதுவே நமக்குப் போதியதாகுமென்று கூறினர். சிலர் இதனை அங்கீகரித்துக் கொள்ளாததால் அவர்களுக்குள்ளே தர்க்கவாதம் நடைபெற்று கடைசியில் சிலர் பெருமானார் (ஸல்.) அவர்களின் கட்டளைப் பிரகாரஞ் செய்வோமென்றனர். வேறு சிலர், வேறுவிதமாய்ச் சொன்னார்கள். இதற்கிடையே அபிப்பிராயபேதம் முற்றி கூக்குரலும் ஒரே சப்தமும் ஏற்பட்டுவிட்டதால் பெருமானார் (ஸல்.) அவர்கள், என்னைவிட்டுவிடுங்கள்; நீங்கள் இதுபொழுது என்னிடமிருந்து தர்க்கஞ் செய்துகொண்டிருக்கும் விஷயத்தைப் பார்க்கினும்மேலான விஷயத்தைக் கவனித்துக் கொண்டிருக்கிறேன், என்று கூறிவிட்டார்கள். பின்னர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் ஸஹாபாக்களை விளித்து, முஷ்ரிகீன்களை அரபநாட்டிலிருந்து வெளிப்படுத்தி விடவேண்டுமென்றும், வெளிதேசப் பிரதிநிதி வருபவர்களிடம் தாங்கள் நடந்துகொண்ட மாதிரியே நடந்து கொள்ள வேண்டுமென்றும் கட்டளை பிறப்பித்தார்கள்.

அன்று மத்தியானத்தில் பெருமானார் (ஸல்.) அவர்களுக்குச் சற்று குணமாகத் தெரியவே, தாங்கள் தண்ணீர் கொண்டு வரும்படி செய்து குளித்துவிட்டு மஸ்ஜிதுக்கு வந்தார்கள். தொழுகைக்காக யாவரும் நின்றுகொண்டிருக்கும்போது பெருமானார் (ஸல்.) அவர்களின் வருகையைக்கண்ட ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்கள், இமாமத் செய்துகொண்டிருப்பதை விட்டுப் பின்னால் செல்வதற்கு முற்பட்டார்கள் உடனே பெருமானார் (ஸல்.) அவர்கள் சயிக்கினையினால் அங்கேயே நிற்கும்படி செய்துவிட்டார்கள். தொழுகை முடிந்த பின் தாங்கள் ஓர் சொற்பெருக்காற்றினார்கள். அதுதான் தங்களின் கடைசி உபதேசமாகும். அதுவருமாறு:—மானிடர்காள்! அல்லாஹ் தஆலா ஒரு அடியானுக்கு இவ்வுலக பாக்கியங்களையோ அல்லது மறுமையில் தன்னிடமுள்ளவைகளையோ இரண்டிலொன்றைத் தெரிந்தெடுத்துக் கொள்ளுமாறு அதிகாரம் கொடுத்திருந்தான்; ஆனால் அவ்வடியான் ஆண்டவனிடமுள்ளதைத் தெரிந்துகொண்டார் என்று பெருமானார் (ஸல்.) அவர்கள் தெரிவிக்கவே, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்கள் அழுதார்கள். வேறு ஒருவரைப்பற்றிச் சொல்லும்போது எதற்காக ஹஸ்ரத் அபூபர்ர் (ரலி.) அவர்கள் அழவேண்டுமென ஜனங்கள் யாவரும் ஆச்சரியத்துடன் கேட்டதற்கு, பெருமானார் (ஸல்.) அவர்கள், தங்கள் மரணத்தைக் குறித்தே இவ்வாக்கியங்கள் கூறியதைத் தெரிந்து தாங்கள் அழுததாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்கள் கூறினார்கள். அதன்பின் பெருமானார் (ஸல்.) அவர்கள், யான் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்களுடைய தோழமைக்கும் செல்வத்திற்கும் நன்றிசெலுத்தக்கடமைப்பட்டிருக்கிறேன்; யான் இவ்வுலகில் என் உம்மத்தோர்களில் யாரை யாகிலும் சிநேகிதராக்கிக் கொள்ள இடமிருக்குமாயின் அபூபக்ர் (ரலி.) அவர்களையே சிநேகிதராக்கிக்கொள்வேன். ஆனால் இஸ்லாமிய சம்மந்தமானது சிநேகிதத்தன்மைக்குப் போதியதாக இருக்கிறது என்று கூறினார்கள்.

தங்களுக்கு ஹஸ்ரத் பாத்திமா (ரலி.) அவர்கள் மீது அதிகப்பிரீதி ஏற்பட்டிருந்ததால், அதுபொழுது அவர்களை சமூகமழைத்து, அவர்கள் காதில் ஏதோ மெள்ள சொன்னார்கள். அதனைச் செவியுற்ற ஹஸ்ரத் பாத்திமா (ரலி.) அவர்கள் அழுதார்கள்.

மறுபடி ஏதோ சொல்லியதைக் செவியுற்ற வுடன் சிறித்தார்களாதலின் பீபி ஆயிஷா (ரலி.) அவர்கள் இதன் காரணம் யாதாகுமென ஹஸ்ரத் பாத்திமா (ரலி.) அவர்களிடம் வின வியமைக்கு, முதலாவது பெருமானார் (ஸல்.) அவர்கள் இதே வியாதியில் மரணமாய் விடுவ தாகக்கூறினார்கள். அதனைக்கேட்டவுடன் அழு தேன். இரண்டாவதாக தங்கள் குடும்பத்தின ரில் முதன்முதல் தங்களை சந்திப்பவர் நான் தான் என்றுகூறவே யான் சிறித்தேன் எனத் தெரிவித்துக்கொண்டார்கள்.

பின்னர் வியாதி அதிகரிப்பதும் சாந்த மடைவதுமாகயிருந்து. கடைசியாக என்றைப தினம் மரணமானார்களோ, அதாவது ரபீஉல் அவ்வல் மாதம் 12-ந்தேதி அன்று வெளிரங்கத் தில் தெளிவேற்படுவதுபோல் காணப்பட்டது. தாங்கள்படுத்திருந்த அறைக்குச்சமீபம் மஸ்ஜி திருந்ததால் இடையிருந்த திரையை தூக்கிப் பார்க்கும்போது பஜர்தொழுகை நடைபெற் றுக்கொண்டிருப்பதைக் கண்டு சந்தோஷ மடைந்தார்கள். அங்கிருந்தவர்களெல்லோரும் பெருமானார் (ஸல்.) அவர்கள் வெளியில்வர உத் தேசிப்பதைப் பார்த்து சந்தோஷமடைந்தார்க ளாயினும் பெருமானார் (ஸல்) அவர்கள் மறு படியும் உள்ளால் சென்றுவிட்டார்கள். பின் னர் பொழுது செல்லச்செல்ல பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு மயக்க மேற்படுவதும் தெளிவு கொடுப்பதுமாக இருந்தது. இதனைக் கண்ட ஹஸ்ரத்பாத்திமா (ரலி.) அவர்கள், என்ன ! என் தந்தைக்கு மனோநிம்மதி ஏற் படாதிருக்கிறதே என்று கூறவே, பெருமானார் (ஸல்.) அவர்கள் தங்கள் அருமை குமாரத் தியை நோக்கி, உம்முடைய தந்தையார் இன் றைக்குப்பின் மன நிம்மதியுடனிருப்பார் எனத் தெரிவித்தார்கள்.

உயிர் பிரிவதற்கு சற்றுமுன், ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களின் குமாரரான அப்துற்றஹ்மான் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்.) அவர்கள் சமூகம் வந்தார்கள். அதுகாலை தாங்கள் பீபிஆயிஷா (ரலி) அவர்கள் நெஞ்சின் மீது சாய்ந்தவர்களாயிருக்கும்போது அப்துற் றஹ்மான் (ரலி) அவர்கள் கையிலிருக் கும் மிஸ்வாக்கை பெருமானார் (ஸல்.) கூர்ந்துப் பார்ப்பதை பீபிஆயிஷா (ரலி.) அவர்கள் கண்டு, தாங்கள் மிஸ்வாக்குச் செய்வதற்குப் பிரியப்படுகிறார்களென்று தெரி ந்து உடனே அதனைக் கையில்வாங்கி மெது வாக பற்களில் தேய்த்தவர்களாய் பெருமானார் (ஸல்.) அவர்களின் கையில் கொடுத்ததை தாங் கள் வாங்கி, சாதாரண சுவாத்தியத்தோடு இருப்பவர்கள் தேய்ப்பதுபோல் தேய்த்தார் கள். பிறகு உயிர் பிரிந்து விடுவதற்குள்ள நேரம் சமீபித்து விட்டது. அதாவது அன்று மாலைப் பொழுதானதும் நெஞ்சில் மூச்சு ஏற்பட்டு சப் தம் வெளி வந்தது. அதுபொழுது தண்ணீர் சமீபத்தில் வைக்கப்பட்டிருந்ததால் அதனை அள்ளி முகத்தில் தெளித்துக்கொண்டிருக்கும் போது கையை வானுலகின் பக்கல் உயர்த்தி "மேலான தோழனாகிய அல்லாஹ்வின்பக்கல் செல்ல வேண்டியிருக்கிறது" என்று மூன்று முறை கூறினார்கள். இவ்வாறு கூறிக்கொண்டி ருக்கும் போதே ஹிஜ்ரீ 11-ம் ஆண்டு ரபீஉல் அவ்வல் மாதம் 12-ந் தேதி திங்கட்கிழமை யன்று மாலையில் தங்கள் 63-ம் வயதில் பெரு மானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் பரி சுத்த ஆத்மாவானது தூய்மை பொருந்திய அவ்வுலகிற்குச் சென்றுவிட்டது.

இதுசெய்தி வெகுசீக்கிரம் மதீனா முழுதி லும் பரவ ஆரம்பித்து ஜனங்கள் திரள் திர ளாக வந்துகூட முற்பட்டனர். ஆனால் பெரு மானார் (ஸல்.) அவர்கள் மீது ஏற்பட்டிருந்த அளவுகடந்த பிரீதியினால், பெருமானார் (ஸல்.) அவர்கள் இவ்வுலக வாழ்க்கையை விட்ட செய் தியை அநேகர் நம்பிக் கொள்ளாதவர்க ளாகவே இருந்தார்கள். உதாஹரணமாக, அது பொழுது ஹஸ்ரத்உமர் (ரலி) அவர்கள் முன் வந்து வாளை உருவியவர்களாய், "யாராகிலும் பெருமானார் (ஸல்.) அவர்கள் மரணமாய்விட் டார்களென்று கூறுவாராயின் அவருடைய சிரசைவேறுக்கிவிடுவேன்" என்று அறிவித்துக் கொண்டே நின்றார்கள். அதுசமயம் வெளியிற் சென்றிருந்த ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் வந்து ஒன்றையும் கவனியாதுநேராக பீபி ஆயிஷா (ரலி) அவர்களின் வாசஸ்தலம் சென்று, பெருமானார் (ஸல்) அவர்கள்மீது மூடி யிருந்த வஸ்த்திரத்தை நீக்கி திருமுகத்தைப் பார்த்துவிட்டு முழங்காலிட்டுப் பெருமானார் (ஸல்.) அவர்களின் நெற்றியில் முத்தமிட்டவர் களாய், தாங்கள் உயிருடன் இருக்கும்போதும் இனிமையுடனிருந்தீர்கள், இதுபொழுதும் இனி மையுடனிருக்கிறீர்கள் என்று சொல்லிவிட்டு வெளியில் வந்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உருவியவாளுடனிருப்பதைக்கண்டு அவர்கள் சமீபம் சென்று உமரே! வாய் பேசாது கீழே

உட்காருங்கள்! எனக்கூறியவர்களாய் ஜனக் கூட்டத்தின்மத்தியில்போய் நின்று, மகா ஜனங்களே! பெருமானார் (ஸல்.) அவர்கள் இவ்வுலகை விட்டுப்போவது நிக்ஷயமாகத்தானிருந்தது. அவ்வாறே இன்றுபிரிந்தும் விட்டார்கள் எனக் கூறியவர்களாய் "முஹம்மது ஒரு தூதரேயன்றிவேறில்லை; அவருக்குமுன் அநேக ரசூல்கள் சென்றிருக்கிறார்கள். என்ன! அவர் இறந்துவிட்டாலும் அல்லது வெட்டப்பட்டுப்போனாலும் நீங்கள் பின் வாங்கிக்கொள்வீர்களா? எவன் பின்வாங்குவானோ அவனால் அல்லாவுக்கு ஒரு விதத்திலும் தீங்குசெய்யமுடியாது. அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துபவர்களுக்கு அவன் நற்கூலி கொடுப்பான்" என்னும் திருவாக்கியத்தை ஓதிக் காண்பித்தார்கள். அதற்குப் பிறகுதான் பெருமானார் (ஸல்.) அவர்கள் விஷயத்தை ஜனங்கள் தெரிந்துகொண்டனர்.

பின்னர் குளிப்பாட்டியபின் துணிகொண்டு மூடி இரவு முழுதும் அப்படியே வைத்துவிட்டார்கள். மறுநாள் ஜனங்களெல்லோரும் பள்ளிவாசலில் வந்து கூட ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் உமர் (ரலி) இவ்விருவரும் அக்கூட்டத்தின் மத்தியில்வந்து நின்றார்கள். அதுபொழுது ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் அக் கூட்டத்தை நோக்கி மகாஜனங்களே! நேற்றய தினத்தில் நான் உங்களிடம் சொன்ன வார்த்தைகள் உண்மையல்ல; நிச்சயமாக அல்லாஹ்வின் வேதமானது உண்மையானதும் எல்லோரும் உறுதிகொண்டு பின்பற்றக் கூடியதுமாகும். அதன்படி நாமெல்லோரும் மரணத்தின் சுவையை அனுபவிக்க வேண்டிவர்களாயிருக்கிறோம். என் மனதிலுள்ள நிலைமையை நீங்கள் தெரிந்துகொள்ள நாடுவீர்களாகில் இதோ சொல்லிவிடுகிறேன். பெருமானார் (ஸல்.) அவர்களின் இன்பமொழிகள் என்காதில் விழுந்துகொண்டிருக்கவேண்டுமென்றும், அவர்கள் எனக்குப் பக்கத்திலிருப்பதை நான் பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமென்றும் எனக்கு விருப்பமிருக்கிறது. ஆனால் அதற்கு அல்லாஹ்வின் சம்மதமில்லாதிருப்பதால் அவன் தன் நேசரை தன்னிடம் அழைத்துக்கொண்டான். அவனுடைய வேதமோ நம்மிடமிருப்பதால் நாம் அதனையே இதுபொழுது வழிகாட்டியாக்கிக்கொள்ளவேண்டும்; அதை விட்டு நாம் ஒருபொழுதும் வழிதவறி நடக்கலாகாது. இனி உங்களுடைய காரியங்களை நிருவகிப்பதற்காக நம் மெல்லோரிலும் மேலான ஒருவரை அல்லாஹ் தஆலா நமக்குக் கொடுத்திருக்கிறான். அவர்கள் நபி பெருமானார் (ஸல்.) அவர்களின் தோழர். தொழுகையில் அவர்களுக்குப் பிரதிநிதியாக ஏற்பட்டுள்ளவர். திருக்குர்ஆனிலும் அல்லாகுஹ்தஆலா அவரை சிலாக்கித்துக் கூறியிருக்கின்றான். ஆகவே யாவரும் எழுந்து அவருடைய கையில் 'பைஅத்' அருதிமானஞ் செய்யுங்கள் என்று கூறினார்கள். உடனே அங்கிருந்தோர் யாவரும் கூட்டங் கூட்டமாக எழுந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி.) அவர்களிடஞ்சென்று ஒருவர் பின்னொருவராய் விசுவாசப் பிரமாணஞ் செய்தார்கள்.

எல்லோராலும் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்கள் எழுந்துநின்று அக்கூட்டத்தினரை நோக்கி, ஜனங்களே! யான் உங்களைவிட மேலானவனல்லாது போயினும் உங்களுக்குத் தலைவனாயிருக்கிறேன். ஆகவே, யான் நியாயம் புரிவேனாகில் எனக்கு ஆதரவு புரியுங்கள்; யான் தவறு செய்வேனாகில் அதில் எனக்குக் கீழ்படியாதீர்கள். உங்களில் அனியாயஞ் செய்யப்பட்டபலஹீனன், அல்லாஹ்வின் நாட்டப்படி நான் அவனுடைய பாத்தியதைகளைச் சரிபடுத்திக் கொடுக்கும்வரை என்னுடைய பார்வையில் அவன் பலமுள்ளவனாகவே கருதப்படுவான். உங்களில் பலமுள்ள அனியாயக்காரன் யான் அவன் செய்த அனியாயத்திற்காக அவனுக்கு பதில் தண்டனை கொடுக்கும் வரை என்னிடம் பலஹீனனாகக் கருதப்படுவான். மகாஜனங்களே! ஒருவன் ஆண்டவனுடைய வழியில் சண்டை செய்வதற்காகப் புறப்படுவானாகில் அல்லாஹ்தஆலா அவனுடையகண்ணியத்தை அதிகப்படுத்துகிறான். தீமையைச் செய்வதனால் ஒரு சமுகத்தார் விர்த்தியடைய முடியாது. தீமை அதிகரிக்கின்ற ஒரு சமுகத்தாரை ஆண்டவன் நாசமாக்கி விடுவான். யான் அல்லாவுக்கும் அவனது ரசூலுக்கும் கீழ்படிந்து நடக்கும்வரை நீங்கள் எனக்குக் கீழ்படியுங்கள். என்னுடைய கட்டளைகள் அல்லாவுடையவும் அவரது ரசூலுடையவும் கட்டளைக்கு மாற்றமாயிருந்தால் நீங்கள் எனக்குகீழ்படியவேண்டியதில்லை. உங்களெல்லோருக்கும் அல்லாஹ்த ஆலா கிருபை புரிவானாக என்று கூறி முடித்தார்கள்.

பின்னர் அடக்கம் செய்யப்படவேண்டிய இட விஷயமாய்ப்பலவாறான அபிப்பிராயங்கள்

கூறப்பட்டு கடைசியாக ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்கள் அறிவித்தற்கேற்ப தங்கள் இன்னுயிர் எந்த இடத்தில் பிரிந்ததோ அதாவது, ஹஸ்ரத் பீபி ஆயிஷா (ரலி) அவர்கள் இல்லத்திலேயே அடக்கஞ் செய்யப்பட்டது. அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின்வ அலா ஆலி செய்யிதின முஹம்மதின்வ பாரிக்வ ஸல்லிம் அலைஹி.

நபித்துவம் பூர்த்தியாகி விட்டது

யூத, கிறிஸ்தவப்பாதிரிகளின் ஆக்ஷேபனைகளுக்கு பதில் கூறியபெரியார்கள்

(மௌலானா ஸெய்யிது அப்துர் ரஷீது திஹ்லவி எழுதுவது.)

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜீவிய காலத்திலேயே அவர்களின் இஸ்லாமிய இயக்கம் பூரணமாக வெற்றியடைந்து விட்டது. நாயகமவர்களின் முன்னிலையிலேயே அவர்களின் கம்பீரமும் நிலைநிறுத்தப்பட்டு விட்டது. இந்தப் பேறு நாயகமவர்களுக்கு மாத்திரம் விசேஷித்த பெருமை யாகும்.

நாயகமவர்கள்பாலுள்ள நல்ல எண்ணத்தால் முஸ்லிம்கள் இதைக் கூறவில்லை. முஸ்லிம்களாலும் முஸ்லிமல்லாதார்களாலும் மறுக்க முடியாத உண்மையான உலகச்சரித்திரம் இதை ஒப்புக் கொண்டிருக்கிறது. நாயகமவர்களின் இவ் வெற்றியானது, திருக் குர்ஆனில் தங்களின் உண்மைத்தத்துவத்துக்கு அறிகுறியாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதாவது "நாயகமவர்கள் அல்லாஹு தஆலாவின் நபியாக இருக்கவில்லையாயின் அவர்களுக்கு இப்பெரும் வெற்றி ஏற்பட்டிருக்கமாட்டாது" என்று இறைவன் கூறியுள்ளான்.

தாங்கள், அல்லாஹு தஆலாவின் கடைசி நபியாக இருக்கிறார்கள் என்பதற்கு நாயகமவர்கள் காட்டிய ஆதாரம் ஒவ்வொருவருக்கும் நன்கு விளங்கக் கூடியதாகவும் புலப்படக் கூடியதாகவுமிருப்பதால், அதைத் தெரிந்து கொள்வதில் எவ்விதச் சிரமமுமில்லை.

ஆனால் நமது காலத்தில் தங்களை நபியெனக் கருதி அதை தாவாச்செய்த இருவர் தோன்றினர். அவர்களில் ஒருவர் பாரசீக தேசத்துக்காரர். அவருடைய பெயர் 'பஹாவுல்லா' என்பதாகும். மற்றொருவர் இந்தியாவில் தோன்றினார். அவரது பெயர் மிர்ஜா குலாம் அஹ்மது காதியானி என்பதாகும். நமது நாயகம் (ஸல்.) அவர்கள் வெற்றி பெற்ற நபியாக இருந்தது போலவே, நாங்களும் வெற்றியுள்ள நபியாக இருக்கிறோம் என்று அவ்விருவரும் வாது செய்தனர்.

இவ்விருவரிலும் பஹாவுல்லா முந்தியவர். குலாம் அஹ்மது பிந்தியவர். முந்தியவர் செய்த தவறுகளையும், அதனாலேற்பட்ட பலன்களையும் பார்த்து இரண்டாமவர் அவைகளை விட்டுத் தப்பித்துக்கொள்ள முயற்சி எடுத்துக் கொண்டார். பஹாவுல்லா தனக்குத் தனி நபித்துவமும், ஷரீஅத்தும் இருப்பதாகத் தாவாச் செய்தார். திருக்குர்ஆனும், அதைக் கொண்டு வந்த நாயகமவர்களும் (நஊதுபில்லாஹி மின்ஹா) மன்ஸூகாகி விட்டனர். அதாவது மாற்றப்பட்டு விட்டனர். ஆதலின், இஸ்லாத்துக்கு பதிலாக இறுதி மதமும் அந்த மதத்துக்குரிய வேதமாகிய "அல்பயான்" என்ற கிரந்தமும் இருக்கிறது என்று கூறிவந்தார். ஆனால், மிர்ஜாகுலாம் அஹ்மதுக்கு இவ்வளவு பெரும் சுமையை எடுத்துக் கொள்ள ஆற்றலில்லை. இந்திய முஸ்லிம்களின் மார்க்க பக்தியைக் கவனித்தும் தன்னைப் பின்பற்றுகிற தமது சிஷ்யர்களின் மனப்பான்மையையும் எப்பொழுதும் கவனித்து அதற்குத் தகுந்தவாறு நடப்பவராக இருந்தார். ஆதலால், தனி ஷரீஅத்துடையவராக இருப்பதாகவும், திருக்குர்ஆனை மாற்றுபவராக இருப்பதாகவும் கூறுவதை நிறுத்திவைத்துக்கொண்டு தம்முடைய வேலையைச் சிறுகச் சிறுகச் செய்பவரானார்.

இதனால், ஆரம்பத்தில் தம்மை இஸ்லாமிய ஊழியர் என்றும், முஜத்திது என்றும், தாவாச் செய்து, தமது சிஷ்யர்களுக்குத் தம்பால்

இருக்கிற பக்தியைக் கவனித்து ஒவ்வொருபடியாக ஏற ஆரம்பித்து, நபியென்றும், றஸூல் என்றும் கூறியது மாத்திரமில்லாமல் இப்னுல்லாஹ் (அல்லாஹ்வின் குமாரன்) என்றும், அபுல்லாஹ் (அல்லாஹ்வின் தந்தை) என்றும் தாவாச்செய்தார். "நீ என்னில் நின்றுமிருக்கிறீர்; நான் உன்னில் நின்றுமிருக்கிறேன், என்று அல்லாஹ் என்னிடம் கூறினன் ஆதலால், இந்த ஆஜிஸை இப்னுல்லா என்றும் அபுல்லா என்றும் சொல்லமுடியும்" என்று மிர்ஜா கூறி இருக்கிறார்.

பஹாவுல்லாஹ்வைப் போல், அல்பயான் என்ற கிரந்தம்மாதிரி ஒரு கிரந்தத்தை எழுதி இந்தக் கிரந்தம் குர்ஆனுக்குப் பதிலாகவுள்ளது என்று மிர்ஜா கூறவில்லை. இதற்குக் காரணம் என்னவென்றால், பஹாவுல்லாஹ்வுக்கு இருந்த அறபிப் பாஷா ஞானம், புலவத்தன்மை ஆகியவைகளின் முன்னிலையில் மிர்ஜாவின் அறபிஞானம் ஒரு திரணமாக இருந்தது. ஆதலால், மிர்ஜா தனிக் குர்ஆன் ஒன்றைச் சமர்ப்பிக்க இயலாதவராக இருந்தார். ஆனால், இவ்விருவருடைய தாவாக்கள் ஒன்றுபோலவே இருக்கின்றன. இதில் எவ்வித வித்தியாசமுங் கிடையாது. ஒருவர் 'நாஸிகுல்குர்ஆன்' அதாவது குர்ஆனை மாற்றுபவர் என்று கூறினர். மற்றொருவர் "என்னை மறுத்தவருக்கு முக்தி இல்லை" என்று கூறினர். இவ்வாறு கூறித் தம்மை அங்கிகரிக்காத முஸ்லிம்கள் யாவருக்கும் முக்தி இல்லை என்று கூறியதுமட்டுமா? அவரைப் பின்பற்றியவர்கள் முஸ்லிம்களுக்குப் பின்னால் நின்று ஜமாஅத்தாகத் தொழவும்மாட்டார்கள்; முஸ்லிம்களின் ஜனஸாத் தொழுகையிலும் சேரமாட்டார்கள்; முஸ்லிம்களின் குழந்தைகள் மரித்துவிட்டாலும் அந்த ஜனஸாத் தொழுகையிலும் சேர்ந்துகொள்ள மாட்டார்கள்.

இப்பொழுது காதியானி மதத்தில் இரு கக்ஷிகள் ஏற்பட்டுவிட்டன. ஒரு கக்ஷியார் ஏனைய முஸ்லிம்களுடன் சேர்ந்து தங்களுடைய வேலையை நடத்துவது போல் பாசாங்கு காட்டுகிறார்களாதலின் முஸ்லிம் சமஸ்தானதிபதிகளும், முஸ்லிம் பொதுஜனங்களும் அவர்களுக்குச் சந்தாக் கொடுக்கிறார்கள். இன்னோர் ஏனைய முஸ்லிம்களின் முன்னிலையில் மிர்ஜாவை முஜத்தித் என்றுமட்டும் தான் கூறுகின்றனர். மிர்ஜாகுலாம் அஹ்மது தமது சிஷ்யர்களைத்தம் வலையில் சிக்கவைப்பதற்காகத் தமது ஆரம்பக் காலத்தில் கூறி வந்த வார்த்தைகளை அதாவது, "நான் குலாம் அஹ்மதாகத் தானிருக்கிறேன். முஹம்மது முஸ்த்தபா (ஸல்.) அவர்கள் தாம் என்னுடைய இமாமாகவும் எஜமானராகவும் இருக்கிறார்கள்" என்னும் வாக்கியங்களை ஆதாரம் காட்டுகிறார். ஆனால், தனது கடைசித்தருணத்தில் அவர் கூறிய வார்த்தை களுக்கும் பஹாவுல்லாவின் வார்த்தை களுக்கும் எவ்வித வித்தியாசமுமில்லை என்பது வெள்ளிடை.

மிர்ஜா நாளடைவில் முஜத்திதாக இருந்து பிறகு உம்மத்தி நபியாகி, அதன்பின் தனிப்பட்ட நபியாக மாறி இறுதியாக அவரை ஒப்புக்கொள்ளாதவர்களுக்கு முக்தியில்லை என்றஸ்தானம் வரை உயர்ந்ததாகக் கூறி இருக்கிறார். ஆனால், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களோ மக்கத்துக்காபிர்களுக்கு முன்னால், அறபுநாட்டு விக்கிரகந் தொழும்பர்களுக்கு முன்னால், தன்னந்தனியே நின்று தங்களுடைய பிரசாரத்தின் முதலாவது தினத்திலேயே தங்களுடைய முழுத்தாவாவையும் கூறி விட்டார்கள். அதாவது அல்லாஹ் ஒருவன். நான் அவனுடைய தூதன். நீங்கள் வணங்குகிறகற்கள் வணங்கப்படத்தகாதவைகள். அவைகள் உங்களுக்கு லாபத்தையோ நஷ்டத்தையோ செய்ய முடியாதவைகள். விக்கிரகங்களை வணங்குபவர்களும், அந்த விக்கிரகங்களும் நரகத்தின் விறகுகளாக இருக்கின்றன என்று கூறினார்கள். இது போலவே, முந்திய நபிமார்களின் சரித்திரத்தைப் பார்ப்போமாகில் தங்களது அறிக்கையின் முதலாவது தினத்திலேயே, தங்கள் தாவாமுழுவதையும் கூறி இருக்கிறார்கள் என்பது நன்கு தெரியவரும். அவர்கள், தங்களது சிஷ்யர்களுக்குத் தங்கள் மீதிருக்கிற பக்தியைக் கவனித்துத் தங்களது தாவாக்களைக் கொஞ்சங் கொஞ்சமாகக்கூறவில்லை.

பஹாயி மத்ஹபுக்காரரும் இவ்விதமாகவே கொஞ்சங் கொஞ்சமாகத் தமது தாவாக்களைக் கூறினர். இப்பொழுது இந்த மத்ஹபுக்காரர்கள் மிர்ஜாவைப்பற்றி "அவர் எங்களது தாவாக்களைத் திருடிக்கொண்டார்; அவர் கூறியவைகளெல்லாம் தாம் சுயமே அவர் கூறியவைகளல்ல. எங்களது தாவாக்களை அப்படியே அவர் திரும்பக்கூறி இருக்கிறார்" என்று அறிவிக்கிறார்கள். ஒரு முறை டில்லியிலுள்ள மௌலவீ அப்துல் ஹக்கு ஹக்கானீ மர்ஹூம் அவர்களது வீட்டில் பஹாயீ மத்ஹபுப்பிரசாரகருக்கும், காதியானி மஹ்.

மூதின் பிரசாரகருக்கும் ஒரு தர்க்கம் நடந்தது. மௌலானா மௌலவீ அப்துல் ஹக் ஹக்கானீ அவர்களையே தங்களது தர்க்கத்துக்கு பஞ்சாயத்துக் காரராக அவர்கள் தெரிந்தெடுத்துக் கொண்டார்கள் என்பது என் ஞாபகம். மிர்ஜாஜி கூறிய தாவாக்களெல்லாம், ஹஜ்ரத் மஸீஹ் அலைஹிஸ்ஸலாமவர்கள் மரித்து விட்டார்கள்; மஹ்தீயும் மஸீஹும் ஒரே மனிதர்தான்; வேறு மனிதர்களல்ல; யாஜூஜு மாஜூஜு என்பது இவ்வுலகத்தை இப்பொழுது ஆட்சி புரிந்து வருகிற அரசாங்க வர்க்கத்தார்தாம்; தஜ்ஜாலுடைய கழுதை ரயில் வண்டிதான்; தஜ்ஜால் என்பது பாதிரிமார் வகையறுக்கள் என்பதுதாம். ஆனால் பாரசீகதேசத்தில் பிறந்த பஹாஉல்லா இவருக்கு முன்னதாகவே இந்த விஷயங்களைக் கூறி இருக்கிறார் என்பது பஹாயி மதப்பிரசாரகரின் தாவாவாக இருந்தது. இந்த தாவாவுக்குத் தக்க பதில் கூற மிர்ஜாவின் பிரசாரகருக்கு இயலவில்லை. விவாத முறையிலும், பஹாயி மதப்பிரசாரகர் சாந்தமாகவும், பொறுமையாகவும், அடக்கமாகவும், மரியாதையாகவும் நடந்து கொண்டார். ஆனால் மிர்ஜாயி பார்ட்டிக்காரர் கடுகடுப்பாகவும், வெடுவெடுப்பாகவும், கோபமாகவும், அடக்க மில்லாமலும் நடந்து கொண்டார். வேடிக்கை பார்க்க வந்தவர்களில் பெரும்பாலார் இரண்டு கக்ஷியிலும் சேராதவர்கள்; பஹாயி மதமும், மிர்ஜாயி மதமும் அவர்களுக்குச் சமமாகத்தானிருந்தது. அவர்களுக்கெல்லாம் இவர்களின் தர்க்கம் நல்ல விருந்தாகஇருந்தது. கடைசியாகமௌலவீ ஹக்கானி மர்ஹூம் அவர்கள் தமதுஜட்ஜ்மென்டில் “பஹாயி பிரசாரகர் தமது தாவாவைஸ்தாப்பித்து விட்டார்” என்று தீர்ப்புக் கூறினர். இதனால்தான் பஹாயி இயக்கத்தினரைக் காதியானிகள் தங்களது கூட்டத்துக்குள் நுழையவிடுவதில்லை.

பஹாயி இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் மிர்ஜாவின் பிறப்பிடமான காதியானில் சென்று மிர்ஜாகுலாம் அஹ்மதின் சிஷ்யர்களிற் பலரை பஹாயி இயக்கத்தில் சேர்த்துவிட்டார். ஒரு முறை காதியானி இயக்கத்துக்கே இந்த பஹாயிப்பிரசாரகரால் ஆட்டம் ஏற்பட்டுவிட்டது. உடனே, அந்த பஹாயியைக் காதியானி மதத்தார் கொடுமைசெய்து நிர்ப்பந்தப்படுத்தி காதியானி கிராமத்தை விட்டு வெளியேற்றி விட்டனர். அன்று முதல் காதியானி மதத்தார் எவ்விதத்தாலும் “பஹாயி இயக்கத்தாரிடம் கூட்டுறவு வைத்துக் கொள்ளலாகாது என்று அஹ்மதீ ஜமாஅத்தாரின் தலைவர் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்து விட்டார். அத்துடன் அவ்வாறு சேரவிடாமற் காப்பாற்றுவதற்கான தகுந்த முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டுவருகின்றன.

இவ்விருவர்களுடையவும் சிஷ்யர்கள் இம் மாதிரியான தர்க்கம்செய்து கொள்வதைப் பார்க்கினும், இவ்விருவரில் பொய்யர் யார்? மெய்யர் யார்? முதல் முதலாக இவ் வியக்கத்தை உற்பத்தி செய்தவர் யார்? இமிடேஷன் யார்? என்ற விஷயத்தை முடிவு செய்திருந்தால் மிகவும் நேர்மையாக இருந்திருக்கும். இவ்வித முடிவு செய்தால் இரு கக்ஷியில் ஒரு கக்ஷி ஒழிந்துபோம். மற்றொரு கக்ஷிமாத்திரம் உறுதிப்படும். அப்பொழுது இவர்கள் ஏனைய மக்களையும் தங்களது கக்ஷியில் சேர்ந்துகொள்ளும்படி தூண்டலாம்.

ஆனால் காதியானிகள் சம்பந்தப்பட்ட வரையில், தங்களது எல்லைக்குள் பஹாயி மதப்பிரசாரகர்கள் வருவதைச் சகித்துக் கொள்ளவோ, மேலே கூறியபடி திடமான முடிவுசெய்து கொள்ளவோ காதியானிகள் சம்மதிக்க மாட்டார்கள். பஹாயீ மதக்காரர் இந்தியாவில் மிகவும் சொற்பமாக இருப்பதால் காதியான் ஊரில் சென்று தங்களது பிரசாரத்தைப் பகிரங்கமாகச் செய்ய அவர்களுக்கும் தைரியங் கிடையாது.

காதியானிகளுடையவும், பஹாயிகளுடையவும் மதக்கிரந்தங்களை யான்படித்துப் பார்த்ததிலிருந்து மிர்ஜாகுலாம் அஹ்மது, பஹாயி மதக் கிரந்தங்களிலிருந்து தமக்கு வேண்டிய விஷயங்களை எடுத்துக்கொண்டிருக்கிறார் என்ற முடிவுக்கே யான் வந்திருக்கிறேன். பஹாயீ மத்ஹபின் நிலைமையோ வென்றால், உலகத்திலுள்ள பல இயக்கங்களிலிருந்தும் கொஞ்சங் கொஞ்சம் திருடி எடுத்து ஒன்று சேர்த்ததாக இருக்கிறது. ஹஜ்ரத் முஹிய்யித்தீன் இப்னு அறபி (றஹ்.) அவர்களிடமிருந்து சில விஷயங்களையும், புத்தமதத்திலிருந்து சில விஷயங்களையும், கிறிஸ்து மதத்திலிருந்து பல விஷயங்களையும், பௌதீக வாதிகளின் ஒழுக்க முறைகளிலிருந்து சில விஷயங்களையும், ஹிந்து வேதாகமங்களிலிருந்து பல விஷயங்களையும் மிஸ்டர் பஹாவுல்லாஹ் ஒன்று சேர்த்திருக்கிறார். சுருங்கக் கூறுமிடத்து, உலகத்தி

னுள்ள மதங்களில் நகைப்புக்கிடமான விஷயங்களாகக் காணப்படுவனவற்றை எல்லாம் ஒன்று கூட்டிக் கலந்து வைத்திருக்கிறார் என்று கூறிவிடலாம். தவிரவும், ஒருவர் தம்முடைய மதத்தில் இருந்துகொண்டே அதாவது கிறிஸ்தவர் கிறிஸ்தவராகவும் மற்ற மதக்காரர் அந்தந்த மதக்காரராகவும் இருந்துகொண்டு தத்தம் மத ஆச்சாரப்படி நடந்துகொண்டும் பஹாயி மதத்தில் இருக்கலாம். அதாவது, தன்னை பஹாயி மதத்தைச் சேர்ந்தவர் என்றுமட்டும் சொல்லிவிட்டுத் தம்முடைய மதமாற்றம் தம்மைச் சேர்ந்தவருக்குத் தெரியாமலிருப்பதற்காக வழக்கம்போலுள்ள தம்முடைய பழைய மத ஆசாரத்தின் பேரிலேயே இருந்து கொள்ளலாம்.

காதியானிகள் தங்களது மதத்திட்டத்தை தாங்களே ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதன்படி ஒவ்வொரு காதியானியும் தன்னுடைய வருவாயில் நூற்றுக்குப் பத்துவிழுக்காடு அவ்வியக்கத்துக்குக் கொடுத்துவிடவேண்டும். இவ்வாறுகண்டிப்பாகவும், தாராளமாகவும் அந்த இயக்கங்களின் சட்டங்கள் இருந்துங்கூடக் காதியானிகள் இன்னும் தடுமாற்றத்தில்தானிருக்கிறார்கள். பஹாயிகள் சில லக்ஷம்பேர்களைத் தவிர அதிகமாக இல்லை. இதுதான் இதுவரை இவர்கள் அடைந்த வெற்றி. இதைத்தான் இவர்கள் "நாங்கள் வெற்றியடைந்தவர்கள்" என்று கூறிக்கொள்கின்றனர். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் வெற்றியின் முன்னிலையில் தங்களுடைய வெற்றியை ஒப்பிட்டுக் கூறுவதில் இவர்களுக்கு வெட்கமோ நாணமோ இருப்பதில்லை.

நாங்கள் கிறிஸ்தவர்களைத் தோற்கடித்து விட்டோம்; தஜ்ஜாலின் கழுதை என்பது புகைவண்டி, தஜ்ஜால் என்பது கிறிஸ்தவப் பாதிரி, யாஜூஜு மாஜூஜு என்பது உலகத்திலுள்ள இன்னின்ன தேசத்தவர், என்றெல்லாம் கூறுவது காதியானிகளுக்கோ பஹாயிகளுக்கோ அழகானதாயில்லை. இவ்விருவரும் கிறிஸ்தவக்கண்டனம் என்ற தாவாவில் இருமாந்துபோயிருக்கின்றனர். கிறிஸ்தவக் கண்டனம் செய்து வெற்றிபெற்ற பெருமையானது, தங்களுடைய பெயர்களை வெளிக்குக் காட்டாமலும், கியாதியை விரும்பாமலும், அமைதியாகத் தங்களது இல்லங்களில் வசித்து வந்த அடியிற்கண்ட உலமாக்களுக்கே அந்தப் பெருமை உரியதாகும். இதில் மிர்ஜா குலாம் அஹ்மதுக்கோ அல்லது பஹாவுல்லாவுக்கோ எவ்விதப் பங்குமில்லை.

1854–ம் வருஷத்தில் டில்லிமாநகரில் ஏற்பட்ட சிப்பாய் கலகத்துக்கு முதன் இங்கிலாந்திலிருந்து 'பண்டர்' என்ற ஒரு பாதிரி "இந்தியாவில் இஸ்லாத்தை ஒழித்து விடுவேன்" என்று மார் தட்டிக்கொண்டு வந்தார். இவர்தமது வாணாள் முழுவதையும் இஸ்லாமிய கிரந்தங்களைப் படிப்பதிலேயே செலவு செய்தவர். எனவே, முஸ்லிம்களை எதிர்ப்பதற்காக புதுமாதிரியான முறையுடன் இங்கிலாந்திலிருந்து புறப்பட்டார்.

அக்காலத்தில் நமது பெரியார்களில் ஹஜ்ரத் ஷாஹ்அப்துல் அஜீஸ்சாகிப் முஹத்திது திஹ்லவி (றஹ்.) அவர்களைத் தவிர வேறு யாரும் தௌராத் இஞ்சீல் ஆகிய வேதங்களைக் கற்றுத் தெரிந்தவராகக் காணப்படவில்லை. இப்பெரியார் ஒருவர் தான் இஸ்லாம் மதத்துடன் யூத கிறிஸ்தவ மதங்களையும் படித்துத்தெரிந்துகொண்டிருந்தார்கள். முஸ்லிம்களுக்கிருந்த ராஜியாதிகாரம்நீங்கி மேனாட்டினருக்கு ராஜீய பாரம் ஏற்பட்டபின் கிரிஸ்தவப் பாதிரிமார்கள் இஸ்லாத்தின்மீது செய்துவரும் இந்தத் தாக்குதலை நமது உலமாக்கள் எதிர்த்துத் தகர்க்கத் தயாராக இருக்கவில்லை. ஆகவே, இந்தியாவில் முஸ்லிம்களுக்கு இக் கிறிஸ்தவ பாதிரிகளால் பெரிய ஆபத்தான நிலைமை ஏற்பட்டிருந்தது. ஆனால், எல்லாம்வல்ல இறைவன் தனது மத ஊழியத்துக்கென ஒரு அடியாரை உற்பத்தி செய்தான். அப்பெரியார் ஐக்கிய மாகாணங்களிலுள்ள முஜப்பர் நகர் ஜில்லாவைச் சேர்ந்த கிரானா என்ற ஊரில் பிறந்தவர். அவரது பெயர் ஹஜ்றத் மௌலவீ றஹ்மத்துல்லாஹ் சாகிப் முஹாஜிர்மக்கீ என்பதாகும். (இப்பெரியார்மக்காவிலுள்ள 'சௌலத்திய்யா' மத்ரஸாவை ஸ்தாபிப்பதற்குக் காரணகர்த்தராகவும் அதன் பிரின்சிபாலாகவும், ஹறமைனிஷ்ஷரீபைனியின்ஷெய்காகவும் இருந்தார்கள். இராயவேலூர் மத்ரஸயே பாக்கியாத் ஸாலிஹாத்தின் ஸ்தாபகரான ஷம்சுல்உலமா அஃலா ஹஜ்றத் ஷாஹ் அப்துல்வஹ்ஹாப் சாகிப் காதிரி குத்திஸ ஸிர்ருஹு அவர்களின் உஸ்தாதாகவும் இருந்தார்கள்.) இப்பெரியார் கிறிஸ்தவப் பாதிரிகளின் கூட்டத்தையும் பாதிரி பண்டரின் மதப்போரையும் தகர்த்துவிட்டார்கள். இதனால், லக்ஷக்

கணக்கான முஸ்லிம்கள் இஸ்லாத்தைவிட்டு கிறிஸ்தவர்களாகி முர்தத்துகளாகி விடுவதைத் தடுத்துவிட்டார்கள்.

முஸ்லிம்களின் வேதாந்த சாஸ்திரத்தில் "ரத்துன்நஸாரா" என்ற புதிய பிரிவும் ஏற்பட்டது. அவைகள் இப்பெரியாருடையவும், இப்பெரியாரைச் சேர்ந்த முஜாஹிதுகளினுடையவும் ஞாபகார்த்தமாக இன்னும் இருந்துவருகிறது. இதற்குப் பின்னர், இப்பிரிவில் பாண்டித்தியம் பெற்ற அநேகப் பெரியார்கள் இந்தியாவில் ஜனித்தார்கள். வேதக்காரர்களுடன் தர்க்கம் செய்வதில் இமாம் என்று பெயர் வாங்கியவரான மௌலவீ ஸெய்யது அபுல்மன்சூர் சாகிப்திஹ்லவீ (ரஹ்), தேவ்பந்திலுள்ள அறபிமத்ரஸாவின் ஸ்தாபகரான மௌலானா முஹம்மது காஸிம் நானூத்தவீ (றலி.) ஆகியவர்கள் ஆரியர்களையும் கிறிஸ்தவர்களையும் எதிர்த்து மதத் தர்க்கம் புரிந்து அடக்குவதில் நிகரற்றவர்களாக ஆயினர். ஆரியசமாஜத்தின் அஸ்திவாரக்காரரான சுவாமி தயானந்த சரஸ்வதி கக்கிய விஷங்களை அழித்தொழித்தவர் இந்தப் பெரியாராகும். "அல்லாஹ்வை அறிதல்" என்பதுபற்றி விவாதிப்பதற்காக கிறிஸ்தவர்கள், ஆரிர்யகள், முஸ்லிம்கள் ஆகியோர் ஷாஹ்ஜஹான்பூரில் கூடிய ஸர்வமதக் கான்பரன்ஸில் பல தடவைகளிலும் இஸ்லாத்தின் வெற்றிக் கொடியை நாட்டினர். இஸ்லாத்தின் கம்பீரம் பலமுறைகளிலும் முஸ்லிம், முஸ்லிமல்லாதார் ஆகியவர்களுக் கிடையில் நிலைநாட்டப்பட்டது. சுவர்க்கம் நரகத்தைப் பரிகசிக்கும் முறையில் அச்கான்பரன்ஸில் தயானந்த சரஸ்வதி நிராகரித்த போது தமது பாட்டனரான ஹஜ்றத் அமீருல் முமினின் ஸெய்யிதுனா உமர் பாறூக் (றலி) அவர்களின் ஜலாலிபத்தின் மேலீட்டால் எழுந்து நின்றுகொண்டு சுவாமி தயானந்தரிடம் "சுவர்க்கம் நரகம் ஆகியவைகளை நிராகரிப்பவர்களுக்கு அந்த க்ஷணமே அவைகளைப் பிரத்யக்ஷமாகக் காண்பிக்கக்கூடிய அடியார்கள் இஸ்லாம் மதத்தில் இன்னமும் இருந்துவருகிறார்கள்; வருதி, வருதி எனக்குச் சரியாக என்னிடம் வந்து நின்றுகொள்ளும். நீர் மறுக்கும் சுவர்க்க நரகங்களை, நீர் அந்தகராக இருந்து பரிகசிக்கும் சுவர்க்க நரகங்களை இப்பொழுதே உமது பூத நேத்திரங்களால் பார்த்துக்கொள்ளும்" என்று அழைத்தார்கள். மௌலானா மர்ஹூம் அவர்களின் இக்கம்பீரமான வார்த்தைகளைக் கேட்ட தயானந்தர் நடுநடுங்கியதுடன் சுவர்க்க நரகங்களை பூதக்கண்ணால் கண்டுகொள்ளத் தைரியமாக முன்வரவில்லை. இப்பெரியார் அவர்களின் பக்தி விசுவாசத்தைக் கவனியுங்கள்: இரவுகாலங்களில், நித்திரையை நீக்கி இறைவனை வணங்குவதிலும், தமது ஞானசிரியரான மௌலானா ஹாஜி இம்தாதுல்லாஹ் சாகிப் (றஹ்) அவர்கள் கூறிய முறைப்படி அகத்தூய்மையிலும் மனத்துறவிலும் ஈடுபட்டிருந்தார்கள். பகல் காலங்களில் தம்முடைய ஜீவனோபாயத்துக்காக முஜ்தபாயி பிரஸில் மத சம்பந்தமான நூல்களைப் பரிசீலனை செய்து சீர்திருத்தும் பணியில் ஈடுபட்டு மாதம் 5 ரூபாய் சம்பளம் பெற்றுக்கொண்டிருந்தார்கள். அதுவும் தினசரி இத்தனைமணி நேரம் தொழுகைக்காகவும், குடும்ப அலுவல்களைக்கவனிப்பதற்காகவு மென்று குறிப்பிட்டு அதனைக் கழித்துக்கொண்டு இத்தனைமணி நேரம் தான் அச்சாபீஸில் வேலை பார்ப்பது. இந்தச்சம்பளத்துக்கு மேல் அதிகமாகக் கேட்பதில்லை, குறைவாகவும் வாங்கமுடியாது என்னும் நிபந்தனையின் பேரிலேயே அந்தப்பணியை ஏற்றுக்கொண்டார்கள்.

ஒருமுறை மௌலானா முஹம்மது காஸிம் (றஹ்.) அவர்களின் பாதரக்ஷை கிழிந்து பழையதாக இருந்ததை முன்ஷி மும்தாஜ் அலிசாகிப் பார்த்து ஒருஜோடி பாதரக்ஷை வாங்கிக்கொண்டு வந்து மௌலானா அவர்களுக்கு இனமாகக் கொடுத்தார்கள். இவ்விதமான உதவிகளை அடைவது எங்களது முறையல்ல என்று கூறி, அதை வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டார்கள். அவ்வாறாயின் சம்பளத்தில் இதன் கிரயத்தைக் கழித்துக்கொள்ளலாம் என்று கூறி அதை அணிந்துகொள்ளுமாறு வேண்டினர், அதற்கு அப்பெரியோர், யாம் கடன்பளுவை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. எனெனின், சம்பளப் பணம் கிடைக்கும் காலம்வரை யான் உயிருடன் ஜீவித்திருப்பேனோ அல்லது இவ்வுலகத்தைவிட்டு சென்றுவிடுவேனோ என்னும் விஷயத்தை யான் அறியவில்லை" என்று பதிற் கூறிவிட்டார்கள்.

இம்மாதிரியான துறவிகள் இஸ்லாத்துக்கு இடைஞ்சல் செய்பவர்களைத் தடைசெய்ய முன்வந்து அதன் கொடியை நிலைநாட்டிவைக்கிறார்கள். இம்மாதிரித் துறவிகள் மூலமாகத் தான் மார்க்கத்தொண்டு நிறைவேறுமேஅன்றி கஸ்த்தூரி குங்குமம் கலந்த லேகியங்களையும்

முத்துப்பஸ்பங்களையும் புசித்து தாதுவிருத்தி செய்வதில் ஈடுபட்டவர்களால்இப்புனிதகாரியம் நிறைவேறப்போவதில்லை. மௌலானா மர்ஹூம் அவர்களைத் தவிர அம்ரோஹாவில் ஒரு பெரியார் ஸூபி அஹ்மது ஹஸன் மௌலவீ என்னும் பெரியாரும் இப்பெருந் தொண்டில் அதிகம் உழைத்திருக்கிறார்கள். மௌலானா அப்துல்ஹக் (தப்ஸிர் ஹக்கானீ எழுதியவர்) மௌல்வீ இனயத் றஸூல் சாகிப் சட்யா கோட்டீ ஆகியவர்களும் இதில் ஒப்பற்ற ஊழியஞ் செய்திருக்கிறார்கள். மௌலவீ இனயத் றஸூல் சாகிப் சட்யாகோட்டீ அவர்கள் தௌராத்துடைய அசல் பாஷையான ஹிப்ரூ பாஷையில் பெரும் பாண்டித்துவம் பெற்ற அறிஞர். காலஞ்சென்ற ஸர் ஸெய்யித் அஹ்மத்கான் இவருடைய உதவியை அடிக்கடி நாடிச் செல்வது வழக்கம். இவருடைய உதவியின்பேரில்தான் அவர் தம்முடைய நூற்களில் சில சிறந்த விஷயங்கள் எழுத நேர்ந்தது. இத்தகைய பெரியார்கள் தாம் இஸ்லாத்துக்கு உண்மையான தொண்டாற்றியவர்கள். பஹாவுல்லாவோ மிர்ஜாகுலாம் அஹ்மதுவோ இவ் வேலைகளைச் செய்யவில்லை.

ஆனால், இப்பொழுதோ மிர்ஜாவின் கூற்றுக்களைப் பிரசித்தப்படுத்த மிர்ஜாயி பார்ட்டியார் பிரசார சபையை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றனர். நம்முடைய உலமாக்களின் அரிய கிரந்தங்களைப் பிரசித்தப்படுத்த தக்க ஸ்தாபன மில்லை. கிறிஸ்தவர்களினுடையவும் ஆரிய சமாஜிகளினுடையவும் பித்னாவை அடக்குவதிற்கு உதவியாக இருந்த நமது அறிஞர்களின் பிரசங்கங்கள் இன்றையதினம் பொது ஜனங்களின் முன்னிலையில் இல்லை. குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தாரைத்தவிர மேனாட்டுக் கல்வி பயின்ற நமது இளவாலிபர்கள் இப் பெரியார்களின் பெயரைக்கூடக் கேள்விப்பட்டிருக்கவில்லை. ஆகவே நமது உலமாக்கள் கிறிஸ்தவர்களையும் ஆரியர்களையும் முற்றிலும் தோற்கடித்து எவ்வாறு வாகைமாலை சூடினார்கள் என்ற அகமியத்தைமுற்றிலும்அன்னோர்அறியாதிருக்கிறார்கள். எனினும், இன்றையதினம் மிர்ஜா குலாம் அஹ்மதுல் காதியானியின் பேச்சுக்கள் எங்கும் பிரஸ்தாபமாக இருக்கிறது. அவ்வியக்கத்தாரின் பிரசாரகர்கள் ஒவ்வொருவரிடமும் அதைச் சேர்ப்பித்துவைப்பதில் முனைந்து நிற்கின்றனர். "மிர்ஜா சாகிப் ஒருவர்தான் கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமிய விரோதிகளுக்கும் தக்க மறுப்பைக் கூறினார்; முஸ்லிம் உலமாக்கள் ஒருவரை ஒருவர் குப்ரு பத்வாக் கொடுப்பதைத் தவிர வேறொன்றும் அறியமாட்டார்கள்" என்று கூக்குறலிட்டு வருகின்றனர்.

அமிர்தசரஸில் மிர்ஸா சாஹிப் அப்துல்லா ஆத்தம் என்ற பாதிரியுடன் மததர்க்கம் செய்த விஷயம் அச்சிடப்பட்டு வெளியாகி இருக்கிறது. அதைப் படித்துப்பார்த்தால் மிர்ஜாவின் 'சமர்த்து' எம்மாத்திரம் என்பது நன்கு விளங்கும். ஆத்தம் பாதிரியை ஜயிக்கமுடியாமல் தமது சிஷ்யர்களின் மனவாற்றுமைக்காக "இது சாமான்யமான மதத் தர்க்கமேயாகும். இம் மாதிரியான தர்க்கத்தை இதரர்களும் செய்ய முடியும்? என்று கூறியதுடன் 18 மாத காலத்துக்குள் ஆத்தம் பாதிரி இஸ்லாத்தைத் தழுவிக்கொள்ளாவிடில் இக் காசியை விட்டேகிவிடுவார், என்று முன்னறிவிப்பும் செய்தார். தள்ளாத வயோதிகராகவும் நரையும் திரையுமாக இருந்த ஆத்தம் பாதிரியார் இவர் குறிப்பிட்ட 18 மாதங்களுக்குப் பின்னும் ஜீவித்திருந்தும் "நான் இன்னும் உயிருடனிருக்கிறேன்; கிறிஸ்தவனாகவுமிருக்கிறேன்" என்று அறிக்கையிட்டார். இதுதான் மிர்ஜாயி பார்ட்டியார் கிறிஸ்தவப் பாதிரிமார்களை ஜெயித்து அடக்கிய விபரம்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் 23 வருஷ காலத்துக்குள் உலகத்தைச் சீர்திருத்தி முன்னேற்றத்தில் கொண்டு வரும் விஷயத்தில் அடைந்த வெற்றியானது இன்றைக்கும் உயிருள்ள அற்புதமாக விளங்குகிறது. படித்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற வர்க்கத்தார் இவ்வுண்மையைக் கவனியாமல் காதியானி, பஹாயி மதத்தைப்பின்பற்றிக்கொண்டு இவ்வுண்மையை, இவ்வகமியத்தை உணராமல் இருப்பதுதான் ஆச்சரியப் படத்தக்க விஷயமாக இருக்கிறது.

இஸ்லாம் மதம் 23 வருஷ காலத்துக்குள் அனாதையான, எழுதப்படிக்காதவரான ஒருவர் உதவியாளர்களில்லாமல் தன்னந்தனியே அல்லாஹு தஆலாவின் உதவியால் உலகத்திலேயே மிகமிகக் கொடூரமானவர்களாகவும் அடங்காதவர்களாகவும், சீர்திருத்தவே தகுதியற்றவர்களாகவுமுள்ள ஜனங்களிடம் வெற்றியடைந்து முன்னேற்றத்தின் பாட்டையில் அவர்களை அழைத்துச் சென்றதும், பின்னர், காட்டாறைப்போல் பிரவாகம் கொண்டு உலகெல்லாம் பரவி உலகத்தைத் தலைகீழாகப்

பிரட்டியது அல்லாஹ்வின் அற்புதச் சக்தியல்லாது வேறென்னென்றிபம்ப முடியும். இது நமது நாயகமவர்களின் ஒப்பற்ற முஃஜிஸாவாக இருக்கிறது. இதை இஸ்லாத்தின் விரோதிகள் கூட ஒப்புக்கொள்ளாமலும் வாய்விட்டுக் கூறாமலும் இருக்கமுடியவில்லை.

இதற்கு முன்னிலையில் சென்ற 50 - 60 வருஷங்களாக முயற்சிசெய்து இப்பொழுது தான் சில ஆயிரம் பேர்களை ஒன்று கூட்டிக் கொண்டு ஒரு ஜமாஅத்து ஏற்படுத்த முடிந்த போலி வேஷதாரிகளின் பொய்கூற்றைச் சீர் தூக்கிப் பாருங்கள்? இவர்கள் உண்மையில் வெற்றியாளர்களா? நாயகமவர்களா? என்பது நன்கு புலனாகும். நாயகமவர்கள், ஆடுகளையும் மாடுகளையும் ஒட்டகங்களையும் மேய்த்துக் கொண்டிருந்தவர்களை சில வருஷங்களுக்குள் உலகாதிபதிகளாக்கிவிட்டார்கள். இதற்கு நிகர் காதியானிலோ அல்லது ஈரானிலோ காண்பிக்க முடியுமா? தூரதிர்ஷ்ட வாதிகளே! கண்மூடித் தனமாக காதியானிகளைப்பின்பற்றுபவர்களே! உங்களுடைய முக்திக்கான வழி பஹா உல்லாவிடத்திலோ மிர்ஜாகுலாம் அஹ்மது விடத்திலோ இல்லை. அவர்களைப்பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ள உங்களுக்கு வெட்கமில்லையா? நாணமில்லையா? மானமில்லையா? நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிச்சுவட்டினைப் பின்பற்றுவதில் தான்உங்களுடைய உண்மையான முக்திக்குரிய மார்க்கம் இருக்கிறது என்பதை உணருங்கள். இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். சத்திய மதத்தைத் தழுவுங்கள்.

ஜெர்மனியில் இஸ்லாமிய பிரசாரம்

சாயம் வெளுத்தது, பொய் ஒருபோதும் மறைபடாது

சென்ற 1923-ம் வருஷம்முதல், ஜெர்மனியின் தலை நகரான பர்லின் மாநகரில் லாகூர் அஹ்மதி அஞ்சுமன்பிரசாரர்கள் இஸ்லாமியப் பிரசாரமென்னும் பெயரால் வேலைசெய்து வருகிறார்கள். அப்பிரசார வேலை அஹ்மதியர்களால் ஆரம்பிக்கப்பட்டு இற்றைக்கு 12 வருஷங்களாகின்றன. ஆனால், இந்த நீண்ட காலத்தில் ஜெர்மன் தேசத்தில் முஸ்லிமல்லாதவர்களில் எத்தனை பேர்களை முஸ்லிம்களாக்கி இருக்கிறார்கள்? அவர்களுக்கு எந்த அளவுக்கு மத விஷயத்தில் உதவி செய்திருக்கிறார்கள்? இதுவரை இந்தப் பிரசாரத்துக்கென எத்தனை ரூபாய்கள் செலவாகி இருக்கின்றன? என்ற விபரங்களை இந்த வியாசம் தெளிவு படுத்துவதாக இருக்கிறது. வாசகநேயர்கள் இவ்வியாசத்தைப் படிப்பதால் அநேக விஷயங்களை உணர்ந்து கொள்வதுடன் லாகூர் அஹ்மதியர்களுக்கு இஸ்லாமியப் பிரசாரத்தின் நிமித்தமாக மார்க்க பக்தியுள்ள முஸ்லிம்கள்கொடுக்கும் பணம் இஸ்லாமிய ஊழியத்துக்கு உதவுகிறதா? அல்லது பாபமான துறையில்செலவாகின்றதா? என்பது நன்கு தெரியவரும்.

இவ்வறிக்கையை விடுத்தவர்கள் ஜெர்மனியில் இஸ்லாமியப் பிரசாரத்துக்கென ஒரு சங்கம் நிறுவி இருக்கிறார்கள். அந்தச் சங்கம், ஜெர்மன் தேசத்தில் சென்று வசித்துவரும் துருக்கர், எகிப்தியர், அறபியர், அப்கானியர், பாரசீகர், இந்தியர் யாவரானும் ஏற்படுத்தப்பட்டதாகும். இதில் கையொப்பமிட்டவர்கள் அந்தச்சங்கத்தின் தலைவரும், நிர்வாக சபையினரும் முக்கிய உத்தியோகஸ்தர்களும் ஜெர்மன் நௌமுஸ்லிம்களுமாவார்கள். இந்த அறிக்கை மேற்படியார்களால் இஸ்லாமிய உலகத்துக்கு வெளியிடப் பட்டிருக்கிறது. எனவே, லாகூர் அஹ்மதியர்கள் மேனாடு சென்று ஐரோப்பியர்களை இஸ்லாத்தில் சேர்த்து வருவதாகவும், தற்சமயம் இஸ்லாமிய உலகத்தில் இஸ்லாமியப் பிரசாரம் செய்வதின் முன்னணியில் இருப்பதாகவும் நினைத்துக் கொண்டிருக்கும் நம்மவர், இதனைப் படித்த பின்னரேனும் விஷயங்களை உணருவார்கள் என்று நம்புகிறோம். இவ்விதமாகவே இவர்கள் இங்கிலாந்தில் புரிவதாக கூறும் பிரசார வேலையின் உண்மையைப்பற்றி காலஞ்சென்ற மிஸ்டர் அப்துல்லாடே என்ற ஆங்கில

நவ்முஸ்லிம் கனவான் 5 வருஷங்களுக்கு முன் இஸ்லாமிய உலகத்துக்கு விடுத்த அறிக்கை ஞாபகமிருக்கலாம். சமீபத்தில் இஸ்லாமிய உலக சுற்றுப் பிரயாணத்தை முன்னிட்டு சீனா, ஜப்பான், மலேயா முதலிய நாடுகளுக்கெல்லாம் சென்றுவந்த ஆங்கில நவ்முஸ்லிம் கனவான் ஜனாப் டாக்டர் காலித் ஷெல்டிரேக் என்பவர் மதராஸில் செய்த பிரசங்கவிபரங்களிலிருந்து இவர்களின் பிரசார இரகசியம் நன்கு தெரியவரலாம்.

ஜெர்மனியில் இஸ்லாமியப் பிரசாரம் செய்வதற்கென்று முதல் முதலாக வந்த அஹ்மதியர் மிஸ்டர் ஸத்ருத்தீன் என்பவராவார். பெர்லினில் மஸ்ஜிது கட்டுவதாகக் கூறிக்கொண்டு இஸ்லாமிய ஷரீஅத்துக்கு முற்றிலும் விரோதமாக அந்த இடத்தைத் தமது சொந்தச் சொத்தாகச் செய்து வைத்தார். இவ்விடத்திலுள்ள (அதாவது பெர்லினுள்ள) போலிஸ் ஆபிஸில் சமீபகாலத்தில் இவர்கள் செய்து வைத்திருக்கும் ஆதரவு இதனை ருஜூப்படுத்துகிறது. அவருக்குப்பின் பஜ்லே கரீம் துர்ரானி என்பவர் அவருடைய ஸ்தானத்துக்கு வந்தார். பர்லினின் மஸ்ஜிதை 16 ஆயிரம் ரூபாய்க்கு அடமானம் வைத்ததுதான் இவர்செய்த "சிறந்த" சேவையாகும். (1928-1929-ம் வருஷத்தைய அஹ்மதியர்களின் ரிப்போர்ட்டு பார்க்க) அந்த மஜ்ஜிதைத் தனியான ஒருவரின் சொத்தாக வைக்காமல் முஸ்லிம்களுக்குப் பொதுவான வக்புச்சொத்தாக வைத்திருந்தால் 16 ஆயிரம் ரூபாய்க்கு அது அடமானம் வைக்கப்பட்டிருக்குமா? அதை மீட்டுவதற்காக முஸ்லிம்கள் 16 ஆயிரம் ரூபாய் நஷ்டம் அடையவேண்டியதேற்பட்டிருக்குமா?

இந்த 16 ஆயிரம் ரூபாயும் எப்படிச் செலவாயிற்று என்பதை பத்திரிகை மூலமாக நாம் பொது ஜனங்களுக்கு அறிவிப்போமாயின், இஸ்லாத்தின்மீது கெட்ட பெயருண்டாகும். இவ்வளவு பெரிய அசம்பாவிதம் நடந்திருந்தும் லாகூர் அஹ்மதிய சங்கத்தார் இதை இரண்டு வரியில் எழுதி முடித்து விட்டது வருந்தத்தக்க விஷயமாகும். அச்சங்கத்தாரின் நாணயத்தை இதொன்றிலிருந்தே நிதானித்துக் கொள்ளுங்கள். துர்ரானி சாகிப் இவ்விடத்தில் இன்ப வாழ்க்கையை நடத்திக்கொண்டு, தன்னுடைய நோக்கத்தை நிறை வேற்றிக் கொண்டு 16 ஆயிரம் ரூபாயைச் சட்டைப் பையில் போட்டுக்கொண்டு ஊருக்குச் சென்றுவிட்டார்.

இவருக்குப் பின்னர் மிஸ்டர் அப்துல்லாஹ் என்பவர் வந்தார். இவர் இஸ்லாமியப் பிரசாரத்துக் கென்று வந்து, டாக்டர் பரீக்ஷைக்குப் படித்தார். ஆனால், முந்தியவர்களைப் பார்க்கினும் அதிக உஷாராகவும், தந்திரசாலியாகவுமிருந்ததால் இந்தியாவிலுள்ள முஸ்லிம்களிடம் பொய்ப்பிரசாரத்தின் மூலம் நூற்றுக் கணக்கானவர்களை இஸ்லாத்தில் சேர்த்ததாகவும், ஜெர்மன் மிஷன் தக்க வேலை செய்வதாகவும் விளம்பரஞ் செய்தார். ஒரு மனிதரால்மாத்திரம் வேலைசெய்ய முடியாத அளவுக்கு அவ்வளவு அதிகமான வேலை நடைபெறுவதாக அறிவித்தார். இவை இவ்விடத்தில் நன்கு சுகவாழ்வு நடாத்தவும், லாகூர் அஹ்மதிய்யா சங்கத்தாரைச் சந்தோஷப்படுத்தவும், இந்திய முஸ்லிம்களை ஏமாற்றவும் செய்யப்படும் முயற்சிகளாகும். இவருடைய அந்தரங்க வாழ்க்கையோ இருள் சூழ்ந்ததாக இருக்கிறது. இதுவிஷயமாயும் ஜெர்மன் முஸ்லிம்கள் இந்தியப் பத்திரிகைகளில் எழுதி இருக்கிறார்கள். அதை இவ்விடத்தில் திரும்பவும் கூறவேண்டியதில்லை. இதைத் திரும்பக்கூறுவது எங்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுப்பதாகவும் இல்லை. எனினும், இவருடைய பொய்ப் பிரசாரத்தை இந்திய முஸ்லிம்களுக்கு அறிவித்துவிடுவதை எங்களது இஸ்லாமியக் கடமையாகக் கருதுகிறோம்.

மிஸ்டர் அப்துல்லாஹ் பர்லினில் வாசஞ்செய்துகொண்டிருந்த காலத்தில் பிரசுரித்த ரிப்போர்ட்டுகளும், இந்தியாவுக்கு எழுதிய கடிதங்களும் பொய்களாலும், தவறான செய்திகளாலும் நிரம்பி இருந்தன. பொய்யும் கூட அவரைப் பார்த்து வெட்கப்படவேண்டியதிருக்கும். ஜெர்மனியில் நௌமுஸ்லிகளின் எண்ணிக்கை இப்பொழுது 100 ஐ கடந்து விட்டது என்று கூறி இருக்கிறார்- (1930-31-வது வருஷத்து ரிப் போர்ட்டைப் பார்க்க). இந்தப் பச்சைப் பொய்யைப்பார்த்து நாங்கள் மிஸ்டர் அப்துல்லாஹ்விடம் பலமாக ஆக்ஷேபனை செய்தோம். முஸ்லிம் அல்லாதாரை இஸ்லாத்தில் சேர்த்துப்பதிவு செய்து வைத்திருக்கிற ரிஜிஸ்டரைக் காண்பியுங்கள், புதிதாக இஸ்லாத்தைத் தழுவியவர்களின் முழுவிலாசங்களையும் காண்பியுங்கள் என்று வற்புறுத்தினோம். நௌமுஸ்லிம்களின் ஜாப்தா எழுதப்பட்ட ரிஜிஸ்டர் புத்தகத்தைப் பார்த்ததில் அதில் 26 பெயர்களே பதிவு செய்யப்பட்டிருந்தனர். அவர்

களில் எழுவர் இப்பொழுதும் முஸ்லிம்களாக இருக்கிறார்களா இல்லையா என்ற விபரம் தெரியவில்லை. இவ்வித நிலைமையில் மஸ்ஜிதில் ஐந்து நேரத்துத் தொழுகைகளும் ஜும்ஆவும் சட்டப்படி நடை பெற்றுவருகின்றன என்று இவர்கள் பறை சாற்றுகின்றனர். (அகில உலக மதப்புரட்சியைச் செய்து வரும் அஹ்மதியா மிஷன் சார்பாக அவர்களுடைய வேலைகளை விளக்கிக் காண்பிப்பதற்காக வெளியிடப்பட்டு வருகின்ற 'பயகாம ஸுல்ஹ்' என்ற பத்திரிகையின் 7-2-1933 திகதி இதழைப் பார்க்கவும்). இதுமட்டுமா முஸ்தபா என்ற பெயருள்ள ஜெர்மன் நௌமுஸ்லிம் ஒருவர் மினாராவின் மீதேறி அதான் (=பாங்கு) சொல்லி வருகிறார் என்றும் எழுதப்பட்டிருக்கிறது. ஐந்து நேரத்துத் தொழுகை நிறைவேற்றப்படுவதாகக் கூறப்படுவது பச்சைப்புளுகு. மிஸ்டர் அப்துல்லாஹ்வைத்தவிர வேறு யாருக்கும் இம்மாதிரி பொய் பேசத்தைரியம் வராது. இம்மாதிரியான பச்சைப் பொய் அப்துல்லாஹ்வுக்குத் தான் அழகாக இருக்கமுடியும். அகில உலக மதப் புரட்சி இயக்கத்தாரால் கட்டப்படுகிற இந்த மஜ்ஜிதின் நீளம் 57089 கெஜம் என்றும், அகலம் 22029 கெஜம் என்றும் வெளியுலகுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது பெரிய மோசடியாகும்; முஸ்லிம் சகோதரர்களை ஏமாற்றும் சூழ்ச்சியாகும். மஸ்ஜிதும் அதைச் சேர்ந்த வீடும் சேர்ந்து மொத்த நீளம் 52 கெஜம், அகம் 30 கெஜம்தான் இருக்கிறது. இதையல்லாமல் நாயக ஜனன விழாவின்போது நாயக சரித்திரம் 5,000 காப்பிகள் அச்சடித்து இலவசமாக வழங்கப்பட்டது என்றும் சொல்லுகிறார்கள். (1929-930-வது வருஷத்து ரிப்போர்ட்டைப் பார்க்க) ஜெர்மனியில் நிறுவப்பட்ட இந்தப்பிரசார சபையில் இன்றுவரை 12 வருஷ காலத்தில், எந்தநாளிலாவது முஸ்லிம்களும் முஸ்லிமல்லாதாரும் சேர்ந்து 100-150 பேருக்கு அதிகமாக ஒன்று கூடியதில்லை. இந்த நாடு கிறிஸ்தவநாடாக இருந்தும் இவ்விடத்திலுள்ள பெரியமாதாகோவிலிலுங்கூட 5000 பேர்கள் ஒன்று கூடுவது மிகவும் அசாத்தியமாகும். இவ்வித நிலைமையில், முஸ்லிம் அல்லாத கனவான்களில் 5,000 பேர்கள் கூடி இருந்தார்கள் என்றால் அதை என்னென்றியம்புவது? ஆனால், ஒவ்வொருவரையும் நூறுநூறு ஆள் என்று பெருக்கிக்கொண்டால் ஒருசமயம் 5,000-க்கு வரலாம். இத்துடன் நிறுத்திக் கொள்ளாமல், வாரந்தோறும் மஸ்ஜிதில் முறைப்படி பிரசங்கம் நடைபெறுகிறது என்றும், இஸ்லாத்தின் விரோதிகளுக்குத் தக்க ஜவாப் சொல்லப்படுகிறது என்றும் எழுதி இருக்கிறார்கள். (1928-829-வது வருஷ ரிப்போர்ட்டைப் பார்க்க) இதுவுமல்லாமல் பெர்லினுள்ள ஜெர்மன் இஷாஅத்து இஸ்லாம்சபையானது அங்குள்ள ஏழை முஸ்லிம்களுக்கு உதவியளிப்பதாகவும், மையத்துகளின் கபன் தபன் செலவுகள் செய்துவருவதாயும் இன்னும் ஒரு பொய் சேர்க்கப்பட்டிருக்கிறது. இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். இவர்களின் பொய்யை ஒவ்வொன்றாகக் கூறவும் கூட எங்களுக்கு வெட்கமாக இருக்கிறது. ஆனால், முஸ்லிம்கள் இன்றுவரை அவர்களிடமிருந்து ஒரு பைசாவும் வாங்கியதுமில்லை; வாங்குவதற்காக அவர்கள் ஆசைப்பட்டதுமில்லை. உண்மையாதெனில், ஒரு முஸ்லிமுக்கு உதவி செய்ய வேண்டியது மிகமிக அவசியமாகவும் அவசரமாகவும் இருந்தது. இப்படிப்பட்டவரை அம்மஸ்ஜிதில் தங்கி இருப்பதற்குக்கூட அப்துல்லா இடங் கொடுக்க மறுத்துவிட்டார். மிஸ்டர் அப்துல்லாஹ்வின் பிரசார வேலையையும் கேளுங்கள். ஈதுப்பெருநாள், இதர நன்னாள்களில் நடக்கும் விசேஷங்களைப்பற்றி பத்திரிகைகள் பரிகசித்து எழுதுவதற்கு எல்லையே இல்லை. "இந்தப் பிரசங்கங்களைக் கேட்பதற்கு இரண்டொரு வுச்சாவைத்தவிர வேறொருவரும் வருவதில்லை. ஆனால், மன விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக வருகிறார்கள்'' என்று ஒரு ஜர்மன் பத்திரிகை எழுதுகிறது.

"தொழுகைக்குப் பின் மஸ்ஜிது காப்பிக் கடையாகி விடுகிறது'' என்று மற்றொரு பத்திரிகை கூறுகிறது. வேறொரு பத்திரிகை கூறுவதாவது :— "அப்துல்லாஹ்வைக் கண்டு பேசுவதற்காக ஒரு சிறுமி என்னை ஒரு அறைக்கு அழைத்து சென்றபோது, அச்சிறுமியை அப்துல்லாஹ் சுட்டிக் காட்டி "பாருங்கள்! எவ்வளவு பிரியமுள்ள காதலி'' என்று என்னிடம் கூறினார்.'' நமூனாவுக்காக இரண்டொன்றைக் கூறினோம். இவ்வாறான அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிற ஜெர்மெனியில் அஹ்மதியப் பிரசாரர்களுக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்குமென்பதை நிதானியுங்கள். இந்த மஸ்ஜிதுக்கு முத்தவல்லியாக இருந்து வருகிற அப்துல்லாஹ்வுக்கு மாத்திரம் மாதம் 500 ரூபாய் கொடுக்கப்

பட்டு வருகிறது. இதல்லாமல் ஆறு அறைக ளுள்ள குடியிருப்பு வீடும், முதல்தரமான பர்னிச்சரும் இலவசமாகக் கொடுக்கப்பட்டிருக் கிறது. எனவே, கிட்டதட்ட மாதம் 1-க்கு 1500 ரூபாய் நாசமாகிக் கொண்டிருக்கிறது. இவருடைய இவ்வேலையைக் கண்டித்து, இவர் சீர்திருந்திக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் விரும்பினல் அதற்கு அஹ்மதிஜமாஅத்தின் தலைவரான முஹம்மதுஅலி " நீங்கள் பொறு மையாலும் அழுக்காற்றினுலும் நரகத்தில் கிடந்துழல்கின்றீர்கள் ; உங்களுடைய எந்தப் பேச்சையும் செவியேற்கமாட்டோம் ; மாத மொன்றுக்கு 500 ரூபாய் சம்பளத்தை விட குறைவாக ஒரு பிரசாரகரும் இவ்வுலகில் அகப்படமாட்டார் ; அவர் உங்களுக்குப் பிடிக்காவிட்டால் நீங்கள் தனியே வேறொரு பிரசார சபையை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.... ...." என்று பதில் எழுதுகிறார்.

"அஹ்மதியா சங்கத்துக்கு அஹ்மதியர் களைத் தவிர வேறு தனவந்தரோ முஸ்லிம் பொது ஜனங்களோ உதவி செய்கிறதில்லை" என்றும் முஹம்மதுஅலி கூறுகிறார். ஆனல், இந்தியாவைத் தவிர,பேர்லினிலுள்ள துருக்கி, அப்கானி, மிஸ்ரி அரசாங்க கான்ஸல்கள் 5000 மார்க்குகள்வரை மஸ்ஜிது கட்டுவதற்குப் பண உதவி செய்திருக்கிறது. இந்த அஹ்மதி சங் கத்துக்கு இந்திய முஸ்லிம்கள் எம்மாத்திரம் உதவி புரிந்திருக்கின்றனர் என்பதை அவர் களே சொல்ல முடியும்.

எனவே, அஹ்மதியர்களையும் அஹ்மதியல்லா தவர்களையும் நாங்கள் வேண்டிக்கொள்வ தென்னவென்றால், "நாங்கள் கூறிய விஷயங் களை நன்கு கவனியுங்கள். மிஸ்டர் அப்துல் லாஹ் ஏற்படுத்தி இருக்கிற இவ்வீணை காரி யங்களை ஒழியுங்கள். அப்துல்லாஹ்வுக்கு பதிலாக வேறொரு மார்க்க பக்தரை நியமியுங் கள். அவர் தம்முடைய காலத்தை இஸ்லாமியப் பிரசாரத்தில் செலவிடட்டும். ஏழை முஸ்லிம் சமுகத்தின் பணத்தை சந்தோஷமாய் இன்ப வாழ்க்கை நடத்துவதற்காகச் செலவிடவேண் டாம்." என்பதே. முற்கூறப்பட்ட மிஸ்டர் அப்துல்லாஹ்வின் இரண்டாவது அரிய ஊழி யத்தை நாங்கள் பலமாக ஆக்ஷேபிக்கிறோம். அதாவது, ஜெர்மனியிலுள்ள ஒரு சங்கத்தில் நபர் 1-க்கு 60 மார்க்கு சந்தா கொடுத்துத் தமது மனைவியுடன் அங்கத்தினராகச் சேர்ந் திருக்கிறார். பப்ளிக் ரஸ்தாவின் ஓரத்தில் டான்சு ஆடி இஸ்லாத்தின் ஆசாரத்தை இழிவு படுத்துகிறார். முஸ்லிம் ஸ்திரீயானவள் மஹ் ரம் அல்லாதாருடன் பர்தா இல்லாமல் கலந்து கொள்வதை இஸ்லாம் அனு மதிக்கவில்லை. இந்தக் களியாட்டமும் ஜும் ஆவின் தினத்தன்று, ஜும்ஆத் தொழுகையின் சரியான நேரத்தில் நடைபெறுவதுதான் இன்னும் அதிக வருந்தத் தக்கதாக இருக் கிறது. ஆகவே, அஹ்மதியர்கள் இதைச் சீர்திருத்திக்கொள்ள முன்வரவில்லையாயின் அவர்களுக்கு உதவிசெய்வதை சகல விதத்தி லும் கண்டிப்பாய் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று இந்திய முஸ்லிம்களை வேண்டிக்கொள் கிறோம். ஏனெனில், இந்த உதவியினல் இஸ்லாமிய ஊழியம் நடைபெறுவதற்கு பதி லாக இஸ்லாத்துக்கு இவ்விடத்தில் இழிவு தான் உண்டாகிறது. ஆகவே எங்களுடைய கடமையை நாங்கள் நிறைவேற்றிவிட்டோம். இவர்களுக்கு உதவி செய்து பாவத்துக்கு ஆளாகுவதும், உதவிசெய்யாதிருந்து பாபத் துக்கு ஆளாகாதிருப்பதும் முஸ்லிம்களின் கடமையாகும். வமா அலைனு இல்லல் பலாக்.

வேண்டுகோள் செய்பவர்கள்

1. டாக்டர் தாமன் முர்ஸலான் (பர்லின் இஸ்லாமிய ஜமா அத்துத் தலைவர்.)

2. யஹ்யாஹாஷிமீ (பர்லின் முஸ்லிம் வாலிப சங்கத்துத்தலைவர்), பர்லின் யூனிவர் சிட்டி புரப்ஸர்.

3. முஸ்தபா கேன்சனீ (ஜெர்மன் நௌ முஸ்லிம்).

4. அப்துல் மஜீது மாரீஸ் (ஜெர்மன் நௌ முஸ்லிம்)

5. ஹாபிஸ்மன்ஸூருத்தீன் அஹ்மது திஹ் லவீ.

6. தாஜாகான் அப்கானீ.

7. மஹ்முது உதுமான் டுனிஸீ.

8. எச். கே. ஜப்பரீ.

9. ஷௌகத்பே. அல்பானிய முஸ்லிம் சமாஜ தலைவர்.

10. முஹம்மது உமர், மொராக்கஷீ.

11. ஹபீபுர்ரஹ்மான் குறைஷி, பர்லின் இஸ்லாமிய ஜமாஅத்துக் காரியதரிசி.

13. ஷீன்தர்ஜீ.

14. ஹாஜீதாத்தாரீ.

15. முஹம்மது ரியாஜ் மிஸ்ரீ (பர்லின் இஸ் லாமிய சங்கத்துக்காரியதரிசி.

இஷாஅத்துல் இஸ்லாத்தின் அவசியம்

தற்கால முஸ்லிம்களின் நிலைமை மிகவும் கேவலமான ஸ்திதியடைந்து வருகிறது. இவ்வித நிலைமையின் மீதே இனியும் இருந்து வருவோமாயின் மீதமிருந்து வருகிற சொற்ப அருமை பெருமையும் கூடசிறிது காலத்தில் அழிந்தொழிந்துபோம். ஒரு காலத்தில் முஸ்லிம்கள் அருமை பெருமையாகவும், அதிகாரத்துடனும், கம்பீரத்துடனும், அரசாங்க உரிமைக்காரர்களாகவும் இருந்து வந்தனர். ஆனால், அந்தக் காலத்தில் முஸ்லிம்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தது எனினும், இக்காலத்தில் நம்முடைய எண்ணிக்கை கோடிக்கணக்காக இருந்தும் இழிவு என்ற பாதாளத்தில் தள்ளப் பட்டிருக்கின்றோம். எனவே, இனியேனும் நம்மவர் தமது நிலைமையைச் சீர்திருத்திக்கொள்ள முன் வரவில்லையாயின் இதன் முடிவு என்னவாகு மென்பது தெரிந்த விஷயம்.

இஸ்லாத்தின் உண்மை சட்டங்களைப் பின்பற்றி நடந்து வந்த காலம்வரை முஸ்லிம்களாகிய நாம் வெற்றி பெற்றவராக இருந்தோம். ஆனால், அச்சட்டங்களைவிட்டு ஒதுங்கிச் சுய நலத்தின் பக்கல் திரும்பிய பின்னர் இஸ்லாத்தின் மத்திய கோட்டையாக இருந்த "இஸ்லாமிய ஒற்றுமை" என்ற பந்தத்துவம் சிதறிப் போய்விட்டது. ஒரு சமூகத்தினருக்கு அவர்களுக்கென மத்தியக் கொள்கை இல்லாவிடில் அந்தச் சமூகம் எப்பொழுதும் ஒற்றுமையாகாது என்பது இயற்கைச் சட்டம். ஒற்றுமை இல்லாவிடில் உயிர் வாழ்க்கையில்லை. முஸ்லிம்கள் தங்களது மத்தியக் கொள்கையிலும் சட்டத்திலும் இருந்த காலம்வரை அவர்களுக்கு மதிப்பும் கௌரதியும் இருந்து வந்தது; உயிருள்ள வர்க்கத்தாரின் முன்னணியில் எண்ணப் பட்டு வந்தனர். ஆகவே, அந்த ஸ்தானத்திலுள்ள தொடர்பான சம்பந்தம் அறுபட்டுப் போகவே அவர்களின் ஜீவியமும் பலவாறு சிதறிவிட்டது. இப்பொழுது உலகில் திறமையற்றவர்கள் இருந்தால் அவர்கள் முஸ்லிம்கள் தாம். கல்வியற்றவர்கள் இருந்தால் முஸ்லிம்கள் தாம். வீண் ஆசாரத்தையும் கெட்ட பழக்க வழக்கத்தையும் பின் பற்றுபவர்கள் என்றால் அவர்கள் முஸ்லிம்கள் தாம். ஆகவே இனியாகிலும் நாம் றஸூலே மக்பூல் (ஸல்.) அவர்களின் அடிச்சுவட்டினைப் பின்பற்றிநடக்க முன் வருவோமானால் வெற்றி பெறுதிருக்க எவ்விதக் காரணமுமில்லை.

வெற்றியின் இரகசியம்

முஸ்லிம்களின் வெற்றியின் இரகசியம் மார்க்கச் சட்டங்களைக் கடைப்பிடித் தொழுகுவதில் மறைந்திருக்கிறது. "உலகத்தில் தங்களுடைய மதம் தான் உண்மை; தங்களுடைய வேதம் அல்லாஹு தஆலாவினிடமிருந்து வந்தது ஆகவே, உலகத்திலுள்ள யாவரும் இதே மதத்தைத் தான் பின்பற்றவேண்டும்" என்று முஸ்லிம்கள் தாவாச் செய்கிறார்கள். இவர்களுடைய இந்தத் தாவா உண்மையாயிருக்குமாயின், தங்களுடைய இந்த மதத்தை இஷா அத்—பிரசாரம் செய்யாமலிருப்பதற்குக் காரணமென்ன?

ஒரு கடைக்குச் சாமான் வாங்கச் செல்லுகிறோம் என்று வைத்துக் கொள்ளுவோம். ஏனைய கடைகளைப் பார்க்கிலும் விலை சரசமாகவும், நாணயமாகவும் சாமான்கள் கிடைக்குமாயின் நமக்கு வேண்டிய எல்லாச் சாமான்களையும் அந்தக் கடையிலேயே நாம் வாங்குகிறோம்; இதரர்களையும் தூண்டுகிறோம். ஆனால், இஸ்லாம் மதச் சட்டங்களை நாம் பின்பற்றிக் கொண்டிருப்பதுடன் நம்முடைய இஸ்லாம் மதத்தை மற்றவர்களுக்கு அறிவிக்க முடியாமலும், இஷாஅத்தே இஸ்லாத்தில் ஈடுபடாமலும் உற்சாகங்குன்றி இருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும்.

முஸ்லிம்களே! இதுதான் தருணம். கிரியாம்சையில் ஈடுபட்டுழைக்கும் வேலையில் இறங்கிவிடுங்கள். உங்களுடைய மதத்தைப் பிரசாரம் செய்யுங்கள். இந்த ஒரு காரியத்தினால் தான் நீங்கள் உயிருள்ளவர்களாகயிருந்து, உங்கள் மூதாதையரின் பெருமையை மீண்டும் அடைய முடியும். இந்த ஒரு காரியத்தினால்தான் நீங்கள் ஒற்றுமையாகவும் ஐக்கியமாகவும் ஆகிவிடமுடியும். உங்களுடைய சென்ற காலத்திய மகத்துவத்தையும் சுதந்திரத்தையும்

உயிர்ப்பிக்க முடியும். இந்த ஒரு வஸ்துவைத் தான் நீங்கள் அல்லாஹுதஆலாவினிடத்தில் சமர்ப்பித்து அவனது பிரிய அடியார்களாக ஆகமுடியும்.

உலகம் இஸ்லாத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறது.

ஸோலூ என்ற ஒரு தீவு இருக்கிறது. அந்த தீவில் முஸ்லிம்களின் பலமான அரசாங்கம் ஒன்றுளது. கி. பி. 15-வது நூற்றாண்டில் ஷெய்கு ஷரீபில்ஹாஷிமீ என்ற அறபி முஸ்லிம் பிரசாரகர் ஒருவர் இஸ்லாமியப் பிரசார வேலையினிமித்தம் இந்த தீவுக்கு வந்தார். அநேக ஜனங்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவினர். ஷெய்கு அவர்களின் அந்தரங்க சுத்தியும் தியாக உணர்ச்சியும் அந்த தீவின் அரசரைக் கவர்ந்துவிட்டது. அதனால், தன்னுடைய புதல்வியை அந்த ஷெய்குக்கு வதுவை செய்துவிட்டார். அரசர் இறந்தபின் அந்தத் தீவிலுள்ள முஸ்லிம் முஸ்லிமல்லாத பிரஜைகள் யாவரும் ஷெய்கைத் தங்களுடைய அரசராக ஏகமனதாய்த் தெரிந்தெடுத்துக்கொண்டனர். ஷெய்கு அவர்கள் அரசரானபின் அந்த தீவில் பலமான இஸ்லாம் மதப்பிரசாரச் சபையை ஏற்படுத்தியது தான் முதல் முதலாக அவர்செய்த முக்கிய வேலை. சில மாதங்களுக்குள் அந்தத் தீவு முழுதும் இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொண்டது. இந்தத்தீவிலுள்ளவர்கள் யாவரும் விவசாயிகளாவார்கள். இப்பொழுதுள்ள சுல்தான் சூப்பி மஹாலில் வசிக்கிறார். கதர் ஆடை அணிகிறார். இவருக்கு இரண்டு பெண்குழந்தைகளும் ஒரு ஆண் குழந்தையுமிருக்கிறது. போர்னியோவின் வடக்குபாகமும் இந்த தீவுக்குச் சொந்தமானது. ஆனால், தற்காலமுள்ள சுல்தானின் தந்தையார் இந்தப் பிரதேசத்தை பிரிட்டிஷ்நார்த்போர்னியோ கம்பெனிக்குக் குத்தகைக்கு விட்டிருந்ததால் கம்பெனியார் மாதம் 1-க்கு 548 டாலர் கிஸ்தி கட்டிவந்தார்கள். 1898-ம் வருஷம் அமரிக்கர் இந்தத் தீவைக் கைப்பற்றுவதற்காக யுத்தம் புரிய முற்பட்டு முஸ்லிம்களுக்குச் சொல்லொணாத் துன்பம் விளைவித்தனர். இந்த யுத்தம் ஒவ்வொன்றிலும் சுல்தான் அவர்களே ஜெயித்தார்கள். ஆதலால் ஸோலூ தீவிலுள்ள முஸ்லிம் முஜாஹிதுகளிடம் அமரிக்கர்கள் உடன்படிக்கை செய்துகொண்டனர். ஆகவே, இப்பொழுது அந்தத் தீவு பூரண சுதந்திரமுள்ளதாக இருக்கிறது.

டச்சுக்காரர் இஸ்லாத்தைத் தழுவியது.

ஹாலண்டு தேசத்து ராணுவ உத்தியோகஸ்தர் ஒருவர் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டார். இப்பொழுது முஹம்மது அலி என்று அவருக்கு இஸ்லாமியப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. இவர் ஜெர்மனியில் பிறந்தவர். இவரைப் பாதிரியாக்க இவரது பெற்றோர்கள் விருபினர்கள். ஆனாலும் இவர் அதை விரும்பாது கப்பல் கம்பெனியில் வேலைக் கமர்ந்துகொண்டார். பின்னர், ராணுவத்தில் சேர்ந்தார். இஸ்லாம் மதக்கிரந்தங்களைப் படித்து வந்து இறுதியாக 1931-ம் வருஷத்தில் பிறருடைய தூண்டுதலின்றித் தானாகவே இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டார். ஜாவா தேசத்து முஸ்லிம்களுக்கு உதவி புரிவான் வேண்டி இஸ்லாமிய சங்கம் ஒன்று ஏற்படுத்தி இருக்கிறார். அறபாஷை கற்றுக்கொள்வதற்காக இவர் இப்பொழுது எகிப்துக்குச் சென்றிருக்கிறார். இங்கிருந்து ஹஜ்ஜுக்கும் செல்லுவார்.

பிரபல ஆங்கிலேயர் இஸ்லாத்தைத் தழுவினார்.

பஞ்சாப் ஹைக்கோர்ட்டு வக்கிலும் பாரிஸ்டருமான மிஸ்டர் ஜே. பைர்லே என்ற ஆங்கிலேயர் தமது மனைவியுடன் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டார். ஒரு சமயத்தில் இவர் எக்ஸ்ட்ரா அஸிஸ்டன்ட் கமிஷனராகவும் இருந்தார். இவருக்கு ஆரம்ப முதல் மத ஆராய்ச்சியில் ஆர்வம் மிகுதியுண்டு. வெகு காலம் வரை இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டதன் பலனாக 1934-ம் வருஷம் பிப்ரவரிமீ முதல் தேதி இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொண்டார்.

ஒரு புரப்ஸர் இஸ்லாத்தைத் தழுவினார்

சிங்கப்பூர் இஞ்சினிரிங் காலேஜைச் சேர்ந்த ஒரு புரப்ஸர் ஸீ. பீ. டபிள்யூ ஷோமேகர் என்பவர் டாக்டர் காலித் ஷெல்டிரேக் என்பரிடம் இஸ்லாம் மதத்தைத் தழுவினார். இவருக்குக் கமால் என்று இஸ்லாமியப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாசிரியர் டட்ச் ஈஸ்ட் இண்டீஸில் பிரபலமானவர். இவர் இஸ்லாத்தைத் தழுவியதால் அதிகப் பலன் ஏற்பட்டிருக்கிறது. இங்கு புது மஸ்ஜிது ஒன்று கட்டப்பட்டு வருவதாகத் தெரிகிறது. இந்த வேலையைச் செய்யும் பணியை இந்த ஆசிரியர் மேற் போட்டுக்கொண்டிருக்கிறார். புரப்ஸர் ஷோமேகர் மேற்கு இஸ்லாமிய அஸ்ஸோஸியேஷனிலும் சேர்ந்திருக்கிறார் என்று சிங்கப்பூர் செய்தி கூறுகிறது.

மதப்பிரசாரத்தின் தன்மை

ஒரு காலத்தில் முஸ்லிம்கள் உலக முழுவதற்கும் முன் மாதிரியாக இருந்தார்கள். உலகத்திலுள்ள ஏனைய சமூகத்தார் இவர்களைப் பார்த்துப் பாடங்கற்றுக் கொண்டிருந்தனர். இவர்களின் முயற்சியால் உலக முழுதும் நேர் வழி பெற்றுக்கொண்டிருந்தது. முஸ்லிம் என்று சொல்லிக் கொள்வதற்காக மாத்திரம் அவர்களுக்கு "நீங்கள் சிறந்த வர்க்கத்தாராக இருந்தீர்கள்" என்ற பெருமை ஏற்படவில்லை. "ஜனங்களுக்காக உற்பத்தி செய்யப்பட்டவர்கள்" என்ற விசேஷத்தினல் தான் உலக முழுதுமுள்ள மனிதவர்க்கத்தின் சீர் திருத்தத்துக்கு அவர்கள் முன் மாதிரியாக இருக்க வேண்டும் என்பதற்காகவே அவர்கள் "சிறந்த வர்க்கத்தார்" என்ற சிறப்புப் பெயரை அடைந்தனர்.

முஸ்லிம்கள் வெட்கமடைய வேண்டும்

ஆனல், இப்பொழுதோ இதரவர்க்கத்தார் நமக்கு முன் மாதிரியாக இருக்கவும், அவர்களுடைய முயற்சிகளும் கிரியைகளும் நமக்குப் பாடங்கற்பிப்பனவாகவும் இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. இப்பொழுது அவர்கள் வழி காட்டிகள், தலைவர்கள் என்ற அந்தஸ்தைக் கைப்பற்றிக் கொண்டிருக்கின்றனர். நம்மிடத்தில் அவர்களது கிரியைகள் உதாரணமாக எடுத்துக் காட்டப்பட்டு அதை நாம் பாடமாகக் கற்றுக்கொள்ள வேண்டிய அந்தஸ்துக்கு நாம் வந்து விட்டோம்.

மற்றவர்களிடமிருந்து பாடங்கற்றுக்கொள்வது முஸ்லிம்களுக்கு வெட்கக் கேடான காரியமாக இருந்த போதிலும் இதைப் பார்க்கினும் இன்னும் அதிக வெட்ககரமான உதாரணத்தைச் சமர்க்கிறேன். இதைப் பார்த்தேனும் நஞ் சமுகம் வெட்க மடையட்டும்.

கிறிஸ்தவச் சங்கத்தின்கிரியை.

பைபிளை உலகத்தில் பரப்பி அதைப் போதிப்பதற்காகஸ்தாபிக்கப்பட்டசங்கங்களில் "பிரிட்டிஷ் அண்டு பாரின் பைபிள் சொஸைட்டி" என்ற சங்கமுமொன்ருகும். இந்தச் சங்கத்தின் அரிய முயற்சியை இப்பொழுது கூற விரும்புகிறேன். இந்தச் சங்கம் கி. பி. 1804-ல் ஸ்தாபிக்கப்பட்டது. 129 வருஷத்துக்குள் இந்தச் சங்கம் பைபிளை உலகத்திலுள்ள ஒவ்வொரு மூலை முடுக்குகளிலெல்லாம் பரவச் செய்திருக்கிறது. மனிதவர்க்கத்தின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் இதைப் போதிக்க முயலுகிறது. இந்த வேலை எவ்வளவு வேகமாக நடைபெறுகிறதென்பது அடியிற் கண்ட புள்ளி விபரத்தால் நன்கு தெரியவரும். 1808-வது வருஷம் வரை 81157 பிரதிகளை வெளியிட்டிருந்தது. பின்னர் 5 வருஷ காலத்துக்குள் 1602187 பிரதிகளை வெளியிட்டது. பின்னர் ஒரு நூறு வருஷம் தொடர்ந்து விடா முயற்சியாகச் செய்த பிரசாரத்தால் 5688381 பிரதிகள் வெளியாயின. 1925-வது வருஷத்தில் ஒரு கோடிக்கு மேலாய்விட்டன. 1930-வது வருஷத்தில் ஒன்றே கால் கோடிக்கு உயர்ந்து விட்டது. 1932-ம் வருஷம் முதல் பண நெருக்கடியும், வியாபாரமந்தமும் இருந்தும் கூட இந்த சொசைட்டியார் 10552281 பிரதிகளை வெளியிட்டு விட்டனர்.

1908-ம் வருஷத்திலிருந்து 1932-வது வருஷம்வரையிலுள்ள 124 வருஷகாலத்தில் இந்த சொஸைட்டியார் 431853597 பிரதிகளை வெளியிட்டிருக்கிருர்கள். இவ்வளவு ஏராளமான பிரதிகள் இத்தனை காலத்துக்குள் உலகில் எந்தப்புத்தகமும் பிரசுரமாகவில்லை!

655 பாஷைகளில் மொழி பெயர்ப்பு.

இதுவரை உலகத்திலுள்ள பற்பல பாஷைகளிலுமாக மொத்தம் 655 பாஷைகளில் பைபிள் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது அதன் விபரம் வருமாறு:—

ஐரோப்பிய பாஷைகள்	90
ஆப்பிரிக்கா பாஷைகள்	229
இந்தியாவைத் தவிர வுள்ள ஆசிய பாஷைகள்	86
இந்திய பாஷைகள்	112
அமெரிக்க பாஷைகள்	46
ஓஷியானியா (ஆஸ்டிரேலியா அண்டு நியூஸீலண்டு)	92
ஆக மொத்தம்	655

இவ் வெண்ணிக்கை எவ்வளவு துரிதமாகப் பெருகுகிறதென்பதைக் கவனியுங்கள். 1909-ம் வருஷத்தில் பைபிள் சொஸைட்டியின் ரிஜிஸ்டரில் 412 பாஷைகளே பதிவாகி இருந்தன. ஆனால், அதற்குப் பின்னுள்ள 23 வருஷ காலத்துக்குள் 243 பாஷைகள் அதிகரித்திருக்கின்றன. அதாவது வருஷம் ஒன்றுக்குப் பத்து பாஷைகள் விகிதமாகப் பெருகி இருக்கிறது.

நான்கு பாஷை இவாஞ்சலியம்.

சில பிரதேசங்களிலுள்ள ஜனங்களின் தேவையை அனுசரித்து இரண்டு, மூன்று, நான்கு பாஷைகளிலும்கூட பைபிள் ஒன்று சேர்த்துப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு பாஷையில் அச்சிடப்பட்ட பிரசுரம் 11.

கிரேக், பாரசீகம், உருது ஆகிய மூன்று பாஷைகளினும் அச்சிடப்பட்ட பிரசுரம் 1.

இன்னொரு பிரசுரம் ஆறு பாஷைகளில் அச்சிடப்பட்டிருக்கிறது. அதில், ஆங்கிலம், குஜராத்தி, மராட்டி, உருது ஆகிய பாஷைகளும் சேர்ந்திருக்கின்றன.

அந்தகர்களுக்கு 40 பாஷைகள்

இஸ்லாமிய நாடுகளிலும் இந்தியாவிலும் இந்தச் சங்கத்தார் எவ்வளவு துரிதமாக பைபிளை மொழிபெயர்த்திருக்கிறார்கள் என்பது அடியிற்கண்ட புள்ளி விபரத்தால் நன்கு தெரியவரும். கடந்த 124 வருஷ காலத்துக்குள் இஸ்லாமிய நாடுகளில்,

அரபி	2682224.
உருது	5667848.
பஞ்சாபி	552010.
பலூக்கி	21000.
ஹிந்தி	7487726.
தெலுங்கு	4288197.
மலையாளம்	2299595.
பார்சி	722026.
புஷ்து	102261.
சிந்தி	18258.
வங்காளம்	461994.
மராட்டா	3504285.
கன்னடம்	1365391.

மொழி பெயர்ப்புகளின் எண்ணிக்கையினால் மாத்திரம் அந்தப் பிரயாசையை மதித்துவிட முடியாது. உலகத்திலுள்ள பல பாஷைகளில் இன்னமும் இலக்கண இலக்கியச் சட்டங்கள் ஏற்படாமலும், எழுத்துக்களில்லாமலு மிருக்கின்றன. பைபிளை மொழி பெயர்த்து வெளியிடுவதில் கிறிஸ்தவப் பாதிரிமார்கள் எடுத்துக்கொண்டிருக்கிற சிரமங்களை நாம் கனவிலுங்கூட நினைத்திருக்கமாட்டோம். இதற்கு ஒன்றிரண்டு உதாரணமில்லை; நூற்றுக் கணக்கான உதாரணங்களைக் காட்ட முடியும். நாகரீகத்தில் வளர்ந்து உயர்தரக் கல்விபயின்ற கனவான்கள் பலர், நாகரிகமற்ற பிரதேசங்களுக்குச் சென்று வாழ்ந்து அவர்களின் பாஷையைக் கற்று, அவர்களுக்கென இலக்கண இலக்கியங்களை ஏற்படுத்தினர். அதற்காக எழுத்துக்களையும் உண்டாக்கி அந்த ஜனங்களுக்கு இவைகளை எழுதவும் படிக்கவும் கற்பித்தார்கள். இம் முயற்சிக்கெல்லாம் இந்தப் பாஷைகளில் பைபிளை மொழிபெயர்ப்பதற்காகவும், இந்த மொழிபெயர்ப்புகளால் அந்த ஜனங்கள் பிரயோஜன மடைவதற்காகவுமே செய்யப்பட்டன. இவ்விஷயத்தில் கிறிஸ்தவப் பாதிரிகள் எடுத்துக்கொள்ளும் கஷ்டங்களுக்கும், சிரமங்களுக்கும், தியாகங்களுக்கும் உலகத்திலுள்ள வேறெந்த வர்க்கத்தாரிடமும் இக்காலத்தில் உதாரணங்காட்டமுடியாது.

வேலை செய்யும் முறை

இச்சங்கத்தார் செய்யும் வேலை முறையையும் அவர்களின் கட்டுப்பாட்டையும் சிறிது கவனிப்போமாக. இச்சங்கத்தாரின் தலைமைக் காரியாலயம் லண்டனிலிருக்கிறது. 46 பெயர்கள் இச்சங்கத்தின் அங்கத்தினர்களாவார்கள். இவர்களில் 28 பேர்கள் இங்கிலாந்திலுள்ள மாதா கோவில்களின் பிரதிநிதிகள். 15 பெர்கள் கிறிஸ்தவர்களில் இதரவகுப்பாரின் பிரதிநிதிகள். 6 பெயர்கள் வெளிநாட்டுக் கிறிஸ்தவர்களின் பிரதிநிதிகள். இச்சபையின் கீழ் உலகமெங்கணும் பைபிள் சொஸைட்டி வேலை செய்துவருகிறது.

10 ஆயிரம் கிளைச் சங்கங்கள்

இந்தப்பிரசார வேலை 25 கிளை ஸ்தாபனங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஸ்தாபனமும் ஒரு காரியஸ்தர் வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு காரியஸ்தருக்கும் கீழ் பெரியபெரிய மத்தியஸ்தலங்களில் ஒரு காரியதரிசி அல்லது உபகாரியஸ்தர் இருந்துவருகின்றனர். இவர்கள் தங்கள் தங்கள் பிரதேசங்களில் இந்தச் சொஸைட்டியின்

கிளைகளையும், உபசங்கங்களையும், பைபிள் விற்பனைக்குரிய டிப்போக்களையும் ஏற்படுத்தி சுற்றுப்பிரயாணம் செய்யும் குமாஸ்தாக்களையும் நியமித்திருக்கிறார்கள். இந்த சொஸைட்டியின் ரிப்போர்ட்டுப்படி இப்பெரிய ஸ்தாபனத்தின் கீழ் 10 ஆயிரம் கிளைச்சங்கங்களும் உபஸ்தாபனங்களும் வேலை செய்து வருகின்றன. 350 டெப்போக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கிராமங்கிராமமாகச் சென்று பைபிளை விநியோகஞ் செய்து விற்பனை செய்வதற்கென்று 1000 பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தியா இதர இஸ்லாமிய நாடுகள் சம்பந்தப்பட்டமட்டில் இதை இன்னும் சிறிது விவரிக்கிறோம்.

எகிப்து பிராந்தியம்

இதில், எகிப்து, சூடான், பாலஸ்தீனம், சிரியா, டிரான்ஸார் டோனியா, ஸைப்பிரஸ், அரேபியா, அபிஸினியா ஆகிய நாடுகள் எகிப்து பிராந்தியமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இத்தேசங்களில் 42 இடங்களில் பைபிள் டெப்போக்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. 33 பெயர்கள் பிரயாண உத்தியோகஸ்தர்களாக இருந்து வருகின்றனர். சென்ற 1931-ம் வருஷத்தில் இப்பிராந்தியத்தில் 67480 பிரதிகள் 95 பாஷைகளில் விற்பனையாகி இருக்கின்றன. அதற்கு முந்திய 1930-ம் வருஷத்தைப் பார்க்கினும் 30 ஆயிரம் பிரதிகள் அதிகமாக விற்பனை ஆகி இருக்கின்றன. போர்ட் செட், அலக்ஸாந்தரியா ஆகிய துறைமுகங்களில் இந்த ஸொஸைட்டியின் பிரத்தியேகமான சிப்பந்திகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அன்னோர் இத்துறை முகங்களின் வழியாகச் செல்லுங் கப்பல்களிலெல்லாம் சென்று பைபிள் விற்பனை செய்து வருகிறார்கள். சிரியா தேசத்தில், பொருளாதார நெருக்கடி மிகவும் பலமாக இருந்துங்கூட 25,000 பைபிள் பிரதிகள் விற்பனை ஆகிஇருக்கின்றன. அநேகங் கிராமங்களில் முட்டைகளையும் ரொட்டிகளையும் வாங்கிக்கொண்டு அதற்கு பதிலாக பைபிளைக் கொடுத்து வருகிறார்கள். இதில் அறப்நாடு ஒன்றில்தான் பைபிள் நுழைபவில்லை. ஆயினும், எடன் துறைமுகத்தை இதற்கெனப் பற்றிக்கொண்டு அந்த ஊர் மூலமாக 1931-ம் வருஷத்தில் 149 பிரதிகளும், 930-ம் வருஷத்தில் 538 பிரதிகளும் 1929-ம்வருஷத்தில் 1235 பிரதிகளும்விற்பனை செய்திருக்கிறார்கள்.

வட ஆப்பிரிக்கா

வட ஆப்பிரிக்காப் பகுதியில் அல்ஜீரிய்யா, டுனிஸ், மொரோக்கோ, திருப்போலி முதலிய தேசங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதில் மூன்று டிப்போக்களும், 6 சிப்பந்திகளும் வேலை செய்து வருகின்றனர். இவர்கள் மூலமாக 1931—ம் வருஷத்தில் 69,217 பிரதிகள் 41 பாஷையில் விற்பனை ஆகி இருக்கின்றன. ஆனால், 1929-ம் வருஷத்தில் விற்பனையான பிரதிகளைப் பாக்கிலும் 12,000 பிரதிகள் குறைவாக விற்பனையாகி இருக்கின்றன. இந்தப் பிரதேசத்து முஸ்லிம்கள் பொதுவாகவும், அல்ஜீரிய முஸ்லிம்கள் சிறப்பாகவும் மிகவும் நற்குணம் வாய்ந்தவர்கள். இவர்களிடம் பைபிள் விற்பனை செய்வது கிறிஸ்தவர்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. இன்னோர்பைபிள்சொஸைட்டியின் சிப்பந்திகளிடம் நல்லவிதமாக நேசம் பாராட்டுகிறார்கள். கண்ணியமாக நடந்துகொள்கிறார்கள். ஆனால், பைபிள் சம்பந்தமான பேச்சு வரும்போது "எங்களுக்கு அந்த புஸ்தகம் தேவை இல்லை. எங்கள் நாட்டில் இப்புத்தகத்தை விலைக்கு வாங்குபவர் கிடைக்கமாட்டார்" என்று பட்டவர்த்தமானமாகக் கூறி விடுகின்றனர். அவ்வாறிருந்தும் இந்த சொஸைட்டியார் தங்கள் வேலையை ஓயாமல் செய்துகொண்டுதானிருக்கின்றனர். இந்தச் சமயமில்லாவிட்டாலும் இனி யொரு சமயத்திலேனும் தங்களுக்கு வெற்றி கிடைக்குமென்று கிறிஸ்தவப் பாதிரிமார்கள் எண்ணிக்கொண்டிருக்கின்றனர். இதற்கிணங்க 1932-ம் வருஷத்து ரிப்போர்ட்டில்,

"இஸ்லாமிய சமூகத்தின் பலமான இக்கோட்டைகளுக்குள் கிறிஸ்தவப் பிரசாரகர்கள் பிரவேசிப்பதற்கு இனியொரு காலத்தில் தகுதி வாய்ந்தவர்களாக ஆகிவிடும்போது பரிசுத்த வேதமானது முன்னுளிலிருந்தே அவ்விடங்களுக்குச் சென்று கிறிஸ்தவ மதத்துக்குரிய அஸ்திவாரத்தை வைத்துவிட்டது என்பதையும், இந்த மதத்தின் அஸ்திவாரத்தை இனிமேல் முஸ்லிம்களின் தாக்குதல் அழித்துவிடாதென்பதையும் அவர்கள் உணர்ந்துகொள்ளுவார்கள்" என்று எழுதி இருக்கிறார்கள்.

இராக் ஈரான் பகுதி

ஈரான் பகுதியில் பாரசீகம், இராக், பாரசீக வளைகுடாவின் சமுத்திரக்கரைப் பிரதேசங்கள் சேர்ந்திருக்கின்றன. இப்பகுதியில் 23

டிப்போக்களும், 15 சிப்பந்திகளும் இருக்கின்றனர். 1931-ம் வருஷத்தில் 54,344 பிரதிகள் 42 பாஷைகளில் எழுதி வெளியிட்டனர். 1924-ம் வருஷத்தில் விற்பனையான பிரதிகளைப் பார்க்கிலும் 4 ஆயிரம் பிரதிகள் அதிகமாக விற்பனையாகி இருக்கின்றன. 54 ஆயிரம் பிரதிகள் விற்பனை ஆனதில் 51 ஆயிரம் காப்பிகளை பைபிள் விற்பனைக்கு என்று பிரத்தியேகமாக நியமிக்கப்பட்ட சிப்பந்திகள் மூலமாக விற்பனையாகி இருக்கிறது என்றால், இவர்களின் உற்சாகம் எம்மட்டில் இருக்கிறது என்பது புலப்படும். அரசாங்கத்திற்கு விரோதமாகவும், இஸ்லாம் மதத்துக்கு மாறாகவும் பிரசாரம் செய்வது கடுமையாகத் தடுக்கப்பட்டிருந்தும், இந்த சொஸைட்டியின் வேலை எவ்வளவு வேகமாக இருக்கிறது என்பதைக் கவனியுங்கள். அல்ஜீரியாவைப்போல் இராக் தேசத்திலுள்ள கிராமாந்தரப் பகுதியில் பைபிள் விற்பனைக்கு அதிக நெருக்கடி இருந்து வருகிறது. அவ்வாறிருந்தும் கிறிஸ்தவப் பிரசாரகர்கள் ஒரு வருஷகாலத்துக்குள் 889 பிரதிகளைக் குறிப்பிட்ட மனிதர்களிடம் விற்பனை செய்திருக்கிறார்கள்.

இந்திய முஸ்லிம்கள் கவனிக்க வேண்டியது.

இந்தியப் பகுதி கல்கத்தா, மதராஸ், பங்களூர், அலகாபாத், லாகூர் ஆகிய ஏஜன்ஸிகளைக் கொண்டது. 15 டிப்போக்களும் 180 சிப்பந்திகளும் வேலைசெய்து வருகிறார்கள். 1931-ம் வருஷத்தில் 919931 பிரதிகள் விற்பனையாயின. 1929-ம் வருஷத்தில் இதைப்பார்க்கினும் ஒரு லக்ஷம்பிரதிகள் அதிகமாக விற்பனை ஆகி இருக்கின்றன. இவ்விடங்களில் ஆடவர்கள் மாத்திரமின்றி ஸ்திரீகளும் வீடுவீடாகச் சென்று பைபிள் விற்பனை செய்து வருகிறார்கள். இவையல்லாமல், இந்திய சர்வகலாசாலைகளில் மெட்ரிக்குலேஷன் பரீக்ஷையில் தேரிய மாணவர்களுக்கு—அம்மாணவர்கள் விரும்புவார்களாயின்—இலவசமாக பைபிள் புதிய ஏற்பாட்டை இச்சங்கத்தார் கொடுத்துவருகிறார்கள். பி. ஏ. பரீக்ஷையில் தேருபவர்களுக்கு புதிய ஏற்பாடு பழைய ஏற்பாடு ஆகிய இரண்டுஞ் சேர்ந்த முழுபைபிளையும் கொடுத்துவருகிறார்கள்.

மலேயா தீபகற்பம்

இப்பகுதியில் மலேயா தீபகற்பம், போர்னியே, சுமத்ரா, ஜாவா, மலாக்கா முதலிய பிரதேசங்கள் சேர்ந்திருக்கின்றன. இங்கு 5 டிப்போக்களும் 28 சிப்பந்திகளும் வேலை செய்து வருகிறார்கள். 1931-ம் வருஷத்தில் 223606 பிரதிகள் 31 பாஷைகளில் பிரசுரமாகி இருக்கின்றன.

சீனா பகுதி.

சீனா பகுதி 13 ஏஜென்ஸிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. 22 டிப்போக்களும் 454 சிப்பந்திகளும் வேலைசெய்து வருகிறார்கள். 1931 வருஷத்தில் 4606415 பிரதிகள் வெளியிடப்பட்டன. 1929-ம் வருஷத்தில் 8-லக்ஷம் பிரதிகள் அதிகமாக விற்பனையாகி இருக்கின்றன. இதையல்லாமல் அமரிக்கன் பைபிள்சொஸைட்டியார் இதே வருஷத்தில் 30 லக்ஷம் பிரதிகளையும்,ஸ்காட்லண்டு நேஷனல் சொஸைட்டியார் 33 லக்ஷம் பிரதிகளையும் சீனாவில் பிரசுரித்திருக்கிறார்கள். இவ்விதமாக வேதப் பிரசாரச் சங்கங்களால் சீனாவில் மட்டும் ஒரு வருஷத்தில் ஒரு கோடியே எண்பத்தோர் லக்ஷத்துப் பதின் மூவாயிரத்து எழுநூற்றுப் பதினேழு பிரதிகள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

வருஷாந்தரச் செலவு

இவ்விபரத்தைக் கூறி முடிப்பதற்கு முன்னர் இச்சங்கத்தின் பொருளாதார வரவு செலவுகளையும் கவனியுங்கள். 1931-1932-ம் வருஷத்து பட்ஜட் வருஷக்கணக்கு:—

சந்தா மூலமாக வரவு	228030 பவுன்
புத்தக விற்பனை வரவு	142262 பவுன்
ஆக	370292 பவுன்
அச்சுச் செலவு	207686 பவுன்
வேலைக்காரர்கள் சம்பளம்	163643 பவுன்
ஆக	371329 பவுன்

ஆகவே இந்த சொஸைட்டியின் வரவு செலவு வருஷத்தில் 50 லக்ஷம் ரூபாய்கள் ஆகின்றன. இது இந்தியாவிலுள்ள நடுத்தரமான சமஸ்தானத்தின் வரும்படியாக இருக்கிறது.

பிரபுக்களின் உதவி

இந்த சொஸைட்டியின் தலைவர் இங்கிலாந்திலுள்ள அரச குடும்பத்தைச் சேர்ந்த டியூக் ஆப் கேன்னட் (கானட்டுக் கோமகன். இவர் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தை

அமல் நடத்திவைக்கும் முறையில் இந்தியாவுக்கு விஜயம் செய்து சென்னை முதலிய சட்டசபைகளைத் திறந்துவைத்தவர் என்பதும், மாட்சிமைதங்கிய அரசர்பெருமானின் நெருங்கியபந்துவென்பதும் வாசகர்களுக்குத் தெரிந்த விஷயம்). இவருக்கு உதவியாக நியமிக்கப்பட்ட உபதலைவர்கள் ஜாப்தாவில் மார்க்குவிஸ் ஆப் அபர்டீன், டியூக் ஆப் டெவன்ஷைர், வைகௌண்ட் ஸெஸில், லார்ட் மெஸ்டன், மிஸ்டர் பால்டுவின் (மாஜி முதல் மந்திரி, கன்ஸர்வேட்டிவ் கக்ஷித் தலைவர்) ஏர்ல் ஆப் கிளிரின்டன், மார்க்குவின் அப் ஸாலிரி, லார்ட் வெல்லிங்டன், லார்டு சாங்கே (வட்டமேஜை மகாநாட்டில் சமஷ்டிக் கமிட்டிக்குத் தலைவராக இருந்தவர்.) ஆகியவர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. மேனாட்டில் கிறிஸ்தவர்கள் மதத்தை விட்டுவிட்டார்களாதலின், அவர்களுக்கு மதப்பற்றில்லை என்று நமது நாட்டில் கூறப்படுகிறது. அத்தகைய நாட்டில் இந்தப் பிரபுக்கள் இப்பணியை ஏற்றுக்கொண்டிருக்கிறதைக் கவனிக்கவேண்டும். மார்க்கப்பற்றும் மதவைராக்கியமும் கொண்டவர்கள் என்று பெயரெடுத்த முஸ்லிம்கள், இவர்கள் செய்யும் வேலையில் ஆயிரத்தில் ஒரு பங்கேனும் செய்கிறார்களா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அல்லாஹ்வின் இறுதி பரி முகத்தை உலகமக்களுக்கு உணர்த்த ஏதேனும் குறிப்பிடத்தக்க முயற்சி செய்திருக்கிறீர்களா? முஸ்லிமல்லாதாரிடம் பரவச் செய்வது ஒரு பக்கமிருக்கட்டும் முஸ்லிம்களுக்குள்ளேயே பின்னிடைந்திருக்கிறவர்க்கத்தாரிடம் குர்ஆன் ஷரீபைப் பரவச் செய்வதற்கு முயற்சி செய்திருக்கிறீர்களா? உங்களுடைய கிரியைகளைச்சிந்தித்துப் பாப்போமாகில் வெறுங் காகிதம் தான் நமது கண்ணுக்குப் புலப்படும். இக் கிறிஸ்தவர்களின் வேலைகளுக்கு முன்னால் நாம் வெட்கத்தால் தலை குனியவேண்டியதைத் தவிர வேறொன்றுமின்று. அல்லாஹுதஆலா நம்மனைவர்களுக்கு நேரான வழி காட்டி, சத்திய சன்மார்க்கத் தொண்டாற்றவும் அவனது சத்திய வேதத்தை மக்களிடம் சேர்த்து வைக்கவும் நல்லுதவி புரிவானாக. ஆமீன்.

ஆசிரியர் குறிப்பு

மௌலானா அஸ்ஸித்தீக்கியின் விஜயம்:— மீரட்வாசியும் அரபி, உருது, பார்ஸி, ஆங்கிலம், ஆகிய பல பாஷைகளில் பாண்டித்துவம் பெற்றவரும், பிரபல மஷாயிக் குடும்பத்திலுதித்தவரும், தேசிய, ராஜிய, மதஞானம் பொருந்தியவருமான மௌலானல்ஹாஜ் முகம்மது அப்துல் அலீமிஸ்ஸித்தீகியுல் காதிரி அவர்கள், பர்மா, இலங்கை, ஈஸ்ட் இண்டீஸ், மலேயா, ஸயாம், சைனா, மோரிஸ், மடகாஸ்கர் முதலிய வெளிநாடுகளெல்லாஞ்சென்று இஸ்லாமியப் பிரசாரம்செய்து ஆயிரக்கணக்கானவர்களை இஸ்லாத்தில் சேர்த்து வருவதும், காதியானி அஹ்மதி பஹாயி முதலிய இயக்கத்தை நசுக்கி வருவதும் நேயர்களறிந்த விஷயமாகும். இப்பெரியார் ஆங்கிலத்தில் உயர்தரக் கல்வி பயின்று தமது தாய்பாஷையைப்போல் அவ்வளவு சுலபமாகவும் சமர்த்தாகவும் பிரசங்கம் செய்யும் ஆற்றல் பெற்றிருந்தும், அவ்வாங்கில பாஷையானது மௌலானா அவர்களை ஸ்வகரித்துக்கொள்ளாமலிருப்பது ஆச்சரியப்படத்தக்க விஷயமாகும். இற்றைநாளில் ஆங்கிலப் பாடசாலையிற் சென்றவுடன் கிராப்பும், கோட் பட்லூன் அணிந்து, தாடியும் மீசையும் முழுங்கச் சிறைத்து விட்டு முஸ்லிம் என்ற அங்க ஆசாரமின்றித் திரியும் நஞ்சோதரர்கள் மௌலானா அவர்களைக்கண்டேனும் பாடங்கற்றுக் கொள்ளுவார்களென்று நம்புகிறோம். ஆங்கிலங் கற்பது கூடாது என்று உலமாக்கள் குப்று பத்வாக் கொடுப்பதாகக்கூறி உலகமாக்கள்பாலுள்ள தங்களது ஆபாச அழுக்காற்றைக் கக்கி வருபவர்களுக்கு நாம் அறிவித்துக் கொள்வதென்னவென்றால், பிறபாஷைகளையும் பிறகலைகளையும் கற்று அந்த நாகரீகத்தில் மூழ்கி இஸ்லாமிய நடையுடை பாவனைகளை முற்றிலும் கைவிட்டுவிடும் வழக்கத்தை அந்தக்காலத்து உலமாக்களும் இந்தக்காலத்து உலமாக்களும் கண்டித்துவந்தனர். உலமாக்கள் ஆங்கிலக்கல்வியையோ ஆங்கில பாஷையையோ வெறுக்கவில்லை என்பதற்கு மௌலானா அவர்கள் தக்க

... காப்பக ... 600 008

சான்றாக இருக்கிறார்கள். மௌலானா அவர்கள் தங்களது இளம்பிராயத்திலேயே இஸ்லாமியக் கல்வியைப் பயின்று அப்பால் ஆங்கிலங் கற்றதால் அவர்களின் இஸ்லாமிய ஆசாரமும், இஸ்லாமியக் கொள்கைகளும், மத பக்தியும் மாறாமல் இருக்கிறது. ஆதலால், நம்மவர் முதலில் மார்க்கத்தைத் தெரிந்து கொண்டு அப்பால் ஆங்கிலமோ பிறபாஷையோ கற்கத்தொடங்குவாராயின் அதனால் நமக்கும் நமது சமூகத்துக்கும் எத்தனையோ நன்மையேற்படும். அவ்வாறில்லாமல் இளம்வயதிலேயே இங்கிலிஷ் நாகரீகத்தைப்பயின்று, நாத்தீகக் கலைகளைத் தெரிந்தபின் அப்பால் இஸ்லாம் மதத்தை ஆராயப்புகுவது நம்மவரைப் படுகுழியில் தள்ளிவிடுகிறது. லாகூரிலுள்ள அஹ்மதியா ஜமா அத்துத்தலைவர் முஹம்மது அலி, M. A., LL. B., போன்றவர்கள் ஆரம்ப காலத்தில் ஆங்கிலத்தைக் கற்று அப்பால் அறபிப்பாஷை மாத்திரம் பயின்று மார்க்கக் கலையை முறைப்படி யுணராததால் இற்றை நாளில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டம் அள்விடற்பாலது. ஆனால், இளமையிலேயே இஸ்லாமியக் கலையிற்றேர்ந்து அப்பால் ஆங்கிலங்கற்ற மௌலானா அப்துல் அலீம் ஸித்திக்கி யவர்களால் இஸ்லாத்துக்கும் முஸ்லிம் சமூகத்துக்கு மேற்பட்ட நன்மை உங்கள் கண்முன் நிற்கிறது. நமது சங்கத்தாரின் வேண்டுகோளுக்கிணங்கி கனம் மௌலானா அவர்கள் இவண் சென்னைக்கு விஜயஞ்செய்து ஜாஜ்டவுன், பெரியமெட்டு, திருவல்லிக்கேணி முதலிய இடங்களிலுள்ள மஸ்ஜிதுகளிலும், மௌன்ட்ரோடிலுள்ள லாலி ஹாலிலும், மண்ணடி முஸ்லிம் யூனியனிலும் ஆற்றிய 7 பிரசங்கங்கள் பொன்னேபோல் போற்றத் தகுந்தனவாகவும், பகுத்தறிவு பகுத்தறிவு என்று கதறும் கபோத அறிவுள்ளவர்களுக்கு வெளிச்சத்தைத்தந்து அவர்களின் அகக்கண்ணைத் திறக்கச் செய்வதாகவு மிருக்குமென்று நம்புகிறோம். தென்னாட்டு உலமாக்கள் மார்க்க விஷய ஞானமற்றவர்களென்றும், குறுகிய நோக்கமுள்ளவர்களென்றும் கூறிவந்த சிலர் மௌலானா அவர்களின் பிரசங்கத்தைக் கேட்ட பின்னர் தென்னாட்டு உலமாக்களின் சிறந்த மார்க்கப்பற்றையும், மதத்தொண்டையும் ஒருவாறு உணர்ந்திருப்பார்களென நம்புகிறோம். கனம் மௌலானா அவர்கள் ஜப்பான், ஆஸ்டிரேலியா முதலிய நாடுகளில் இஸ்லாமியப் பிரசாரம் செய்வதற்காக கொழும்பு மார்க்கமாகச் செல்லுவதாலும், வருகிற 25-6-34-ல் கொழும்பில் நடைபெற இருக்கிற நாயக ஜயந்தி விழாவுக்குத் தலைமை வகிக்க இருப்பதாலும் அதிக நாள் மதராஸில் தங்கவும், தமிழ் ஜில்லாக்களின் முக்கிய பகுதிகளுக்குச் செல்லவும் முடியாமற் போனது பற்றி வருந்துகிறோம். ஆயினும், மௌலானா அவர்கள் தங்களுடைய சத்தியப்பிரசாரத்தை வெற்றியுடன் நடத்தி ஜயசீலராக நம்மிடம் திரும்பிவரவும், நமது நாட்டு மக்களுக்கு நலம் பல செய்யவும் றஹ்மான் உதவிபுரிய வேண்டுமென அவ்வல்லோனைப் பிரார்த்திக்கிறோம்.

சிலோன் சந்தா நேயர்கட்கு!

நமது சங்கத்தின் அருந் தொண்டும், மாசிகையின் உன்ன சேவைகளும் உங்களுக்குத் தெரியாததன்று. நமது சங்கத்தின் அருமை சேவைகளை எடுத்துக் கூறவும், மாசிகையின் அபிவிர்த்தியைக் கருதியும் நம் சங்க சார்பாக மௌலானா மௌல்வீ S. K. முகம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள் இதுபொழுது கொழும்பு வந்திருப்பதால் முஸ்லிம் நேயர்கள் மௌலானா அவர்களை அன்புடன் வரவேற்று ஏராளமானோர் புதிய சந்தாதார்களாகச் சேர்வதுடன் சந்தாபாக்கிகளையும் அவர்களிடம் கொடுத்து அன்போடு ஆதரிப்பீர்களென்று பெரிதும் எதிர் பார்க்கிறோம்.

காதியானி மதகண்டன நூல்கள்

ஹயாத்தமஸீஹ் அலைஹிஸ்ஸலாம்

ஹஸ்ரத் ஈஸாநபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சரித்திர சுருக்கம், அவர்கள் உலகிற்கு வரும் விபரம் ஆகியவைகள், குர்ஆன் ஹதீதுகளின் ஆதாரங்களைக்கொண்டு எழுதப்பட்டது. இந்நூலைப்போல் இதுகாறும் தமிழில் வெளிவந்தது கிடையாது.

முதல்பாகம் 90 பக்கங்கள் கொண்டது அணா 7. 2-ம் பாகம் 350 பக்கங்கள் கொண்டது ரூ. 1

கிறிஸ்தவர்களுக்கோர் வாயாப்பு

இந்நூலை வாசிப்பது கொண்டு, லாகூர் அஹ்மதிய்யாப் பார்ட்டித்தலைவர் முஹம்மது அலியால் எழுதப்பட்ட இயேசுவின் இரகசியம் என்னும் புத்தகம் குர்ஆனுக்கும் ஹதீதுகளுக்கும் முற்ற முற்ற விரோதமாயிருப்பது நன்கு புலனாகும். விலை அணா 6

சுன்னத்ஜமா அத்தின் விஸ்வாசம்

சுன்னத்து ஜமாஅத்து என்றால் என்னவென்று பரிகாசமாய் வினவும் காதியானிகளுக்கு இது தக்க வாயாப்பாகும். இது சுன்னத்ஜமாஅத் கொள்கை, அவர்கள் யார்? வழிகேடர்களின் கொள்கை யாது? என்பனவற்றை நன்கு துலக்கும். விலை அணா 6

காதியானி மத ஆராய்ச்சி

காதியானி மதக் கோட்பாடுகள் இன்னவை என்று தெரிந்து கொள்ளாது அநேகர் அன்னோரால் பிரசுரிக்கப்படும் நூல்களைப் படித்து வழிதவறிவிடுகின்றனராதலின், இஸ்லாத்துக்கும் காதியானி மதத்துக்குமுள்ள வேற்றுமை, காதியானிகள் முஸ்லிம்களென்று கூறிக்கொண்டு அதைக் கெடுப்பதற்காகச் செய்துவரும் சூழ்ச்சி முதலியவைகள் தக்க முறையில் விளக்கப்பட்டிருக்கிறது. விலை ரூ. 1

முஸ்லிம்களின் நவீன அநுஷ்டானம்

அனாச்சார ஷிர்க்பித்அத் முதலிய நவீன அநுஷ்டானங்களில் கிடந்துழலும் முஸ்லிம்களுக்கும், அனாவசியமான சடங்குகளைக் கைக்கொண்டு கடன்பட்டு கஷ்டப்படாதிருக்கவும், வீண்டாம்பீகச் செலவுகளிலிருந்து விடுவிக்கவும் அறிய புத்தகம். விலை அணா 10

குர்ஆன் ஆங்கில வியாக்யான ஆராய்ச்சியின் முகவுரை

இது, காதியானி அஹ்மதியாப்பார்ட்டித் தலைவர் முஹம்மது அலீ, எழுதிய ஆங்கில வியாக்யானத்தில் இஸ்லாத்துக்கு விரோதமாயுள்ள தவறுகளிற் சிலவற்றை எடுத்துக் காட்டுகிறது. விலை அணா 4

அஹ்மதியர்களைப்பற்றிய கோர்ட்டுதீர்ப்பு

இதில் காதியானி மதஸ்தர்களுக்கும் முஸ்லிம்களுக்கும், மஸ்ஜித் கபரஸ்தான் சம்பந்தமாக ஏற்பட்ட வியாச்சியங்களும் கோர்ட்டு தீர்ப்புகளும் அடங்கியிருக்கிறது. விலை அணா 2

காதியானிப்பிரசாரமும் கம்பளை முஸ்லிம்களின் வெற்றியும்

சிலோன் கம்பளையில் காதியானிகளுக்கும் உலமாக்களுக்கும் நடக்க இருந்த தர்க்கவாத சம்பந்தமாக எழுதப்பட்டது. விலை அணா 6

ரத்துல் காதியானி

வஹீ என்பதென்ன? அது எவருக்கு வரலாம். தற்காலம் வஹீஉண்டா? இல்லாம் என்றால் என்ன? என்பன போன்ற விஷயங்கள் விபரமாயும் தெளிவாயும் கூறப்பட்டிருக்கிறது. விலை அணா 4

காதியானிமதஸ்தருடன் ஒற்றுமைபாமை

காதியானிக் கொள்கைகள் நந்தென்னாட்டில் தலைகாட்ட முற்பட்டிருக்கும் இதுகாலை, இந்நூல் ஒவ்வொருவரிடமு மிருக்கவேண்டியது அவசியமாகும். விலை அணா 8

கிடைக்கு மிடங்கள் :— (1) முஸல்மான் ஆபீஸ், தென்காசி.

(2) ஜனாப் மு. முஹம்மது ஷரீப் சாஹிப்,
439-A, நார்த்பிரிட்ஜ் ரோடு, சிங்கப்பூர்.

‘யூவ்முந்நபீ’

சென்னை-600 008

திருநபி திருதினக்கொண்டாட்டம்

ஏகத்துவத்தூதர், நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் சரித்திரச் சுருக்கம், நபித்துவத்தின் மாண்பு, உம்மி நபியின் எழுச்சி, உபதேசம், திருக்குர்ஆனின் உலக போதனை, நாயகமவர்களின் நற்குணங்கள் முதலியவைகளைத் தெரிந்துகொள்வதற்கும், அதனை மானிடர்களிடையே பரத்துவதற்கும் ரபீஉல் அவ்வல்மீ 12-ந் தேதி (25-6-34) திங்கட்கிழமைய தினத்தை ஒதுக்கிவைத்து அன்று சகல ஊர்களிலும் மகாநாடுகள் கூட்டி முஸ்லிம்களும் முஸ்லிம்அல்லாதாரும் ஒருங்கே ‘ஸீரத்’ பிரசங்கத்தைக்கேட்க வசதியளிக்க வேண்டும்; அன்று நடைபெறும் மகாநாடுகளில் வீண் ஆடம்பரம், கெட்டபித் அத்தான காரியங்கள் முதலியன கலந்துவிடாதவாறு மிக்க ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளவேண்டும்; நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் ஹிதோபதேசங்களும், அவர்களின் தூயவாழ்க்கை விபரங்களும் மக்களிடையே பரவுவதற்கு தக்க முயற்சி எடுக்கவேண்டும்; அந்த மகா நாட்டில் வினியோகிப்பதற்கென்றே உங்கள் ‘ஹிபாஜத்துல் இஸ்லாம்’ சங்கத்தாரால் தயாரிக்கப்பட்டிருக்கும் “காருண்ய நபி” என்னும் ஸீரத் பிரசங்கத்தை மகாநாடுகளில் படித்துக்காட்டி ஏராளமாக வினியோகிக்கவேண்டும். அப்பிரசங்கத்தில் எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் ஜனனம், உபதேசம், இஸ்லாமிய ஏக தெய்வக் கொள்கையின் இரகசியம், நாயகம் (ஸல்.) அவர்களின் நற்குணங்கள், திருக்குர்ஆன் போதனை முதலியவைகள் தக்கமுறையில் விளக்கப்பட்டிருப்பதால் அதனைப் படிக்கும் யாவரும் அவைகளைத் தக்க முறையில் உணர்ந்துகொள்ள வசதி ஏற்படுமாகையால் அப்புனிதம் தங்கிய தினத்தை அதற்கென்றே ஒதுக்கிவைத்து அந்நாளைத் திருநாளாகக் கொண்டாடுவோமாக.

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.